AR
909

# தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்

19



அறிஞர் அண்ணா

# தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்

பத்தொன்பதாம் தொகுதி

காஞ்சிக் கடிதங்கள் - 6

அறிஞர் அண்ணா

பல்லடம் மாணிக்கம்
தமிழ் நூல் காப்பகம்
திருமுதுகுன்றம்

பாரி நிலையம்
184. பிராட்வே · சென்னை · 600108

முதற் பதிப்பு : 1988

பதிப்பு உரிமையுடையது

தமிழ் நூல் காப்பகம்
09219
தமிழ் நகர், விருத்தாசலம் - 606001.

விலை ரூ. 16-00

அச்சிட்டோர்:
சாலை அச்சகம், 11, திருவீதியான் தெரு
கோபாலபுரம், சென்னை-86 [117]

முதல் இரண்டு தொகுதிகளின்
முதற்பதிப்பின் முன்னுரை

# முன்னுரை

## திரு. நாவலர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

'அண்ணா தம்பிக்கு எழுதிய கடிதங்கள்' நூல் வடிவம் கொண்டு அழகும் கவர்ச்சியும் ஒருங்கே ஏற்று, என் கைக்கு வரப்பெற்று மிக்க பேருவகையுற்றேன். அறிஞர் அண்ணா அவர்கள் 'திராவிட நாடு இதழ் மூலம் அருமைத் தம்பிமார் களுக்கு எழுதிவந்த முடங்கல்கள் அனைத்தும் நூல் வடிவம் பெற்றால், அந்த நூல், கருத்துக் கருவூலமாகத் திகழப் பெறுமே என்ற வேணவா என் உள்ளத்தில் நீண்ட நாட் களாக எழுந்ததுண்டு. என்னைப் போன்ற பல்லாயிரக் கணக்கான தம்பிமார்களுக்கும் வேணவா கிளர்ந்தெழுந் திருக்கும் என்பது உறுதி. அந்த வேணவாவை இனிது நிறை வேற்றி வைக்கும் அரும் பெருந்தொண்டை'பாரி நிலையத் தார்' செய்திருப்பது கண்டு பூரிப்படைகிறேன்: பாரிநிலை யத்தாரை வரவேற்றுப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

அறிஞர் அண்ணா அவர்களின் எழுத்து வன்மையை யும், அவரது எழுதுகோல் முனையிலிருந்து உருப்பெற் றெழுந்து நாடெங்கணும் வெற்றியுலா வரும் கதைகள்—கட்டுரைகள் — நாடகங்கள் — திரைப்பட வசனங்கள்—எழுத்தோவியச் சுவரொட்டிகள், துண்டு அறிக்கைகள் ஆகியவற்றையும், அவற்றில் தமிழ் மணம் மிகச் சிறந்த முறையில் கமழ்வதையும், இனிய ஓசை பயக்கும் சொற்கள் அருவியின் வீழ்ச்சியெனத் தங்கு தடையின்றிப் பாய்ந்து துள்ளிக் குதித்து ஓடுவதையும், கருத்துக்கள் செறிந்து காணப்படுவதையும், உவமை நயங்கள் பெருவாரியாக ஆங்காங்குப் பளிச்சிட்டு மின்னுவதையும், அறிவும் ஆற்ற லும், உண்மையும் உயர்வும், திண்மையும் திட்பமும், சொல்லழகும் பொருளாழமும் ஒன்றையொன்று போட்டி போட்டுக்கொண்டு துள்ளிக் குதிப்பதையும், தமிழ் கற் றறிந்த நல்லறிவு படைத்தோர் அனைவரும் நன்கு உணர்வர். தமிழின்பத்தை எல்லா வகையிலும் சுவைக்க விரும்புவோர், இந்நூலைச் சுவைத்தாலே போதும். எல்லாவகையான இனிய சுவைகளும் இதனுள் பொதிந்து கிடக்கின்றன,

படித்து மகிழ்ந்து பயன் பெறுவதற்குரியவைகள் பலப் பல இருந்த போதிலும், ஒவ்வொருவரும் கடிதத்தைப் படிப்பதற்குப் பேராவல் காட்டுகிறோம். அஞ்சலை அன்றாடம் வழி மேல் விழிவைத்துப் பார்க்க நாம் தவறுவதில்லை. அஞ்சல் வந்தவுடன் மற்றப் பணிகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டுப் பிரித்துப் படிக்கிறோம்; பலதரப்பட்ட செய்திகளையும் கருத்துக்களையும் அறிந்து கொள்கிறோம். பொதுவாகக் காதலியிடமிருந்தும், நண்பர்களிடமிருந்தும் நெருங்கிய உறவினர்களிடமிருந்தும் வரும் முடங்கல்களைப் படிப்பதில் ஒருவன் எவ்வளவு ஆர்வமும் அக்கரையும் அகமகிழ்ச்சியும் காட்டுவானோ அவ்வளவு ஆர்வமும் அக்கரையும் அகமகிழ்ச்சியும் அறிஞர் அண்ணா அவர்களின் கடிதங்களைப் படிப்பதிலும் ஒவ்வொருவரும் காட்டுவர். அவ்வளவு கவர்ச்சியும் அறிவுத் தெளிவும் ஆராய்ச்சித் திறனும் அறிஞர் அண்ணா அவர்களின் கடிதங்களில் காணப்பெறும். அறிஞர் அண்ணா அவர்களின் உயர்ந்த உள்ளத்தை எழுத்துக்களின் மூலம் எளிதில் கண்டறிய இந் நூல் பெரிதும் பயன்படும்.

அறிஞர் அண்ணா அவர்கள் 'திராவிட நாடு' இதழில் 'தம்பிக்குக் கடிதம்' என்று தலைப்பிட்டு எழுதிய கடிதங்களைப் பத்துத் தொகுப்புகளாகக் கொண்டுவர முயற்சி எடுத்து, இப்பொழுது இரண்டு தொகுப்புகளை வெளியிட்டிருக்கின்றனர். இந்தப் பத்துத் தொகுப்புகளும் தமிழகத்தின் அரிய பெரிய கருத்துக் கருவூலங்களாகும். இப்பொழுது வெளிவந்துள்ள இரண்டு தொகுப்புகளைப் போலவே விரைவில் ஏனைய எட்டுத் தொகுப்புகளும் வெளிவருவனவாக!

அறிஞர் அண்ணா அவர்களின் சொல்லமுதைக் கொண்டு இலக்கிய விருந்து படைக்க முன்வந்த 'பாரி நிலைய'த்தாரைப் பாராட்டுகிறேன். தமிழ்ப் பெருங்குடி மக்கள் அனைவரும் இந்த இலக்கிய விருந்தை உண்டு மகிழ்ந்து, பயன்பெற்று, இனிதுற வாழ்வார்களாக!

4-1-63

-இரா. நெடுஞ்செழியன்

# பதிப்புரை

அறிஞர் அண்ணா அவர்கள் தம்முடைய கருத்துக்களையும் சிந்தனைகளையும் தம்பிக்கு என்ற தலைப்பில் கடித வடிவில் அவர் நடத்தி வந்த 'திராவிட நாடு' இதழிலும் 'காஞ்சி' இதழிலும் அவ்வப்போது எழுதி வந்தார்கள். இவற்றில் சில கடிதங்கள் திராவிட நாடு, காஞ்சி பொங்கல் மலர்களிலும் வெளிவந்தன.

இக்கடிதங்கள் அறிஞர் அண்ணா அவர்களையும் அவர் நேசித்த இலட்சக்கணக்கான தம்பிமார்களையும் ஒருங்கிணைத்துக் கலந்து உறவாடி மகிழச் செய்தன.

திராவிட நாடு இதழ்களில் வெளிவந்த கடிதங்களை வெளியிட அண்ணா அவர்களிடமே இசைவு பெற்று, முதல் இரண்டு தொகுதிகளையும் 1963 ஆம் ஆண்டில் வெளியிட்டோம். இவை கடற்கரையில் சீரணி அரங்கில் பல ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் வெளியிடப் பெற்றன.

திராவிட நாடு இதழ்களில் வெளிவந்த கடிதங்கள் பன்னிரண்டு தொகுதிகளாக வெளிவந்து நிறைவடைந்தன. காஞ்சி இதழில் அண்ணா தமது சிறை அனுபவங்களைக் 'கைதி எண் 6342' என்ற தலைப்பில் கடித வடிவமாகவே எழுதி வந்தார்கள். அவைகளைத் தொகுத்து, 'கைதி எண் 6342' என்ற தலைப்பில் தனி நூலாக வெளியிட்டோம். இது அண்ணாவின் கடிதங்களின் பதின் மூன்றாம் தொகுதியாகும்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு, 26-7-64 தொடங்கிக் 'காஞ்சி' இதழில் அண்ணா கடிதங்கள் எழுதத் தொடங்கினார்கள். காஞ்சி இதழில் வெளிவந்த முதல் கடிதத்தின் தலைப்பே 'நீண்ட இடைவெளிக்குப் பிறகு' என்பதாகும்.

காஞ்சி இதழில் வெளிவந்த கடிதங்களை வெளியிடத் திருமதி ராணி அண்ணாதுரை அவர்களிடம் இசைவு பெற்று வெளியிடத் தொடங்கி இருக்கிறோம். பல காரணங்களால் இவைகளை நூலாக வெளியிடுவதிலும் நீண்ட இடைவெளி ஏற்பட்டுவிட்டது. இனித் தடையின்றி இவை விரைவில் வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்போது வெளியிடப் பெறும் இந்தத் தொகுதி மொத்த வரிசையில் பத்தொன்பதாம் தொகுதியாகும். காஞ்சியில் வெளிவந்த கடிதங்களின் ஆறாம் தொகுதியாகும். இதில் பதின்மூன்று கடிதங்கள் வெளிவந்துள்ளன. **'காஞ்சிக் கடிதங்கள்'—6** என்று தலைப்பிட்டுப் புதிய எண்கள் கொடுத்திருக்கிறோம்,

வழக்கம் போலப் புலவர் நா. அறிவழகன் அவர்கள் காஞ்சியில் வந்த கடிதங்களுக்கு உரிய உள் தலைப்பிட்டுக் கொடுத்தும், கிடைக்காத கடிதங்களுக்கு 'ஜெராக்ஸ்' பிரதி எடுத்துக் கொடுத்தும் பலவாறு உதவினார்கள். டாக்டர் சாலை இளந்திரையன் அவர்கள் பிரதியை நன்கு ஒப்பு நோக்கிப் பதிப்பித்து உதவினார்கள். இவ்விரு அறிஞர்களுக்கும், காஞ்சியில் வெளிவந்த கடிதங்களை நூல் வடிவில் வெளியிட எங்களுக்கு வாய்ப்பளித்த திருமதி ராணி அண்ணாதுரை அவர்களுக்கும், அழகாக அச்சிட்டு உதவிய சாலை அச்சகத்தாருக்கும் எங்கள் நன்றி உரியது.

வழக்கம் போலத் தமிழ்ப் பெருமக்கள் இந்நூல் வரிசையினையும் ஏற்று எங்களை ஊக்குவிக்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

**பாரி நிலையத்தார்**

# பொருள் அடக்கம்


| கடித எண் | பொருள் | நாள் | பக்க எண் |
|---|---|---|---|
| 64. | 'சிலர்' 'பலர்' | 29.5.66 | 1 |
| 65. | நல்லோரின் தீர்ப்பு! | 5.6.66 | 18 |
| 66. | வந்திடு! ஒளி தந்திடு! | 12.6.66 | 40 |
| 67. | தம்பி உடையான்! | 19.6.66 | 62 |
| 68. | கண்ணீர்! | 26.6.66 | 77 |
| 69. | கோட்டை வெளியில்... | 10.7.66 | 92 |
| 70. | கழுகும் கிளியும் | 17.7.66 | 106 |
| 71. | கருப்பு மல்லி | 24.7.66 | 122 |
| 72. | ஒட்டாண்டியாக்கி விட்டு! | 31.7.66 | 138 |
| 73. | இட்லர் கூடச் சோஷியலிசம் பேசினான்! | 7.8.66 | 156 |
| 74. | சிறகு விரித்து ஆடுவதெல்லாம் மயிலாகுமா? | 14.8.66 | 170 |
| 75. | அனுபவி ராஜா! | 21.8.66 | 187 |
| 76. | குன்று, குடைபிடித்துக் கொள்ளுமா? | 28.8.66 | 204 |

தமிழ் நூல் காப்பகம்

காஞ்சிக் கடிதம் : 64

# சிலர்' 'பலர்'

★ ஆண்டான்—அடிலும முறை ஜனநாயசத்திற்கு முரண்!

★ தேர்தல் நடக்கிறது: 'எல்லாம் காங்கிரசுக்குத் தெரியும்' என்ற அடிப்படையில்!

★ 'எல்லாம் அவர் அறிவார்; நாம் ஏதும் அறியோம்' என்று பூஜித்தன் பலன் என்ன?

★ 'போ வெளியே; போகிறேன் வெளியே; போக்கிவிடுவேன் வெளியே!'

★ 'பிடித்து வைத்தால் பிள்ளையார்; வழித்து எழுந்தால் சாணி!

தம்பி!

''நாலுபேரைக் கலந்து பேசினீர்களா?'
''நன்றாக யோசித்துப் பார்த்தீர்களா?''
''உங்களுக்குத் தெரியாதா நல்லதுகெட்டது?''
அவருக்குத் தெரியும் எல்லாம்.''
''நமக்கு என்ன தெரியும்?''
''அவருக்குப்போய் நாம் சொல்லுவதா?'
''நாம் சொன்னாலா அவர் எடுத்துக்கொள்ளப் போகிறார்.''

''அவரிடம் போய் யார் பேசமுடியும்?''
''யாரை அவர் கிட்டே சேர்ப்பார்?''
''அவரைப்போய்ப் பார்க்க முடியுமா?''
''நம்மை எல்லாம் பார்க்க அவருக்கு ஏது நேரம்?'

இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு கட்டத்தைக் காட்டுவது என்பதை விளக்கத் தேவையில்லை.

கட்டங்கள் என்பது மட்டுமல்ல, ஒவ்வொருவிதமான நிலைமை மாற்றத்தைக் காட்டுகின்றன.

ஊரிலே 'பெரியவர்கள்' ஆக முனைபவருக்கும், யாராவது ஒரு பெரியவருடைய சொற்படி நடந்துகொள்ள வேண்டும் என்ற இயல்பு கொண்டவர்களுக்கும் இடையே ஏற்படும் 'தொடர்பு' பல கட்டங்களை அடைகிறது, அந்தத் தொடர்பு, பல நிலமை மாற்றங்களை உண்டாக்குகிறது. நல்லது தான் சொல்லுகிறார் என்ற எண்ணமும், சொல்லுவது நல்லதற்காகத்தான் இருக்கும் என்ற நம்பிக்கையும் உள்ள கட்டத்தில், நல்லதுதான் சொல்லுகிறார் என்றாலும், நல்லதற்குத்தான் சொல்லுகிறார் என்ற நம்பிக்கை இருந்தாலும், நல்லது சொல்லத்தக்கவர்கள் வேறு பலர் இருப்பார்களே, அவர்களுடன் இவர் கலந்து பேசி, தான் கூறுவது நல்லதுதான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டால் மேலும் நல்லதாக இருக்குமே என்ற எண்ணத்தைக் கொண்டிருக்கும்போதுதான்,

நாலுபேரைக் கலந்து பேசினீர்களா?

என்று கேட்கத் தோன்றும்.

அறிவாளிதான்—நல்லதுதான் சொல்லுவீர்கள்-ஆனால் உங்களுடைய அறிவு மட்டும் போதுமா - அறிந்தவர்சுள் பலர் இருப்பார்களே, அவர்களையும் கலந்து பேசினால் தானே நல்லது - உங்களுக்கு மட்டும் 'சரி என்று தோன்றி விட்டால் போதுமா-உங்கள் பேச்சை மட்டும்நம்பி நாங்கள் உங்கள் யோசனையை ஏற்றுக்கொள்ள முடியுமா - யோசனை கூறத்தக்கவர்கள், நல்லதா கெட்டதா என்று ஆராய்ந்து பார்த்துச் சொல்லத் தகுதி பெற்றவர்கள் பலர் இருக்கிறார்களே, அவர்களிலே நாலுபேரைக் கலந்து பேசினீர்களா எல்று கேட்கும் போக்கிலே தான்



நாலுபேரைக் கலந்து பேசினீர்களா
என்று கேட்கிறார்கள்.

அதன் உட்பொருள், யோசனை கூறத்தக்க பலர் இருக்கிறார்கள். அவர்களிலே ஒருவர் நீங்கள்; உங்கள் ஒருவருடைய யோசனையை மட்டும் ஏற்றுக்கொள்ளுவது முறையாக இருக்காது; மேலும் பலரும் உங்கள் யோசனையைச் சரியானது என்று ஒப்புக்கொள்கிறார்கள் என்று தெரிந்தால்தான், உங்கள் யோசனையை ஏற்றுக்கொள்ள மனம் இடம் கொடுக்கும், என்பதாகும்.

எல்லா மக்களுக்குமே, நல்லது கெட்டது புரிந்து கொள்ளத்தக்க, பொது அறிவு இருக்கத்தான் செய்கிறது; சிந்திக்கும் திறன் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், சிந்திக்கும் திறனைப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பும், பக்குவப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பும், கூர்மையாக்கிக் கொள்ளும் வாய்ப்பும், எல்லோருக்கும் கிடைத்துவிடுவதில்லை; எல்லோருக்கும் ஒரு சீராக இருந்து விடுவதுமில்லை.

அதனால்தான், சிலர், பலருக்கு யோசனை கூறிடும் அவசியமே எழுகிறது. அந்தச் சிலர், எல்லாம் அறிந்தவர்கள், பலர் ஏதும் அறியாதவர்கள் என்பதால் அல்ல.

அந்தச் சிலர், எதையும் சிந்தித்துப் பார்த்திடும் வாய்ப்பை அதிக அளவில் பெற்றிள்ளனர். அந்தப் பலர் அத்தகைய வாய்ப்பை, போதுமான அளவு பெற்றுக் கொள்ள முடிவதில்லை என்பதுதான், உள்ள நிலைமை.

சிந்திக்கும் திறனைப் பயன்படுத்திக் கொள்ளவும் செம்மைப்படுத்திக் கொள்ளவும், 'பலர்' வாய்ப்புப் பெற முடியாமலிருப்பதற்குக் காரணம், அவர்களுக்கு அதற்கு ஏற்ற அளவு அறிவுத் தெளிவு இல்லை என்பது அல்ல, அவர்களின் வாழ்க்கை முறை அவர்களுக்கு 'இக்கட்டாக' அமைந்து விடுவதுதான் காரணம்.

இந்த அடிப்படையின் மீதுதான், 'ஜனநாயகம்' எழுப்பப்பட்டிருக்கிறது; சிலருக்கு 'எல்லாம் தெரியும்'— பலருக்கு, 'ஏதும் தெரியாது' என்ற ஆணவத்தின் மீது அல்ல.

அந்த ஆணவத்தின்மீது அமைக்கப்படுவது, சர்வாதிகாரம்.

எனக்கும் தெரியும், உனக்கும் தெரியும், முயன்றால் எல்லோருக்கும் தெரியக்கூடியதே. ஆனால் எனக்கு வேறு வேறு பிடிப்புகள், பிரச்சினைகள், இக்கட்டுகள் உள்ளன. ஆகவே நேரம் இல்லை யோசிக்க- உனக்கு அவ்விதம் இல்லை, எதுபற்றியும் சிந்தித்துப் பார்த்திடப் போதுமான, வாய்ப்பு இருக்கிறது, ஆகவே உன் 'யோசனை'யை நான் கேட்டுக் கொள்ளுகிறேன், என்ற முறையிலே அமையும் தொடர்புதான் ஜனநாயக முறை.

எல்லாம் அவருக்குத் தெரியும்—எனக்கு ஏதும் தெரியாது என்று, ஏமாளிகள்கூட ஒப்புக்கொள்ள மாட்டார்கள்; ஆனால் சர்வாதிகாரி, எல்லாம் எனக்குத் தெரியும், மற்றவர்களுக்கு ஏதும் தெரியாது என்று கூறிட முற்படுவான்-

உனக்குத் தெரியும், யோசனை கூறத்தக்கவன்தான் நீ; ஆனால் உன் யோசனை மட்டும் போதாது வேறு பலரையும் கலந்து பேசி, உன் யோசனையை தாங்கள் ஒப்புக் கொள்ளத்தக்கதாக ஆக்கிக் கொள், என்று கூறிடும் கட்டம், நாலு பேரைக் கலந்து பேசினீர்களா என்பது.

சொல்லுபவர்கள்—கேட்டுக் கொள்பவர்கள் என்ற இரு பிரிவு, பணம், அதிகாரம், ஜாதி போன்ற அடிப்படை மீது அமைக்கப்படாமல, கேட்டுக் கொள்பவர்களின் தெளிவான சம்மதம் பெற்று மட்டுமே சொல்லுபவர்கள் இயங்க முடியும் என்ற அடிப்படையில் அமைவதே அடிமைத்தனத்தைப் புகுத்தாத, ஒரு அன்புத் தொடர்பை உண்டாக்கி வைக்கும். அந்த அன்புத் தொடர்புதான் ஜனநாயகம்.

அந்த நிலையிலே இருந்து மாறினாலோ, அந்த நிலை மாற்றப்பட்டு விட்டாலோ, பலர், சிலரிடம் யோசனை கேட்கும்போது, வேறு நாலு பேருடன் கலந்து பேசனீர்களா என்று கேட்பதே தவறு என்றோர் எண்ணம்கொண்டு, யோசனை கூறத்தக்கவர் நாங்கள்தான், அதிலே ஐயப்பாடு இல்லை! தங்களைவிட மேலான யோசனை கூறத்தக்கவர் வேறு எவரும் இருப்பதாக நாங்கள் எண்ணவில்லை, ஆனாலும் இதுபற்றித் தாங்கள் நன்றாக யோசித்துப் பார்த்தீர்களா என்று கேட்க முற்படுகின்றனர்.

இந்தக் கட்டம் பிறக்கும்போதே, ஒரு படி கீழே இறங்கிவிட்ட நிலை ஏற்பட்டுவிட்டது என்பது பொருளாகி விடுகிறது.



இந்தக் கட்டத்தில், யோசனை கூறுபவர், சற்று உயர்ந்த இடத்திலே அமர்ந்துகொள்ளுகிறார்; கேட்டுக் கொள்பவர்கள், தமது குரலைச் சற்று தாழ்த்திக் கொள்கிறார்கள்; சிலருக்கும் பலருக்கும் இடையே ஏற்பட்டுள்ள அன்புத் தொடர்பு சிறிதளவு கெட்டுவிடுகிறது; அந்த அளவுக்கு ஜனநாயகத்தின் தூய்மையும் பாதிக்கப்பட்டுப் போய்விடுகிறது.

உங்களுக்குத் தெரியாதா நல்லது, கெட்டது

என்று பேசும் கட்டம் வந்ததும், ஜனநாயகத்தின் தூய்மை மேலும் கெடுகிறது என்று கூறலாம்.

கூறப்படும் யோசனை நல்லதா, கெட்டதா? இந்த யோசனையை நாலு பேரைக் கலந்து ஆலோசித்துத்தான் கூறுகிறாரா அல்லது தாமாகவே சொல்லுகிறாரா தீர யோசித்துச் சொல்லுகிறாரா அல்லது மனத்திலே தோன்றியதைச் சொல்லுகிறாரா என்றெல்லாம் எண்ணிப் பார்ப்பதுகூடத் தேவையில்லை, கூடாது, தவறு, என்று நினைத்துக்கொண்டு, அவர் சொல்லுவதால் அது நல்லதாகத்தான் இருக்கும், ஏனெனில் அவர் நல்லது கெட்டது தெரிந்தவர் என்று ஒப்புக்கொள்ளும் பணிவு மனப்பான்மை கொண்டு விடுகின்றனர். இதன் மூலம், அந்தப் 'பலர்' தாமாகவே தமது நிலையைக் கீழ்மட்டம் கொண்டு செல்கின்றனர். ஜனநாயகத்தின் அடிப்படையான அன்புத் தொடர்பு பாழ்படுத்தப்பட்டு, 'தலை அசைக்கும்' நிலை ஏற்பட்டு விடுகிறது.

அவருக்குத் தெரியும் எல்லாம்! என்ற பேச்சு, எதற்கும் 'ஆமாம்' போடுகிறாயே, அவர் கூறிய யோசனை நல்லதாக இல்லையே, அதை ஏன் ஏற்றுக் கொள்ளுகிறாய் என்று வேறு சிலர் கூறிடும்போது, யோசனை நல்லதுதான் என்று மெய்ப்பிக்கவோ, வாதாடவோ இயலாமல், யோசனை கூறுபவரிடமே விளக்கம் பெறவோ, ஐயப்பாட்டினை நீக்கிக் கொள்ளவோ முனையாமல், அவர் கூறுவதை அப்படியே ஒப்புக்கொள்கிறேன்; புத்தியில்லாததால் அல்ல: அவருக்கு எல்லாம் தெரியும் என்று நான் நம்புவதால், என்று பேசுகின்றனர்.

எதைச் சொன்னாலும் தலை ஆட்டி விடுகிறோமே, அதைச் சிலர் இடித்துக் காட்டுகிறார்களே என்பதை உணரும்போது எழும்பும் எரிச்சலையும் கோபத்தையும் குறைத்துக்கொள்ள

எல்லாம் அவருக்குத் தெரியும்

என்று கூறிடத் தோன்றுகிறது.

எல்லாம் அவருக்குத் தெரியும் என்று கூறிட முற்படும் போதே, நான் எதைப்பற்றியும் சிந்திக்க வேண்டிய அவசியமே இல்லை, ஏனெனில் எனக்காக எல்லாவற்றைப் பற்றியும் சிந்தித்து, எனக்கு எது நல்லது என்பதைக் கண்டறிந்து கூறிடும் பொறுப்பை வேறு ஒருவரிடம் ஒப்படைத்து விட்டேன், அவர் எல்லாம் தெரிந்தவர்! என்று நம்பிக்கையை அழுத்தமாகக் கொண்டுவிட்டதாக ஆகிவிடுகிறது.

இந்நிலை, அடிமைத்தனத்தை விரும்பி வரவேற்பதாக ஆகிவிடுகிறது.

'ஆண்டான் - அடிமை' எனும் முறை ஜனநாயகத்துக்கு முற்றிலும் முரணானது என்பது மட்டுமல்ல, அந்தக் கேடான முறையை ஒழித்திட வந்த ஏற்பாடே, ஜனநாயகமாகும்.

அதே ஜனநாயகத்தில், சிலருக்கும் - பலருக்கும் இடையில் இருக்கவேண்டிய தொடர்பு, அறிவுத் தெளிவின் பேரில் கட்டப்பட்டு அன்புத்தொடர்பாக இருக்க வேண்டும் என்பதை மறந்துபோனால், ஆண்டான்-அடிமை என்பதற்குப் பதிலாக எத்தன்- ஏமாளி என்றமுறையிலே தொடர்பு திரிந்து போய்விடும்.

எல்லாம் அவருக்குத் தெரியும் என்று ஏற்றுக் கொள்ளும் போக்கு பிறந்தவுடன், சுய சிந்தனை அடியோடு மடிந்துவிடுவதுடன், மற்றவர் கூறுவது சரியா அல்லவா என்று ஆராயும் கடமையும் மறைந்து, எல்லாம் தெரிந்தவரிடம் நாம் இது சரியா அது சரியா என்று கேட்பது கூடத் தவறு, அடாத செயல் என்று எண்ணிக்கொள்ளும் அசட்டுத்தனம் ஆட்கொண்டு விடும். அந்த நிலை பிறகு,

நமக்கு என்ன தெரியும்

என்று பேசவைக்கும்: நம்பவைத்துவிடும், தாழ்வு மனப்பான்மை தலைதூக்கும்.

தாழ்வு மனப்பான்மை நிலைத்துவிட்டாலும், 'எல்லாம் தெரிந்தவர்' என்று தன்னாலே ஏற்றுக் கொள்ளப் பட்டுவிட்டவரின் 'யோசனையைக் கண்ணை மூடிக் கொண்டு, பயபக்தி விசுவாசத்துடன்' பின்பற்றி நடந்தும், தொல்லை தொலையவில்லை, துயரம் போகவில்லை, என்றாகிவிட்டால், ஒரு கசப்பு, ஒரு ஏமாற்றம், ஒரு வேதனை மெள்ளக் கிளம்புகிறது.



அவர் சொன்னது சரியில்லைபோல இருக்கிறதே, நல்லதற்குத்தான் சொல்வார், அவர் எல்லாம் தெரிந்தவர் என்று நம்பி, எதைப்பற்றியும் நாம் யோசிக்காமல், அவர் சொல்வதைக்கேட்டு நடந்து வருகிறோம். ஆனால் பயன் நலனுள்ளதாக இல்லையே! அவர் கூறியது சரியில்லையோ! அவர் நாலுபேர்களைக் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வரவில்லையோ, அவரே சரியாக யோசிக்காமல் அவசரப்பட்டு ஒரு முறையைக்கூறிவிட்டாரோ; அவர் கூறியமுறை சரியில்லை, எதிர்பார்த்த நலனைத் தரவில்லை என்பதை அவருக்குக் கூறினால் என்ன? முறையைப்பற்றி அவரிடம் விவாதித்தால் என்ன? என்று எண்ணிடத்தோன்றும்; வேதனையும் ஏமாற்றமும் தாக்கும்போது. ஆனால் 'அவரிடம்' போய்க் கூறத்தைரியம் வராது. ஏன்?

அவர் எல்லாம் தெரிந்தவர்!

நமக்கு என்ன தெரியும்!

என்று நம்பிக் கூறியாகிவிட்டதே! அதனால் ஏற்பட்டுவிட்ட தாழ்வு மனப்பான்மை, தயக்கத்தைத் தந்திடும் அப்போது, தயக்கத்துடன்,

அவருக்குப்போய் நாம் சொல்வதா!

என்ற பேச்சு பிறக்கிறது.

'நாம்' பார்த்து 'அவர்!' நமக்காக 'அவர்' என்றிருந்த நிலைமாறி, அவர், மேலானவர்; நாம் தாழ்நிலையினர்! அவர் எல்லாம் அறிந்தவர்; நாம் ஏதும் அறியாதவர்கள்; அவர் கூறுபவர், நாம், கேட்டுக் கொள்பவர்கள்; அப்படிப்பட்ட 'அவருக்கு, 'நாம்' சொல்லுவதா!—என்று எண்ண வேண்டிவந்ததும், ஜனநாயகத்தின் சாயலையும் பாழ்படுத்திக் கொண்டாகிவிட்டது என்பது பொருளாகி விடுகிறது.

இன்னலால் தாக்குண்ட நிலையில், அவர் பெரியவராக, எல்லாம் தெரிந்தவராகவே இருக்கட்டும், ஏதோ நமக்குத் தெரிந்ததை, நமது நிலைமையை அவரிடம் போய்ச் சொன்னால் என்ன? சொல்லாவிட்டால் அவர் எப்படி நமது நிலைமையைத் தெரிந்துகொள்ள முடியும்

என்று எண்ணிக்கொண்டு, மெள்ள மெள்ளத் துணிவைத் தருவித்துக்கொண்டு, 'அவரிடம்' போய் தமக்குத் தோன்றியதைச் சொல்லச் சிலர் முற்படுவர்.

இதற்குள் 'அவர்' எல்லாம் எனக்குத் தெரியும்! உனக்கு ஒன்றும் தெரியாது! என்று கூறத்தக்க உயரம் சென்றுவிட்டிருப்பார். கூறுவதைக் காது கொடுத்துக் கேட்கமாட்டார்; கூறுவதிலே பொருள் இருக்கிறது என்று ஒப்புக் கொள்ளமாட்டார்; கூறத்தகுதி படைத்தவர்கள் தான் கூறுகிறார்கள் என்று ஒப்புக் கொள்ளமாட்டார்! ஒரு அலட்சியப் புன்னகையோ கை அசைவோதான் பதிலாகக் கிடைக்கும்.

அந்தக் கசப்பான அனுபவம் பெற்றபிறகு,

அவரிடம் போய் யார் பேசமுடியும்?

என்ற ஏக்கப்பேச்சு புறப்படும்,

வேதனை வளர வளர, நாம் போய்ச் சொல்லுவோம், நாமாவது போய்க் கேட்போம் என்று வேறு சிலர் புறப்படுவர். 'அவரை'க் கண்டு பேசவே வாய்ப்புக் கிடைக்காது: அனுமதி கிடைக்காது!

அவர் 'மேலே' மட்டுமல்ல; நெருங்க முடியாத நிலையில்!!—என்று ஆகிவிடும்.

அப்போது வேதனை ததும்பிடும் நிலையில் பேசுவர்.

யாரை அவர் கிட்டே சேர்ப்பார்!
அவரைப் போய்ப் பார்க்க முடியுமா?
நம்மை எல்லாம் பார்க்க நேரம் ஏது!

என்ற விதமாக.

இதுபோல, 'பலர்' பார்த்துச் 'சிலர்' தமக்காக ஆட்சி நடத்தட்டும் என்று அனுமதி கொடுத்தான பிறகு; ஜனநாயகத்தின் தூய்மை கெடுக்கப்பட்டுப்போய்விட்டால், 'சிலர்' ஆட்டிப் படைப்பவர்களாகவும் பலர் அனுபவித்துத் தீரவேண்டியவர்களாகவும் ஆகிவிடுவர், குடியாட்சியே கொடுங்கோலாட்சியாகிப் போகும்.

அதுபோல ஆகிவிடக் கூடாது என்பதற்காகவே, அந்தப் 'பலர்' ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையாயினும்,



அந்தச் 'சிலர்' எல்லாம் தெரிந்தவர்கள் என்ற எண்ணத்தைக் கொஞ்சம் தளர்த்தி, நமக்காகச் சென்றவர்கள் சரியானபடி சிந்தித்து, சிந்திக்கத் தெரிந்த பலருடைய அறிவுரைகளையும் கேட்டு தமது யோசனையைச் செம்மைப்படுத்திக்கொண்டு, நமக்குப் போதுமான நலன்களை செய்தளித்துள்ளனரா, என்று கணக்குப் பார்க்கும் முறை—பொதுத்தேர்தல்—வகுத்தளிக்கப்பட்டிருக்கிறது.

அந்தச் சமயத்தில், 'பலர்' எந்த அளவு கணக்குப் பார்க்குத் திறமையைச் செயலிலே காட்டுகிறார்களோ அதைப் பொறுத்தே 'சிலர்' சீலர்களாக இருப்பதும் இல்லாமற்போவதும் இருக்கிறது.

எல்லாம் அவருக்குத் தெரியும்
நமக்கு என்ன தெரியும்

என்று ஜெர்மானிய மக்கள் எண்ணிக்கொண்ட கட்டம் வந்ததறிந்த இட்லர், தேர்தலையே நிறுத்திவிட்டான்!

நம் நாட்டில் தேர்தலை நிறுத்தவில்லை; நடத்துகிறார்கள்; ஆனால், எந்த அடிப்படையில் என்றால்,

எல்லாம் காங்கிரசுக்குத் தெரியும்
மற்ற யாருக்கும் எதுவும் தெரியாது

என்ற அடிப்படையில்!

இந்த அடிப்படையை ஏற்றுக்கொண்டு, தேர்தலில் ஈடுபடுவது, இருப்புப் பெட்டியைத் திறந்து அதிலிருந்து திருவோடு எடுத்துக் கொண்டு, பிச்சைக்குக் கிளம்புவது போன்ற கேலிக் கூத்தாகிப் போகும்.

காங்கிரசின் மூலவர்களின் மனப்போக்கு,

எல்லாம் எமக்குத் தெரியும்
மற்றவர்களுக்கு ஏதும் தெரியாது

என்று அடித்துப் பேசிடும் விதமாக இருக்கிறது என்பதை அக்கட்சியின் தலைவர்களின் பேச்சிலேயே தெரிந்து கொள்ளலாம்.

எந்தக் கட்சிக்கும் எந்தத் தகுதியும் கிடையாது என்பதுடன், எத்தகையவர் தம்முடன் சேர்ந்தாலும் அவர்

எல்லாத் தகுதியும் பெற்றுவிடுகிறார் என்றும் கூறிடும் துணிவு தலைவிரித்தாடுகிறது.

அது மட்டுமல்ல, தம்மோடு இல்லாதவர்களை, தகுதி யற்றவர்கள் என்று தாக்கிப் பேசிப் பேசி, அவர்களை மனம் உடையும் நிலைபெறச் செய்து, சிறிது அவர்கள் தடுமாற்றம் அடைந்ததும், 'கதவு திறந்தே இருக்கிறது! வருக!' என்று அழைப்பு விடுவதும், வந்தடைந்ததும் அவர் களை இந்திரனென்றும் சந்திரனென்றும் புகழ்வதும், காண் கின்றோம்.

சுதந்திரக் கட்சி, ராஜாக்கள் கட்சி என்று கேலி பேசினர். யாரார் அந்த ராஜாக்கள் என்று விவரம் தந்தனர்! இத்தகையவர்கள் மக்களின் ஆதரவைப் பெறத் தகுதி பெற்றவர்களா என்று கேட்டனர்.

அப்படிப்பட்டவர்களிலே ஒருவர் ராம்கர் ராஜா.

அவர் இப்போது தமது படையுடன், காங்கிரஸ் கட்சி யிலே சேருகிறார்.

சேர்த்துக் கொள்ளலாமா என்று ஒரு குரல் கிளம்பு கிறது.

தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது என்ற பதில் கிடைக்கிறது.

இன்னின்ன ஆற்றல் உள்ளவர்கள் எமது கட்சியில் உள்ளனர், ஆகவே எமது கட்சிக்கே எல்லாத் தகுதியும் உண்டு, மற்ற எந்தக் கட்சிக்கும் தகுதி இல்லை என்றுகூட, விளக்கம் தருவதில்லை.

எல்லாம் எமக்குத் தெரியும்

என்று ஏற்றுக்கொண்டுவிட்டீர்கள்; இனி எவனும் எம்மை எதுவும் கேட்கக்கூடாது; எவனும் எதுபற்றியும் சிந்திக்கக் கூடாது!—என்று கூறத் தலைப்பட்டு விட்டனர்.

எம்முடைய தகுதிபற்றி மட்டுமல்ல, எம்முடன் எவர் வந்து சேர்ந்திடினும் அவர்களின் தகுதி பற்றிக் கூட எவரும் ஏதும் கேட்கக்கூடாது என்று பேசுகின்றனர்.

இது ஜனநாயகம் ஆகாது! இந்நிலை வளர்ந்திடின் பிறகு, 'பலர்' பார்த்துச் 'சிலர்' ஆட்சி நடத்திடும்



அனுமதி தருகிறார்கள் என்ற நிலையே போலியாகிப் போகும்; 'சிலர்' இடத்தைப் பிடித்துக்கொண்டு, 'பலர்' சிந்திக்க, உரிமை கேட்க, நல்வாழ்வு பெற வழி தராமல், ஆட்டிப்படைக்கிறார்கள் என்ற பயங்கரம் நிலைத்துப் போய்விடும்.

'சிலர்' என்று நான் குறிப்பிடுவது, காங்கிரசின் பெருந்தலைவர்களை மொத்தமாகக் குறிப்பது என்றா லும், அந்தச் 'சிலர்' ஒருமித்த கருத்து கொண்டவர்களு மல்ல, அவர்களிலே யாரிடம் சூத்திரக்கயிறு சிக்கிக் கொள்கிறதோ அந்தச் 'சிலர்' அதே கட்சியிலுள்ள 'பலர்' அடங்கி ஒடுங்கிக் கிடந்திடும் நிலைமை உண்டாக்கி விடு கின்றனர்.

காங்கிரசில் இருந்துகொண்டே, குற்றம் குறைகளை எடுத்துக்காட்டித் திருத்தலாமே, மாற்றுத் திட்டங்களைத் தந்திடலாமே, ஏன் கட்சியை விட்டு வெளியே சென்று எதிர்ப்புக் காட்டவேண்டும், எதிர்க்கட்சி ஏன் அமைக்க வேண்டும் என்று சில நேரங்களில் தேனொழுகப் பேசு கின்றனர், சூத்திரக்கயிற்றைப் பிடித்துக்கொண்டுள்ள வர்கள்.

ஆனால், காங்கிரசில் இருந்து கொண்டே, அதில் உள்ள குற்றம் குறைகளை எடுத்துக் கூறினால், மாற்றுத் திட்டங் களைத் தந்தால் அவைகளுக்குத் துளியேனும் மதிப்புத் தரு கின்றனரா என்றால், இல்லை!

அவர் எப்போதும் அப்படித்தான்.

எதையாவது பேசிக் கொண்டிருப்பார்.

எதிலேயும் குறை கண்டுபிடிப்பார்.

தனக்கு நிரம்பத் தெரியும் என்று காட்டிக்கொள் ளும் போக்கு.

என்றெல்லாம் 'மூலவர்கள்' கேலி பேசுவர்; அலட்சியம் செய்வர்.

குற்றம் குறைகளை அதிக வன்மையாகத் தொடர்ந்து கண்டித்தபடி சிலர் இருக்கின்றனர் என்றால்,

அவர்களை ஏதாவது பதவியில் இழுத்துப் போட்டு 'வாய்மூடி' ஆகிவிடும்படி செய்வதும்,

சரியான சந்தர்ப்பம் பார்த்து அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக் கட்சியிலிருந்து துரத்தி விடுவதும்,

சூத்ரதாரிகள் கையாளும் தந்திர முறைகளாகும்.

சென்ற திங்கள், நண்பர் ராஜாராமும் நானும், டில்லியில் பாராளுமன்ற கட்டிடமாடியில் அமைந்துள்ள உணவு விடுதியில் ஒரு பிரபலமான, முன்னணிக் காங்கிரஸ் தலைவரைப் பார்த்தோம்.

எனக்கு அவர்ாளிடம் பேசுவது அவ்வளவு எளிதாக இருப்பதில்லை; ஒரு கட்சியில் மிக முக்கியமான நிலையில் உள்ளவர்களிடம் எதையாவது பேசிடின் எரிச்சல் கொள் வார்களோ என்னவோ என்ற ஒரு எண்ணம்.

என்னைக் காட்டிலும் அதிகத் தாராளமாக அவர்க ளுடன் பழகுவார் நண்பர் ராஜாராம்.

அவர் அந்தக் காங்கிரஸ் தலைவரைப் பார்த்துக் கேட்டார், 'என்ன 1967 தேர்தலில், சட்டசபைக்கு நிற்கப் போகிறீர்களா? அல்லது பாராளுமன்றத்துக்கா?' என்று.

அவர், ஏதோ சிந்தனையுடன். ''கடைசி நேரத்தில் தான் தீர்மானிப்பேன்'' என்றார்.

விடவில்லை ராஜாராம், வெடுக்கென வேறோர் கேள்வியை எழுப்பினார். ''காங்கிரசில்தானே நிற்கப் போகிறீர்கள்?'' என்று.

எனக்கு அந்தக்கேள்வி தூக்கிவாரிப் போடுவதுபோலிருந் தது.ஒரு பிரபலமான, பழம்பெரும் காங்கிரஸ்தலைவரைப் பார்த்து, 'காங்கிரஸ் அபேட்சகராகத் தானே நிற்கப் போகிறீர்தேர்தலில்' என்று கேட்பது, அவரைக்குத்துவது போல அவமானப்படுத்துவதுபோல அல்லவா இருக்கும்; இப்படிக்கேட்டு விட்டாரே டிலக்சில் போகப் போகிறீரா? கிராண்ட்டிரங்கில் புறப்படப்போகிறீரா? என்று ரயில் பயணம்பற்றிக்கேட்பார்களே, அப்படியாதேர்தலைப் பற்றி இத்தனை பெரிய தலைவரைக் கேட்பது; அவர் கோபித் துக் கொள்ளமாட்டாரா? என்று எண்ணிப் பதறிக் கிடந் தேன்,



நான்தான் அதுபோலப் பதறிக் கிடந்தேனே தவிர ராஜாராமின் கேள்வி அந்தக் காங்கிரஸ் தலைவருக்குத் துளியும் கோபத்தையோ எரிச்சலையோ தந்ததாகத் தெரியவில்லை: அவர் மிக அமைதியாகச் சொன்னார், ''அதுகூடப் போகப்போகத்தான் தெரியும்!'' என்று.

இவ்விதமாகன நிலையில் பலர் இன்று காங்கிரஸ் கட்சி யில் இருக்கிறார்கள்.

அந்தப் பழைய பிடிப்பு, எழுச்சி, ஆர்வம் துளியும் கிடையாது!

ஏதோ இருக்கிறார்கள்; வேறு எங்கே போவது என்று தெரியாததால் இருக்கிறார்கள்,

அதிலே கிடைக்கும் வசதிகளை இழந்துவிட மன மின்றி இருக்கிறார்கள்.

இவ்வளவு காலம் இருந்துவிட்டோமே என்பதால் இருக்கிறார்கள்.

இதன் காரணமாகவே அவர்கள் உண்மையான பற்றுக் கொள்ளுவதில்லை; அதுபோலவே தங்கள் கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனவா என்பது குறித்தும் கவலைப்படுவதில்லை.

நாம் சொல்லுவதைச் சொல்லிவைப்போம்; நடப்பது நடக்கட்டும் என்று இருந்துவிடுகிறார்கள்.

இந்த முறையிலே எடுத்துக் கூறப்படும் குற்றச்சாட்டு களைக்கூடக் கேட்டுக் கொள்வதற்கான பொறுமை, காங் கிரசின் பெருந்தலைவர்களிடம் இல்லை என்பதை, இப் போது நடைபெற்ற அ. இ. கா. க. கூட்டம் எடுத்துக் காட்டிற்று.

கிருஷ்ணமேனன்

மாளவியா

பகவத்ஜா அஜாத்

தாரகேஸ்வரி சின்கா

என்போர், காங்கிரஸ் கட்சி, நாடாளும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு செம்மையாகச் செயல்படவில்லை என் பதுபற்றிக் கொதிப்புடன் பேசினர்.

ஆண்டு பதினெட்டு ஆகிவிட்டன; ஏழையின் வாழ்விலே ஏற்றம் இல்லை; வேதனைப் படுகுழியில் தள்ளப்பட்டிருக்கிறான்; இத்தனை காலம் பொறுத்துக்கொண்டான் இனி பொறுத்துக்கொள்ள மாட்டான்; பொங்கி எழுவான்; புரட்சி வெடித்துக் கிளம்பிடும் என்று மாளவியா கோபாவேசமாகப் பேசினார்.

கல்கத்தாவிலும் பம்பாய் பஞ்சாப் போன்ற இடங்களிலும் நடைபெற்ற கிளர்ச்சிகளைக் காங்கிரசின் மூலவர்கள், பலாத்காரம் என்றும், கலகம் என்றும், மனமுடைந்து கிடக்கும் அரசியல்வாதிகளின் வாண வேடிக்கை என்றும் கண்டித்தனர்.

அந்தச் சம்பவங்கள் புரட்சியின் பொறிகள் என்று மாளவியா கூறினார்.

ஏட்டிலே தீர்மானங்களை எழுதிவிடுகிறீர்கள் ஒய்யாரமாக! ஒன்றையாவது செயல்படுத்தி நாட்டை வாழ வைத்தீர்களா என்று இடித்துக் கேட்டார் பகவத்ஜா அஜாத்.

அமெரிக்காவிடம் கடன் வாங்கி வாங்கி நாட்டைக் குட்டிச் சுவராக்குகிறீர்கள்! இது அடாத செயல்!!—என்று கண்டித்தார் கிருஷ்ணமேனன்.

இந்தக் கண்டனங்கள். காங்கிரஸ் விரோதிகளின் பேச்சல்ல! காங்கிரஸ், தாங்கள் எதிர்பார்த்த படியும், நாட்டுக்கு நலன் கிடைக்கிற முறையிலும் நடந்துகொள்ளவில்லையே, என்று மனம் குமுறி, காங்கிரசைத் திருத்த வேண்டிய கடமை தமக்கு உண்டு என்ற மெய்யுணர்வுடன் எடுத்துக் கூறப்படுபவை. ஆனால் இவற்றினுக்குத் தரப்படும் மதிப்பு எந்த அளவு இருக்கிறது?

கேட்பாரில்லை

மதிப்பளிப்பாரில்லை

என்ற நிலை மட்டுமல்ல, மூலவர்கள் சீறியே விழுகிறார்கள்,

இந்திராகாந்தி அம்மையார் மெத்தக் கண்டிப்புடனும் கோபத்துடனும் பேசினார்களாம்.

போய்விடட்டும் வெளியே



என்றே கூறிவிட்டார்களாம். அம்மையாரின் கோபம் அத்துடன் நிற்கவில்லை.

என் தலைமையை நீங்கள் விரும்பவில்லை என்று தெரிந்தால் நான் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்க மாட்டேன். வெளியே போய் விடுவேன்.

என்றே பேசிவிட்டிருக்கிறார்கள்.

எல்லாம் அவர் அறிவார்! என்ற 'பஜனை' எந்த நிலைமையை உண்டாக்கிவிட்டது என்பது தெரிகிறதல்லவா!

போ! வெளியே!!

போகிறேன் வெளியே!!

என்ற ஆத்திரப் பேச்சு கிளம்பிடக் காண்கிறோம்.

இது சரியா?<br>
இது முறையா?

என்ற கேள்வி, உள்ளிருந்து எழுப்பப்பட்டதும்.

பகவத்ஜா அஜாத் காங்கிரஸ் மூலவர்கள், சொல் வேறு செயல் வேறு என்றவிதமாக இருந்து வருகிறார்கள் என்று கேலி செய்து பேசியதைப் பார்வையாளர்கள் மிகவும் சுவைத்துக் கேட்டுக் கொண்டிருந்தனராம்.

இதுகண்ட மூலவர்களின் 'குடிபடை'யினரில் ஒருவர், இப்படி எல்லாம் பேசலாமா? என்று குரல் எழுப்பினாராம். உடனே பலருடைய குரல், பேசட்டும்! பேசட்டும்! பகவத்ஜா பேசட்டும்! அவர் பேச்சை நாங்கள் கேட்க விரும்புகிறோம்!! என்று எழும்பிற்றாம். ஒரே மகிழ்ச்சி ஆரவாரம்.

இதைக் கண்ட காமராஜர் கடுங்கோபங் கொண்டு இப்படி ஆரவாரம் செய்தால், உங்களை இந்த இடத்தை விட்டு வெளியேற்றிவிடுவேன் என்றாராம், எல்லாம் அவர் அறிவார் !நாம் ஏதும் அறிவோம்!!—என்று பலகாலும் கூறிக் கூறி மூலவர்களைப் பூஜித்ததன் பலன், மனக்குறையை ஒரு சிறு அளவு எடுத்துக் கூறினாலும்,

போ! வெளியே!<br>
போய்விடுவேன் வெளியே?!<br>
வெளியே துரத்திவிடுவேன்!

என்ற முறையிலே மூலவர்களைப் பேசவைக்கிறது.

என்ன சொல்லுகிறார்கள் என்று யோசிப்பதில்லை, மூலவர்கள்? ஏன் இப்படிக் குறைகூறிப் பேசுகிறார்கள்? எதை எதிர்பார்த்து? என்ன ஏமாற்றம்? என்ன கேட்டார்கள், எதை நாம் கொடுக்கவில்லை? என்ற முறையிலே தான் எண்ணுகிறார்கள். ஏதாவது பதவி கொடுத்தால் பசி அடங்கிவிடும்; பசி அடங்கிவிட்டால் படுத்துறங்கப் போவார்கள்; பரபரப்பு, பதைப்பு, கொதிப்பு, கோபம், எதுவும் இருக்காது என்று எண்ணுகின்றனர். அதற்கு ஏற்ற படி செயல்படுகின்றனர். ஆகவே அத்தகைய எதிர்ப்பு, வலிவற்றதாகிப் போகிறது. மெள்ள மெள்ளக் குரல் மங்கிப்போகிறது!

நமக்கென்ன ஏதோ நடக்கட்டும்
நாம் இருக்க முடிகிறவரையில் இருப்போம்

என்ற மனப்போக்கு வளர்ந்து விடுகிறது, எத்தனை காலம் காங்கிரசிலே இருப்யோபோ, எப்போது வெளியேற்றிவிடுவார்களோ என்ற எண்ணம் மனத்திலே குடைந்தபடி இருக்கிறது.

அந்த நிலையின் காரணமாகத்தான், நீங்கள் அடுத்த முறை காங்கிரசின்தானே தேர்தலில் நிற்கப் போகிறீர்கள் என்று ராஜாராம் கேட்டதற்கு அந்தக் காங்கிரஸ் தலைவர்.

போகப்போகத் தெரியும்!

என்று பதில் அளித்தார்; இவ்வளவு நிலையற்ற வாழ்க்கை!

ஆனால் தம்பி! எனக்கும் தெரியும்! என்ற நம்பிக்கை கொண்டவர்களுக்காகத்தான் ஜனநாயக முறை வகுக்கப் பட்டதேயன்றி, எனக்கு என்ன தேரியும்! என்ற இழுப்புப் பேச்சுக்காரர்களுக்காக அல்ல.

'பலர்,—என்றென்றும் ஒதுங்கி ஒடுங்கிக் கிடப்பார்கள், என்று எண்ணிக்கொண்டுதான் காங்கிரசின் பெருந் தலைவர்கள் 'தர்பார்' நடத்துகின்றனர்; உலா வருகின்றனர்.

ஆனால் நாட்டு மக்களோ அந்தப் பெருந் தலைவர்கள் கருதிக் கொண்டிருப்பதுபோல இல்லை.

'பலர்' அனுமதித்தால்தான் 'சிலர்'

என்ற பேருண்மையைத் தெளிவாகத் தெரிந்து கொண்டுள்ளனர்.



எமக்கும் தெரியும் என்று எடுத்துக் கூற முன் வந்து விட்டனர்.

எம்மைப்போல இருந்தவர் தாமய்யா நீவிர்! எங்கிருந்தோ வந்துதித்த அற்புதங்கள் அல்ல!! என்று கூறத் துணிந்துவிட்டனர்.

கொச்சையாகக் கூறுவதானால் தம்பி! பொதுமக்கள் இன்று, எல்லாம் எமக்குத் தெரியும்! மற்ற எவருக்கும் எதுவும் தெரியாது! என்று இறுமாந்து பேசுவர்களைப்பற்றி

பிடித்து வைத்தால் பிள்ளையார்! வழித்தெடுத்தால் சாணி!

என்ற முறையிலேதான் கருதுகிறார்கள்.

இலக்கிய நடையில் இது கூறப்பட வேண்டுமா, தம்பி!
பிடித்தால் கற்றை விட்டால் கூளம்!

என்று 'மனோன்மணியம்' தெரிவித்திருப்பதைத் தருகிறேன்.

'பலர்', 'சிலர்'—ஆகியோருக்கு இடையே உள்ள தொடர்பு ஆண்டான்-அடிமை என்பது அல்ல அது அன்புத் தொடர்பு-அறிவுத் தெளிவின் பேரில் கட்டப்பட்ட தொடர்பு என்பதை, இன்று ஆளப் பிறந்தவர்களதாமே என்ற அளவு ஆணவம் பிடித்து அலைவோர் உணர்ந்திடத் தக்கவிதமாக, 1967 அமையவேண்டும்.

அந்த தூயபணிக்காகத் தொண்டாற்றுகிறோம் என்ற உணர்வு, தம்பி! உன் ஆற்றலைப் பன்மடங்காக்கும். உன் வெற்றியிலே ஜனநாயகத்தின் எதிர்காலமே அடங்கியிருக்கிறது.

அண்ணன்,

29—5—'66



காஞ்சிக் கடிதம் : 65

# நல்லோரின் தீர்ப்பு!

- ★ வலியவர் எளியவரை வதைத்திடும் கதைகள்!
- ★ வசதியற்றவர் அமைத்த கழகம் வளர்ந்தவண்ணம் உள்ளதே!
- ★ பஞ்சை பராரிகளால் பாராளவும் முடியும்!
- ★ அடுக்கு மொழி பேசுவதைக் கேலி செய்தவர்களே அடுக்கு மொழி பேசிடும் அதிசயம்!
- ★ அரசியல் மேடை நாடக மேடை ஆவதை அனுமதிக்கலாமா?
- ★ அலைய மாட்டோம்; அவசியமானால், விடமாட்டோம்!
- ★ நம் வெற்றியில் மாற்றாருக்கு வேதனை!

தம்பி,

'எதுக்காக அகிலாண்டம், அது ஏழை பாவம், அதன்பேரிலே எரிந்து எரிந்து விழறே, எப்பவும் சிடு சிடுன்னு இருக்கறே......?'

'பரிந்து பேச வந்துவிட்டிங்களா அதுக்கு. அது இன்னும் தாவிக்குதிக்க ஆரம்பிக்கும். உங்களுக்கு என்ன தெரியும் அதோட போக்கு. அது நடக்கற நடையும், பார்க்கற பார்வையும் 'பேசற பேச்சும்...'



'என்ன செய்தா, அதைத்தான் சொல்லேன்.....'

'என்ன செய்தாளா? பாருங்க, அவ போட்டுக்கிட்டு இருக்கற கொண்டையை! என்னமோ அள்ளிச் சொருகறதாம், அள்ளி! இந்த அலங்காரமெல்லாம் செய்து கொண்டிருக்கத்தானே அவளுக்கு நேரம் இருக்குது. வேலை செய்ய நேரம் ஏது! வாடி! வள்ளின்னு கூப்பிட்டா வந்தாத்தானே வேகமா!! அன்ன நடை நடக்கறா, அன்ன நடை......,

'வேண்டுமென்றா அப்படி நடக்கப்போறா! ஒவ்வொருத்தரும் ஒவ்வொருவிதமா நடக்கற பழக்கம். அதுக்காக ஒரு கோபமா......'

'வேளைக்கு ஒரு டப்பா 'மை' கண்ணுக்கு அப்பிக் கொள்றது......எத்தனை தடவை, அந்தக் கூந்தலைத் தள்ளித் தள்ளி விட்டுக் கொள்றது, நான்தான் கேட்கறேன், இப்படியா ஒரு சிங்காரிப்பு......புடைவை தெரியுமேல்லோ நாலு கெஜம்......சும்மா ஒரு சுத்து சுத்திக்கிட்டு வந்துவிடறா, அதுதான் இப்ப நாகரிகம்னு......'

●

தம்பி! வீட்டுவேலை செய்யும் வள்ளியிடம்; எஜமானியம்மாளுக்கு ஏகப்பட்ட கோபம்; அவள் குலுக்கி நடக்கிறாள், மினுக்கிக் கொள்கிறாள் என்று ஆத்திரம்! குடும்பத்துக்கு ஏற்றவிதமாக நடப்பதில்லை என்று குற்றச்சாட்டு! சீவிச் சிங்காரித்துக் கொள்கிறாள், ஒயிலாக நடக்கிறாள் என்று கோபம். வள்ளியைக் 'காலா காலத்தில்' கண்டித்து வைக்காவிட்டால், வீட்டு வேலைகளைக் கூட அவள் ஒழுங்காகச் செய்யமாட்டாள் என்றோர் எண்ணம். ஏழ்மை காரணமாக வீட்டு வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றுகிறாளே வள்ளி என்பதிலே எஜமானருக்கு அந்தப் பெண்ணிடம் ஒரு மதிப்பு. ஒழுங்கான பெண் என்பதால் அவளிடம் ஒரு பற்றுதல். ஏழையின் மனம் புண்படும்படி நடந்திடக்கூடாது என்ற பெருங்குணம். அதனால்தான் தன் மனைவியிடம் கேட்கிறார், ஏன் அந்த ஏழைப் பெண்ணிடம் சிடுசிடுவென்று பேசுகிறாய்; கோபித்துக்கொள்கிறாய் என்று.

வள்ளி மீது அடுக்கடுக்காகக் குற்றம் சாட்டுகிறார்களல்லவா எஜமானியம்மாள்...அவை உண்மையா!

அழகான பருவம் வள்ளிக்கு! அடர்த்தியானது! இளமை மெருகு பளபளக்கிறது! வேளா வேளைக்கு 'மை' அப்பிக்கொள்வதாக எஜமானியம்மாள் சொல்வது. கருகரு வென்று இருக்கும் அந்த விற்புருவம் இயற்கை அமைப்பு என்பதை ஏற்றுக்கொள்ள மனமில்லாததால் எஜமானி யம்மாள், விவரம் தெரியாமல் பேசுகிறார்கள், பேசட்டும் அதனால் என்ன என்று வள்ளி, 'அம்மா! நான் 'மை' பூசிப் புருவத்தை அழகுபடித்திக் கொள்ளவில்லை; இயற்கை யாகவே ஒரு எழில் இருக்கிறது' என்று விளக்கம் அளிக்க வில்லை. வள்ளி பதில் ஏதும் கூறாததால், தன் குற்றச் சாட்டை அவள் ஒப்புக்கொண்டுவிட்டாள் என்று எஜமானி யம்மாள் நம்பிக் கொள்கிறார்கள்.

வள்ளியின் குடிசைக்குப் பக்கத்தில் ஓர் தாமரைக் குளம். பொழுது புலர்ந்ததும் அதிலே போய்க் குளிப் பதிலே அவளுக்கு ஒரு அலாதியான மகிழ்ச்சி. கூந்தல் உலருவதற்காகக் காத்துக்கொண்டிருக்க முடியுமா, ஆயிரத் தெட்டு வேலை இருக்கிறதே எஜமானியம்மாளின் வீட்டில் அதனால் வள்ளி தலையைத் துவட்டிக்கொண்டு, கூந்தலை அப்படியே அள்ளிச் செருகிக் கொள்கிறாள். அடர்த்தியான கூந்தல்! அழகாக அமைகிறது அந்தக் கொண்டை! அலங் காரம் செய்து கொண்டதுபோல இருக்கிறது. எத்தனை வேலைப்பாடுகளைத் துணைக் கொண்டாலும் எஜமானி யம்மாளால் அந்தவிதமான சிங்காரக் கோலம் பெற முடிய வில்லை. அந்த எரிச்சலால் ஏசுகிறார்கள், வள்ளி என்னவோ வேண்டுமென்றே, வெகு கஷ்டப்பட்டு அந்தவித மான கூந்தல் அலங்காரம் செய்து கொண்டிருப்பதாக.

அன்னம்போல நடக்கிறாள் வள்ளி என்றார்கள்! அது அவள் தவறு அல்ல! வாலைப்பருவம்! வடிவழகு! சிற்றிடை! பயிலாமல் வந்த நடை! அதற்கு அவள் என்ன செய்வாள்! எஜமானியம்மாள் நடந்தால் பூமி அதிரும், கெம்பீரமான நடை என்று புகழ்வோரும் உண்டு! அசைகிறது பார் யானை என்று கேலி செய்வோரும் உண்டு! வள்ளி, இள மங்கை! சின்ன இடை! அன்ன நடை! அவள் தேடிப் பெற்றதுமல்ல; பாடம் படித்ததுமல்ல! அவளுக்கென்று அமைந்துவிட்ட எழில்! அதற்கு அவள் என்ன செய்வாள்?

பதினெட்டு முழமாகத்தான் அந்தச் சேலை இருந்தது: வள்ளியின் தாயிடம். பிறகு அது நைந்து நைந்து கிழியத் தொடங்கிற்று. பொத்தலும் போனதும் போக மிச்ச



முள்ளதை வள்ளி எடுத்துக் கட்டிக் கொண்டாள். அவ ளுடைய உடலமைப்புக்கு அது போதுமானதாக இருந்தது. அது புதிய நாகரிகம் என்பதற்காக அல்ல; பழைய புடைவை யின் மிச்சம் அது. புதுப்புதுப் புடைவைகள் வாங்க முடியுமா ஏழையால்.

இந்த விளக்கங்களை யார் கூறமுடியும், கோபம் கொண்டுள்ள எஜமானியம்மாளிடம்.

ஏழ்மை, தன்னை வேறோர் வீட்டிலே வேலை செய்து பிழைக்கச் சொல்லுவதுடன், காரணமற்ற கோபத்துடன் எஜமானியம்மாள் ஏசுவதையும் தாங்கிக் கொள்ளச் சொல்லுகிறது என்று எண்ணிக் கொண்டாள். ஏழை வேறு என்ன செய்ய முடியும். நியாயம், கேட்க முடியுமா!!

★

'பய, படுக்க வேண்டியதுதான், அடுத்த விநாடி தூக்கம். அது எப்படித்தான் வருதோ! எங்கிருந்து தான் வருதோ! துளியாவது வித்து விசனம் இருந்தாத் தானே. வயிறு நிறையப் போட்டு விடுறாங்க; ஆசா மிக்குத் தூக்கம் தள்ளுது.'

என்று தன்னோடு சேர்ந்து தூக்கம் வராமல் தவிக்கும் மனையாட்டியிடம் கூறி வருத்தப்பட்டுக் கொள்கிறார் சீமான்.

படுத்துப் படுத்துப் புரளுகிறார், தூக்கம் வர மறுக் கிறது. பட்டு மெத்தை; மின்சார விசிறி இருந்து? மனத் திலே முள்! தைத்தபடி இருக்கிறது. மூதூர் நிலத்தை முடிக்க முடியவில்லையே! பாதூரான் இந்த வருடத்து வட்டிப் பணத்தைக் கட்டாமல் ஏமாற்றிக் கொண்டிருக் கிறானே! மந்திரி வந்த கூட்டத்திலே மாலை போடும் போது, பயத்தால் உடல் வெடவெடத்ததைப் பார்த்து பக்கிரி கேலியாகச் சிரித்தானே! எத்தனை டானிக் சாப்பி டட்டும், நாலு அடி நடந்தால் மேல்மூச்சு வாங்குகிறதே. பெரிய இடத்திலே பெண்ணைக் கொடுத்ததிலே பெரு மைப்பட்டுக் கொண்டிருக்க, மாப்பிள்ளை 'பேயாட்ட மாடி' பெண்ணைத் துரத்தி அடிக்கிறானே! கொண்டு போனக் கணக்கைத் தூக்கி தூர எறிந்துவிட்டு அதிகாரி நெருப்பைக் கக்கினாரே! ஒரு ரூபாய் டிக்கட்டு ஒன்பதா யிரத்தை வந்தே மாதரம் தலையில் கட்டிவிட்டு 'கிட்டி

போடுகிறானே!—என்று இப்படிப் பலவிதமான கவலைகள் மனத்திலே குடைகின்றன; தூக்கம் வரவில்லை.

அவன் - படுத்ததும் தூங்கிவிட்டானே - வேலையாள் - காலையிலே இருந்து செய்த வேலை உடலைக் கசக்கிப் பிழிந்துவிட்டது பசி. விறு விறுவென்று சோறும் சாறும் பிசைந்து உள்ளே போட்டதும், பசி அடங்கி, ஒருவிதமான நிம்மதி ஏற்பட்டது.

புளியங்கட்டை, பிளக்க முடியாது, உயிர் போகும் என்று பல பேர் மிரட்டினார்கள். ஆனால் மூன்றே மணி நேரத்தில்பிளந்து போட்டுவிட்டோம்!! எந்தப் பய நம்முடைய வேலையிலே குறை காண முடியும்! என்று எண்ணுகிறான்; ஒரு பெருமித உணர்ச்சி கொள்ளுகிறான். பிற்பகல் சாப்பிட்ட நெல்லிக்காயின் 'ருசி'; நான் எங்க மாமனைத்தான் கட்டிக்கப் போறேன் வேளை வந்ததும் என்று காத்தாயி சொன்னதைக் காதாரக் கேட்ட நினைவு அவனுக்கு ஒரு தெம்பு கொடுத்தது. இந்த இன்ப நினைவு தழுவியதும் நிம்மதியாகத் தூங்கிவிட்டான்.

தன் தூக்கத்தை என்னவோ அவன் பறித்துக் கொண்டதுபோல எண்ணிக்கொண்டு, பதைக்கிறார் சீமான். நியாயமல்ல! ஆனால், அவரிடம் போய் நியாயம் பேச முடியுமா? மூன்று இலட்சம் கொண்ட பெரிய புள்ளி!!

●

ஏன் அண்ணா! இவர்களையெல்லாம் என் முன் கொண்டுவந்து நிறுத்துகிறாய், உலகிலே இதுபோலப் பலப்பல உண்டு என்பதை நானும் அறிவேனே காரணமற்ற காழ்ப்பு! பொருளற்ற கோபம்! தேவையற்ற மாச்சரியம்! இருந்திடத்தான் காண்கிறோம். வலியோர், எளியோரை வதைத்திடும் தொடர்கதையிலே இந்தச் சம்பவங்கள் பகுதிகளாக அமைந்துள்ளன; அறிவேனே!—என்று கூறுகிறாய். ஆமாம், தம்பி! இவைபற்றி நீ அறிவாய் என்பதனை நானும் அறிவேன்; ஆனால் வள்ளிமீது எஜமானியம்மாள் குரோதம் கொண்டிருப்பது போல,பாடுபடுபவன் களைத்து உறங்கக் கண்டு சீமான் பதைபதைப்பது போல, உன்னைப் பற்றி, உன் இயல்பும் அதன்மீது அமையும் பணியும் அதன் விளைவான வெற்றியும் கண்டு, அத்தகைய இயல்பற்றவர்கள், வெற்றி பெற்றிடாதவர்கள், எரிச்சல்கொண்டு,



காழ்ப்பினை உமிழ்கின்றனரே, அதனை அறிந்திருக்கிறாயா!

உன் இலட்சிய முழக்கத்தை, வெறி என்றும்,

உன் தொண்டாற்றும் திறனை, அலைச்சல் என்றும்,

உன் அமைப்பின் வளர்ச்சியை, போலி என்றும்,

உன் வெற்றியை கானல்நீர் என்றும்,

உன் திட்டத்தை வெறும் பகற்கனவு என்றும்,

உன் தமிழ்ப் பற்றை, மொழி வெறி என்றும், ஏசிப் பேசிடவும், எள்ளி நகையாடிடவும், நிரம்பப் பேர் உள்ளனரே அறிவாயா!

வானம்பாடிபோல வட்டமிடுகிறாய், தம்பி! தமிழ் இசை பரப்பியபடி! வல்லூறுகள் உன்னைக் கொத்திவிடும் கொடு நோக்குடன் பசி நிறைந்த கண்களுடன் உள்ளனவே பார்த்தனையா?

எல்லோரும் இன்புற்று இருந்திட என்னாலான பணியாற்றுவேன்—என்கின்றாய் நீ; இவன் யார் இந்தப் பணியாற்றிட! இவனை அழைத்தது யார்? இவனுக்கு ஏது அதற்கேற்ற ஆற்றல்?—என்று இறுமாந்து கேட்டிடுவோரின் குரல் உன் செவியினில் வீழ்ந்ததுண்டா?

தம்பி! உன்னைச் சூழ்ந்து கொண்டுள்ளனர், பொறாமையும் பொச்சரிப்பும் கொண்டோர்; நச்சு நினைப்பினர்; நாமடைய முடியாத வளர்ச்சியினை இவன் பெற்று வருகின்றானே என்ற எண்ணத்தால் மிருகமானோர்.

உன் தகுதி என்ன, திறமை என்ன என்றே கேட்கின்றனர், கோபத்துடன்.

பாதை அறிவாயா, பயணப்பட்டுவிட்டாயே! - என்று கேட்கின்றனர்.

பெரியதோர் சுமையைத் தூக்கிட முனைகின்றாயே, அதற்கேற்ற தோள்வலி உனக்கு உண்டோ?—எனக் கேலி பேசுகின்றனர்;

ஓட்டாஞ் சல்லிகளைக் கொடுத்து வைரக்கற்களை வாங்கிடப்போமா! ஊராளும் வாய்ப்பை, உண்மைக்கு உழைப்பதன்முலம் பெறலாம் என்று எண்ணிக் கொள்

09219

கிறாயே, ஏமாளித்தனம் அல்லவோ அஃது என்று கேட்கின்றனர்.

கோட்டை எம்மிடம்! கொடிமரம் எம்மிடம்! பேழை எம்மிடம்! நீயோ உறுதி என்னிடம்! உண்மை என்னிடம் களம்புக முனைகின்றாயே, இது பேதையின் போக்கல்லவா என்று கூறிக்கொண்டு கேட்கின்றனர்.

★

ராஜபாட்டையில் ரத கஜ துரக பதாதியர் செல்கின்றனர்!

காலைக் கதிரவன் ஒளிபட்டு, படைக்கலன்கள் பளபளக்கின்றன!

மாடிகளிலே நின்றிடும் மங்கையரின் வதனம் கண்டு ஈதென்ன அதிசயம்! ஒரு கதிரவனைக் காண இத்தனை சந்திரன்கள் வந்துள்ளனவே என்று புலவர்கள் பாடுகின்றனர்.

வீசிடும் மென்காற்றால் அசைந்திடும் பட்டாடை கண்களைப் பறிக்கும் நேர்த்தியுடன் விளங்குகிறது.

அந்த ராஜபாட்டை, அரசிளங்குமரர்க்கும் அவர் தம் படை வீரர்கட்கும் அமைந்தது.

கட்டுடலை மட்டும்கொண்டு, அதற்கு ஓர் அழுக்கேறிய துணி சுற்றிக்கொண்டு நடந்திடும் பராரிக்கு அங்கு என்ன வேலை!

மாளிகைக்குள்ளே பூங்கொடிகள் மீட்டிடும் யாழொலி கிளம்புகிறது. உன் வாய் ஏதோ முணுமுணுக்கிறதே, யார் செவியில் அது விழும்.

போ! போ! ஒதுங்கிப் போ! ஓரமாகப்போ! ஊர்க் கோடி நோக்கி நட!

முட்டுச் சந்துகளில் நட! ராஜபாட்டையைக் கேவலப்படுத்தி விடாதே! இது செல்வபுரி! நீ இங்கே நடந்திட அனுமதி இல்லை! காவவர் தடுத்திடுவர்! வேட்டை நாய்களை அவிழ்த்துவிடுவர்! அவை உன்மீது பாய்ந்து கடித்துப்போடும்! பாவையர் கண்டு கைகொட்டிச் சிரிப்பர், பித்தன் என்று! சிறார்கள் கல் வீசுவர்! சிறைக்கே இழுத்துச்



சென்றிடக்கூடும்! இது உனக்காக அமைந்த பாதை அல்ல! இது உடைமை உடையார்க்கான பாதை! உழைத்தால் மட்டுமே பிழைத்திடத்தக்க உனக்கு அல்ல!—என்று பழங்காலத்துக் கொடுங்கோலர் கூறுவர்; இப்போது உள்ள ஆளவந்தார்கள் நாடாள உனக்கு ஏது தகுதி! உனக்கு ஏது ஆற்றல்! என்று ஆணவத்துடன் கேட்கிட்றனர்.

உன் அமைதி அவர்களை ஆர்ப்பரிக்கச் செய்கிறது.

உன் கடமை உணர்ச்சி அவர்களைக் கதிகலங்க வைத்திருக்கிறது.

★

மன்னன் மகளுக்குச் சுயம்வரம் என்று கேள்விப்பட்டு, விரைந்தோடினர் அரசிளங்குமரர் பலர்; தத்தமது விருதுகளுடன்; படை புடைசூழ; பரிவாரம் உடன்வர!

பல்லக்கில் சில பார்த்திபர்கள்! பரிமீது சிலர்! யானை மீது அம்பாரி அமைத்து அதிலே கெம்பீரமாக அமர்ந்து சிலர்! அணிபணிபூண்டு! பளபளப்புடன்!!

காட்டுக்குதிரை, இது கட்டுக்கு அடங்காது இதற்கு மதிப்பும் கிடைக்காது என்று பலர் எண்ணிக் கொண்டிருந்தனர் அவன் ஏறிக்கொண்டு வந்த அந்தக் குதிரையை முன்பு கண்டவர்! இது நல்ல 'சுழி' உள்ள குதிரை அல்ல என்று நாம் ஒதுக்கிவிட்டோம், வேறு நல்லது கிடைக்காததால் இவன் இதனைக் கொண்டான்; இப்போது பார்த்தால், எலும்புந் தோலுமாகவும் இல்லை. இடறி விழுந்திடுவதாகவும் இல்லை, காட்டுப்போக்கையும் காணோம், குதிரைக்கே ஒரு புது மினுமினுப்பு ஏறிவிட்டிருக்கிறதே! நடை, அழகாக இருக்கிறது. தோற்றம், கெம்பீரமாக இருக்கிறது. அவ்வளவு புதுப்பொலிவு, அந்தக் குதிரைக்கு! நம்முடைய குதிரைக்கு நாலு ஆள் பராமரிக்க! பாதாம் பருப்பை அரைத்துப் பக்குவப்படுத்தித் தருகிறோம், மினுமினுப்புப் பெறட்டும் என்று. அரபு நாட்டிலேயே இது போன்ற அருமையான புரவி கிடையாது என்று கூறி நம்மிடம் வணிகர் விற்றனர். நாம் மிக அக்கறையுடன் பராமரித்து வருகிறோம். என்றாலும் அந்தப் பயல் அமர்ந்து வருகிறானே ஒரு குதிரைமீது, அது என்ன கெம்பீரத் தோற்றத்தோடு இருக்கிறது! இடர்மிகு வழியெனினும் எத்துணை எளிதாகச் செல்கிறது. ஆறு குறுக்

கிட்டால் அலுப்புத் துளியுமின்றி நீந்துகிறது' அகழி கண்டால், தாவுகிறது, தடுமாற்றமின்றி! தட்டினால் சிட்டாகப் பறக்கிறது? இவன் ஆள நாடு இல்லை! கொலுவிருக்க, மாளிகை இல்லை! கூப்பிட்ட குரலுக்கு ஓடிவர ஆள் அம்பு இல்லை! இவனிடம் இப்படிப்பட்ட குதிரையா!! என்று எண்ணி ஏக்கம் கொள்கிறார்கள், இளவரசர்கள்.

அவனோ! ஊர்பேர் தெரியாதவன்! விருது ஏதும் இல்லை! அரண்மனையில் அவன் இல்லை! குடிமகன்! அவன் உலவுவது பூங்காவில் அல்ல; வயல்வெளியில். அவன் பெருமைமிகு மரபினன் என்று புலவர் எவரும் பாடிடவில்லை. அவன் செயலில் சிறப்பு இருக்கிறது; மனவளத்தில் மரபு இருக்கிறது என்ற கருத்துடையவன்; உழைப்பால் மெருகேறிய உடல்; களத்திலே பெற்ற வடுக்களே அவன் பூண்டிருந்த அணிபணி! மற்றவர்கள் உடலில் வைரம் மின்னிட, இவன் கண் ஒளியிலே வைரத்தைக் காட்டினான்.

இவனா சுயம்வரம் காண வருகிறான்! ஏனாம் என்று கேட்டு கெக்கலி செய்தனர் சிலர்.

சுயம்வரம் காணப் பல நாட்டுச் சிற்றரசர்கள் வருவார்கள், அங்குச் சென்றால் யாரேனும் ஓர் இளவரசனிடம் வேலை கேட்கலாம் என்று வருகிறான் போலும் என்று கூறிச் சிரித்தனர் சிலர்.

சந்தையோ திருவிழாவோ நடைபெறுகிறது என்று எண்ணிக்கொண்டு வருகிறான் போல இருக்கிறது! பயலுக்குச் சொல்லுங்கள், சுயம்வரம் நடைபெறுசிறது, அதற்காக, அரச மரபினர் செல்கின்றனர் என்பதை! அங்கு வந்து ஏமாற்றமடைவானேன்!! என்று கேலி பேசினர் சிலர்.

அவன் அவர்களுடைய பேச்சைப் பொருட்படுத்தவில்லை.

அவன் அவர்களிடம் எதனையும் எதிர்பார்க்கவில்லை, ஆகவே ஏமாற்றம் கொள்ளவில்லை.

அவன் சென்றபடி இருந்தான்!

அவன் காட்டிய அலட்சியம் அவர்களுடைய ஆத்திரத்தை மேலும் மூட்டிவிட்டது.



இவ்வளவு ஏசுகிறோம் பயல், ஏனென்று கேட்க மாட்டேன் என்கிறானே!

வம்பு வல்லடிக்கு இழுத்துப் பார்க்கிறோம், பயல் வலையில்விழ மறுக்கிறானே!

என்று அவர்கள் பேசிப் பேசி ஓய்ந்து போயினர்!

அத்தாணி மண்டபத்திலேயோ அந்த அழகுமயிலாள் அவனைத்தான் தேர்ந்தெடுத்தாள்!

கவனிப்பாரற்ற நிலையில் வந்தான்; எல்லோருடைய கவனத்தையும் தன் பச்கம் ஈர்த்துக் கொண்டான்.

அரச மரபினில் வந்தவன் அல்ல இவன் என்று கேலி பேசினர் கண்முன் அவன் அரச மரபினன் ஆக்கப்பட்டு விட்டான்.

★

தம்பி! பழங்காலக் கதைகள். பாராளும் வேந்தர் மரபினர், புதியவர்களைக் கண்டு பொச்சரிப்புக் கொள்ளும் இயல்பை எடுத்து விளக்கிடும் கதைகள்.

இக்காலத்தில், கரி பரி காவலர் என்ற புறத் தோற்றம் இல்லை எனினும், அன்று இருந்தது போன்றே, பொச்சரிப்பு கொள்வோரும் பொல்லாங்கு எண்ணுவோரும் நிரம்ப உள்ளனர்.

அவர்கள் அனைவருக்கும் தம்பி! உன் ஆற்றலால் வளர்ந்துள்ள நமது கழகத்தின் ஏற்றமிகு தோற்றம், கண்ணை உறுத்துகிறது, கருத்தைக் கலக்குகிறது, நடையிலே நாராச நெடி அடிக்கிறது!

இவனுக்கு இப்படி ஒரு கழகமா! இப்படி ஒரு கழகத்தை இவன் உருவாக்குவதா!

வசதியற்றவன், அமைத்துள்ள கழகம், வளர்ந்த வண்ணம் இருக்கிறதே!

வசதிகள் நம்மிடம் ஏராளம்! நம்மாலே முடியவில்லை, இந்தவிதமான வளர்ச்சி பெற்றிட. இவன்... இவன்...என்று எண்ணும்போதே: தம்பி! அவர்களுக்கு இதயத்தில் ஈட்டி பாய்வது போலிருக்கிறது.

பார்க்கப்போனால் தம்பி! நாம் பெற்றுள்ள இந்த வளர்ச்சி, பலருக்கு மனப் புழுக்கத்தைத்தான் தந்திடும்.

ஆராய்ந்து பார்த்திடின், இந்த உண்மையை உணரலாம்.

இந்த உண்மையை உணர்ந்திடின், அவர்கள்மீது கோபம்கூட வராது, பரிதாபந்தான் பிறக்கும்.

நாடாளும் உரிமை, ஜனநாயகத்தில் எவர்க்கும் உண்டு.

ஏழைக்கும் பணக்காரனுக்கும், 'ஓட்டு' ஒவ்வொன்றுதான்! அதிலே வித்தியாசம் கிடையாது.

மேல்ஜாதிக்காரன் நான் ஆகவே எனக்கு எட்டு ஓட்டுகள்! தாழ்ந்த ஜாதிக்காரனுக்கு ஒரே ஒரு ஓட்டுதான் இருக்கவேண்டும் என்று பேசமுடியாது; நாடு கேட்டுக்கொள்ளாது; சட்டம் அனுமதிக்காது; ஜனநாயகம் ஒப்புக்கொள்ளாது.

இவை ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைகள்!

ஆனாலும், இப்போதும் நம்மைவிடப் பணபலத்தில் தாழ்ந்தவன் நமக்குச் சமமாக, அரசியலில் இடம் பெறுவதா!—என்ற காதக எண்ணம் கொண்டவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். வெளிப்படையாகப் பேசமாட்டார்கள்; புற்றுக்குள் அரவம்போல அவர்களின் காதகம் இருந்து வருகிறது.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பது குறள். சட்டமும், அரசியலில் அனைவரும் சமம் என்று செப்புகிறது. என்றாலும் இன்றும், ஜாதி மூலம் ஆதிக்கம் செலுத்த எண்ணுவோர் சாஸ்திரம் காட்டி சமூகத்தில் ஏற்றத் தாழ்வைப் புகுத்த நினைப்போர் இருக்கத்தான் செய்கின்றனர். அவர்களால் முன்பு போலக் கொக்கரிக்க முடிவதில்லை, ஆனால் மனத்திலே மட்டும் குரோதம் குமுறிக் கொண்டுதான் இருக்கிறது.

பணத்தால் உயர்ந்த நிலை, ஜாதியால் உயர்ந்த நிலை என்ற முறை, ஒருபுறம் சீர்திருத்தவாதிகளின் சம்மட்டி அடியால் நொறுங்கிக் கொண்டுவந்தது; மற்றோர்புறம் நாட்டு விடுதலைக்கான போராட்ட வேகம், சமூகத்தில் பண்ம், ஜாதி ஆகியவற்றால் மூட்டி வைத்திருந்த



பேத உணர்ச்சியை, மேல் கீழ் என்ற நிலையைத் தகர்த்தபடி இருந்தது.

அரசியலில் அனைவரும் ஒன்றுபட்டுப் பணியாற்றுவது என்பதும் அரசியலில் அனைவருக்கும் ஒரே நிலை என்பதும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, சமூக அமைப்பிலேயும் சாஸ்திரம் சம்பிரதாயம் ஆகியவற்றின் துணை கொண்டு கெட்டிப்படுத்தப்பட்டிருந்த ஜாதிபேதம் தொலைக்கப்பட்டாக வேண்டும் என்ற உணர்வு வலுப்பெற்றது.

ஜனநாயகத்தின்படி ஏழையாயினும் சீமானாயினும், எந்த ஜாதியினன் என்றாலும் ஒருவருக்கு ஒரு ஓட்டு! என்ற முறை நடைமுறையாக்கப்பட்டது.

என்றாலும், பணம் படைத்தோர், உயர்ஜாதி என்று பட்டயம் பெற்றுக்கொண்டோர், சட்டம் என்ன செப்பிடினும், நாடாளும் உரிமை தமக்குத்தான் இருக்க வேண்டுமேயன்றி ஏழைக்கும், என்னென்னவோ ஜாதிகளைச் சேர்ந்தவனுக்கும் இருக்கக்கூடாது; இருக்க அனுமதிக்கக்கூடாது என்ற நச்சு நினைப்பினை விட்டுவிடவில்லை.

தம்பி! நாம் கழகம் துவக்கியபோது, இந்தப் பயல்களா? இந்தப் பஞ்சைகளா? என்று கேட்டனர், செல்வபுரியினர். ஏன்? பணதைதக் காட்டியோ, பூர்வ பெருமை காட்டியோ, அரசியலில் பலர் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த நேரத்தில், வறண்ட தலையினர், எமக்கும் அரசியலில் ஈடுபட, மக்களுக்குத் தொண்டாற்ற உரிமை உண்டு என்று கூறியபோது கெக்கலி செய்தனர்.

நாம் அரசியலில் ஒரு திருப்பு முனையை உண்டாக்கத் தக்க விதமாக, முன்னேற்றக் கழகம் துவக்கியபோது, காங்கிரசுக்குள் பணம் படைத்தோரின் செல்வாக்கு மிகுதியாகிவிட்டிருந்தது. அவர்கள், நம்மைப் போன்ற 'பஞ்சை பராரிகள்' ஒரு கட்சி நடத்த முடியும் என்று நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.

அவர்கள் கைகொட்டிச் சிரித்தனர்.

எந்தத் திராவிடர் கழகத்தைவிட்டு வெளியேறினோமோ அந்தக் கழகத்தவர் ஏளனம் செய்தனர்.

பெரியார் சாபம் கொடுத்தார்; ஜாதகம் கணித்தார்; நாலு நாளைக்கு ஆட்டமாடிவிட்டு, மூலைக்கு ஒருவனாக ஓடிப்போவான், மூக்கறுபட்டு முக்காடிட்டுக் கொள்வான் என்று ஊருருக்கும் சென்று கூறினார், நாள் தவறாமல்.

'ப்யூஸ்போன பல்புகள்' என்று உவமைநயம் காட்டிப் பேசினர், நம்மை ஏசிட!

காங்கிரசுக் கட்சியினர் காசு கொடுத்து இந்தக் காலி களைத் தூண்டிவிட்டுளைனர்; வாங்கிய காசு தீர்ந்து போனதும் வாலை மடக்கிக் கொள்வார்கள் என்று பெரியார் 'எதிர்காலம்' பேசினார்.

என்னிடம் மூட்டை தூக்கிய தூக்கிய பயல்கள். கூலி வாங்கிய ஆசாமிகள்—இதுகளுக்கு ஒரு கட்சி! ஒரு கொடி! ஒரு படை! ஒரு நடை! செச்சே! நாடு இப்படியா தாழ்ந்து விடுவது என்று பரிதாபம் காட்டிப் பேசினார்.

கோபம் காரணமாகப் பெரியார் இப்படியெல்லாம் பேசினார் என்றுதான் பலர் கருதிக்கொண்டனர்; அவர் உண்மையில் நம்பிக்கையுடன் பேசினார்.

> ஒரு கட்சியை நடத்திச் செல்வது, பணபலமற்ற நிலையில் அதனை வளரச் செய்வது நடக்கக்கூடிய காரியமல்ல என்பது அவருடைய அசைக்க முடியாத நம்பிக்கை.

> அதிலும் காங்கிரஸ் கட்சியை எதிர்த்து நிற்பது என்றால் அதற்கு மிகப் பெரிய துணிச்சலும், தன்மான உணர்ச்சியும், எவனையும் நத்திப் பிழைக்கவேண்டிய அவசியமற்ற நிலையும் இருக்கவேண்டும். மற்றவர் கள், பத்துநாள் படபடப்புக் காட்டிவிட்டுப் பதினோ ராம் நாள் பாதம் விழுவார்கள் என்று சொல்பவர்.

எனக்கு எவன் தயவும் தேவையில்லை! யாருடைய கையையும் எதிர்பார்த்து வாழ தேுண்டிய நிலையில் என்னை என் பெற்றோர் விட்டுவைக்கவில்லை

ஈரோட்டிலேயே மிகப்பெரிய மண்டிக் கடை எங்களுடையது.

ஈரோட்டிலேயே மூன்றடுக்கு மாடிக் கட்டடம் எங்களுடையது.



> என் வீட்டுத் தாழ்வாரத்திலேதான் தமிழ்நாடு காங்கிரசே இடம் கேட்டுப் பெற்றிருந்தது.

என்றெல்லாம் பெரியார் பேசுவார்; வெகு கெம்பீரமாக.

அவருடைய அந்தப் பேச்சு அவருடைய அழுத்தமான நம்பிக்கையின் மீது அமைந்திருந்தது; வெறும் வீம்புப் பேச்சு அல்ல; வெட்டி வீராவேசப் பேச்சு அல்ல!

> மிகுந்த செல்வவசதி படைத்தவர் தவிர மற்றவர் களால் அரசியலில், மற்றவனுக்கு அடிமையாகிடாமல், வாழ முடியாது என்பது அவருக்கு இருந்து வந்த (இப் போது எப்படியோ தெரியாது!) அசைக்க முடியாத நம்பிக்கை.

பணமற்றவன், பிறன்கையை எதிர்பார்த்து வாழ வேண்டி யவன் கொள்கை பிறழாமல் வாழ முடியாது என்பதனை ஒரு தத்துவம் போலவே பேசுவார்.

> சோற்றுக்கில்லாதார் பிரசாரம்!

என்ற தலைப்பிட்டே, அப்படிப்பட்டவர்களைப் பற்றி எழுதியிருக்கிறார்.

ஆகவேதான் தம்பி! அவருடைய கழகத்திலிருந்து பிரிந்து சிலர் தனிக் கழகம் துவக்கியபோது அவர் அவ்வளவு வேகமாக ஆருடம் கணித்தார்.

> எவன் இவன்களோடு போவான்!

> எவனுக்கு இவன்களிடம் நம்பிக்கையோ மதிப்போ ஏற்பட முடியும்?

> நாலு நாளைக்கு ஒரு கூட்டம் சேர்த்துக் கூத்தடித்துவிட்டு, காங்கிரசின் காலிலே போய் விழு வான்! வேறே வழி!!

என்று அவர் பேசியபோது ''ஐயா'' நடைபெறப் போவதைத்தான் சொல்கிறார் என்று நம்பினோர் பலப் பலர்.

ஆனால், தம்பி! உன்னுடைய ஊக்கமும் உற்சாகமும் உன்னதமான உழைப்பும், பணவசதியற்ற நம்மை, பல கட்சியினரும் கண்டு வியந்திடத்தக்க ஒரு கழகத்தை நடத்திச் செல்லத்தக்கவர்களாக்கிற்று.

நம்மிடம் பணம் இல்லை, பழம்பெருமை இல்லை, மேட்டுக் குடியினர் என்ற விருது இல்லை; ஆகவே, வளரமாட்டோம் என்று மட்டுந்தான் அவர் கணக்கெடுத்தார்

உன் வியர்வைத் துளிகளுக்குள்ள விலை மதிக்கொணாத கணக்கு அவருக்குக் கிடைக்கவில்லை.

கழகம் கருகிவிடவில்லை; கழகம் நடாத்துவோரும் எவர் பின்னும் கைகட்டி வாய்பொத்திச் சென்றிடவில்லை. அது கண்டு ஓரளவு எரிச்சல் ஏற்பட்டது; அப்போதும் எதனால் கழகம் வளருகிறது என்ற கணக்குப் புரியவில்லை.

அப்போதுதான் தம்பி! அரசியல் உலகில், கழக வளர்ச்சி கண்டு அருவருப்பு அடைந்தவர்கள், கழகம் வளருவதற்கான காரணம் எதையாவது கூறியாக வேண்டும் என்ற நிலைக்குத் துரத்தப்பட்டு, நான்,

அடுக்கு மொழி பேசி மயக்குகிறேன் என்றும்,

காமச் சுவையுள்ள கட்டுரைகள் எழுதிக் கெடுத்து விடுகிறேன் என்றும்,

குற்றம் சாட்டு வந்தனர்.

ஒரு ஐந்தாறு வருடமிருக்கும், தமிழகத்தில் எல்லா அரசியல் கட்சி மேடைகளிலும், இதுதான் பேச்சு!

அடுக்கு மொழி!
ஆபாச நடை!!

தமிழ்மொழியின் அமைப்பே அடுக்கு மொழிக்கு இடம் தருகிறது, அடுக்கு மொழி பேசுவதற்கு முன்வந்தவன் நான் மட்டும் அல்ல! என்றாலும் செய்யக் கூடாத ஒரு பாதகத்தை நான் செய்து வருவது போன்ற ஒரு தோற்றமளிக்கும்படி, எல்லா அரசியல் கட்சியினரும் பேசினர், அடுக்கு மொழியைக் கண்டித்து.

முத்தைத் தரு பத்தித் திருநகை
சத்திக் கிரை சத்திச் சரவண
முத்துக்குக வித்துக் குருபர!

என்பன போன்ற சந்தச் சுவைமிகு எடுத்துக் காட்டுகளையெல்லாம் நான் பேசி, அடுக்குமொழி என்பது தவறு ஆகாது என்று விளக்கிக் கொண்டுவந்த காலம்.



தம்பி! நீ மறந்துவிட்டிருப்பாய்; நமது கழகத்தின் மீது என்ன பழி சுமத்துவது என்றே அலைந்தவண்ணம் இருந்த அந்த நாட்களில், நாள் தவறாமல் நாம் கூட்டம் நடத்துகிறோமே, அதுவே தவறு, கேலிக்குரியது, கண்டிக்கத்தக்கது என்று பேசினர்! இப்போது நினைவிற்குக் கொண்டு வந்தால்கூட எனக்குச் சிரிப்பு வருகிறது!

பேச்சுக் கச்சேரி நடத்துகிறார்கள்.

உவமையும் அணியும் வைத்துப் பேசுகிறார்கள்.

இது அரசியல் பேச்சாகுமா!

என்றே எழுதினார்கள்: தொடர்ந்து.

இந்த எதிர்ப்பு கழகத்தை ஏதும் செய்துவிட வில்லை.

சொல்லப்போனால், நான் அடுக்கு மொழி பேசுசிறேன் என்று கேலி பேசியவர்களெல்லாம் அடுக்குமொழி பேசத் தலைப்பட்டனர்.

அடுத்த கட்டத் தாக்குதல் தம்பி! மேலும் விந்தையானது.

அந்த நேரத்தில், நமது கழகத்தில் கலை உலகினரின் தொடர்பு இன்றுள்ள வகையிலும் அளவிலும் இருந்ததில்லை. இன்று ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டிருக்கிற பல சமுதாயத் திருத்தக் கருத்துக்களை, நாடக மூலம் எடுத்துக் காட்ட வாய்ப்புகள் கிடையாது.

கழகக் கருத்துள்ள நாடகம், சினிமா, பாட்டுக் கச்சேரி, இவை இன்றுள்ளதுபோல இருந்ததில்லை.

ஆனால், நாடகமூலம், இசைமூலம், அடிப்படையான சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களை எடுத்துக் கூறியாக வேண்டும் என்ற துடிப்பு, நிரம்ப.

அதன் காரணமாக, நாடகங்கள் நடத்திட முனைந்தோம். உடனே தாவிப் பாய்ந்தனர், இது சரியான வாய்ப்பு என்ற எண்ணத்துடன்,

கூத்தாடுகிறான்!

பவுடர் பூசுகிறான்!!

அரசியல் மேடையை நாடக மேடையாக்குகிறான்!

அடுக்குமா! ஆகுமா!

அனுமதிக்கப் போமா?

நாடகமாடுபவன் நாட்டிலே அரசியல் கட்சி நடத்துவதா!

கணைகள், சரமாரியாக; மிகக் கூர்மையுடன்!!

ஆனால் தம்பி! அவர்கள்தான் அலுத்துப் போனார்கள் நமது நாடகப் பணி நின்றுவிடவில்லை; கே. ஆர்; ராமசாமியின் ஒப்பற்ற கலைத் தொண்டு நமக்குக் கிடைத்தது; சமூக சீர்ஒருத்தக் கருத்துக்களைப் பரப்பினோம்.

இன்று தலைமை நிலையம் இருக்கிறதே 'அறிவகம், அதுவும், அங்கு நடைபெறும் அச்சகமும் பிறவும், 'பவுடர் பூசிகளாக' இருக்கிறோம் என்று ஏசினார்களே அப்போது பெற்றவை.

கழகத் தோழர்களே நடத்தித் தீரவேண்டியிருந்த நிலையிலிருந்து நமது நாடகப் பணி செம்மையாக வளர்ந்து 'நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி, டி. வி. நாராயணசாமி, எஸ். எஸ். ராஜேந்திரன் போன்றாரின் பண்பட்ட நடிப்பின் துணை பெற்றது.

தம்பி கருணாநிதி, சி. பி. சிற்றரசு, ஆகியோரின் நாடகங்கள், கழகத்தின் கலைப்பகுதியாக விளங்கி வந்தன.

தம்பி என்று நான் அழைத்தால் மகிழ்ச்சி பெற்றுக் கொண்டிருந்த நிலையில் சிவாஜி கணேசன், கழக நாடகங்களில் பங்கேற்றதை நாடறியும்!

நாடகமாடுவதால், கழகத்தின் தரம் கெட்டுப் போய் விடும் என்று குற்றம் சாட்டினர். கழகமும் வளர்ந்தது; கலை நிலையும் உயர்ந்தது. இன்று இந்த இரு துறைகளிலும் மிக்க ஏற்றம் பெற்றுத் திகழ்திடும் எம். ஜி. ராமச்சந்திரன், எஸ். எஸ். ராஜேந்திரன், கே. ஆர். ராமசாமி, டி. வி. நாயணசாமி ஆகியோர், நாட்டவரின் நன்மதிப்பைப் பெற்றுள்ளனர்.

எதற்காக இதனைக் கூறினேன் என்றால் தம்பி! நாடகமாடுவதையே ஒரு இழுக்கு, இழிவு, அரசியல்வாதி



செய்யத்தகாதது; ஆகவே நாடகமாடக் கிளம்பிவிட்டதால் கழகத்தவர் அழிந்துபோய்விடுவர், நாட்டு மக்களுடைய நன்மதிப்பை இழந்து விடுவர் என்று தவறாகக் கணக்கிட்டுக்கொண்டு, சில ஆண்டுகள் 'பவுடர் பூசுகிறானே! பாவலா போடுகிறானே!!' என்றே மேடை அதிரப் பேசிக்கொண்டு வந்தனர்.

இத்தகைய எதிர்ப்புப் பிரசாரம் பலன் தராது போகவே, கழகத்தில் தலைமைப் பதவிக்குச் சண்டை! அவனை இவன் விழுங்கப்பார்க்கிறான்; இவனை அவன் ஒழிக்கப்பார்க்கிறான்! தீர்ந்தது! இன்னும் எட்டே நாளில் படாரென உடைபடப்போகிறது என்று பேசி வந்தனர்.

கழகம் குலையாதது மட்டுமல்ல, நேர்த்தியான ஜனநாயக அமைப்பாக வளர்ந்து வரலாயிற்று.

நாடகத்தறையிலே ஈடுபாடுகொண்டது போலவே கழகத்தவர், சினிமாத்துறையில் ஈடுபடலாயினர்! இதைக் காரணமாகக்காட்டி,இனி இந்தக்கழகம் அழிந்தே போகும்! அவன்—அங்கே புரளுகிறான்! இவன் இங்கே உருளுகிறான்! —என்று ஆபாசமான பழிகளை உமிழ்ந்தனர்.

சினிமாவை விடு!

சிலம்பத்தை எடு!!

என்று நாடெங்கும் முழக்கம் எழுப்பினர்!

இந்தப் படலமும் அவர்களுக்குப் பலன் தரவில்லை

உடனே வேறோர்முனை பாய்ந்தனர்.

இந்தக் கழகத்தான்கள் பேச்சோடு சரி!

செயலில் முடியாது!!

கிளர்ச்சி நடாத்திட இயலாது!

துணிவும் கிடையாது, திட்டமும் இல்லை; இவர்களை நம்பிக் கிளர்ச்சியில் ஈடுபட ஆட்களும் வரமாட்டார்கள். இவர்கள் கிளர்ச்சி நடத்தினாலும் சர்க்கார் மதிக்காது என்று ஏசலாயினர்.

அப்போது தம்பி! நான் கூறினது நினைவிலிருக்கும்

கிளர்ச்சிகளைத் தேடி அலையமாட்டோம்.

அவசியம் ஏற்பட்டால் நடத்தாமல் விட மாட்டோம்!

என்றேன். அந்த வாசகத்தைத் தூக்கிவைத்துக் கொண்டு

அலையமாட்டனாம்; அகப்பட்டால் விடமாட்டானாம்

என்று ஊரூருக்கும் பேசி, ஒவ்வொரு நாளும் கணக்குப் பார்த்து வந்தனர், இன்று கழகம் எந்த அளவு குலைந்தது என்று! குலையவில்லை.

பிறகு தேர்தலிலே ஈடுபடமுனைந்தோம்.

அகப்பட்டுக்கொண்டான் பயல்! இதுவரையில்

சிக்காமல் இருந்து வந்தான்! இனிச் செத்தான்!!- என்று செப்பினர்.

நாட்டு மக்கள் கழகத்தை மேலும் ஏற்றம் பெற்றிடச் செய்தனர்; இவர்களின் ஆரூடத்தைப் பொய்யாக்கினர்.

இரண்டாவது முறை தேர்தலில் ஈடுபட்டவுடன் வேறோர் புகார் கிளப்பினார்.

அண்ணாதுரை பார்ப்பன அடிமை ஆகிவிட்டான்.

ஆச்சாரியார் திருவடி சரணம் என்றாகிவிட்டான்.

இனி அவனைத் தமிழர் துரத்திவிடுவர்.

இந்தப் பிரசாரம், மிகத் தீவிரமாக வேலை செய்யும் என்ற நினைப்பு அதிகம்.

ஆனால், அந்தப் பிரசாரத்திற்குப் பிறகுதான், கழகம் 38–இலட்சம் வாக்குகளைப் பெற்றது!!

ஏமாற்றம்! ஆத்திரம்! எரிச்சல்! அவர்களுக்கு.

ஆகவேதான், தம்பி! உன்னையே ஏசவும்,இழித்துரைக்கவும் தலைப்பட்டுள்ளனர்.

இடையிடையே, செத்த பாம்பை எடுத்து ஆட்டிக் காட்டுவதுபோல, ஆச்சாரியாரிடம் சரண் அடைந்து விட்டான்! ஆரிய தாசனாகிவிட்டான்! என்ற பேச்சையும் எடுத்துவீசி வருகின்றனர்.



சுடச்சுட இருந்த நாளிலேயே விலைபோகாத பண்டம் அது!

இப்போது சூடும்போய், ஈ எறும்பு மொய்த்துக் கொண்டிருக்கும் நிலைக்கு வந்து விட்டது; இப்போது அதனைக் கூவிக்கூவி விற்றாலும் வாங்குவார், யார்!!

ஆனால் வேறு என்ன செய்வார்கள்!

வள்ளிமீது எஜமானியம்மாளால் கோபிக்காமல்இருக்க முடிகிறதா?

அயர்ந்து தூங்குகிறானே என்று வேலையாளிடம் சீமானுக்குப் பொறாமை மூளாமல் இருக்கிறதா?

எல்லாவிதமான வசதிகளும், வலிவுகளும் திரட்டிவைத்துக்கொண்டு, தலைவர்கள் ஆகத் துடியாய்த்துடிக்கிறார்கள் பலர்; முடியவில்லை. நீயோ தம்பி! உன் தூய தொண்டின் மூலம், வலிவும் பொலிவும்மிக்க கழகத்தை நடத்திச் செல்கிறாய். கோபம் அவர்களுக்கு. சொதிப்பு மிகுதியாக!! அதனால் இழித்தும் பழித்தும் பேசிட முனைகின்றனர். அவர்களின் வேகம் அதிகமாகும், தேர்தல் நெருங்க, நெருங்க!

இழி மொழிகளையும் பழிச் சொற்களையும் கேட்டு, உனக்குக் கோபம் பீறிட்டிடுக்கொண்டு வரவேண்டும்.திசை மாறவேண்டும் என்பது அவர்களின் நோக்கம், தயக்கம், தடுமாற்றம் மூட்டிவிட்டு, தீர்த்துக்கட்டி விடலாம் என்பது அவர்கள் கொண்டுள்ள நைப்பாசை.

இவ்வளவுக்கும் காரணம் உன் தூயதொண்டில் அருமையும் பெருமையும் இன்று அரசியல் வட்டாரத்தில், ஓங்கி வளர்ந்துள்ள தலைவர்களை உறங்கவிடாமல் செய்து கொண்டிருக்கும் ஒரு உன்னதமான பாசறையை அமைத்துக்கொடுத்துக்கொடுத்திருக்கிறதே என்பதனால் ஏற்படும் பொறாமைஉணர்ச்சி.

இன்றுநேற்றல்ல,நமது கழகம் தொடங்கிய நாள்தொட்டு இத்தகையோரின் இழிமொழியும் பழிச் சொல்லும் நம்மீது வீசப்பட்டு வந்தன. ஆனால் அந்தத் தாக்குதல் நமது வளர்ச்சியைத் தடுத்திட இயலவில்லை; என்பதை நினைவுபடுத்தவே 'பழங்கதை'யைக் காட்டினேன்!

ஆறு புரண்டோடி வரும் வேகத்தில், கூழாங்கற்களை உருட்டி விட்டுவிடும்.

பெரும் பாறைகள் தடுத்திடினும், அவற்றிலே, மோதிப் பேரிரைச்சலுடன் மேலே தாவும்!

மிகச் சாமான்யர்கள் நாம்! மிகப் பெரிய வலிவினை உருவாக்கி வைத்திருக்கிறோம்.

மிகப் பெரியவர்கள் வலிவு பெறத் தவம் கிடக்கிறார்கள்; பெற்றிட இயலவில்லை.

அதனால் வந்திடும் ஆத்திரத்தில் ஆயிரத்தெட்டு ஏசிடத்தான் தோன்றும்.

★

அந்த வட்டாரத்திலேயே அவன் பெரிய மிட்டாதாரன்! தலம் பல சென்று தொழுது, வரம் பெற்றுப் பெற்றான் ஒரு மகனை! ஆனால் அவனோ···

பொட்டல் காட்டினைப் பண்படுத்திப் பூந்தோட்டமாக்கினான் ஒரு காளை.

ஒரு நாள் ஆற்றோரம் மிட்டாதாரன் மகன் உலவச் சென்றான். திடீரெனக் கீழே சாய்ந்தான்! காக்காய் வலிப்பால் தாக்குண்டதால்!

கண்டான் காளை! கடுகிச்சென்று, மிட்டாதாரன் மகன் முகத்தில் நீர் தெளித்து, நினைவு வரச் செய்து, அவனை அழைத்துச் சென்றான் மாளிகைக்கு!

மிட்டாதாரன் நன்றி கூறத்தானே வேண்டும்? எரிந்து விழுகிறான், காளையின் மீது!

பார்! இந்தப் பயலை. கொழுத்துக் கிடக்கிறான்!

இத்தனைக்கும் இராப்பட்டினி!

என் மகன்—குலக் கொழுந்து—இப்படி இருக்கிறான்!

என்று எண்ணுகிறான்; கடுங்கோபம் வருகிறது.

★



தம்பி! கதைதான்: ஆனால், இத்தகைய இயல்பு கொண்டோர் இருந்திடும் இடத்திலேதான். நீயும் நானும் இருந்து வருகிறோம். ஏசுகிறார்களே ஏன் என்று வியப்படையவா வேண்டும்: விளக்கம் பெற்றிட வேண்டும்: நம் வெற்றி அவர்களுக்கு வேதனையைத் தருகிறது: அதனால், பாவம் எரிச்சல் மிகுந்த நிலையில், எதையெதையோ கதைக்கிறார்கள்.

அவர்களுக்குத் தெரிந்ததை அவர்கள் செய்து கொண்டிருக்கட்டும்; நாம் நமது இயல்புக்கு ஏற்றனவற்றினைச் செய்தபடி இருப்போம். நல்லோரின் தீர்ப்பு நம் பக்கம் தான் இருந்திடும்!

அண்ணன்,

5—6—'66

காஞ்சிக் கடிதம் : 66

## வந்திடு! ஒளி தந்திடு!

- ★ கட்சிமாறிகளின் நாவாணிகம் குறித்துக் கவலை கொளல் வீண்!
- ★ ஜென்கின்ஸ் காதுப் போர் தரும் படிப்பினை!
- ★ வதந்திகளுக்கு மதிப்பளிப்பது நேரக்கேடு; மறுப்பது அறிவுக்கேடு!
- ★ உதயசூரியன் நமக்கு ஏற்ற இயற்கைச் செல்வச் சின்னம்!
- ★ இந்தியைத் தீயாக்கி இன்தமிழை அழித்திட இயலாது!
- ★ எழுஞாயிறே! திருச்சிக்கு வந்திடு! ஒளிதந்திடு!

தம்பி,

'விருந்தா! அங்கேயா? கர்மம்! கர்மம்! வேளா வேளைக்கு வெந்ததோ நொந்ததோ ஏதோ ஒரு வகையானது கிடைத்தால் போதாதா? விருந்து போட்டிட்டான், விலாப் புடைக்கத் தின்று கிடந்தேன் என்றா எண்ணிக் கொண்டுள்ளீர், வேதனை! வேதனை!'

'சுவை மிக உண்டு! உண்போர் மறவார்! ஊரோரே! வாரீர்! என்றெல்லாம் முன்பு பேசிடுவீரே; கேட்டிருக்



கிறேனே, அதனால்தான், அங்கு விருந்துச் சுவை உண்டு போலும் என்று எண்ணிக்கொண்டேன்.'

'அங்கு இருந்தபோது நான் பேசியதையா நம்பி விட்டீர்கள்! ஐயோ! ஐயோ! அவன் கையைக் காலைப் பிடித்துக்கொண்டு கெஞ்சுவது என்னை அவ்விதமெல்லாம் பேசவைத்தது,'

'அப்படியானால் அங்கு ஒரு நலனும் இல்லை, பெற்றிடவில்லை என்று சொல்லுங்கள்'?

'அதற்கு என்ன ஐயம்! ஒரே வறட்சி! ஓயாத தொல்லை. சிற்சில வேளைகளிலே சீர் தலைகாட்டும்; அஃது நான் அளித்தது; அவனிடமிருந்து பெற்றது அல்ல.'

'போதுமான அளவு பண்டங்களே கிடையாதோ, அங்கு.'

'அங்கு என்ன உண்டு! பண்டம் பலவற்றைப் பாடுபட்டு நான் தேடிக்கொன்டு போய்த் தருவேன்; பாவிப் பயல் அருமை தெரியாமல் அத்தனையும் பாழடிப்பான்! பண்டம் இருந்தால் மட்டும் போதுமா? பாங்காகச் சமைத்திடத் திறம் இருக்க வேண்டாமோ? ஏது திறம்? எல்லாப் பண்டந்தனையும் கூட்டிக் குழப்பிக் கொதிக்க வைத்துத் தந்திடுவான்! என் செய்வேன் நான். இடமறியாது இங்கு வந்து சிக்கினேனே, விடுதலை நாள் என்றோ என்றெண்ணி ஏங்கிக் கிடந்திடுவேன். வேறு வழி.''

'கூட்டுடன் குழம்புண்டு, வறுவல் பொரியலுடன் வகையான சுவையான பல உண்டு என்றெல்லாம் கூறுவரே.'

'கூறினேன் நான்; கூசாமல்; கூறாதே இங்குள்ள குறையையெல்லாம் என்று கூப்பிடுவான் கரந்தன்னை, என் செய்வேன்! கொதிப்பை அடக்கிக்கொண்டு, குளிர்ச் சோலை! மணமாலை! தேன் அருவி! கனிச்சாறு! என்றெல்லாம் கூறிவந்தேன், அன்று.

'இன்று இங்குக் கண்டிடும் நிலை உமக்கு மனநிறைவு தருகிறதோ?'

'மனநிறைவா! நன்று! நன்று! இன்றே காண்கிறேன் இனிமை எல்லாம்! என்னென்று இயம்பிடுவேன் என் மகிழ்வை! மல்லிகைப் பூவின் நிறம், மணம்! மாதுளையின்

சுவை! மாத்தமிழ்போல் இனித்திடுது இவ்வுணவு! செம் பொன்னை உருக்கியோ வைத்துள்ளார் என்றன்றோ எண்ணிக் கொண்டேன், குழம்புதனைக் கண்டபோது! ஒவ் வொன்றும் இனிக்கிறது! ஒவ்வொன்றும் என்னை இவ்விடத் துடன் பிணைக்கிறது. இஃதன்றோ விருந்து! இதுவன்றோ இல்லம்! இங்கன்றோநான், நானக இருக்கின்றேன்.'

'தலைவாழை இலை இவ்லை என்று குறை காண் பீரோ! தயிரன்னம் தன்னில் நீரதிகம், வெண்ணெய்ப் பசை குறைவு என்றெண்ணிக் கவலைப்படுவீரோ என் றெல்லாம் எண்ணிக்கொண்டேன்.'

'தவறு! பெருந்தவறு! தரணியெங்கும் எடுத்துரைப் பேன் இங்குள்ள மாண்பதனை: தங்கக் நிகர் குணம் உமக்கு! அங்குள்ளோன், வெறும் ஈயம்! பலாச்சுளைப் பேச்சு பேச்சு இங்கு; அங்கோ பழைய சோறு! உப்புண்டா அளவோடு அங்கு? இங்கு, தாங்கள் தொட்டாலே போதும், தித்திப்பு ததும்பிடுதே! என்னென்பேன் தங்கள் இன்முகத் தின் காட்சிதனை! எள்ளும் கொள்ளும் வெடிக்கும் முகம் அங்கு! எழுதிடுவேன் ஓவியம் நான் என்றெண்ணுவோன் இஃதன்றோ இனியமுகம் என்றன்றோ கூறிடுவான்; இத் திருமுகத்தைக் கண்டக்கால் நல்ல இடம்! நல்லோர் உள்ள இடம்! நான் நாள் பலவாய் அலைந்தலைந்து கண்டறிந் தேன் இத்திரு இடத்தை! இனி இவ்விடத்துப் பெருமை தனைப் பாரறியச் செய்திடுவேன்! பாவிமகன் இருக்கின் றானே அப்பாழிடம், அதன் கொடுமை அவனி அறிந்திட வைப்பேன்! அஃதே இனி என் பணி! ஆம்!'

★

விருந்து கிடைத்திடும் இடம் எதுவோ அது நல் இடம், நம் இடம் என்று கூறிடும் இயல்பினன், ஓரிடத்தில் இருந்து விட்டுப் பிறிதோரிடம் வந்தடைந்தால் முன்னைய இடத் தைப் பற்றிப் பல பழியும் பேசி, புதிய இடத்தார்க்குப் பூரிப்புத் தந்திடவே முனைவான்.

அவன் பேச்சைக் கேட்டிடும் புது இடத்தார், புத்தி கெடாத நிலையில் இருப்பாரேல், ''ஏதேது இவன் காலின் கீழ்போட்டு மிதிக்கின்றான், முன்பு கண்ணில் ஒத்திக் கொண்டதனை! ஏத்தி ஏத்தித் தொழுததனை இன்று பிய்த்துப்போடுகிறான்! இவன் இயல்பு, ஆபத்தைத் தருவ



தன்றோ! அந்த இடம்பற்றி இந்த இடம் வந்தவுடன் இத்தனைக் கூறுபவன், இந்த இடம்விட்டு ஏகிடும் நிலை பிறந்திடின், எந்தெந்த இடம் சென்று ஏதேது கூறுவனோ! துணிந்த பேர்வழி இவன் போன்றார் தம்மைச் சற்றுத் தொலைவினிலே நிறுத்திவைத்திட வேண்டும். அருகே வந்திவனும் அணைப்பைப் பெற்றிடின், நானறிவேன் எல்லாம்; நவில்வேன் கேளீர் என்றே நாலு பேரிடம் சென்று நம்மைப் பற்றி நாராசம் பேசிடுவான்; நல்லது தாராது இவன் நட்பு! என்றறிந்து அதற்கேற்றபடி நிலையை அமைத்துக்கொள்வார்!

அஃதன்றி, பழி பேசக் கேட்பதிலே பாகுசுவை கண்டு மகிழ்ந்திடும் குறைமதியாளனெனின், குறை கூறுவோனைக் கூடத்திலே அமர்த்தி, குதூகலமும்தான் ஊட்டி, கூறு! கூறப்பா! குறைகளை எலாம் கூறு! எனக் கேட்டு மகிழ்ந் திருப்பார். இன்று ஒருவருக்கு! நாளை, நமக்கே இவன் பகைவனாகிவிடின், இஃதே போல இழித்தும் பழித்து மன்றோ பேசிடுவான் நம்மைப்பற்றி என்பதனை அறிந் திடாமல்.

★

முடியுடை மூவேந்தராட்சி மறைந்து நாடெங்கும் சிற்றரசரும், பாளையக் காவலர்களும் ஆங்காங்குக் கொலு விருந்த நாட்களில், ஒரு சிற்றரசனிடம் கைகட்டி நின்றும், களிப்பூட்டி வந்தும், காலந்தள்ளிடும் பேர்வழிகள், அங்குப் பசை குறைவு, வேறு பசை தேடிடுவோம் என்று எண்ணிப் புதிய இடம் போய்ச் சேருவதும், அங்கு, முன்பு இருந்த இடந்தன்னைப் பற்றித் தூற்றிக்கிடப்பதும் வாடிக்கை யாகிவிட்டிருந்தது. அந்த நிலையினை விளக்குவதே, மேலே காட்டியுள்ள உரையாடல்.

★

இன்று, கட்சியைவிட்டுக் கட்சி தாவிடும் கண்ணிய வான்கள், இந்த 'மரபு' கெடாமல் காப்பாற்றிக் கொண்டு வருகின்றனர்! காண்கின்றாயே, தம்பி! இங்கு இருந்த போது அவர்களுக்கு எல்லாம் இனித்தது, சுவைத்தனர்; இந்த இடம்விட்டுச் சென்றதும், புதிய இடத்துள்ளார் முன், புகழ்பாடிக் கிடப்பதுடன் இருந்துவிட்டு வந்த இடம் பற்றி இழித்துரைத்திடுவதனைக் கலையாக்கி, நல்ல

விலைக்கும் விற்கின்றார்! நா வாணிகம், நல்லபடி நடக்கிறது. அவர் பேச்சு பற்றிச் சிற்சிலர் என்னிடம் கூறிடக் கேட்கின்றேன். சூழ்நிலை இன்று போலன்றி சிறிதளவு நல்லதாக இருந்த காலந்தன்னிலேயே, விருந்தளித்த இடம்பற்றிப் புதிய விருந்தளிப்பான் மாளிகையில், பழி பேசிப் பிழைத்து வந்த பலர் பற்றி நினைக்கின்றேன்; சிரிக்கின்றேன்: வாழ்வுபெற, செச்சே! அஃதும் அல்ல; வாழ்வை நடத்திச் செல்ல, என்னென்ன செய்கிறார் என்றெண்ணி—அவர்க்காக இரங்குகின்றேன்! ஏதோ பாவம், இது செய்தேனும் இ க்க நினைக்கின்றாரே, அஃதேனும் அவர் விருப்பத்தின் அளவுக்கு நடை பெறட்டும்; இங்கு இருந்துவிட்டுச் சென்றவர் அல்லவோ அவர்! எப்படியோ சுவை பெறட்டும், சுகப்படட்டும்!! என்றும்கூட எண்ணிக் கொள்கின்றேன். ஆனால் தம்பி! ஒன்றுமட்டும் புரிவதில்லை எனக்கு; ஆகவே கவலை கொள்கின்றேன். என்னவெனில், எது உண்மை, எது நடிப்பு; இங்கு இருந்தபோது அவர் குலவியது உண்மையா, அன்றி அங்குச் சென்று தடவித் தருகின்றனரே, அஃது உண்மையா, எது உண்மை, எது போலி! என்பதுதான் புரியவில்லை. ஏனெனில், இங்கு அவர் இருந்த காலை சொரிந்த அன்புரையும் வரைந்த வாழ்த்துரையும், கொஞ்சமல்ல! அவை அவ்வளவும் அவர் உள்ளத்தில் ஊறிவந்தனவா, வெறும் உதட்டசைவா? உதட்டசைவே என்று கொண்டிடின், இன்று அவர் அங்குச் சென்று உரைத்திடுபவை? உள்ளத்தில் ஊற்றுப் பெருக்கெடுத்தோடி வருபவை என்கின்றார். ஆயின் இங்கு இருந்தபோது அஃதே சொன்னார்! எனின் இன்று அங்கு உள்ளம் உரைப்பது என்றுரைப்பவை தம்மை நாளை உதட்டசைவே! என்று கூறிடமாட்டார்கள் என்பதற்கு எது உறுதி!!

உண்மை எது, போலி எது என்று எண்ணிடும் போதன்றி, பிறிதோர் நேரம், அவர் கூற்று பலபற்றி நான் பொருட்படுத்திக் கொண்டில்லை. உலகம் என்றால், பல இருக்கத்தான் செய்யும் என்றெண்ணி இருந்து வருகின்றேன். அஃதேபோல, இவர் போன்றார் நிலைகண்டு, உலகின் போக்கை உணர்ந்துகொள் தம்பி! என்றுனக்கும் கூறுகின்றேன். அவர் பேச்சு, அவர் நிலையின் விளைவு என்பதனை அறிந்துகொள்ளின், அப்பேச்சுதனைக் குறித்துக் கவலைகொளல் வீண் என்ற உணர்வு பெற்றிடலாம்,



என்னென்ன விந்தையான மாறுதல்களைக் காண்கின்றோம் என்பதனை எண்ணிடும்போது, நகைத்திடக் கூடத்தோன்றும். அந்த வகையில் அவர்கள் நம்மிடம் இல்லாமலேயே, நமக்குப் பொழுதுபோக்குத் தந்திடும் வேலையையும் செய்து வருகின்றனர் என்றும் கொள்ளலாம். நான் அவ்விதமாகத்தான் எண்ணிக் கொள்கின்றேன்.

தேர்தல் நெருங்க நெருங்க, தம்பி! இவர் போன்றாரின் வேலை சுறுசுறுப்படையும். 'அங்கு இருந்த பேர்வழி' என்பதனையே ஓர் 'தகுதி' யாக்கிக் கொண்டு, தூற்றிடுவர்; அதற்காகத்தானே இவர்களை இங்கு அமர்த்தி இருக்கிறோம் என்ற எண்ணத்தில் புதிய இடத்துத் தலைவர்களும் தட்டிக்கொடுத்து வேலை வாங்குவர். இந்த நிலைமையினை நன்கு உணர்ந்துகொண்டால், இருந்துவிட்டுப் போனவர்களின் தூற்றல் பற்றிக் கவலைப்படக்கூடாது என்ற தெளிவு பிறந்திடும். அதற்கே இதனை விளக்கினேன்.

தம்பி! கோட்டான்கள் அனைத்தையும் தொலைத்தாலொழிய நமது இசையின் இனிமையையும் அருமையையும் எங்ஙனம் மாந்தர் உணர்ந்திட முடியும் என்று குயில் எண்ணுகிறதோ! இல்லையே! எத்தனை எத்தனையோ கத்தல் கதறல், உறுமல் குமுறல், இருந்திடினும் நமது குரலினிமையை நுகர்வோர் நுகர்வர் என்றன்றோ மாங்குயில் பூஞ்சோலையில், கூவி இன்பத்தை வழங்குகிறது.

கோட்டான் பற்றிய குறிப்பினைத் தந்ததும், நான் படித்த ஒரு கட்டுரை நினைவிற்கு வருகிறது; தருகிறேன்.

முகிலன் என்பார், 'தமிழ் மலர்' எனும் சிங்கப்பூர் நாளிதழில் தந்ததிது:

அந்தக் காடு, மனிதர்களின் நடமாட்டமின்றி அமைதி பெற்றிருந்தது,

பல்வகையான பறவை இனங்கள் அங்குமிங்கும் பறந்து கொண்டும், அது அதற்குரிய ஓசைகளை எழுப்பிக் கொண்டும் இருந்தன.

காட்டின் ஒரு மூலையில் அமர்ந்திருந்த கோட்டான், எதையோ நினைத்து வேகமாகக் குரல் எழுப்பிக் கொண்டிருந்தது!

அப்பக்கமாகப் பறந்துவந்த ஆந்தை, இந்தக் கோட்டானின் குரலைக் கேட்டு அதற்கெதிரே வந்தமர்ந்து அதையே பார்த்துக் கொண்டிருந்தது.

'நம் குரலின் இனிமையைக் கேட்டுத்தான் இந்த ஆந்தை இங்கு ஓடி வந்திருக்கிறது' என்று நினைத்த கோட்டான், மேலும் மேலும் வேகமாகக் கத்த ஆரம்பித்தது!

இந்த அலறலைக் கேட்ட ஆந்தை, 'இது என்ன வெறும் அலறல்?' என்று கேட்டது.

'என்ன அலறலா? என் குரல் உனக்கு அப்படியா தோன்றுகிறது? என்று கேட்டுவிட்டு ஆந்தையை வெறுப்புடன் பார்த்தது!

'அலறல் என்பது எனக்குத்தான் உரியதென்று இருந்தேன்! ஆனால், இப்போது நீயும் அலற ஆரம்பித்துவிட்டதால், அதை நான் வேறுவிதமாகச் சொல்ல முடியவில்லை' என்று ஆந்தை பதிலளித்தது.

நான் உன் குரலுக்கு முயலவில்லை! என் குரலிலேயே ஏற்றமுறத்தான் பயிற்சி செய்கிறேன். அந்த முயற்சியை நீ பாராட்டாவிட்டால், உனக்கு 'ரசனையே தெரியாது என்றுதான் சொல்லவேண்டும்!' கோட்டான் இப்படிக் கூறிவிட்டு மேலும் அதை ஆணவமாகப் பார்த்தது!

'ஆமாம் ஆமாம் எனக்கு 'ரசனை' தெரியாதுதான். ரசனை தெரிந்த நீ, என் குரலைப் பற்றி என்ன நினைக்கிறாய்?' என்று ஆந்தை கூடுவிட்டு அலற ஆரம்பித்தது!

ஆந்தையின் அலறலைக் கேட்ட கோட்டான், 'பரவாயில்லையே! இந்த அளவுக்கு உன் தகுதி உயர்ந்திருக்குமென்று நான் நினைக்கவேயில்லை!' என்று பாராட்டுக் குரல் எழுப்பியது.

கோட்டானின் பாராட்டைக் கேட்டதும் ஆந்தைக்கு மகிழ்ச்சி பொறுக்க முடியவில்லை! 'நண்பா, இன்று முதல் உனக்கு நானாகவும் எனக்கு நீயாகவும் பாராட்டிக் கொண்டு வாழ்வதுடன், இந்தக் காட்டிலேயே—ஏன் வேறு எந்தக் காட்டிலும் நம் புகழை நிலைநாட்ட நாம் பாடுபடுவோம்!' என்று கூறியது.



கோட்டானுக்கு ஆந்தையின் நட்புக் கிடைத்ததும் அதற்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

அந்தச் சமயம் அங்கு வந்த குயில், பக்கத்திலிருந்த மரத்திலமர்ந்துகொண்டு, தன் குரலின் இனிமையை அடக்கமாகப் புலப்படுத்திக் கொண்டிருந்தது.

அக்கம் பக்கத்திலிருந்த மற்ற குருவிகள், அந்தக் குரலைக் கேட்டுப் பலவகையான பாராட்டுக்களை எழுப்பிக் கொண்டிருந்தன.

இந்தக் காட்சியைக் கண்ட ஆந்தையும் கோட்டானும் ஒன்றை ஒன்று பார்த்துக் கொண்டிருந்தன.

'என்ன நண்பா, இந்தக் குயிலின் குரலை உன்னால் ரசிக்க முடிகிறதா?'—ஆந்தை கோட்டானைப் பார்த்து இப்படிக் கேட்டது!

நம் குரலையே நாம் ரசிக்க நேரமில்லாதிருக்கும் போது, இவற்றுக்கெல்லாம் நமக்கேது நேரம்? அந்தக் குயிலைச் சுற்றிக்கொண்டிருக்கும் மற்றவற்றுக்கு 'ரசனை' என்றால் ஏதாவது தெரியுமா? தெரிந்திருந்தால் இப்படிக் காட்டுக் கூச்சலைக் கேட்க ஓடுமா? என்று கோட்டான் ஆரம்பித்தது!

'நமக்கு மற்றவற்றைப்பற்றி அக்கறையில்லை! அதுகள் ஒரு வழி என்றால் நாமும் அவ்வழியில்தான் செல்ல வேண்டுமா? நமக்கென ஒரு வழி இருக்கும் போது நாம் ஏன் அவ்வழியை நாடவேண்டும்?'—ஆந்தையின் இந்தப் பதில் கோட்டானுக்கு குதூகலத்தையளித்தது!

'ஆம் நண்பரே' நம் திறமையை நாம் புரிந்திருக்கும் போது, பிறர் புரிந்தாலென்ன புரியாவிட்டால் என்ன நீ உன் குரலை எழுப்பு, நான் ரசிக்கிறேன். நான் என் குரலை எழுப்புகிறேன் நீ ரசி!' என்று கோட்டான் கூறியதும் இரண்டும் சேர்ந்து ஏக காலத்தில் அந்தக் காட்டில் குரலெழுப்ப ஆரம்பித்தன.

காலம் ஓடிக்கொண்டிருந்தது.

குயிலின் புகழுக்கு இணையாக வரவேண்டுமென்று நினைத்த ஆந்தையும் கோட்டானும், எங்கெங்குப் பறந்து சென்று கத்தமுடியுமோ அங்கெல்லாம் சென்று கத்திப் பார்த்தன! அலறிப் பார்த்தன!

அலறலையும் ஆரவாரத்தையும் கண்ட மற்றபுள்ளினங்கள் எங்குச் செல்ல வேண்டுமோ அங்குச் சென்று கொண்டிருந்தன!

●

மற்றோர் வகையினரும் உண்டு; இவர்கட்கும் தேர்தல் நேரம், சுறுசுறுப்பு மிக்க நேரம். இவர்களின் வேலை, வதந்திகளைக் கட்டிவிடுவது.

தெரியுமா, தெரியுமா? என்று துவங்கிச் சிப்பிக்குள் முத்து இல்லை, செந்தேள் குட்டி உளது; கண்ணுக்குள் கருமணி இல்லை, கண்ணாடித்துண்டு உளது, என்று எதை எதையாவது மூட்டிவைப்பர்.

தாம் கூறுவதை, மற்றவர் நம்பிட வேண்டும் என்பதற்காகக்கூட அல்ல, நம்புவார்கள் என்ற எண்ணம் கொண்டு கூட அல்ல, சில நேரமாகிலும் வதந்தி நெளியட்டும், பலர் காணட்டும், அதுபற்றிப் பேசட்டும், அந்தப் பேச்சிலிருந்து ஏதேனும் புகை கிளம்பட்டும், பகை மூளட்டும் என்ற கெடு நினைப்புடன்.

அவரும் அவரும் கூடிக்கூடிப் பேசுவது ஏன்?

இவருக்கு உள்ள திறமை அவருக்கு உண்டா என்பது பற்றிப் பலமான விவாதம் நடக்கிறதாமே?

எவர் பற்றியும் எனக்குக் கவலை இல்லை என்று அவர் மிகக் கடுமையாகப் பேசினாராமே?

அவர் பக்கத்தில் நான் அமரமாட்டேன் என்று இவர் பிடிவாதம் செய்தாராமே?

இப்படிப்பட்ட பேச்சுக்களை அவிழ்த்துவிடுவர், அமைதியுடன், துளியும் பரபரப்புக் காட்டாமல், ஏதுமறியாதார் போன்ற கோலம் புனைந்து கொண்டு.

அப்படியா? என்று சிலர் கேட்பார்கள்.

அண்டப்புளுகு என்று சிலர் கூறுவார்கள்.

இருக்கவே இருக்காது என்று சிலர் சொல்லுவார்கள்.

ஆதாரம் காட்டு என்று சிலர் அறைகூவல் விடுப்பார்கள்.



ஆகமொத்தம், அந்த வதந்தியை அவிழ்த்துவிடுவதன் மூலம், பலருடைய கவனத்தை ஈர்த்திட முடிகிறது. பல விதமான எண்ணங்கள் எழச்செய்ய முடிகிறது அல்லவா? அதுவரையில் இலாபம் என்ற நினைப்புடன் பேசிடும் போக்கினர், தேர்தல் நெருங்க நெருங்க, வேகத்துடன் வேலை செய்வர்.

தம்பி! வெறும் வதந்தியைப் பரப்பியே, இங்கிலாந்து நாட்டைப் போரிலே இழுத்து விட்டுவிட்ட சம்பவம் ஒன்று உண்டு.

அந்தப் போருக்கே, ஜென்கின்ஸ் காது பற்றிய போர் என்று பெயர்,

ஜென்கின்ஸ் என்ற பிரிட்டிஷ் கடற்படைப் பிரிவினைச் சேர்ந்த ஒரு வீரனை, மடக்கிப் பிடித்துப் பிரான்சுக்காரர்கள், அவனுடைய காதை அறுத்துப் போட்டுவிட்டார்கள் என்று எவனோ ஒரு வதந்தியைக் கட்டிவிட்டான்.

அப்படி நடந்திருக்குமா? யார் கண்டார்கள்? ஜென்கின்சு என்ன சொல்கிறான் என்றெல்லாம் யோசிக்கக்கூட இல்லை. வதந்தி வேகமாகப் பரவப் பரவ, சிந்தனை பாழ்பட்டது, சீற்றம் மிகுந்தது, காது அறுத்த கயவர்களை விடக்கூடாது! பழிக்குப் பழி! இரத்தத்துக்கு இரத்தம்! காதுக்குக் காது! என்ற காட்டுக் கூச்சல் கிளம்பிற்று. போரே மூண்டது. போர் முடிவுற்ற பிறகுதான், ஜென்கின்ஸ் என்ற பெயருடையான் எவனும் பிரிட்டிஷ் கடற்படையில் இல்லை; எவனுடைய காதையும் பகைவர் துண்டித்துப் போடவில்லை; அது வெறும் கட்டுக்கதை என்பது தெரிந்தது. ஆனால் அதற்குள் ஒரு போரே நடந்தேறி விட்டது;

இது போன்ற வதந்திகளைத் தமது தனிச் சரக்கு ஆக்கிக்கொண்டுள்ள விபரீத வியாபாரிகள் தேர்தல் சமயத்தில் தமது கடையினை விரிப்பர்; பரபரப்பு தன்னாலே மூண்டுவிடும் நேரம் இது என்பதாலே.

எவரெவர் நமது கழகத்தின் பொறுப்பினை ஏற்றுக் கொண்டுள்ளனரோ, அவர்கள் நமக்குத் தெரிவிக்க வேண்டியவைகளை, தெரிவிக்கவேண்டிய நேரத்தில், தெரிவிக்க வேண்டிய முறையில். தெரிவிப்பார்கள்: நமது கழகப்

பொறுப்பிலே ஈடுபாடு கொள்ளாதவர்கள் எதை எம் முறையில் கூறிடினும், நாம் அது குறுத்துக் கவலை கொள்ளக் கூடாது என்ற திடமனம் கொண்டிட வேண்டும். நமது தோழர்கள் அத்தகைய திடமனம் கொண்டோராக இருந்திடுவதாலேயே, பல ஆண்டுகளாக, தனித் திறமை காட்டிக் கட்டிவிடப்பட்ட வதந்திகள். மூட்டிவிடப்பட்ட கோள்கள், நமது கழகத்தை ஏதும் செய்திட இயலாது, வீழ்ந்து பொடிப் பொடியாகிவிட்டன.

இந்தியாவுக்குக் கிடைத்திடும் 'சுயராஜ்யம்' துக்க ராஜ்யம் என்று பெரியார் கருதி, ஆகஸ்ட்டு பதினைந்தாம் நாளைத் துக்க நாள் என்று நடாத்திட அறிக்கை விடுத்ததை நான் மறுத்ததனை அறிந்திருப்பாய்.

தம்பி! அப்போது என்னைப்பற்றிக் கட்டிவிடப்பட்ட வதந்திகள் கணக்கில் அடங்கா!

இப்போது எண்ணிக் கொண்டாலும் எனக்குச் சிரிப்பு வருகிறது.

ஒரு வெடிச் சிரிப்புக் கிளப்பிவிட்டுக் கேட்பார் ஒருவர்

என்ன விலை கெஜம்! நேர்த்தியாக இருக்கிறதே சட்டைத் துணி? கதர்தானே!

கதர் அல்ல ஐயா வழக்கமாக நான் போடும் கைத்தறித் துணிதான்.

கதர் என்று பார்த்தேன். கைத்தறித் துணியா!

தம்பி! கேலி புரிகிறதல்லவா? ஆகஸ்ட்டு பதினைந்து துக்க நாள் அல்ல என்று நான் எழுதியதால், நான் காங்கிரசாகி விட்டேன் எறுறு பொருன் கொண்டு, பலப்பல வதந்திகளைக் கிளப்பினர்.

நான் மட்டும் வதந்திகளின் தன்மையையும். அவற்றினைக் கிளப்பிவிடுவோரின் போக்கினையும் ஓரளவு தெளிவாகத் தெரிந்துகொண்ட நிலையினனாக இல்லாதிருந்திருப்பின், என்னென்ன நேரிட்டிருக்கக்கூடும் என்பதை எண்ணும்போது நடுக்கமே எடுக்கிறது,

வதந்திகளைக் கிளப்புகின்றவர்கள், பொறுப்பான பதவியினராக இருந்திடினாவது, அவர்களைக் கேட்கலாம், இது சரியா, முறையா என்று.



தவறானவைகளைக் கூறிடினே, பழி சுமத்திடினோ, குற்றம் சாட்டிடினோ. வழக்கேகூடத் தொடுக்கலாம்,

அவ்விதமானா பேச்சுகளை, பொறுப்பில் உள்ளவர்கள் பேசுவதில்லை. பேசிடுவோரோ எதுபற்றியும் கவலையற்ற நிலையினர். அவர்களிடம் வாதாடுவதோ, மறுப்பு உரைப்பதோ, விளக்கம் கேட்பதோ வீண் வேலை.

மேடைமீது ஏறி, அத்தகைய ஒருவர்.

உங்கள் அண்ணாதுரைக்கு வலக் கண் கெட்டு விட்டது; பெயர்த்து எடுத்துவிட்டார்கள்; இப்போது உள்ளது கண்ணாடியால் செய்யப்பட்டது.

என்று பேசுகிறார் என்று வைத்துக்கொள். உடனே நான் பதறிப்போய், ஊரூருக்கும் ஓடி, ஒவ்வொருவர் முன்னாலும் நின்று. ஐயா! என் கண்ணைப் பாருங்கள்! வலக் கண்ணை! கண்ணாடி அல்லவே! - என்றா கேட்டுக் கொண்டிருக்க முடியும்?

அப்படியே கேட்டிடின் என்ன எண்ணிக்கொள்வார்கள்? கண் சரியாகத்தான் இருக்கிறது ஆனால், ஐயோ பாவம், மூளைதான், என்னவோ போலாகிவிட்டது என்று கூறிப் பரிதாபப்படுவார்கள்,

ஆகவே தம்பி! வதந்திகளுக்கு மதிப்பளிப்பது. நேரக் கேடு, அவைகளை மறுப்பது, அறிவுக்கேடு என்பதனை உணர்ந்திடின், அவை பற்றிய கவலையைக் கொள்ளாதிருக்கலாம்.

தம்பி! நமது கழகத் தோழர்களின் மனத்தைத் குழப்பிட, இதுவரையில் எண்ணற்ற வதந்திகள் கிளப்பி விடப்பட்டன; எவற்றினையும் நமது தோழர்கள் பொருட்படுத்திடவில்லை. பொழுதைப் பாழாக்கிக் கொள்ளவில்லை என்று தெரிந்தும், பார்க்கலாம்! இந்த முறை பார்க்கலாம்! இந்த வதந்தியாவது பலிக்கிறதா பார்க்கலாம் என்ற ஆசைகொண்டு அலைவோர் நிரம்ப உள்ளனர். அவர்தம் வேகம் அதிகமாகும் காலம் இது. தேர்தல் காலம். ஏற்கெனவே உன்னிடம் உள்ள தெளிவும் திடமனமும் மேலும் நேர்த்தியானதாகிட வேண்டும். அதற்கே இதனைக் கூறுகின்றேன்.

பிறிதோர் வகையினரும் உளர். அவர்தம் தொழில் திறனையும் நான் காணுகின்றேன்.

> உங்களுடைய கல்யாணி, மிக அருமை! மிகமிக அருமை! தோடியில் ஒருகிருதி பாடினீர்களே அது முதல் தரமாக அமைந்திருந்தது. ஆனால், சற்று தாளத்தை மட்டும் கவனித்துக்கொள்ள வேண்டும்; அடிக்கடி தவறுகிறது! தாளஞானம், சங்கீதத்துக்கு அடிப்படை அல்லவா!!

இவ்விதம் ஒரு இசைவாணனிடம் பேசி, அவரைப் பாராட்டவும் செய்கிறேன், கண்டிக்கவும் செய்கிறேன்; நான் நடுநிலை நின்று 'குணதோஷம்' காண்பவன் என்று கூறிடுவோர் உண்டு!

ஒரே மொத்தமாகக் கண்டித்தால், இவருக்கு அவரைப் பிடிக்காது என்று ஒதுக்கிவிடுவார்கள், அந்த விமரிசனத்தைப் பொருட்படுத்தமாட்டார்கள் என்பதனால், புகழவும் செய்கிறேன், கண்டிக்கவும் செய்கிறேன் என்று போலிப் போக்குக் காட்டி, தமது பேச்சுக்கு ஒரு இடம் தேடிப் பிடித்துக்கொள்பவர்கள் உண்டு; இசைத் துறையிலே மட்டுமல்ல; நமது துறையிலும்.

> அவர்கள், கழகத்தின் தொண்டர்கள் அருமையானவர்கள், அவர்கள் உழைப்பு தரமானது, இலட்சியப் பிடிப்பு நேர்த்தியானது, இதுபோன்ற தொண்டர்களை எங்கும் காணமுடியாது. ஆனால்...ஆனால்... பாவம், அவர்களுக்கு விவரம் புரிவதில்லை, தெளிவு இருப்பதில்லை; எவனெவனையோ தலைவன் என்று தூக்கி வைத்துக்கொண்டு ஆடுகின்றனர்!

என்று குத்திவிடுவர்.

தொண்டர்கள் தரமானவர்கள், தலைவர்கள் படுமோசம்! என்று கூறி, தொண்டர்களுக்கும் தலைவர்களுக்கும் இடையே ஒரு 'பிளவை' உண்டாக்கி வைப்பதாக ஒரு மயக்க உணர்ச்சி அவர்களுக்கு.

இலட்சியப் பிடிப்பு. நேர்த்தியான உழைப்பு கொண்ட இயல்பினராகத் தொண்டர்கள் இருக்கும்போது, அவர்கள் தெளிவு அற்றவர்களாகவும், விவரம் புரியாதவர்களாகவுமா இருப்பார்கள், பொருந்தவில்லையல்லவா!



அதனால்தான் தம்பி! அவர்களின் அந்தப் பேச்சு பொருளற்றது என்பதனையும், பொச்சரிப்பைத் தனிமுறையில் காட்டிக்கொள்ளும் பேச்சு அது என்பதனையும் நமது கழகத் தோழர்கள் உணர்ந்துகொண்டு விட்டுள்ளனர். அந்த விதமான பேச்சு, பலன் தராது போயிற்று.

ஓரிரு திங்களுக்கு முன்பு நடைபெற்ற நிகழ்ச்சி நினைவிற்கு வருகிறது.

புதிதாகக் காங்கிரசில் சேர்ந்தார் ஒருவர்; கழகத்தவர் கூட அல்ல; கழகத்துடன் நேசத் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தவர்.

கழகத்தோழர் எவரும் அவரைக் கண்டு, கண்ணீர் மல்கிட நின்று எமை விட்டுப் பிரிந்தீரே ஐயா! என் செய்வோம் இனி நாங்கள் சொல்வீர்!—என்றெல்லாம் கேட்டிடவில்லை,

அவரே ஓர் நாள், முடி திருத்தகம் சென்றார்; சென்றவர் நான் யார் தெரியுமா என்றும் கேட்டார், முடிதிருத்தகத்திருந்த தோழரை.

அறிவேன் ஐயா! காங்கிரசில் புதிதாகத் தாங்கள் சேர்ந்த செய்தியையும் படித்துள்ளேன் ஐயா! என்று கூறினார். புகுந்தவருக்குக் கோபம்.

> ஆமாம்! காங்கிரசில் சேராமல் என்ன செய்வது. உங்கள் அண்ணாதுரைதான் கழகத்தைக் கெடுத்து விட்டானே, நான் சொன்ன நல்ல யோசனைகளைச் கேட்க மறுத்துவிட்டானே, அதனால்தான் நான் காங்கிரசில் சேர்ந்தேன் என்றாராம்.

கடை உரிமையாளர், மெள்ளச் சிரித்தபடி,

> கழகத்தைப் பற்றிக் கழகத்தார் கவனித்துக் கொள்வார்கள். ஐயா! தாங்கள் காலமெல்லாம் நான் சுயேச்சையாகவே இருந்திடுவேன் என்று பேசி வருவீரே! இன்று காங்கிரசில் சேர்ந்தீரே! ஏனோ? என்று கேட்டு விட்டு, கழகம் வளர நல்ல நல்ல யோசனைகளை எல்லாம் அண்ணாதுரையிடம் சொன்னதாகவும் அவர் கேட்க மறுத்ததாகவும் செப்பினீரே, கழகத்தில், யோசனைகள் கூறப்படும் இடத்திலே நான் தங்களைக் கண்டதே இல்லையே, ஒருநாளும், பொதுக்

குழுவில் பேசுவர், யோசனைகள், திட்டங்கள் பற்றி. அங்கு நான் கண்டதில்லை தங்களை. எப்படி எனக்கது தெரியும் என்கின்றீரோ! நான் பொதுக்குழு உறுப்பினன்!! என்று கூறிடவே, புதுக் காங்கிரசாருக்குக் கோபம் கொப்பளித்து வந்ததாம். முடிதிருத்தகம் நடத்து, அரசியல் பேசாதே என்று கூவினாராம்! வாருமய்யா, திருத்துகின்றேன் முடி தன்னை என்று அத்தோழர் இரு பொருள் கொண்ட பேச்சைத் தந்தாராம்.

கழகத் தோழர்களின் தெளிவினை விளக்கிடத் தக்க நிகழ்ச்சிகள் இதுபோலப் பல உண்டு.

என்றாலும், மூட்டிவிடுவோர் கடைசி மூச்சு உள்ள வரை முயற்சி செய்தபடியேதான் இருப்பர். அது அவர் வேலை! அல்ல! அல்ல! அருங்கலை!! ஆகவே தம்பி! அவர் போன்றார் உளர் என்ற உணர்வுடன், விழிப்புடன் இருந்திடல் நன்று.

★

மற்றும் ஓர் வகையினர் உண்டு. அவர்கள் கழகத்தின் கொள்கை, வளர்ச்சி இவை பற்றிக் குறையேதும் கூறார்; மாறாகப் பாராட்டவும் செய்வர்; செய்துவிட்டு, 'ஆனால்' எனும் பதத்தை ஒட்டவைத்துச் செப்புவர்,

இன்னும் கொஞ்சம் முறையாக, மேலும் சற்றுத் தரமாக, இன்னமும் சற்றுக் கண்டிப்புடன்

கழகத்தை நடத்திச் சென்றிடின் இன்றுள்ளதைக் காட்டிலும் பன்மடங்கு செல்வாக்கு வளரும் கழகத்துக்கு என்பர்.

இந்த அளவு கழகம் வளர்ந்ததற்கு, ஒப்பி உழைத்திடாதார்,

கழகம், இன்னல் பல ஏற்றுத் தத்தளித்த நாட்களிலே நேசக் கரம் நீட்டிடாதார்,

கழகத்தின் அமைப்பு முறை ஏற்பட்ட வரலாறு தன்னை அறிந்திடாதார்,

இன்று வளர்ந்துள்ள நிலை கண்டு, பாசம்தனை வருவித்துக்கொண்டு பேசிடுவார்; புது முறைகள் பற்றி,



உடன் இருந்து பணியாற்றிட வரமாட்டார்,

எது செய்தால் என்ன ஆகும் என்ற கணக்குப் பற்றி ஆய்ந்திடவும் ஒப்பமாட்டார், ஆனால் நல்ல நல்ல யோசனைகள் தந்திட மட்டும் முனைவார்

அவர் போன்றார் பேச்சு, பயன் ஏதும் தாராது; மாறாக, ஓஹோ! நாம் நமது கழகமதில் புதுமுறை புகுத்திடாமல் இருந்து வருவது தவறு என்றோர் துடிப்புணர்ச்சி ஏற்பட்டு, ஏதேனும் மாற்றங்கள், திட்டங்கள், முறைகள் தமைப் புகுத்திட முனைந்திடின், நல்லது வந்திடுமோ உள்ளது கெட்டிடுமோ என்பது யாரறிவார்!

பாராட்டுத் தெரிவித்து, பரிவும் காட்டி, பல புதுத் திட்டம் பேசிடும் போக்கினரோ, பொறுப்பேற்றுக் கொள்ளமாட்டார், கழகத்தின் வடிவம் குலைந்தாலும், வலிவு கெட்டாலும் வருந்தவும் செய்யமாட்டார், ஏனெனில் அவர் உழைப்பால் அமைந்தது அல்லவே இக் கழகம்! இதன் உயிர்ப்புச் சக்தி எங்கு உளது, இதன் வளர்ச்சியின் கட்டங்கள் எவையெவை என்பதனை, தூர நின்று கொண்டிருந்த அவர் எங்ஙனம் அறிவார்; நீ அறிவாய், உன் உழைப்பைக் கொட்டி உருவாக்கிய கழகம் இது என்பதனால். ஆயினும் உனக்கும் எனக்கும் தம்பி! உற்ற நண்பர்போல நடித்துக் கூறிடுவார் யோசனைகளைப் பொதி பொதியாக! ஏனோ வென்றால், சிற்சிலருக்கேனும், இவ்விதமாகவெல்லாம் கழகம் நடந்திட வேண்டும் என்ற எண்ணம் குடையாதா; குடைச்சல் காரணமாக மனக்குறை வளராதா; மனக்குறை காரணமாகக் கழக வளர்ச்சி குன்றாதா எனும் ஓர் நைப்பாசை. உடனிருந்து திட்டம் முறை தந்து உழைத்திட முன்வருவோர் என்றால், அவர் பேச்சைப் போற்றிடத்தான் வேண்டும் அப்பேச்சுக் குறித்து நாம் கலந்துரையாடிடத்தான் வேண்டும், பிறகு அதற்கேற்பச் செயல்படவும் வேண்டும். தேவை. முறை. நியாயம். ஆனால் உடனிருக்க மாட்டாதார் ஓராயிரம் கூறிடினும், பயன் என்ன? பயன்கூடக் கிடக்கட்டும், கூறுவதன் நோக்கமென்ன? நாம் செய்யும் காரியத்தில் நமக்கே ஓர் மனக்குறை மூட்டிடச் செய்வதற்கு. நன்றா அஃது. அல்ல! அல்ல! இதனை அறிந்திடும் தோழர் அணிமிகப் பெரிது. ஆகவேதான், இப்போக்குக் கொண்டோரின் முயற்சிகளும் பலிக்கவில்லை!

தம்பி! இலட்சியப் பயணம் வெற்றியுடன் நடைபெற வேண்டுமெனில், அதற்கான பாதை அமைவதுடன், பார்வையைக் கவரத்தக்க சூழ்ச்சிகளின் தன்மையை அறிந்துகொண்டு அவற்றினைத் தவிர்த்திடும் திறனும் பெற்றிட வேண்டும். எனவேதான், உன்னைச் சூழத் தூற்றித் திரிந்திடுவோர், இட்டுக்கட்டிப் பேசிடுவோர், வதந்தி கிளப்பிடுவோர், மயக்கமூட்டிடுவோர், பேதம் விளைவிக்க முயற்சிப்போர், தட்டிக் கொடுத்துத் தடுமாற வைத்திடுவோர், ஆகிய பல்வேறு இயல்பினர் உள்ளனர் என்பதனை எடுத்துக் காட்டினேன்; விழிப்புடன் இருந்திட வேண்டும் என்பதற்காக.

ஆனால் தம்பி! உன்னுடன் இருப்போரும் சாமான்ய மானவர்கள் அல்ல. எந்த அரசுக்கும் அடித்தளமாக அமைந்திடுவோர் எவரோ அந்த ஏழையர் உன்னுடன் உள்ளனர்.

எதிர்பார்த்து ஏமாற்றமடைந்து உளம் வெதும்பியுள்ள பாட்டாளித் தோழர்கள், உன்னால் தம் குறை தீரும் என்ற நம்பிக்கையுடன் உள்ளனர்.

அவர்களிடம் பொன்னும் பொருளும் இல்லை, அதே போல் பொய்யும் புரட்டும் இல்லை.

அவர்களிடம் உறுதி இருக்கிறது; உள்ளன்பு காட்டு கின்றார்; உன் தொண்டு விரும்புகின்றார்...

கள்ளங் கபடமறியாத நல்லோர்கள் அவராவார். இன்னலைப் போக்கடிக்க இழிவுதனைத் துடைத்திட என்ன வழி என்று கேட்டு நிற்கின்றார் உனக்கு எல்லாத் துணை யினையும் தந்திட முனைகின்றார்.

காட்டாட்சி நடாத்திடவே கனவான்கள் முயலுவதும். கனவானின் பேழை பலம் தமக்குண்டு எனும் துணிவால், எதிர்ப்பற்ற ஆட்சியினை அமைத்திடலாம் எனும் நினைப் பால் க ங்கிரசார் முனைவதுவும் அவர் அறிவார்.

அஞ்சற்க என்று கூறுகின்றார்; பேச்சுடன் நின்றார் இல்லை: ஆதரவு தருகின்றார்.

ஆலைக்கு அரசர்களும் சீமான் சிற்றரசர்களும் புடை சூழ நின்றிடும் நிலை பெற்ற காங்கிரசை எதிர்த்து நிற்கும் சாமான்யர்களாம் நமக்கு, வாரி வழங்கியுள்ளார் முப்பது இலட்சத்துக்கும் மேலாக ஓட்டுக்களை,



உதய சூரியன் எமக்கு ஒளி அளிப்பான். வாழ்வளிப் பான் எமக்கு ஏற்ற சின்னம், இயற்கைச் செல்வச் சின்னம், என்கின்றார்: அறிவாய் நீயும்.

தர்பாரில் இடம் பெற்றார் எந்தத் 'தகத்தகாயம்' காட்டிடினும் உதய சூரியன் அளிக்கும் ஒளிக்கு நிகரல்ல என்றுரைத்து: திரட்டித் தந்துள்ளார் ஆதரவு பெருமளவு.

இத்தனைக்கும் தம்பி! எழெட்டுத் தலைமுறைகள் உண்டு எம் தலைவர்கள் காண்! கோபாலகிருஷ்ண கோக லேயும் திலகர், பானர்ஜியுடன் லாலாலஜபதிராயும், வங்கத்துச் சிங்கம் போல் வகை வகையாய் உண்டெமக்கு பர்டொலி வீரரவர் சர்தார் படேலுடனே, பந்துலுவும் பிரகாசம் பற்பலரும் எம் தலைவர். எல்லோர்க்கும் மேலாக எம்மான் காந்தி உண்டு, எட்டுத் திக்கதனில் புகழ் பரப்பி வந்திட்டார் எமது நேருவுமே; அவர் பாதை நடந்திட்டார் மறைந்த லால்பகதூரும். அவரெல்லாம் அளித்திட்ட வரலாறு எமக்குண்டு என்று காங்கிரசில் இடம் பெற்றோரெல்லாம் இயம்பிடுவதுபோல, நாம் கூறிட பாங்கு வாய்ப்பு இல்லை.

இன்றுள்ள காங்கிரசார்-இல்லை இல்லை-இன்றைய காங்கிரசில் உள்ளோர்கள்—பண்டைப் பெருமையினை, மிகு வரலாற்றுச் சிறப்பதனைக் காட்டிக் கண்சிமிட்டி உள்ளம் கவர முனைகின்றார்.

நாமோ, வல்லோர்கள் சமைத்தளிந்த வரலாற் றின் மீது நின்று, எத்தனை உயரம் நாங்கள் பாரீர் என்று கூறிடவில்லை. ஆனால் வரலாறு சமைக்கின் றோம்.

ஏழெட்டுத் தலைமுறைகள் பெற்றளித்த பெருநிதி யால் பொலிவு பெறுகின்றார், இன்றுள்ள காங்கிரசார்; பொலிவினை அழித்தும் வருகின்றார், நாமோ புதியதோர் காலம் தன்னை உருவாக்கி வருகின்றோம்.

தியாகம் பல செய்து சுதந்திரஜோதி கண்டார் பெரியோர்—இன்று அதனைப் பயன்படுத்தி வெளிச்சம் போட்டு உலவுகின்றார் காங்கிரசில் இன்றுள்ளார். நாமோ, தியாகத் தீயினில் நிற்கின்றோம் தொடர்ச்சியாக,

எனவேதான், பழங்கதை பேசுவோர் பக்கம் நின்றிடாமல், பணியாற்றிடும் நமக்குப் பக்கபலம் தந்திடவே திரண்டு வருகின்றார், ஏழையர் எல்லோரும்.

நமக்குள்ள வலிவினையும் நமைக்கெடுக்க நினைப்போர்கள் செயும் முறையும் எடுத்துக் கூறிவிட்டேன், இக்கணக்கை ஆய்ந்து பார்த்திடுவாயேல், விழிப்பு தேவை, அஃதேபோல் வெற்சி நம் பக்கம் எனும் நம்பிக்கை கொண்டிடவும் வாய்ப்பு உண்டு என்பதையும் உணர்ந்திடுவாய். உணர்ந்ததனை நான் உரைத்தேன்.

பயணம் - பாதை - பக்கம் உள்ளோர் - பாழ்படுத்த முனைவோர்கள்— இவை யாவும் காட்டுவதன் நோக்கம் தம்பி! தெளிவுடன் தொடர்ந்து நம் பணி தன்னைச் செய்திடத்தான்.

உனைச் சூழ உள்ளோரின் உள்ளம் அறிந்திடுவாய், அவர் முறையும் தெரிந்துள்ளாய்.

உன்னுடன் உள்ளோர்கள் உளம் அறிவாய்! அவர் உள்ளன்பும் தெரிந்துள்ளாய்.

ஆகவே உவகை கலந்ததொரு உறுதியுடன், விழிப்புடன், ஏறு! முன்னேறு? 'ஏறே! நீ முன்னேறு! முன்னேற்றப் பாதையிலே நடைபோடும் நல்லோனே! நாடு உன்னிடம் எதிர்பார்ப்பது நிரம்ப, அதற்கேற்ற தன்மையுடன் தொண்டாற்றிட முனைவாய். அந்தத் தொண்டு புரிந்திடுவோர் ஆயிரவர், ஆயிரவர்! பேரூரில் சிற்றூரில் வாழ்கின்ற உழைப்பாளர்; ஏர் பிடிப்போர் சீர் அளிப்போர், உன் தோழர்! வருகின்றார் அவரெல்லாம், மாநாடு மாண்பு பெற.

நத்திப் பிழைத்திடாத நல்லோர்கள் வந்திடுவார்!

கத்தும் கடல் அடக்கிக் கலம் விட்ட முன்னோரின் 'மரபு' இதுவென அறிந்து மார்தட்டி நிற்போர்கள், மறவர் வருகின்றார் மாநாடு மேன்மை பெற.

அரசியல் சதுரங்கம் ஆடுவோர் அல்ல நாங்கள்; அன்னைத் திருநாட்டின் வாழ்வு வளம் பெற்றிடவே எமதுயிரும் ஈந்திடும் வீரர் குழாம் யாமென்று கூறிப் பவனி வரும் குன்றனைய நெடுந்தோளர் வருகின்றார், நீடுபுகழ்த் திருச்சிப் பதி தன்னில் திரண்டிடும் தீரருடனிருக்க,



மாநாடு திருச்சியிலே; மணம் எழும் தமிழக மெங்கணுமே. எழிலார்ந்த அம்மாநாட்டில், இன்ப ஒளி கண்டிடலாம்.

எமதூரில் இது நிலைமை; மாற்றார் மருள்கின்றார், வெற்றி எமக்கே என்று பல்வேறு பக்கம் வாழ்வோர்கள், பேசிடுவர்; அந்தப் பாகு பருகிடவே, வந்திடுவாய் தம்பி! உன் உடன் பிறப்பு புடை சூழ.

ஆங்காங்கு நம் கழகக் கோட்டைகள் அமைந்த விதம் பாங்காக எடுத்துரைப்பார்; பழச்சாறாக இனிக்கும் அச்சேதியுந்தான்.

இன்ன தொகுதியிலே இன்றிந்த நிலைமை தோழா! இன்னாரின் 'இருப்பு' இல்லாது போயினதால், இழுக்கப் பார்க்கின்றார், இன்னொரு பெரும் புள்ளியினை என்ற விவரம் பேசிடுவர், நாட்டு நிலை உணர்ந்திடலாம்.

ஆங்காங்கு தாம் சென்று ஆற்றிய உரை கேட்ட மக்கள் கொண்டுள்ள உணர்ச்சியின் வேகமதை பேச்சாளர் எடுத்துரைப்பார், பார்த்திடுவாய் தமிழகந் தன்னை.

ஆட்சிமுறை தன்னின் இலக்கணமும், அது வழுவியதால் இன்றுள்ள ஆளவந்தார் தந்துள்ள அவதியதும், கூறிடுவர் நம் தோழர், கூர்தத மதி படைத்தோர்; கருத்துக்கு விருந்தாகும்; பெற்றிடவே வந்திடுவாய்; பெறட்டும் மற்றவரும், உடன் அழைத்து வந்திடுவாய்.

கன்னலின் சுவையன்றோ, காவிய நடையன்றோ, பூங்காற்று வீசுதன்றோ, புல்லரைச் சாய்க்கவல்ல புயலன்றோ என்றெல்லாம் சொலத்தக்க உரையாற்றி, உள்ளம் தனில் உவகை ஊட்டி, உறுதியினை மேன்மையாக்க வருகின்றார் கழகமதன் காவலர்கள்: காண்பாய், தம்பி! கண் குளிர!!

எங்குள்ளோம், எவ்வாறுள்ளோம், எத்தகைய திறனதனைப் பெற்றுள்ளோம், எந்த நிலை உளது நம் அணி வகுப்பு, என்பதெல்லாம் கண்டிடவே மாநாடு; அறிவாயே அதனை 'அரிமா நோக்கு' என நாவலர் கூறியதை; வா! வா! தம்பி! உன் வருகை, மாநாட்டின் நிலை உயர்த்தும், நம் நோக்காம் ஈடேற வழி அமைக்கும்; மாற்றார்க்கு நாம் நாம் யார் என்பதனை எடுத்துக் காட்டும்,

கருத்துக்கு விருந்து உண்டு என்றேன்; தம்பி! இசையும் உண்டு! கூத்து உண்டு! இவற்றினுக்கும் மேலாக, நாம் காண விரும்பும் எதிர்கால ஓவியத்தைக் கண்டிடவும் வாய்ப்பு உண்டு.

தமிழர் விரும்பிடும் ஓர் நல்லாட்சி எது என்றும், அந்த நல்லாட்சி அமைத்திடவே யாது செய்திடல் வேண்டு மென்றும், கூறிடும் உரிமை பெற்றோய்! கொடுமைதனை வீழ்த்தவல்ல கூர்வாளே! குருட்டறிவைப் பொசுக்குகின்ற ஒளிவிளக்கே! உன்னைக் காண, வழிமீது விழிவைத்து நிற்கின்றேன்; அறிவாய் நீயும்.

மாநாட்டில் வந்தமரும் மாத்தமிழர் முகமதனை கண்டிடும் பேறு பெற்றிட்ட போதினிலே, மாற்றார்கள் குவித்துள்ள மாநிதியும் கடுகாகத் தோன்றிவிடும்; மனம் திறத்து நீ பேசிடினோ, அவர் மூட்டும் சூழ்க்கியெலாம் தூளாகிப் போகும், தூற்றல் தூசு ஆகிப் போகும்; தூய தொண்டுதனை நல்கத் தொகை தொகையாய் இருக்கின்றார் உடன்பிறந்தார் என்பதறிந்தவுடன், உள்ளத்தில் ஓர் எழுச்சி தோன்றும்; வீரம் பொங்கும்.

> 'உண்மை! இது உண்மை! உயிரனையீர்! நெஞ்சத்தில் திண்மை இருந்தால்தான் வெற்றிக் சுடர் தெரியும்! சாவா? சந்திப்போம், வாழ்க்கை நமக்கென்ன பூவா?
>
> புறப்படுவோம்; புல்லியரைத் தூள் செய்வோம்''

என்ற முழக்கமிட்டுக் கிளம்பினாரே நம் தோழர். இன் தமிழைக் காத்திட. என்னானார்! பசி தீர்க்கப் பயன் பட்டார், பக்தவத்சலனார் ஆட்சி தன்னில் வாய்திறந்து காட்டிற்றே துப்பாக்கி, அதன் பசி தன்மை.

மொழிக் கிளர்ச்சி நடாத்தியதில், மொய்குழலாள் வீழ்ந்தழவே, வீழ்ந்தனர் வீரர் பலர்.

நடை அழகும் நா நல அழகும பெற்றோன் நான் பெற்ற திருமகனும் என்று பூரித்துக் கிடந்த தாய் காதில் போட்டனர், சுட்டார் ஆளவந்தார்! சுருண்டு வீழ்ந்தான் உன் மகனும்! செத்தான் ஒருவன்! மற்றவர் எங்கே எனக் கொக்கரித்தார் கொடியோர் எனும் சேதியினை.

அன்னை மொழி காத்திடவே ஆற்றலற்று நானிருந்திடப் போவதில்லை, என்னையே நான் தீயிலிட்டு இறந்து



படுகின்றேன், மறந்திடாதீர், என்னை; தமிழ் வாழச் சாகின்றேன்; சாக விட்டிடாதீர் நம் தமிழை என்று செப்பினர், சிங்கத் தமிழர் சிலர், சிந்தினோம் கண்ணீர்; வேறென்ன செய்தோம்.

எங்கும் அடக்குமுறை! என்றும் நடந்தறியாப் பயங்கரங்கள். எல்லாம் தமிழ் தனக்கு இடர்வந்துற்றதுவே என்ற ஏக்கம் காரணமாக.

அவர்கள் அளித்திட்டார் தம் இன்னுயிரை! நாம்?

திரண்டெழுந்து நின்றேனும், போனவர் போக, மிச்சம் உள்ளோர் காண், பெருவெள்ளம்! இந்தியைத் தீயாக்கி இன்தமிழை அழித்திடவே இயலாது அறிந்திடுவீர்! என்றேனும் எடுத்தியம்ப வேண்டாமோ, இறந்துபட்ட இணையற்ற வீரர்தம் மரபினரே நாம் என்பதனை மறக்கப் போமோ!

அந்தப் பெரும் கிளர்சிக்குப் பிறகு, தம்பி! முதன் முறையாய்க் கூடுகின்றோம் திருச்சி மாநாட்டில்; உணர்கின்றாயா அதன் பொருளை!

தமிழ் எந்தன் உயிர் என்போர், உரிமைகாக்க உலை நெருப்பிலும் வீழ்வேன் எனும் உறுதி பூண்டோர், நாட்டினில் ஏற்புடைய ஆட்சியது அமைந்தாலன்றி ஏழையர்க்கு வாழ்வில்லை, இன்பம் இல்லை எனும் உண்மைதனை உணர்ந்தோர் வருகின்றார். எடுப்பார் கைப்பிள்ளையாக இருந்திட்டோம், விளைந்த காட்டுக் குருவியாகிட ஒருப்பட்டோம், தமிழர் காணீர்! என்று இயம்பிடுகின்றாய், தம்பி! செந்தேன் பாய்கிறது என் செவியில். உன்போல் உள்ளோர்கள் தொகை தன்னை ஒரே இடத்தில் காண்பதற்கு, என்போலத் துடித்தபடி உள்ளோர் பலர். எனவே எழு ஞாயிறே! வந்திடு! ஒளி தந்திடு! திருச்சி அழைக்கிறது தீந்தமிழின் சுவைக்கு நிகர் இயல்பினனே! நானும் அழைக்கின்றேன்; வந்திடு! ஒளி தந்திடு!

அண்ணன்,

12—6—'66

அண்ணாதுரை

## காஞ்சிக் கடிதம் : 67

# தம்பி உடையான்!

★ பச்சைப் பாம்பு பார்க்கப் பசுமை! பாய்ந்து விட்டால்...?

★ நம்மவர் ஆட்சி நமக்காகவா? இல்லை! இல்லை!

★ ஏழை மேலும் ஏழையாகிறான் காங்கிரஸ்கட்சியில்!

★ காமராசர் காட்டும் ஜனநாயக சோஷியலிசம்!

தம்பி!

உறுமும் புலி, சீறிடும் நாகம், துரத்திடும் ஓநாய், இவைகளை எதிர்த்திட வேண்டும் என்ற உணர்வு பெறுவது கடினமல்ல. இவைகளால் ஆபத்து ஏற்படும் என்பது எளிதாகப் புரியக்கூடியது.

கொத்தவரும் வல்லூறு, வட்டமிடுவது கண்டதும் மாடப்புறா தப்பித்துக்கொள்ளத் துடியாய்த் துடிக்கிறது. ஆனால், வலையை வீசிவிட்டுப் வரகாசி தெளித்துவைத்துப் பிடித்திட முனைபவனைக் கண்டால் அப்படியா அஞ்சிப் பறந்தோடுகிறது? இல்லையல்லவா?

சீறிடும் பாம்பு கண்டால் ஓடோடித் தப்பித்துக்கொள்ளவோ, தடிகொண்டு அடித்துப் போடவோ முனைகின்றனர். ஆனால், பச்சைப் பாம்பு இருக்கிறதே, அது சீறுவது இல்லை; கண்ணுக்குப் பயங்கரமாகத் தெரிவதுமில்லை; பச்சைக் கொடியுடன் பின்னிக் கிடந்திடும்போது, பாம்பு



என்று கண்டறியக்கூட இயலுவதில்லை; ஆகவே, அச்சம் எழாது; ஆபத்து இருக்கிறது என்பதனை அறிந்திட இயலாது. என்ன அழகான கொடி! கவர்ச்சி மிக்க பச்சை நிறம்! —என்று ரசித்துக்கொண்டிருக்கத் தோன்றுமேயன்றி, அச்ச உணர்ச்சி எழாது. அந்த நிலையில், அருகே நெருங்குவான்! பச்சைப்பாம்பு கொத்திவிடும்! அப்போதுதான் அலறித் துடித்திடுவான், ஐயோ! பச்சைக்கொடி என்று எண்ணிக் கொண்டிருந்தேன் பச்சைப்பாம்பல்லவாகொத்திலிட்டது!! —என்று கதறுவான். அல்லவா?

அதுபோலவே தம்பி! கண்டதும் கடுங்கோபம் கக்கி, பற்களை நறநறவென்று கடித்து, காட்டுக் கூச்சலிட்டு, கழுத்தினில் அடித்திடும் கயவனும் உண்டு, கனிவு காட்டி, புன்னகை உதிர்த்து, அருகே அழைத்து, உணவளித்து, அதிலே நஞ்சிட்டு உயிர்பறிப்பானும் உண்டு.

முன்னவனைக் கண்டதும் தன்னாலேயே ஒரு எச்சரிக்கை உணர்வு வந்திடும்; மற்றவனைக் கண்டாலோ ஒரு மயக்கம் மேலிடும்.

கிணற்றினில் இறங்கவேண்டிய நிலை ஏற்படும்போது, காலைப் பதமாக ஊன்றிக் கொண்டு, வழுக்கி விழுந்து விடாமல் மிக எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளத் தோன்றும். பச்சைப்பட்டு விரித்தது போன்ற தோற்றமுள்ள பாதையிலே நடந்திடும்போது, ஒரு அலட்சியப் போக்கு தன்னாலே வந்து சேர்ந்திடும்.

படுகுழி வெட்டி, அதனைப் பசுந்தழை கொண்டு மூடி வைத்திருந்திடின்—அந்தப் பாதையில்—வீழ்ந்து வேதனை அடைந்த பிறகே படுகுழி என்பது புரியும்.

கரத்தினில் அரிவாள் தூக்கிக்கொண்டொருவன் எதிரே வரக் கண்டால், எச்சரிக்கையாக இருந்திடத் தோன்றும்! அறுத்தெடுத்த கதிருடன் வந்திடின்? அருகே அவன் வந்திடும் போதுகூடப் புன்னகை செய்திடத் தோன்றும், இயல்பு.

வெள்ளையர்கள் இந்த நாட்டைச் சுரண்டுவதனைக் கண்டதும், எல்லா மக்களுக்கும் ஒரு எரிச்சலுணர்ச்சி, எதிர்ப்புணர்ச்சி, தானாக வந்தது.

அவன் நடை உடை பாவனையும், அவன் அனுபவித்து வந்த மந்தகாச வாழ்வும், அவன் பேச்சிலே நெளிந்த ஆண

வமும், எளிதாகப் புரிந்தது; இவன் நமக்கு எதிரி என்ற உணர்வு பீறிட்டுக் கிளம்பிற்று.

உறுமும் புலியை, சீறும் நாகத்தைச் கண்டதும், ஆபத்து! ஆபத்து! என்று உணர்வு பிறந்திடுவது போல, எல்லாவகையாலும் நம்மிலிருந்து வேறுபட்டுக் காணப் பட்டவனும், எல்லாத் துறைகளிலும் நம்மீது ஆதிக்கம் செலுத்துபவனுமாக இருந்துவந்த வெள்ளையரிடம் எதிர்ப் புணர்ச்சி இயல்பாகவே ஏற்பட்டுவிட முடிந்தது.

அன்னியன்—என்ற நிலையே, அகற்றப்பட வேண்டிய வன் என்ற உணர்வை ஊட்டிற்று. பாம்பு என்று கண்ட வுடன், அடித்துப் போட்டிட வேண்டும் அல்லது அதனிட மிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உண்டாவதுபோல. ஆனால், பச்சைப்பாம்பு, பசுமை மிக்க செடி கொடியுடன் ஒட்டிக் கொண்டிருந்திடின்?

வெள்ளையராட்சியும் அதனால் விளைந்த வேதனை யும் சீறிடும் நாகம் அல்லது பாய்ந்திடும் புலிபோல் திருந்தது; நம்மவர்களே நம்மை ஆளும் நிலையில், அவர் கள் மூட்டிவிடும் வேதனை, பச்சைப் பாம்பு போலக் கொடி யுடன் கொடியாக சுற்றிக் கொண்டிருப்பதால், எளிதிலே விளங்குவதில்லை; அது தீண்டும் வரையில்! தீண்டிய பிறகும் அதனை எளிதாகக் கண்டறிய முடிவதில்லை. கொடிக்கும் பச்சைப் பாம்புக்கும் தோற்றத்தில் உடனடி யாகக் கண்டுபிடித்திடத்தக்க மாற்றம் இராததால். எனவேதான், சுயராஜ்யத்தின் பேரால் வேதனைகள் மூட்டப்படும்போது, எளிதாக உணர்ந்து தீவிரமாக எதிர்த்து, துரிதமாக அதனை ஒழித்திட முடிவதில்லை.

ஆனால், நம்மவர்கள் என்பதாலேயே அவர் கரம்பட்ட நஞ்சு உயிர் குடித்திடாமலிருக்குமா! அன்பனே! வருத்தப் படாதே! நெருப்பிலே தூக்கிப் போட இருக்கிறேனே என்று எண்ணி வேதனைப்படாதே! இது சாதாரண நெருப்பு அல்ல! கள்ளியும் சுள்ளியும் போட்டு மூட்டப்பட்ட நெருப்பல்ல. அசல் சந்தனக்கட்டை!! நெருப்புத்தான்! ஆனால் அருமையான நறுமணம்! கவனித்தனையா! பைத்தியக்காரா! நெருப்பிலே தள்ளுகிறார்களே என்று எண்ணியா வேதனைப்படுவது! சந்தன மணம்! இந்த விதமான நெருப்பூரில் நம்மை அனுப்புகிறார்களே என்று மகிழ்ந்திட வேண்டாமா!!—என்று அக்ரமம் பேசினால், ஆமய்யா! ஆம்! நறுமணம்! என்று கூறிவிட்டு, ஓ! என்



சோதரரே! காணீர் என்னை! சந்தனக் கட்டைகளை அடுக்கித் தீயிட்டு, அதிலே என்னை இருந்திடச் செய் துள்ளனர்!! என்றா மற்றவரிடம் கூவிக் கூறிடுவர். பித்தரும் கூறார்.

ஆனால் நம்மவர்களே ஆட்சி நடத்தும்போது, நமக்குக் கேடு பயக்கத் தக்கனவற்றினைச் செய்திடுவது கண்டு, நாம் சீறிப் பேசினால், ஆளவந்தார்கள் என்ன செப்புகின்றனர்.

நானா உன்னைக் கெடுத்திடுவேன்!

என்னையா நீ எதிர்ப்பது?

உனக்கு எது நல்லது என்பது எனக்கா தெரியாது!

என்று பேசுகின்றனர், குரலிலே கடுமை கலவாமல், விழி யிலே கனிவு கூட்டி! மயங்கிடத் தோன்றும். மயங்கு கின்றனர் பலர். பச்சைப் பாம்பு கொடியுடன் பிணைந்து கொண்டிருப்பதனை அறிய முடிவதில்லையல்லவா, அது போல அவர் பேசும் மொழியிலே உள்ள பாகு, நஞ்சு கலந் தது என்பதனை உணர்ந்திட முடிவதில்லை.

ஆகவேதான், வெள்ளையர்மீது பாய்ந்திட முடிந்தது போல கேடு செய்யும் நம்மவரின் போக்கின்மீது பாய்ந்திட முடியவில்லை, பலருக்கு.

பச்சைப்பாம்பு பார்வையில் எளிதிலே படாது. நம்மவர் ஆட்சியின் கேடுகள் பலருடைய பார்வையிலே படுவதில்லை.

கேளேன் ஆளவந்தார் பேசுவதை! ஏழையே! உன்னை வாழவைக்கவே நான் அரும்பாடு படுகிறேன்! உன் தலை யிலே எண்ணெய் இல்லை! என் கண்களிலே பார், கசிகிறது, உருக்கம்; வேதனை!! உன்னை வாழ வைத்திடத்தான் திட்டங்கள்!!

பலருக்கு மனமயக்கம் ஏற்பட்டு விடுவது கண்டு வியப்படைய என்ன இருக்கிறது.

ஆனால் அந்த மயக்கத்தைத் தம்பி! நாம் பெரும் அளவுக்குப் போக்கிவிட்டிருக்கிறோம். ஆளவந்தாருக்கு நம்மீது ஆத்திரம் அதிக அளவில் இருப்பது அதனால்தான்,

நம்மவர்கள்—ஆகவே நல்லவர்கள்! என்ற ஒரு மயக்கத்தை ஊட்டிவைத்திருந்தோம், பாவிப் பயல்கள், நம்ம வீட்டு நெருப்பு என்றால் சுடாதா அப்பா! என்றும், நம்ம கொல்லையில் உள்ள கிணறு என்றால், இடறி விழுந்தால் உயிர் போகாமலா இருந்திடும்! என்றெல்லாம் கேட்டுக் கேட்டு, மயக்கத்தைத் தெளிய வைத்துவிட்டனரே, என்று எண்ணுகிறபோதே அவர்களுக்குக் கோபம் 'குபுகுபு' வெனக் கிளம்பத்தானே செய்யும். அதைத்தான் காண்கின்றோம்.

நம்மவர்கள்!—கவர்ச்சிகரமான சொல், தம்பி! சுவை மிக்கதுகூட! ஆனால் 'நம்மவர்கள்' என்று உறவு கொண்டாடுவோர் ஒருவரை ஒருவர் வீழ்த்த வல்ல பகைவர்களாக இருந்திடின்!

இன்று இந்தச் சுவையூட்டும் மயக்க மொழியை ஆள வந்தார் பயன்படுத்தும்போது,

> கழனியில் காயும் வெயிலில் உழைக்கின்றானே கந்தன் அவனுக்காகவா அல்லது காட்டூர், மோட்டூர், மீட்டூர், என்று பலப்பல பண்ணைகளை அமைத்துக் கொண்டு பல கந்தன்களை மாடாக உழைக்கச் செய்து, மந்தகாச வாழ்வு நடத்துகிறானே பவுனப்பன் எனும் சீமான், அவனுக்காகவா!

யாருக்காக இந்த அரசு? அது விளக்கமானால்தான், இந்த 'நம்மவர்' என்பதிலே நல்ல பொருள் கிடைக்கிறதா, அல்லது தீயது உள்ளடங்கிக் கிடக்கிறதா என்பது புரியும்.

அதனைத்தான் நாம் புரியவைத்துக் கொண்டிருக்கிறோம்.

இனியுமா இதிலே உங்களுக்குச் சந்தேகம், இந்த அரசு ஏழைகளுக்காகத்தான்; இல்லாமையை ஒழித்திடத்தான் என்று பேசுகின்றனர் பெரியதலைவர்கள்; பெரிய இடத்தைப் பிடித்துக்கொண்டவர்கள்.

ஏழை முன்னேறிவிட்டான், அவன் வாழ்விலே 'வசந்தம்' வீசுகிறது!—என்று கூறினர் துவக்கத்தில், துணிந்து.

ஏழை அரிஜனங்களுடைய வீடுகளிலே இப்போது தான் வெள்ளிப் பாத்திரங்கள் பளபளவென்று தெரிகின்றன என்றே கூறிப் பூரிப்புக் காட்டினார் ஒரு அமைச்சர்.



வேலைவாய்ப்பு அதிகமாகிவிட்டிருக்கிறது, கூலிஉயர்வு கிடைத்திருக்கிறது, வாழ்க்கை வசதி செய்து தரப்பட்டிருக்கிறது, எல்லாம் எமது ஆட்சியின் திறமை காரணமாக என்று கூறிக் களிப்பூட்டினர் சில காலம்.

புதிது புதிதாக எழுந்த தொழிற் கூடங்களைக் காட்டினர்: பாரீர் புதுக்கோலம்! அறிவீர் நாடு செழித்திருப்பதை!!—என்று பண் பாடினர்.

அதனால் ஏற்பட்ட மயக்கம் சிறிதுகாலம் கலையவில்லை: கப்பிக்கொண்டிருந்தது.

எட்டடுக்கு மாடிகளும், எழில்மிகு தோற்றமுள்ள மோடார்களும், புத்தம் புதுப் பொலிவும் கண்டனர் ஏழைகள்; நாடு முன்னேறி இருக்கிறது 'நம்மவர்' ஆட்சியில் என்ற பாட்டும் கேட்டனர். கேட்டுவிட்டு? கூரைபிய்ந்து போன குடிசைக்குச் சென்றனர்! குமுறிடும் மனைவியைக் கண்டனர்! தேய்ந்துபோகும் குழந்தைகள் கூவிடக்கேட்டனர்; வறுமை எப்போதும்போல அங்கு ஆட்சி செய்திடக் கண்டனர், கலங்கினர்.

கூலி உயர்ந்துதான் இருந்தது. ஆனால், விலைகளோ அதனைவிட அதிக அளவிலும் வேகத்திலும் உயர்ந்து போயிருக்கக்கண்டனர்; வாழக்கைச் செலவு சுமையாகித் தம்மை அழுத்துவதைக் கண்டனர்.

புதிய புதிய யந்திரங்கள் அமைத்தனர்; கண்டனர்; வெள்ளையர்போலாகிவிட்ட நமதுமுதலாளிமார்களையும் கண்டனர்; 'நம்மவர்' என்ற உணர்ச்சி கூட எழுந்தது, ஆனால், நமதுநிலை, என்பதுபற்றிய எண்ணம் எழுந்ததும் பந்தபாச உணர்ச்சி மெள்ள மெள்ள உலர்ந்திடலாபிற்று.

புதிய ஆட்சி! புதிய நிலைமை! புதிய பொலிவு! புதிய வலிவு! பொன்னொளி! பூங்காற்று! மெல்லிசை! மினுக்கு!—எல்லாம் கண்டனர்; அவையாவும் ஒரு சிலருக்கே, தமக்கு அல்ல என்பதனையும் உணர்ந்தனர்: உணர்ந்ததும், இந்த ஆட்சி நமக்காகவா என்ற ஐயப்பாடு தலை தூக்கிற்று; இல்லை இல்லை என்று உள்ளம் முணுமுணுத்தது, ஒலி வலுத்தது, உண்மை உரத்த குரலில் கூறிற்று, இந்த அரசு உனக்காக அல்ல என்று.

நாடு முன்னேற்றமடையத் தீட்டப்படும் திட்டங்கள் வெற்றி அடைய வேண்டுமானால், வயலில் வேலை செய்யும்

உழவனும், தொழிற்சாலையில் வேலைசெய்யும் பாட்டாளியும் இந்தத்திட்டம் எனக்காக, என்னை வாழவைக்க என்ற உணர்வுபெற்று உள்ளன்புடன் உழைத்திடவேண்டும் என்று தொழில் அமைச்சராக இருந்தபோது சஞ்சீவய்யா பேசினார். அந்த உணர்வு வரவில்லை. காரணம், உழைக்கிறான், உற்பத்தி பெருகுகிறது, இலாபம் குவிகிறது, முதலாளிமார்கள் கொட்டமடிக்கிறார்கள், இவனோ எப்போதும்போல—இல்லை—இல்லை—முன்பு இருந்ததைவிட மோசமான நிலையில் நலிந்திடுகிறான். இந்த அரசு எனக்காக அல்ல...என்னைக் கசக்கிப் பிழிந்து இலாபம் பெற்றிடும் முதலாளிகளுக்காக என்று கூறிடலானான்: ஒரு கசப்புணர்ச்சி அவன் உள்ளத்தைக் கப்பிக்கொண்டது; எத்தனை தித்திப்புத் தடவியபோதிலும் அந்தக் கசப்புணர்ச்சி போக மறுக்கிறது.

> இதற்கு முன்பு எப்போதும் இல்லாத அளவு விலைகள் ஏறியிருப்பதால், கூலி உயர்ந்தும் தன் வாழ்க்கையில் குளிர்ச்சி ஏற்படவில்லை என்பதறிந்து இதற்குத்தானா இந்த அரசு! அது நமக்காக அமைந்த அரசா? என்று கேட்கலானான். துப்பாக்கிதான் பதில் அளித்தது!

வெள்ளையராட்சிக்காலத்திலே இல்லாத துணிவு முதலாளிகளுக்கு ஏற்பட்டது! ஏனெனில், தொழிலாளி தன்நிலையை உயர்த்திக்கொள்வதற்காக எந்தக் கிளர்ச்சி நடத்திட முயன்றாலும், ஆயுதம் தாங்கிய போலீஸ் படை முதலாளிகளின் ஆதிக்கத்தைக் காத்திட, தொழிலாளியின் கிளர்ச்சியை முறித்திட முனைந்தது.

> இந்த அரசு நமக்காக அமைந்தது அல்ல: இது முதலாளிகளுக்காக அமைந்த அரசு என்ற உண்மையை, தொழிலாளியின் உடலிலிருந்து ஒழுகிய இரத்தமும், கண்களிலிருந்து வடிந்த கண்ணீரும் உணர்த்தின.

காங்கிரசாட்சியில் பணக்காரன் மேலும் பணக்காரனாகிறான்; ஏழை மேலும் ஏழையாகிறான் என்ற கருத்து பரவலாயிற்று. ஆட்சிப் பொறுப்பில் இருந்தோர், முதலில் இதனைப் பலமாக மறுத்தனர்; கடுமையாகக் கண்டித்தனர்: இத்தகைய கசப்புணர்ச்சியை மூட்டிவிடுபவர்களை.

ஆனால் ஆய்வாளர்கள் கண்டறிந்து கூறினர், 100-க்கு அறுபது குடும்பத்தினர் பஞ்சத்தின் பிடியில்



> உள்ளனர்; பசி நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்பதையும்,
>
> விலைவாசிகள் விஷம்போல ஏறிவிட்டிருப்பதையும், கூலி உயர்வு என்பது பணத்தின் அளவிலேயே தவிர, பண்டத்தின் அளவிலே அல்ல என்பதையும்,
>
> பணத்துக்கு உள்ள வாங்கும் சக்தி தேய்ந்து போயிருப்பதையும்,
>
> பாட்டாளிகளின் கடன்சுமை அதிகமாகி விட்டிருப்பதையும் வேலையில்லாத் திண்டாட்டம் விரிந்து போய்க்கொண்டிருப்பதையும்,

எதனைத் தொழிலாளரும் உழவர்களும் நடுத்தரக் குடும்பத்தினரும், தமது கண்ணீராலும் பெருமூச்சாலும் எடுத்துக்காட்டி வந்தனரோ, அதனை ஆய்வாளர்கள் புள்ளி விவரங்களாக்கித் தந்தனர். இந்த நாட்டு ஆய்வாளர்கள் மட்டுமல்ல, வெளிநாடுகளிலிருந்து இதற்காகவே அழைக்கப்பட்டிருந்தவர்களும்.

> அந்த ஆய்வாளர்கள் அதேபோது, மற்றும் சில உண்மைகளையும் எடுத்துக் காட்டினர்.
>
> வரிச்சுமை அதிகமாகிவிட்டிருக்கிறது; ஏழையை அழுத்துகிறது என்பதையும்,
>
> நோட்டுகளைக் கண்மூடித்தனமாக அச்சடித்துப் பரப்பி, பண வீக்கத்தைச் சர்க்கார் உண்டாக்கி விட்டார்கள் என்பதையும்,
>
> நாணயத்தின் மதிப்பு தேய்ந்துவிட்டு இருப்பதையும்,
>
> உலகின் நானா பக்கங்களிலும் கடன் வாங்கி வாங்கி, நாட்டின் எதிர்காலத்தை அடகுவைத்து விட்டிருப்பதையும் எடுத்துக் காட்டினர்.

இந்தக் கேடுகளில் ஏதேனும் ஒன்றைச் செய்தால் கூடப் போதும், மக்கள் சீறி எழுந்து அந்த அரசு நடாத்துவோரை விரட்டி விட்டிருப்பர்; பிற நாடுகளில்.

இந்தப் புண்ணிய பூமி அவ்வளவையும் தாங்கிக் கொண்டது; பொழுது புலரும், புது வாழ்வு மலரும் என்ற நம்பிக்கையை அணைத்துக் கொண்டபடி.

மற்றவர்கள்—குறிப்பாக எதிர்க் கட்சியினர்—இந்தக் கேடுபாடுகள் குறித்துச் சுட்டிக் காட்டிய போது சீறி வீழ்ந்த ஆளவந்தார்கள், ஆய்வாளர்களே இடித்துரைக்கத் தலைப் பட்டதும், சிரம் கவிழ்த்துக் கொண்டனர்; மெள்ள 'ஆமாம்' என்று கூறினர்.

ஆய்வாளர்கள் மற்றும் ஓர் உண்மையையும் எடுத்துக் காட்டினர். இத்தனை கேடுபாடுகள் நெளிகின்ற நிலையில், நாட்டிலே தொழில் வளர்ந்திருக்கிறது, உற்பத்தி பெருகி இருக்கிறது, செல்வம் வளர்ந்திருக்கிறது என்பதனை எடுத்துக் காட்டினர்.

இஃது விந்தையன்றோ என்று கேட்டனர் மக்கள். செல்வம் வளர்ந்திடின் சீர் வளர்ந்திடும். தொழில் வளம் பெருகிடின் விலை குறைந்திடும்—இது பொது உண்மை. விளைச்சல் மிகுந்திடின் களஞ்சியம் நிரம்பிடும், மழை பெய்திடின் பூமி குளிர்ந்திடும், மலர் பூத்திடின் மணம் பரவிடும் என்பது போன்ற பொது உண்மைகள். ஆனால் இங்கோ தொழில் வளர வளரத் தொழிலாளர் துயரம் வளருகிறது; உற்பத்தி பெருகப் பெருக விலைகள் ஏறியபடி உள்ளன; செல்வம் வளர வளர வறுமை பரவுகிறது. காரணம் என்ன இந்த வேதனை நிரம்பிய விந்தைக்கு.

அதுதான் எனக்கும் புரியவில்லை; விளைந்த செல்வம் எங்கே போய்விட்டது? என்று கேட்டிடலானார் காமராஜர்.

நல்லவர்! ஏழைபங்காளர்! திறமை மிக்கவர்! காலம் தந்திட்ட கருவூலம்! காமராஜர்!!—இவர் மட்டும் இத்தனை ஆண்டுகள் இங்கு இருந்திருப்பின் இந்த இடர்ப்பாடு வந்தே இருக்காது; ஏழைக்கு வேதனை மூண்டிருக்காது. அவரோ, பாவம், கானடா நாட்டு அரசியலைச் செப்பனிடவும் அமெரிக்க நாட்டுத் தொழில்வளப் பெருக்கத்துக்கான வழி கூறிடவும், சந்திரமண்டலம் யாருக்கு என்பதற்காக ரஷியாவும் அமெரிக்காவும் மோதிக் கொள்ளாதிருக்க ஒரு சமரசத் திட்டம் தந்திடவும், தமது நேரத்தையும் நினைப்பையும் செலவிட்டுக் கொண்டு, காலையில் மாஸ்கோ, மாலையில் இலண்டன், மறுநாள் வாஷிங்டன், அதற்கு அடுத்த நாள் ஆட்டவா என்று பயணம் நடத்திக் கொண்டிருந்து விட்டார்; அதனால் இந்த அவதி இங்கு ஏற்பட்டு விட்டது என்றாவது கூறி ஆறுதல் அடையலாமா என்றால், முடியவில்லை, பெரியவர் இங்கேயேதான் இருந்து



வந்தார், பெரிய இடத்திலே தான் இருந்துவந்தார். அவர் கண் முன்பாகத்தான் இத்தனையும் நடைபெற்றது.

எட்டு ஆண்டுகள் அல்லவா அவர் முதலமைச்சராகக் கொலுவீற்றிருந்தார்!

இருந்து? இப்போது அவரும் கேட்கிறார், முத்தன் முனியன்போல, வளர்ந்த செல்வம் எங்கே போய்விட்டது என்று!

இந்த நாடு தவிர வேறு எந்த நாடும் இந்த விந்தையைத் தாங்கிக் கொள்ளாது.

ஆய்வாளர்கள் தெளிவளிக்க மீண்டும் முன் வந்தனர்.

மகனாலோபிஸ் குழுவினரின் அறிக்கை வெளி வந்தது.

செல்வம் எங்கெங்குச் சென்று முடங்கிக் கொண்டது என்பது பற்றிய விளக்கம் அளித்தது.

ஏகபோகமாகப் பொருளாதார ஆதிக்கம் செலுத்துபவர் பற்றியும் ஒரு தனிக் குழு தனி அறிக்கை கொடுத்தது.

இனியும் மறைத்துப் பயனில்லை என்று கண்டு கொண்ட ஆளவந்தார்கள், இப்போது முற்பகுதியை ஒப்புக் கொள்கிறோம், பிற்பகுதியை ஏற்றுக் கொள்வதற்கு இல்லை என்று தெரிவித்துள்ளனர்.

காங்கிரசாட்சியில் பணக்காரன் மேலும் பணக்காரன் ஆகிறான்

என்ற முற்பகுதியை ஒப்புக் கொள்கிறார்களாம், பெருந்தன்மையுடன்!!

ஏழை மேலும் ஏழை ஆகி இருக்கிறான்

என்ற பிற் பகுதியை ஏற்றுக்கொள்ள மாட்டார்களாம்! ஏன் என்று கேட்காதீர்கள். ஏதோ பெரிய மனது வைத்து, இவ்வளவு இடிக்குப் பிறகு ஒரு பகுதியையாவது ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா! மகிழத்தானே வேண்டும். அந்தப் பகுதியையும் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டால்,

மக்கள் என்ன செய்துவிடப் போகிறார்கள்? இது என்ன பிரிட்டனா, அமெரிக்காவா இப்படி ஒரு அரசா என்று கொதித்தெழுந்து, அந்த அரசினை வீழ்த்திட.

இந்த நிலைமை ஏற்படக் காரணம் என்ன?

ஆட்சியில் இருந்த நீங்கள் ஏன் இந்த நிலை ஏற்படுவதைத் தடுக்கவில்லை?

நிலைமை இவ்விதம் வடிவம் கொள்வது புரியவில்லையா?

புரியவில்லையென்றால் என்ன காரணத்தால்?

புத்தித் தெளிவு இல்லாததாலா? அல்லது மமதை காரணமாகவா?

புரிந்தும் நிலைமையைச் சீர்திருத்தவில்லையென்றால், முயன்று முடியாமற் போய்விட்டதா?'

ஆமென்றால், இந்த அளவு திறமை இல்லாத நீங்கள் ஏன் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கவேண்டும்? என்றெல்லாம் கேட்பர், அங்கு!

இங்கு? அச்சம் பிடித்தாட்டும் நிலை சிலருக்கு! 'நம்மவர்கள்' ஆயிற்றே என்ற மயக்க உணர்ச்சி சிலருக்கு!!

அந்த அச்சத்தையும் மயக்கத்தையும் போக்கிடும் முயற்சியில் நாம் ஈடுபட்டுப் பெரும் அளவு வெற்றி கண்டிருக்கிறோம்-

நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆட்சியிலே அமர்ந்திருப்பவர்கள் 'நம்மவர்கள்' என்பதாலேயே, அது நமக்காக உள்ள ஆட்சி என்றோ, நல்ல ஆட்சி என்றோ கூறிவிடுவதற்கு இல்லை என்பதனை நாடு அறிந்திடச் செய்திருக்கிறோம்.

கொடியிலே பச்சைப் பாம்பு சுற்றிக் கொண்டிருக்கிறது என்பதனை எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

பச்சைப் பாம்பு இருப்பதைக் கண்டறிவது எவ்வளவு கடினமோ அதனைவிட அதிகக் கடினம், அதனை அடித்துப் போடுவது. ஏனெனில் அது, நாம் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, மறையும்; ஒளியும்; கொடியுடன் கொடியாக அசைவற்று இருக்கும்.



'நம்மவர்கள்' நடாத்திடும் ஆட்சியை மாற்றி அமைத்திட முனையும்போது, இதனை நன்கு நினைவிற் கொள்ள வேண்டும்.

மக்களுக்குத் தெளிவளிக்க, 'நம்மவர்' நடாத்திடும் ஆட்சியின் உண்மையான போக்கினை எடுத்து விளக்கிட நாம் கடினமாக உழைத்ததால் பலன் கண்டோம் என்பதுடன், காங்கிரசில் இப்போது குடியேறியுள்ளவர்களின் பட்டியலே, பொதுமக்கள் மனத்தில் தெளிவு வளர வழி செய்துவிட்டிருக்கிறது.

இது ஏழைக்காக அமைந்துள்ள அரசு என்று பெருந் தலைவர்கள் பேசி முடிந்ததும், மக்கள் எவரெவர்களைக் காண்கின்றனர். மேடை மீது!

ஏழைகள் இந்த அளவுக்கு வளர்ந்திட யார் காரணமாக உள்ளனரோ அவர்களை!!

யாரார் ஊர் நிலத்தைத் தமது உடைமையாக்கிக் கொண்டு, உழுபவனைக் கூலியாக்கி விட்டனரோ அவர்களை!

யாரார் போட்ட முதலுக்கு ஒன்றுக்குப் பல பத்து இலாபமாகக் குவித்துக்கொண்டு, தொழிலாளி கூலி உயர்வு கேட்டால், கதவை அடைத்து விடுகிறார்களோ அவர்களை!

யாரார் கள்ளக் கடத்தல், கணக்கில் வராத பணம் ஆகியவற்றினுக்கு அதிபர்களோ அவர்களை!

யாரார் இலஞ்சம் வீசி, அதிகாரிகளில் சிலரையும் கெடுத்து நிர்வாகத்தைப் பாழாக்குகின்றார்களோ, அவர்களை!

யாரார் ஒரு தொழிலை நடத்தி அதனால் கிடைத்திடும் இலாபத்தைக் கொண்டு ஒன்பது புதுத்தொழில் துவக்கி மேலும் பணம் குவித்துக் கொள்கிறார்களோ அவர்களை!

யாரார் வருமானவரி கொடுக்காமல் சர்க்காரை ஏய்த்துவிட்டுக் காங்கிரசின் தேர்தல் நிதிக்கு நன்கொடை கொடுத்துப் பெரியவர்களின் புன்னகையைப் பெற்று, அதனைத் துணைகொண்டு புதிய அக்ரமங்

களைத் துணிவுடன் செய்திட முற்படுகின்றனரோ, அவர்களை!

எதிர்க்கட்சிகள் என்ன பிரசாரம் செய்து ஏழை களை விழிப்படையச் செய்தாலும், பணத்தை வீசிப் பாமரரை மயக்கிட முடியும் என்ற கணக்குக் கூறுபவர் கள் யாராரோ அவர்கள்!

அவர்கள் 'புடைசூழ'த்தான் பவனி வருகின்றனர், ஏழை பங்காளர் யாமே என்ற விருது தேடிக்கொண்டுள்ள ஆள வந்தார்கள்.

'அவர்களை'க் கண்டதும் மக்களுக்கு நிலைமை மிக நன்றாகத் தெரிந்து விடுகிறது. அதனால், தம்பி! நமது வேலையும் ஓரளவு எளிதாகிவிடுகிறது.

அவர் காங்கிரசிலா?

இவர் கூடவா, காங்கிரஸ் கட்சியில்?

அவர் எப்போது காங்கிரசில் சேர்ந்தார்?

இவரை எப்படிக் காங்கிரசில் சேர்த்துக் கொண் டார்கள்?

இவர்களெல்லாமா இருக்கிறார்கள் காங்கிரஸ் கட்சியில்?

இவர்களுக்குத்தானா இருக்கிறது காங்கிரஸ் கட்சி?

இவர்களைக் காட்டித்தானா காங்கிரசை ஆதரிக்கச் சொல்கிறார்கள்?

தம்பி! ஊரார் இதுபோலத்தான் பேசிக்கொள்கிறார்கள், 'அவர்கள்' புடைசூழக் காங்கிரசின் பெருந்தலைவர்கள் பவனிவரக் காணும்போது.

தம்பி! கொட்டு முழக்குடன், கோவிந்தா எனும் ஒலி யுடன், மஞ்சள் ஆடை அணிந்து, வலம் வருகிறது ஒரு 'கோஷ்டி'

பக்திமிக்கவர்கள், திருப்பதி செல்கிறார்கள். அவர்கள் ஏந்திவரும் உண்டியலில் நம்மாலானதைப் போட்டால் நமக்குப் புண்ணியம் வந்து சேரும் என்று எண்ணிக் கொண்டு, அன்றைய செலவுக்காக வைத்திருக்கும்



பணத்தை எடுத்துக்கொண்டு ஓட்டம் பெருநடையாய் வரு கின்றனர்.

அருகே வருகிறது ஊர்வலம்! பார்த்தால், யார் தெரி கிறார்கள்?

கன்னக்கோல் சின்னப்பன், காதறுத்த மல்லப்பன், குத்திக்குடலெடுத்த குமரப்பன், இப்படிப்பட்ட பேர் வழிகள்!

உண்டியில் பணம்போட மனம் வருமா! இந்தப் பாவி களா! இந்த வேடத்திலா! மஞ்சள் ஆடையைக் கட்டிக் கொண்டால், மயங்கிவிடுவோம் என்று எண்ணிக் கொண் டார்களா? ஏமாந்த நேரத்தில் நடத்தியது போதாது என்று இப்போது பட்டப் பகலிலேயே வேடமிட்டுப் பொருள் பறிக்க வந்தனரோ, பாவிகள் என்று மனம் குமுறிக் கிடப்பர்.

'அவர்கள்' புடைசூழக் காங்கிரசின் பெருந்தலைவர் கள் வருகிறபோது, மக்கள் அடையும் கசப்புணர்ச்சி இது போன்றதே.

> "பீகார் சட்டசபையில் கொண்டுவரப்பட்ட நிலச் சீர்திருத்தச் சட்டங்களை எல்லாம் விடாப்பிடியாக எதிர்த்துக்கொண்டு வந்திருக்கிறார் இந்த மகாராஜா. ஏதாவது தந்திரம் செய்து தன்உடைமையை, முதலாளித்தனத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக் கிறார். பொய்யான ஏற்பாடுகள், போலியான தர்ம ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி வைத்துக் கொண்டு, சட்டத்தையும் சர்க்காரையும் மோசம் செய்திருக் கிறார். மிகத் துணிந்த பேர்வழி! பேர்போன குற்றவாளி!!"

தம்பி! பீகார் மாநில முதலமைச்சர் பிநோனாந்தா ஜா என்பாருக்கு 1961-ல், பண்டித ஜவஹர்லால், ராம்கர் ராஜாவைப்பற்றி குறிப்பு அனுப்பினார்.

அந்த ராம்கர் ராஜா தமது 'கோஷ்டியுடன்' இப்போது காங்கிரஸ் கட்சியில் சேர்ந்துள்ளார்.

ஜனநாயக சோஷியலிசமே என் பேச்சு—மூச்சு—என்று கூறிடும் காமராஜர், பண்டித ஜவஹரால் மிகக் கடுமை யாகக் கண்டிக்கப்பட்ட அந்த ராஜாவைக் காங்கிரசில் சேர்த்துக் கொண்டார்.

பீகாரில், காங்கிரஸ் வெற்றி என்றால், அது இனி சட்டத்தையும் சர்க்காரையும் மோசம் செய்த பேர்வழி என்று பண்டித ஜவஹர்லால் நேருவால் கண்டிக்கப்பட்ட ராம்கர் ராஜாவின் வெற்றி என்றுதானே பொருள்படும்!

அதுதான் தம்பி! காமராஜர் காட்டும் ஜனநாயக சோஷியலிசம்!!

ராம்கர் ராஜாவுடன் சேர்ந்து ஜனநாயக சோஷிய லிசம் உண்டாக்க, நம்மையும் அழைக்கிறார்! அது அல்லவா வேடிக்கை!!

ஆனால் மக்கள் தெளிவு பெற்றுக்கொண்டுவிட்டுள்ள னர். கொடி எது, பச்சைப் பாம்பு எது என்பது புரிந்து விட்டது! இனி மக்களை மயக்கிட, ஏய்த்திட முடியாது என்பது விளக்கமாகிக்கொண்டு வருகிறது. மக்களின் இந்தத் தெளிவுக்குக் காரணம், அச்சமற்று, பணியாற்றிய என் தம்பிகளன்றோ என்று எண்ணும்போதே, தம்பி உடையான் படைக்கு அஞ்சான் எனும் கவிதை செவியினில் ஒலிக்கிறது, இதயத்தில் இனிமையைச் சேர்க்கிறது.

அண்ணன்,

19—6—'66



காஞ்சிக் கடிதம்: 68

# கண்ணீர்!

- ★ சுகர்ணோ, பூட்டோ, நிக்ருமா கண்களில் கசிவு—ஏன்?
- ★ கனல் கக்குபவன் ஓர் நாள் கண்ணீர் சிந்துவன்!
- ★ ஆணவம் மிகுந்தது! அழிவு நேர்ந்தது!
- ★ செருக்குடன் சிரித்தவர்கள் கண்ணீர் சிந்துகிறார் கள்!
- ★ ஆணவக்காரரின் அழுகைகள் புகட்டும் பாடம்!

தம்பி!

புன்னகை, பூங்காற்று, இன்னிசை, பொற்கொடி, மழலை, விழிமொழி என்பவை குறித்து எழுதிடின், படித் திட இனிமையாகத்தான் இருக்கும்; எழுதிடவும் எளிது தான், ஆனால், அவை குறித்து நான் இன்று எழுதப் போவது இல்லை.

சோலையில் உலவுதல், அருவியில் நீராடல், கனிரசம் பருகிடல், நடனம் கண்டு மகிழ்ந்திடல், மண அறை அமர்ந் திடல், மங்கை நல்லாளின் 'முதல் இரவு' பெற்றிடல், பெற் றெடுத்த செல்வத்தின் உச்சி மோந்து களிபேருவகை அடைந்திடல், தான் பெற்ற முதல் ஊதியத்தைத் தாயிடம் கொடுத்து அவர்கள் தந்திடும் பெருமிதம் கலந்த கனிவினை நுகர்தல் என்பவை பற்றியும் எழுதிடலாம், தித்திப்பு

நிரம்பக் கிடைக்கும். ஆனால், அவை குறித்து எழுதிட இன்று மனம் இல்லை.

செய்தொழிலிலே பெற்றிடும் நேர்த்தியான வெற்றி, களத்திலே மாற்றான் மண்டியிடக் காணும் போது ஏற்படும் பெருமித உணர்ச்சி, உலா, முடிசூட்டு விழா போன்றவை குறித்து எழுதிடலாம்; மகிழ்ச்சியும் எழுச்சியும் நிரம்பிடத்தக்க விதமாக; ஆனால், அவை பற்றியும் இன்று எழுதிடப் போவதில்லை.

நான் இன்று எழுதுவது கண்ணீர்பற்றி! ஆமாம் தம்பி! ஆமாம். கண்ணீரைப் பற்றியேதான்!

நமக்கும் கண்ணீருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டே, அறிவாயே; பெரியார் நமக்கு இட்ட பெயரே, கண்ணீர்த் துளிகள் என்பதல்லவா! பெரியாரின் பொருந்தாத் திருமணம் பற்றி மனம் குமுறிய பல்லோர் தெரிவித்திருந்த கருத்துக்களை முதலில் கண்டனக் கணைகள் என்ற தலைப்பிட்டு நமது இதழில் வெளியிட்டனர்; எனக்கு அந்தத் தலைப்பு பிடிக்கவில்லை; ஆகவே, அந்தக் கருத்துக்களைக் கண்ணீர்த் துளிகள் என்ற தலைப்பிட்டு வெளியிடச் செய்தேன். அதனையே நமக்குப் 'பெயர்' ஆக்கிவிட்டார், பெரியார்: அவர் எனக்காகவென்று வெகு அருமையாகப் பாடுபட்டுத் தேடிக் கொடுத்த செல்வம் என்றே நான் அந்த 'கண்ணீர்த் துளிகள்' என்ற பெயரை வரவேற்று மகிழ்ந்தேன்,

அது ஆண்டு பலவற்றுக்கு முன்பு நடைபெற்ற நிகழ்ச்சி; இப்போது எதற்காக அண்ணா! அந்த நினைவு என்று கேட்கிறாயா? தம்பி! காரணமற்றும் தொடர்பற்றும், பொருத்தமற்றும் பொருளற்றும் எனக்குப் பழைய நினைவுகள் ததும்பிடுவதில்லை. இப்போதும் அப்படித்தான். ஒரு பெரிய தலைவர், நாட்டின் அதிபர், புரட்சி வீரர், புவியோர் மெச்சிடத்தக்க பேறு பெற்றவர், கண்ணீர் வடித்தார் என்று இதழ்களில் கண்டேன்; உடனே எனக்குக் கண்ணீர் பற்றிய பல்வேறு நினைவுகள் மனத்திலே ததும்பிடலாயின!

தம்பி! கண்ணீரில் பலவகை உண்டு! நிகழ்ச்சிகளின் தன்மைக்கு ஏற்பக் கண்ணீரின் வகை அமைகிறது.

வெற்றிக் களிப்பு, தியாக உணர்ச்சி, மகிழ்ச்சிப் பெருக்கு, வேதனை, கோபம் எனும் பல்வேறு உணர்ச்சி



களின் போதும் கண்ணீர் வெளிப்படுகிறது. வகை பல என்றேன். முறைகூடப் பலப்பல, அதனால்தான் கசிந்தான், பொழிந்தான், கதறினான், வடித்தான் என்று பல விதமான பதங்களைக் கண்ணீருடன் இணைக்கிறோம்.

நான் குறிப்பிட்டேனே, நாட்டுத் தலைவரொருவரின் கண்ணீர் பற்றி. அவர் கண்ணீர் வடிக்கவில்லை; கண்களிலே நீர் கசிந்தது- மற்றவர்கள் கதறினால், கண்ணீர் பொழிந்தால், வடித்தால் காண உருக்கம் எழும். ஆனால், அவர் கண் கசிந்ததைக் காணவேண்டி ஏற்பட்டுவிட்ட போது ஒரு புன்னகை பிறந்திடும் நிலை, பலருக்கு; மிகப் பலருக்கு.

சிரித்திடப் பிறந்தவர் அவர்; அவர் கண் கசிகிறது.

பலருடைய கண்களிலே நீர் கொப்பளித்துக் குபுகுபுவெனக் கிளம்பிடும் நிலைமைகளை மூட்டினவர் அவர்; அவர் கண்களிலே நீர் கசிகிறது.

அவருடைய கண்ணீர் தனித்தன்மை வாய்ந்தது.

அந்தக் கண்கள் களைப்பு, திகைப்பு, ஏக்கம், கோபம் ஆகியவற்றினை வெளிப்படுத்தினதுண்டு. இப்போது அந்தக் கண்களிலே கசிவு!

கண்ணீர் சிந்திடு முன்பு அவருடைய கண்கள் அகம்பாவத்தைக் கக்கின! அடுத்துக் கண்ணீர் சிந்திட வேண்டி நேரிடும் என்று அவர் துளியும் எதிர்பார்த்திருந்திருக்க முடியாது. அவ்வளவு உன்னதமான இடம் அவருடையது! ஒரு நாடே அவருடைய காலடியில்! உலகமே அவர் சுட்டு விரல் அசைவு கண்டு! அதற்கு ஏற்ப நடந்துகொள்ள வேண்டும் என்ற நினைப்பு தடித்துப் போயிருந்த நிலை! அவருடைய கோபம் போதும் எவரையும் சுட்டெரிக்க! அவருடைய புன்னகை போதும் வாழ்க்கையைப்பூங்காவாக்கிட! அவர் சொல்லே சட்டம்! அவர் கண் கசிந்திடும் நிலை பெற்றார் என்றால், அது தனித்தன்மை வாய்ந்ததல்லவா?

பேரிடி, பேரிழப்பு, மூட்டப்பட்ட வேதனை ஆகியவைகளால் கிளம்பிடும் கண்ணீர் வேறு! இவர் சிந்திய கண்ணீர் வேறு. செய்த தவறுகளை எண்ணி, தன்னால் துன்புறுத்தப்பட்டவர்களை எண்ணி, சிந்திடும் கண்ணீர் வேறு, இவர் கண்களிலே கசிந்திட்ட கண்ணீர் வேறு. எடுத்த காரியத்தை முடித்திட முடியாது போகிறதே, போட்ட திட்டப்படி செயல், வடிவம் கொள்ளவில்லை, எதிர்

பார்த்துக் கணக்கிட்ட பலன் கைக்குக் சிட்டவில்லையே என்பதாலே கண்ணீர் சிந்திடும் நிலைமைக்கும், இனி நமது விருப்பத்தின்படி காரியம் நடவாது போலிருக்கிறதே, இனி நமது கட்டுக்கு மற்றவர் அடங்கிட மாட்டார்கள் போலிருக்கிறதே, இனி நம்முடைய நிலை, தாழ்வாக்கிடப்படும் போல இருக்கிறதே, எப்படி நாம் அதனைத் தாங்கிக் கொள்வது, தாள் பணிந்து கிடந்ததுகளெல்லாம் தட்டிக் கேட்கத் துணிந்து விட்டனவே; அதுகளை மட்டந் தட்டக் தக்க வலிவு நமக்குக் குறைந்துபோய் விட்டிருப்பது, அவர்களுக்கும் புரிந்து விட்டிருக்கிறதே, இனி என்ன செய்வது என்று எண்ணியதால் கண்ணீர் கசியும் நிலை. அது தனி இயல்புடையது. அதனைக் காண்போர், அந்தக் கண்ணீரைத் துடைத்திடவோ, வந்துற்ற இன்னல் யாவும் நீங்கிப் போகும் என்று ஆறுதல் கூறிடவோ மாட்டார்கள்.

அப்படிப்பட்ட விதமான கண்ணீர் வடித்தார், இந்தோனேஷிய நாட்டு அதிபர் டாக்டர் சுகர்ணோ சின்னாட்களுக்கு முன்பு என்றோர் செய்தி கண்டேன். அதனால் தான் தம்பி! கண்ணீர் பற்றிய நினைவு எழுந்தது.

ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கொண்டதோர் அவை; அங்குப் பேசுகிறார் டாக்டர் சுகர்ணோ, கண்ணீர் சிந்திடும் நிலையினில்.

அந்த அவையின் முன்பு அவர் பலமுறை இடி முழக்கமிட்டிருக்கிறார்; எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசி இருக்கிறார்; புத்திமதி கூறியிருக்கிறார்; சூளுரைத்திருக்கிறார்; கண்டனக் கணைகளைத் தொடுத்திருக்கிறார்; விளக்கம் அளித்திருக்கிறார்; பேருரை நிகழ்த்தியிருக்கிறார்; செயல்முறை பற்றிக் கூறியிருக்கிறார்; வெற்றிக் களிப்புடன் பேசியதுண்டு; வீராவேசம் காட்டியதுண்டு; அறைகூவலை எழுப்பியதுண்டு; கோபக் கனலை வீசியதுண்டு, ஒருநாளும் கண்கலக்கத்துடன் பேசினதில்லை. அந்த நிலை பிறந்திடும் என்று அவர் கனவிலும் எண்ணினதில்லை.

ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட அழைப்பு விடுத்தவர், எதனையும் இழந்திடலாம் உரிமையைப் பெற்றிட என்ற உறுதியை நாட்டவர் அனைவருக்கும் ஊட்டியவர், டாக்டர் சுகர்ணோ; மறுப்பார் இல்லை; வரலாற்றுச் சுவடியிலே பதிக்கப்பட்டுவிட்ட நிகழ்ச்சி அந்த வீரக் காதை.



விடுதலை கிடைத்துவிட்டது என்ற வெற்றிச் செய்தியை நாட்டவருக்கு அறிவித்து அனைவரையும் அக மகிழ்ச்சி கொள்ளச் செய்தவர் டாக்டர் சுகர்ணோ,

அன்னியரின் பிடியினை நீக்கிக்கொண்டோம்: இனி இயற்கை அன்னை நமக்கு அளித்துள்ள செல்வத்தைத் திரட்டி நாட்டினைச் சீர்படுத்திடுவோம்; வெளி நாட்டார் விரும்பிப் பெற்றிடத்தக்க பொருள் நிரம்பிய களஞ்சியம் நம் நாடு; பொன்னும் மணியும் குவித்திடலாம், புவியோர் மெச்சிட வாழ்ந்திடலாம், புகழ்க் கொடியைப் பறந்திடச் செய்திடலாம் என்றெல்லாம் கூறினவர்.

டாக்டர் சுகர்ணோ பேசினால் ஆயிரம் ஆயிரம் மக்கள் அப்படியே சொக்கிப் போவார்களாம். சொற்சிலம்பம் கண்டு வியந்திடுவார்களாம். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் தம்பி! அவரை அந்நாட்டு மக்கள் கண்கண்ட கடவுளாகக் கொண்டனர். அவரினும் அறிவாற்றல்மிக்கவர் எவரும் இல்லை என்று நம்பிக் கிடந்தனர்.

நாட்டுப்பற்று மிக்கவர் நமது தலைவர், தன்மானம் காத்திடுபவர் நமது தலைவர், நமக்கு நல்வாழ்வு அளித்திட வல்லவர் நம் தலைவர், நமக்கு எதுதேவை எது நல்லது என்பதனை முற்றிலும் உணர்ந்தவர் நமது தலைவர் என்று கொண்டாடினர்.

பிரச்சினை எதுவாயினும், சிக்கல் எதுவென்றாலும், அவர் அறிவார் என்ன செய்ய வேண்டும் என்பதனை என்று அந்நாட்டு மக்கள் திடமாக நம்பினர்.

கப்பலோட்டியின் திறமையிலே மிகுந்த நம்பிக்கை கொண்டவர், சீறிடும் அலைகளைக் கண்டோ, பாய்ந்து வந்திடும் பெருமீன்களைக் கண்டோ கவலை கொள்வார்களா!

கட்டளையிடுங்கள் காவலரே! வழிகாட்டுங்கள் தலைவரே! அழைத்துச் செல்லுங்கள் அதிபரே—என்று துதி பாடினர் அந்நாட்டு மக்கள்.

அவரிடம் அளவிட முடியாத மதிப்பும் நம்பிக்கையும், பற்றும் பாசமும் கொண்டதுடன், அவருடைய போக்கு நோக்கு, சொல், செயல் எனும் எதிலேயும் எந்தத் தலைவருக்கேனும் நிபுணருக்கேனும் ஐயப்பாடு ஏற்பட்டு, விளக்

கம் கேட்டிடின், வாதம் செய்திடின், மறுத்தும் பேசிடின், என்ன துடுக்குத்தனம்! நமது தலைவரிடமா குறைகாணு கிறான்! அத்தனன பெரிய அறிவாளியோ இவன்!—என்று பேசிட, சீறிப் பாய்ந்திடவும் அந்த நாட்டு மக்கள் முனைந் தனர்.

எதனையும் சிந்தித்துப் பார்த்திடும் உரிமையைத் தாமாகவே விட்டுவிட்டனர், அதற்கான தகுதியும் திறமை யும் தமக்குக் கிடையாது என்ற எண்ணத்தில்.

நம்மிடம் கொண்டுள்ள நம்பிக்கையின் காரணமாகத் தான், மக்கள் எல்லாப் பிரச்சினைகளையும் நம்மிடமே ஒப்படைத்துவிட்டனர். அவ்வளவு நல்ல இயல்பு கொண் டவர் நமது மக்கள் என்று துவக்கத்தில் 'அதிபர்' எண்ணிக் கொண்டார். பிறகோ!

பாவம் ஏதுமறியாதவர்கள் இந்த மக்கள் என்று எண் ணிடலானார். பிறகு,

> எதனையும் நானல்லவா சொல்லவேண்டி இருக் கிறது, செய்யவேண்டி இருக்கிறது,

என்று பேசிடலானார். அதற்குப் பிறகு,

> ஏ! மூடமே! இப்படிச் செய்! இதைச் செய்!

என்று கட்டளையிடலானார். பிறகு,

> எதையாவது ஒழுங்காக. திறமையாகச் செய்திட தெரிகிறதா இதுகளுக்கு!

என்று கேலி பேசிடலானார்.

> இப்படிச் செய்யாவிட்டால், இன்னின்ன தண் டனை விதிக்கப்படும்,

என்ற மிரட்டல் பேச்சும், அதைத் தொடர்ந்து கடுமை யான நடவடிக்கைகளும் மேற்கொள்ளலானார் அதிபர் சுகர்ணோ.

> புதிய புதிய சட்டங்களைப் பிறப்பிப்பார்!
>
> மேலும் மேலும் வரிகளை விதிப்பார்!
>
> எண்ணிட, எழுதிட, கூடிட, பேசிட, தடைகள் போட்டிடுவார்!



> இவன் உன் பகைவன், இவனை ஒழித்துக்கட்டு என்பார்!
>
> உரிமை கேட்காதே, உடைமையும் உயிரும் கூட உனக்கே உரியது என்று எண்ணிக் கொள்ளாதே! எல்லாம் நாட்டுக்காக! நாட்டுக்காக நான்! என் சொற் படி நடந்திட நீங்கள்! நான் இல்லையேல், இந்த நாடு இல்லை. இந்த நாடு இல்லையேல், நீங்கள் இல்லை

என்று உரத்த குரலில் பேசி, உருட்டு விழி காட்டலானார். நாட்டுமக்கள் சிறிதளவு கலங்கினர். ஆனால், அவரைப் பின்பற்ற, அவர் சொற்படி நடந்திடத் தவறவில்லை.

> நமக்குப் புரியவில்லை, ஆனால், நமது தலைவர் எதனையும் நமது நன்மைக்காக; நாட்டு நலனுக்காகத் தான் செய்திடுவார்

என்று கூறி அமைதி பெற்றனர்.

தத்துவ விளக்கத்தில் அக்கறை கொண்டோர் மட்டும் அதிபர் மேற்கொள்ளும் போக்குத் தவறானது, அதன் பயனாக நாடு சீர்கேடடையும், மக்கள் வேதனையில் தள்ளப்படுவர் என்று எச்சரித்துப் பார்த்தனர்.

எச்சரித்தவர்கள் தூக்கி எறியப்பட்டனர்,

மக்கள் அதிபருக்குத் துணை நின்றனர்.

மெள்ள மெள்ளக் கட்டங்கள் புதிது புதிதாக வளர்ந்தன. இறுதியில் அதிபர்-கை கட்டி வாய் பொத்தி நின்றிடும் ஏவலர் - அடிமைத்தனத்தைத் தாமாகவே மூட்டிவிட்டுக் கொண்ட மக்கள்...என்ற நிலை பிறந்தது.

உரிமையின் அருமையும் சிந்தனைச் செல்வத்தின் பெருமையும் கிடக்கட்டும்; அவர் நடாத்திடும் ஆட்சியில், நாம் நல்வாழ்வு பெற்றிருக்கிறோம்; அது போதும், ஏடு தூக்கிடுவோர், எதற்கும் வாதாடிடும் இயல்பினர். எதனை யாவது கதைத்துக் கொண்டு கிடக்கட்டும் நாம் புது வாழ்வு, முழு வாழ்வு பெற்றிருக்கிறோம், நமக்கு அது போதும் என்று இந்தோனேஷிய மக்கள் எண்ணி நிம்மதி பெற்றிட முடியவில்லை.

நாடு சீர்கேடடைந்தது.

வளம் பாழாக்கப்பட்டது.

தொழில்கள் நசித்திடலாயின.

வீண் பகை வளர்ந்தது.

பொருளாதாரச் சீர்குலைவு ஏற்பட்டது!

நாணயத்தின் மதிப்பு தேய்ந்தது.

பண்டங்களின் விலைகள் விஷம்போல் ஏறின.

வாழ முடியாதாரின் தொகை பெருகிற்று;

பெருமுச்சுக் கிளம்பிப் பெரும் புயலாகி விட்டது!

நம்பிக்கை முறிந்தது. கண்கள் சிவந்தன!

வழி திறந்தது! கேள்விகள் கிளம்பின!

எதிர்ப்பு வலுத்தது, எங்கும் பரவிற்று!

அதிபரின் அக்ரமப் போக்கு கண்டிக்கப் பட்டது!

மக்கள் பொங்கி எழுந்தனர், புது வேகத்துடன்!

புரட்சி வெடித்துக் கிளம்பிற்று.

போதும் உமது அலங்கோல ஆட்சி என்றனர் மக்கள்!

இனிப் பொறுத்திட முடியாது, பட்டதெல்லாம் போதும் என்று குமுறினர் மக்கள்.

அடக்கு முறையை அவிழ்த்து விட்டார் அதிபர்! அதன் பசி தீருமளவு 'பலி' கிடைத்தது; ஆனால், புரட்சி மங்கிட மறுத்தது.

உடனிருந்தோர்களை உருக்குலையச் செய்திட்டார் அதிபர்! அவர்க்குப் பரிவு காட்டிட முனைந்தனர் மக்கள்!

சூறைக்காற்று கிளம்பிற்று; தோணி ஓட்டம் தடுமாறிடலாயிற்று.

துரத்தப்பட்டுப் போய்விடுவோமோ என்ற கிலி பிடித்துக்கொண்டது அதிபரை! ஆண்டது போதும்! மக்கள்மாண்டது போதும்; வளம் வறண்டது போதும் இனி நாட்டு வாழ்வுக்கான வழிகண்டிடத் துணிவு கொண்டோம் என்றனர் மக்கள்!



என்னையா எதிர்க்கத் துணிந்தீர்கள்!என் வீரதீரம் அறியீரா! என்று ஆர்ப்பரித்தார் அதிபர்!

மக்களின் மகத்தான சக்தியின் முன்பு எந்த மன்னனும் எம்மாத்திரம் என்று கேட்டனர் மக்கள்.

இளைஞர் அணி திரண்டது! மாணவர் படை முனைந்துசெயலில் ஈடுபடலாயிற்று!

அதிபர் சுகர்ணோ தமதுபிடிதளர்ந்து விட்டதனை உணர்ந்தார்; கொதித்தார்;மிரட்டினார்; கடைசியில்? அழுதார்! அவையைக் கூட்டி வைத்துக் கண்ணீர் கசிந்திடும் நிலையினராகி, நாட்டுவிடுதலைக்காக நான் இன்னலும் பட்டஇழப்பும் கொஞ்சமா?

என்னை இதயத்தில் வைத்திருந்தீரே! என்னையா இப்போது எதிர்க்கின்றீர் என்று கேட்டார்!

பேச்சுடன் நிற்கவில்லை! கண் கசிந்தது!! மக்களின் மனம் இளகவில்லை.ஏன்? டாக்டர் சுகர்ணோவின் போக்கு அந்த நெஞ்சங்களைக் கல்லாக்கிவிட்டது.

துவக்கத்தில், மக்கள் துயரம் கொட்டிடுகிறதே, அதிபரே! என்று முறையிட்ட நேரத்தில், அதிபர்,

ஒரு தலை அசைவு, ஒரு இலேசான புன்னகை, ஒரு நல்ல வார்த்தை, துளியேனும் மதிப்பு

காட்டியிருந்திருந்தால், மக்கள் தமது இன்னலைக்கூட மறந்துவிட்டிருப்பர். அதிபர் சுகர்ணோவோ, கனலைக் கக்கினார், அது மக்களின் நெஞ்சிலே ததும்பிக்கொண்டிருந்த பற்று பாசத்தை அடியோடு பொசுக்கிக் கருக்கிப் போட்டு விட்டது! மக்களின் மனம் வெதும்பிப் போய்விட்டது; அவர்கள் ஒரு முடிவுச்கு வந்துவிட்டனர்; இல்லை, இல்லை துரத்தப்பட்டு விட்டனர்.

அதற்குப் பிறகு அவர்களின் மனம் இளகுமா?

பரிவு காட்டும் முறையில் அவர் பேசினாலும்,அதனைப் பாசாங்கு என்றே மக்கள் கொண்டிடலாயினர்.

நாட்டுக்காக நாளும் உழைத்தேனே என்று அவர் கூறும்போது, அறிவோமே! நாட்டைக் காடாக்கியதை!மக்களை மாக்களாக்கியதை! செல்வத்தை நாச

மாக்கியதை! என்று மக்கள் முணுமுணுத்திடலாயினர்- அது மெள்ள மெள்ள வேகமடைந்து அதிபரின் நிலையைக் குலைத்திடும் எதிர்ப்பாகிவிட்டது! சீறிடும் மக்களை அடக்கிடும் திறனற்றுப்போன நிலையில்- அதிபர் சுகர்ணோ 'அழுது கொண்டே' பேசினாராம்!

ஆனால் அவருடைய கண்ணீர் காலங்கடந்து வெளிப்பட்டது; ஆகவே, பலன் கிடைக்கவில்லை—அது மட்டுமல்ல அணவத்துடன் அரசு நடாத்தியதால் அவதி பல கண்டோர் கண்ணீர் வடித்தபோது, காவலன் கேலிப் புன்னகையோ அலட்சியமோ காட்டினான்; இரக்கம் காட்டினானில்லை, கண்ணீருக்கு மதிப்பளித்திட்டானில்லை. அத்தகைய போக்கினன், பிடி இழந்து நடை தளர்ந்து தடுமாறித் தத்தளித்துக் கண்ணீர் உகுத்திடின், எவர் இரக்கம் காட்டுவர்!

தம்பி! டாக்டர் சுகர்ணோவின் கண்ணீர், இரக்க உணர்ச்சியைத் தூண்டிடவில்லை எனினும், ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டாரனைவருக்கும், பாடம் புகட்டத்தக்கது!

ஆர்ப்பரித்துக் கிடப்பவன் ஓர் நாள் அழுது தீர வேண்டும்.

மக்களைக் கசக்கிப் பிழிபவன் ஓர்நாள் கண்கலங்கி நிற்கவேண்டும்.

கனல் கக்கிக் கிடப்பவன் ஓர்நாள் கண்ணீர் சிந்திட வேண்டி வந்திடும்.

இந்தப் பாடங்களைத் தருவதாக உளது டாக்டர்சுகர்ணோ சிந்திய கண்ணீர். வீரத்தில் தீரத்தில் அறிவாற்றலில், தியாகத்தில் டாக்டர்சுகர்ணோ முதல் வரிசையில் வைத்துப் போற்றிடத்தக்க நிலையினர்; ஐயமில்லை. ஆனால், மக்களாட்சியின் மாண்பினை மாய்த்து, மமதை கொண்டு, கொடுமை புரிந்திடின் 'அன்றொரு நாள்' ஆற்றிய அரும்பணி எழுப்பிடும் பற்றும் பாசமும், மக்களைக் கடைசிவரையில் செயலற்றவர்களாக்கி விடாது!

நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்தார்; உண்மை; அதனால் நம்மை நசுக்கி, உரிமைகளை உருக்குலையச் செய்து, நாட்டைப் பாழ் படுத்துவதா!



விடுதலை வாங்கித் தந்தார்! ஆம்! ஆனால், எதற்கு? நாம் ஆமைகளாய், ஊமைகளாய்க் கிடந்திடவா? கொடுங்கோலாட்சி நடத்திடவா? நியாயமா?

புலியிடமிருந்து மீட்டிட்டார், உண்மை; நன்றி கூறிடக்கடமைப்பட்டுள்ளாம்; ஆனால், எதற்காகப் புலியிடமிருந்து நம்மை மீட்டிடுவது? பெருநெருப்பிலே தள்ளிடவா? பெரு நெருப்பிலே நின்றிடும்போது நம்மைப் புலியிடமிருந்து காப்பாற்றிய புனிதன் இவன், ஆகவே, இப்போது நம்மைத் தழலிலே தள்ளிடினும் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும் என்று எவர் கூறுவர்! ஏமாளியும் கூறிடானே!

என்று பலமுறை, ஆற்றோரத்தில் அங்காடியில், சாலையில் சோலையில், விடுதிகளில் குடில்களில் பேசிப் பேசிக் குமுறினோர் பல்லோர்: அவர்களின் கண்ணீர் முதலிலே சிந்தப்பட்டது; இறுதியில் ஆணவ அரசு நடாத்தியோன் கண்ணீர் வடிக்கிறான்! இட்டார்க்கு இட்ட பலன்! விதைத்தது தினை அல்ல; கிடைப்பது தினையாக இருக்க முடியாதல்லவா!

இந்தோனேஷிய அதிபர் கண்கசியும் நிலையினில் பேசினார் என்ற செய்தியைப் படித்ததும் தம்பி! இந்த நினைவுகள் வந்தன! பிறிதோர் செய்தி கண்டேன், சிரிப்பே வந்தது.

பகை கக்கி, போர் மூட்டிவிட்டு வரம்பு மீறிய வகையில் 'நாய்' என்றே ஏசிப்பேசி, இறுமாந்து கிடந்த பாகிஸ்தானத்து புட்டோ பதவி இழந்து, விரட்டப்பட்டு வீடு திரும்புங் காலையில், அவருடைய போக்கிரித்தனத்தை வீரம் என்று எண்ணிடும் போக்கினர், அவருக்கு வரவேற்பு நடத்தி, மலர் தூவிப் பாராட்டினராம், லாகூர் ரயிலடியில்; அப்போது புட்டோ விக்கிவிக்கி அழுதாராம்!

இறுமாப்பு இவ்வளவு விரைவிலே நொறுக்கப்பட்டுப் போகும் என்றோ, ஆணவம் கக்கிய கண்கள் இவ்வளவு குறுகிய காலத்தில் கண்ணீர் வடித்திடும் என்றோ, எவரும் எதிர்பார்த்திருக்க முடியாது. அயூப்கானையே ஆட்டிப் படைப்பவர் இந்த புட்டோ என்று புகழ்பாடினர்! விக்கிவிக்கி அழுதாராம் வீராவேசமாடிய புட்டோ! என்ன

எண்ணிக்கொண்டு அழுதாரோ, என்ன நோக்கத்துடன் அழுதாரோ!

பாவம்! இப்படி அழுகிறாரே! இவருக்குப் பாகிஸ் தான் அதிபர் அயூப்கான் இத்தனை கொடுமை இழைத்துவிட்டாரே!

என்று பார்ப்பவர் எண்ணிக்கொண்டு, தன் பக்கம் திரண்டு நின்று, அயூப்கானை எதிர்த்திடத் தூண்டுவார் என்ற நினைப்பாக இருக்கலாம். அல்லது பாகிஸ்தானத்து அதிபரின் பக்கம் அமர்ந்து இருந்த துணிவிலே என்னென் னவோ பேசித் திரிந்தோம்: இனி? என்று எண்ணியபோது கண்ணீர் புரண்டோடி வந்ததோ? தெரியவில்லை.

ஆனால், ஆணவம் நிலைக்கவில்லை! அழ வேண் டிய நிலை பிறந்தது.

இவராகிலும் பரவாயிலலை, விக்கிவிக்கி அழுதார், வேறு இன்னல் எதுவும் தாக்கிடவில்லை; இன்னமும். 'நானே எல்லாம்' என்று இறுமாந்துகிடந்த கனா நாட்டு அதிபர் நிக்ருமா, தம்பி! எந்த நிலையில் உள்ளார், தெரியுமா? ஆட்சி அவரிடம் இருந்தபோது நாடுகள் பற்பல போட்டி யிட்டுக்கொண்டு அவருக்கு வரவேற்பு கொடுத்திட, விழா நடாத்திடத் துடித்தன.

இப்போது அறுபது நாடுகளின் போலீஸ் இலாகா, அவரைப் பிடித்துக் கைது செய்து, கூண்டிலே நிறுத் திட, துடித்தபடி உள்ளன.

அழத்தான் செய்வார், பாவம்! அன்று இருந்ததை எண்ணிக் கொண்டு!! ஆனால், அவர் சிந்திடும் கண்ணீரைக் கண்டு இரக்கம் காட்டிட கனா மக்கள் ஒப்புவரா!

அழுகிறாரா? அழட்டும்! அழட்டும்! எங்களை ஆண்டு பல அழவைத்தவர் அழட்டுமே சிறிது!! நாங்கள் அழுது அழுது ஓய்ந்து போனோம்! கண்கள் வறண்டு போய்விட்டன! இப்போது, எம்மை அழ வைத்தவர் அழட்டுமே! கண்ணீர் வடியட்டுமே!!

என்றுதானே பேசுவர் கனா நாட்டில் காட்டாட்சி நடத்தி யவர் கண்ணீர் சிந்திடும்போது!

உயர்ந்த இடம் அமர்ந்துவிட்டோம், இனி நம்மை எவரும் நெருங்க முடியாது!



மக்களைத் துதிபாடகர்களாக்கி விட்டோம், இனி நம்மை அசைக்கவும் எவராலும் முடியாது.

என்று இறுமாந்து கிடந்ததால் கனாநாட்டு அதிபர், ஜனநாயக அமைப்பையே நொறுக்கித் தள்ளினார். இப் போது? அவர் கிடைக்கவில்லை! ஆகவே, அவருடைய சிலையை உடைத்துத் தூள் தூளாக்கினர், கொதித்தெழுந்த மக்கள்!

ஏ! அப்பா! சாமான்யமானவர்கள் அல்ல இந்த மக்கள்!

மண் பொம்மைகள்

மரக்கட்டைகள்

தலையாட்டிகள்

தாள்பணிவோர்

அச்சத்தால் பீடிக்கப்பட்டோர்!

ஐயோ பாவங்கள்!

கையில் ஊமையர்!

என்று ஆணவ அரசு நடாத்துவோர்களை நம்பவைத்து விடுகிறார்கள், நெடுங்காலம்! ஆனால், ஓர் நாள், எங்கி ருந்தோ, எப்படியோ அவர்களுக்கு எதையும் செய்திட லாம் என்ற துணிவு பிறக்கிறது; புயல் எழுகிறது! அப் போது,

அரண்மனைகள் இடிக்கப்படுகின்றன!

ஆணவ அரசுகள் கவிழ்க்கப்படுகின்றன!

மணிமுடிகளைப் பந்தாடுகின்றனர்!

மமதையாளர்களை விரண்டோடச் செய் கின்றனர்

சிலைகள் தூள் தூளாகின்றன!

அந்த நாளை எண்ணி அரசு இழந்தவர், அழு கின்றனர்!

தெளிவாகத் தெரிகிறது, மக்கள்மீது மமதையாளர் இறுதிவரையில் ஆதிக்கம் செலுத்த முடியாது என்பது.

என்றாலும், மக்களை அழவைத்து மமதையாளர் சில காலமோ நெடுங்காலமோ சிரித்துக் கிடக்கின்றனர். பிறகோர் நாள்,

செருக்குடன் சிரித்தவன் கண்ணீர் சிந்துகிறான்.

அந்தக் கண்ணீரைக் கண்டு, இரக்கம் காட்டிட மக்கள் மறுக்கிறார்கள்!!

உரிமை பறிக்கப்படும்போது உள்ளம் குமுறி அழுகிறான் குடிமகன், உடைமை பறிக்கப்படும்போது கதறுகிறான் ஏழை! கொடுமை தாக்கும்போது கூவி அழுகிறான் சாமான்யன்! கொளுத்தப்பட்ட குடிசைகள், இடித்தெறியப்பட்ட நம்பிக்கைகள், ஏழையைக் கதறிடச் செய்கின்றன. மகனைச் சவுக்காலடித்ததைக் கண்ட தாய், சுட்டுக் கொல்லப்படுவதைக் கண்ட அன்னை, தலையில் அடித்துக் கொண்டு அழுகிறாள்! கற்பழிக்கப்பட்டாள் கன்னி என்பதனை அறிந்து ஆண் மகன் இரத்தக் கண்ணீர் வடிக்கிறான்; கொடியவன் கிடைத்திடின் வாள் வேண்டாம், இக்கரம் போதும் அவனைக் கொன்றிட என்று அழுதபடி கூறுகிறான்.

அப்போதெல்லாம், ஏழை எட்டமுடியாத உயரம் இருக்கிறோம், நம்மை எவன் என்ன செய்ய முடியும் என்ற இறுமாப்புடன், சிரிக்கிறான், செருக்குமிக்கோன்! பிறகோர் நாள்? கண்ணீர் வடிக்கிறான்!

பன்னெடு நாட்கள் கண்ணீர் வடித்துக் கிடந்த ஏழை காண்கிறான்.

நான் இளகிய மனதுடன்தான் இருந்தேன், உன் கொடுமை என் மனத்தைப் பாறையாக்கிவிட்டது!

நான் அடிபணிந்துதான் கிடந்தேன், அன்புக்குக் கட்டுப்பட்டு; உன் ஆணவம் என்னை எழுப்பிவிட்டு விட்டது.

நான் உன்னை ஆட்சி நடத்தச் சொன்னேன். நீயோ என்னைக் காலின் கீழ்போட்டு மிதித்தாய்! நான் விடுபட முனைந்தேன், பொடிப் பொடியாயிற்று உன் ஆதிக்கம். கண்ணீர் வடிக்கிறாய்! இப்போது!!

அந்தக் கண்ணீர் இனி உன்னைக் காப்பாற்றாது. ஆனால், மற்றவர்கள்—அரசாளும் நிலை பெறுபவர்கள்



—பாடம் பெற உதவட்டும்! ஆகவே, அழு! அழு! ஆணவம் அழிந்தது என்று அழு! மக்களின் சக்தியே முதல்! முடிவு! என்று அழு! மனிதனாகு!!—என்று கூறுவான்——சொல்லால் அல்ல; தன் பார்வையால்.

தம்பி! இந்த எண்ணங்களெல்லாம் வந்ததுடன், இன்று ஆணவ அரசு நடாத்திடுவோர் இதனைக் கண்டேனும் பாடம் பெறுவார்களா என்ற கேள்வி எழுந்தது!

அந்தக் கேள்விக்கான விடையை நான் எங்கு எதிர்பார்ப்பேன்? உன்னிடந்தானே! ஆகவேதான் உள்ளத்தில் தோன்றினவற்றை உன்னிடம் உரைத்தேன்!

அண்ணன்,

26—6—'66



காஞ்சிக் கடிதம் : 69

# கோட்டை வெளியில்...

★ வேதனை வாழ்க்கை எத்தனை காலத்துக்கு!

★ மக்களே தலைவர்களைத் தயார் செய்யும் நிலை!

★ வரி கொடுத்தோமே, வாழ்வு கொடுத்தாயா?

★ எங்களுக்குத் தேவை சோஷியலிசம்: ஜோடனையிசமல்ல!

★ டாட்டா பிர்லா கூட்டாளி—பாட்டாளிக்குப் பகையாளி!

★ வேலை மிகுதி; நேரமோ குறைவு!

★ குடும்பத்தோடு கூடுவோம் கோட்டை வெளியிலே!

தம்பி,

இந்தக் கிழமையும் உன்னுடன் அளவளாவ இயலாத நிலை நீடிக்குமோ என்று அஞ்சிக் கிடந்தேன்; ஆனால், ஓய்வும் உட்கொண்ட மருந்தும் தக்கபடி வேலை செய்ததால், உடல்நலக் குறைவு வேகமாகக் குறைந்துவிட்டது. கழக இதழ்களில் காணக் கிடைக்கும் செய்திகள், எத்தனை சுறுசுறுப்புடனும் விறுவிறுப்பாகவும் பிரச்சாரப் பணி நடைபெற்று வருகிறது என்பதனை எடுத்துக்காட்டுகின்றன. இந்த மாமருந்து புதிய தெம்பினை அளிக்கத் தவறுமா!



வேலை மலைபோல! நாட்களோ அதிகம் இல்லை. இந்நிலையில் என் முழுப் பங்கினைச் செலுத்தியாக வேண்டும், அதற்குத் தக்கவிதமாக என் உடல்நிலை அமைய வேண்டுமே என்பதே இன்று எனக்குள்ள கவலை. கவலை மட்டுமல்ல, தம்பி! வெட்கம்கூட!! எங்குச் சென்றிடினும் தோழமை! எப்பக்கம் திரும்பிடினும் பேராதரவு! சிற்றூர்களிலெல்லாம் உன்னதமான உற்சாகம்! எங்கிருந்து தான் பணம் திரட்டுவார்களோ; எத்தனை இன்னலோ தொல்லையோ? என்றாலும், ஒவ்வொரு நிகழ்ச்சியும் அந்த வட்டத்திற்கே தனிச் சிறப்பளிக்கத்தக்க விதமாக அமையும் படி ஏற்பாடு செய்கிறார்கள் கழகத் தோழர்கள். எடுத்துக் கூறிடும் கருத்துக்களைத்தான் எவ்வளவு உன்னிப்பாகக் கவனிக்கிறார்கள்! காங்கிரஸ் எதேச்சாதிகாரம் ஒழிக்கப் பட்டாக வேண்டும் என்பதிலே எவ்வளவு ஆர்வம் காட்டுகிறார்கள்; உறுதி தெரிவிக்கிறார்கள்! நாடு கொண்டுள்ள இந்தக் கோலத்தை நித்த நித்தம் காணவேண்டும்! ஒரே நாளில் பல காணவேண்டும்!! ஓய்வு ஒழிச்சலின்றிக் காண வேண்டும் என்ற துடிப்பு எனக்கு. அதற்குத் தக்கவிதமாக உடல் நிலை அமைய வேண்டுமே; இல்லையே என்பதை எண்ணும்போது என்மீதே எனக்குக் கோபம்.

தேவை மிகுதியாக இருக்கிறது; உணருகிறேன். அந்த உணர்வு, உடல் நலத்தைச் செம்மைப்படுத்திடும் என்றும் நம்புகிறேன். இல்லையென்றால், சென்ற கிழமை ஏற்பட்ட உடல்நலக் குறைவு இவ்வளவு வேகமாகக் குறைந்திருக்க முடியாது!

நமது கூட்டங்களில் எடுத்துக் கூறப்படும் கருத்துகள், பெரிதும் நாட்டு நலிவு, ஆட்சியாளர் மூட்டிவிட்ட அவதிகள், மக்களை அலைக்கழிக்கும் தொல்லைகள் என்பவைகளைப் பற்றித்தான். மக்கள் உள்ளத்திலே குமுறிக் கொண்டுள்ள 'வேதனை' பற்றித்தான் நாம் எடுத்துக் கூறுகிறோம்; மனதுக்கு மகிழ்ச்சி தரத்தக்க விஷயங்களை அல்ல!!

சில வேளைகளில் எனக்கு ஒரு ஐயப்பாடு எழுவதுண்டு; இப்படி வேதனைகளைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கிறோமே, கேட்கும் மக்களுக்கு ஒரு கசப்புணர்ச்சி ஏற்பட்டு விடாதா, தொல்லையும் துயரமும் தரத்தக்க பேச்சினைத்தானா கேட்கவேண்டும் என்ற ஒரு சலிப்புணர்ச்சி ஏற்பட்டுவிடாதா என்ற ஐயப்பாடு.

ஆனால், நமது மக்கள், வேதனை பற்றிய பேச்சினை நாம் விடாது எடுத்துக் கூறிடுவது கேட்டு, கசப்போ சலிப்போ கொள்ளாமல் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருப் பதற்கான காரணம் தெரிந்த பிறகு, எனக்கு இருந்த ஐயப் பாடு போய்விட்டது. என்ன அந்தக் காரணம் என்றால், தம்பி! மக்கள்,

வேதனைகளைப் போக்கிக்கொள்ள முடியும்

வேதனை மூட்டியவர்களை விலக்கிட முடியும்

புதியதோர் வாழ்வினை நாம் பெற்றிட முடியும்

அதற்கான திறமையும் உரிமையும் தமக்கு உண்டு

என்ற நம்பிக்கையுடன் இருப்பதுதான் காரணம். அதனால் தம்பி! அவர்களுக்கு, திரும்பத் திரும்ப நாம் கூறுவதைக் கேட்டிட வேண்டும் என்ற ஆர்வத்தைத் தந்தபடி இருக் கிறது.

மக்கள் சிந்திக்கிறார்கள், மிகத் தீவிரமாக. பிரச்சினை களை ஆராய்ந்து பார்க்கிறார்கள்- வேதனை தாக்குகிறது தத்தளிக்கிறோம், ஆனால், எத்தனை காலத்துக்கு? ஏன்! இதற்கு ஒரு முடிவே கிடையாதா? பரிகாரமே கிடை யாதா? மாற்றமே கிடையாதா? என்ற கேள்விகள் கிளம்பிக் கிளம்பி, மக்களிடம் இன்று ஓர் புதிய உறுதியை எழச் செய்துவிட்டது. அந்த உறுதியைத் தம்பி! அவர் களின் கண்ணொளியும், முழக்கமும் எடுத்துக் காட்டு கின்றன-

வேதனை நாளாகவாகக் குறையும் மறையும் என்று எண்ணிப் பலகாலம் பொறுத்துக் கொண்டனர். பொழுது புலரும், புதுவாழ்வு மலரும் என்று நம்பிக் கொண்டிருந் தனர். ஆளவந்தார்களும் அந்த நம்பிக்கையை ஊட்டிய படி இருந்தனர். உழுதுவிட்டோம், விதை தூவப் போகி றோம்! விதை தூவிவிட்டோம், அறுவடை காணப் போகி றீர்கள்!—என்று வாக்களித்தபடி இருந்தனர். நல்லகாலம் பிறந்திடப் போகிறது, அதோ நம்பிக்கை நட்சத்திரம் எழுந்துவிட்டது, காணீர்!—என்று கூறியபடி இருந்தனர்.

பொறுத்துக்கொள்ள வேண்டிய அளவு பொறுத் துக் கொண்டாகிவிட்டது;



காத்துக் கொண்டிருக்க வேண்டிய அளவு காத்துப் பார்த்தாகி விட்டது.

நிலைமையைத் திருத்துவார்கள் என்று நம்ப வேண்டிய அளவு நம்பிப் பார்த்தாகி விட்டது:

இனி இவர்களை நம்பிக் கிடப்பதில் பயனில்லை. நமக்கு வந்துற்ற வேதனையைப் போக்கிக்கொள்ள நாமாகத்தான் முயற்சி எடுத்தாக வேண்டும் என்ற உறுதியுடன் இன்று மக்கள் உள்ளனர்-

வேடிக்கை அல்ல, தம்பி! உண்மையான நிலைமை இன்று என்னெனில், மக்கள் தயாராக உள்ளனர், உறுதி யுடன் உள்ளனர், ஆட்சியிலே ஒரு மாற்றம் கண்டிட. மக்களுடன் தொடர்பு கொண்டுள்ள தலைவர்களே இன்று, தயாராக வேண்டும், மக்களை அணிவகுத்து அழைத்துச் செல்ல.

ஒரு வேடிக்கைச் சித்திரம் பார்த்த நினைவு வரு கிறது.

குதிரைப் பந்தயம் நடைபெறுகிறது.

பல குதிரைகள் போட்டியிட்டு ஓடுகின்றன.

மிக வேகமாக ஓடிய ஒரு குதிரைமீது அமர்ந்திருந் தவன் கீழே விழுந்து விடுகிறான்.

இலக்கு இருக்கும் இடம் நெருங்குகிறது.

குதிரை, தன்மீது ஆள் அமர்ந்தில்லை என்ற காரணம் காட்டி, பந்தயத்தில் வெற்றி பெறவில்லை என்று கூறிவிடுவார்களோ என்று கவலைப்படுகிறது.

கவலை காரணமாக, ஓட்டத்தின் வேகத்தைக் குறைத்துக் கொள்ளவில்லை.

ஓட்டத்துடன் ஓட்டமாக, பந்தயத்தைப் பார்த்துக் கொண்டிருப்பவர்களை நோட்டம் பார்க்கிறது.

ஒரு ஆளை வாயால் கவ்வித் தூக்கித் தன் முதுகின் மீது அமரச் செய்கிறது.

இலக்கை வந்து அடைகிறது, வெற்றிப் பரிசு கிடைக்கிறது!!

இலக்கை நோக்கி வேகமாக ஓடிவரும் புரவி, தன்னைச் செலுத்துபவன் ஒருவனையும் தூக்கிச் செல்வதுபோல இன்று விழிப்புற்ற, எழுச்சி பெற்ற மக்கள் நிலை இருக்கிறது. தலைவர்கள், மக்களைத் தயார் செய்வதற்குப் பதிலாக, இன்று மக்கள், தலைவர்களைத் தயார் செய்கின்றனர், துரிதப்படுத்துகின்றனர், தீவிரப்படுத்துகின்றனர்.

நம்மாலே ஆகுமா என்ற இழுப்புப் பேச்சு இன்று மக்களிடம் இல்லை; நாம்தான் செய்தாகவேண்டும் என்ற உறுதி மிகுந்து காணப்படுகிறது.

வேதனைகளைத் தாங்கித் தாங்கி இனித் தாங்க முடியாது என்ற நிலைக்கு வந்துவிட்டனர். மாற்றம் கண்டாக வேண்டும் என்ற உறுதிகொண்டுவிட்டனர் மக்கள். எப்போது?

இந்த வேதனைகளுக்கான காரணம் கேளீர் என்று துவங்கி, ஆளவந்தார்கள் கூறியவைகளைக் கேட்ட பிறகு!

காரணம் எதுவும் பொருத்தமாக இல்லை; விளக்கம் போதுமானதாக இல்லை என்பதைக் கண்டறிந்தான பிறகு!

அன்புரை தருவதற்குப் பதிலாக ஆட்சியினர் அடக்குமுறையை அவிழ்த்து விடுவதைக் கண்டு மனம் வெதும்பிய பிறகு!

தேனும் பாலும் ஆறாக ஓடும் என்று காங்கிரசார் ஆளவந்தார்களாவதற்கு முன்பு கூறினர்; மக்கள் விவரமறியாதவர்கள் அல்ல; தேனும் பாலும் ஏன் ஆறாக ஓடவில்லை என்று ஆளவந்தார்களான காங்கிரசாரைக் கேட்கவில்லை. கண்ணீரும் இரத்தமும் பீறிட்டுக் கொண்டு வ ம் நிலையையாவது மூட்டிவிடாமல் இருக்கக்கூடாதா என்றுதான் இன்று கேட்கின்றனர். தேனும் வேண்டாம் பாலும் வேண்டாம்- சோறும் மோரும் போதும், அதுவாவது தரக்கூடாதா என்று கேட்கின்றனர். அடிப்படைத் தேவைகளை மட்டுமே கேட்கின்றனர்! அளவற்ற போக போக்கியத்தை அல்ல.



அதுவும், இதற்கு முன் என்றுமே கொடுத்திராத அளவு வரிப் பணத்தைக் கொட்டிக் கொடுத்துவிட்டு, இந்த அடிப்படைத் தேவைகளைக் கேட்கின்றனர்.

உண்மையைச் சொல்லுவதானால் தம்பி! வெள்ளைக்காரன், இன்று காங்கிரசாட்சி வசூலிக்கும் வரிப்பணத்தின் அளவைக் கேட்டு, ஆச்சரியத்தால் மூர்ச்சித்துக் கீழே விழுவான்! அவ்வளவு பெரிய அளவு வரிப்பணம் கிடைக்கிறது! வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி ஏழை எளியவர்கள் கொட்டிக் கொடுக்கிறார்கள். தொட்டதற்கெல்லாம் வரி! தொடர்ந்து வரி! சுமை ஏறியபடி இருக்கிறது! விதவிதமான வரி! எல்லாம் ஏழையின் முதுகெலும்பை முறிக்கத் தக்க விதமான வரிகள்.

பொதுமக்கள் புள்ளி விவரம் தெரிந்து கொள்ளாமலிருக்கலாம்; முன்பு இருபது கோடிக்கும் குறைவாகவே வரிகொடுத்து வந்தோம்; இப்போது இருநூறு கோடி அளவுக்குக் கசக்கி எடுத்துக் கொள்கிறார்கள் என்ற உண்மையை, உணருகிறார்கள், தமது வாழ்க்கையிலே ஏறிவிட்டுள்ள சுமையின் அழுத்தத்தைக் கொண்டு.

பொருளாதாரத் துறையின் அரிச்சுவடி அளவு அறிந்தவர்களும், வரிவகையில், ஏழை மக்களை வாட்டி வதைக்கக் கூடியது மறைமுக வரி என்பதை அறிவர்.

பண்டங்களின் மீது விதிக்கப்படும் விற்பனை வரி,

இறக்குமதி செய்யப்படும் பண்டங்களின் மீது விதிக்கப்படும் சுங்க வரி

போன்ற மறைமுக வரிகள், காங்கிரசாட்சி ஏற்பட்ட பிறகு, எத்தனை வேகமாக வளர்ந்திருக்கிறது என்பதையும் எத்தனை பெரிய அளவு ஆகிவிட்டிருக்கிறது என்பதையும் கணக்கெடுத்துப் பார்த்தால், இந்த ஆட்சி நடத்திடும் கொடுமையின் வகை விளங்கிடும்.

இந்த மறைமுக வரிகள் மூலம் இந்தியப் பேரரசு 1964—65-ம் ஆண்டிலே மட்டும் பெற்றுள்ள தொகை 1247 கோடி ரூபாய்.

இவ்வளவும், ஏழைகள் எப்பாடுபட்டேனும் வாங்கித் தீரவேண்டிய பண்டங்களின்மீது விதிக்கப்பட்டுள்ள வரிகள் மூலம் கிடைக்கிறது.

அதே ஆண்டில், சீமான்கள் கட்டிய வருமான வரியின் தொகை எவ்வளவு? 294 கோடி ரூபாய்.

இதுதான் தம்பி! காங்கிரசின் ஜனநாயக சோஷியலிசம்.

ஏழை கட்டும் தொகை 1247-கோடி; பணக்காரன் கட்டுவது 294-கோடி!!

ஏழையால், வரியிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது; அவன் வாங்கித் தீரவேண்டிய பண்டங்களின்மீது வரி, மறைமுகமாகச் சேர்க்கப்பட்டிருப்பதால்.

ஏழை வாங்கித் தீரவேண்டிய கிரசின் எண்ணெய்க்காக அவன் தரும் பணத்தில் 45 சதம் வரியாகிறது!

ஏழை வாங்கிடும் சர்க்கரைக்காகக் கொடுக்கும் பணத்திலே 50-சதம் வரியாகிறது!

ஏழை பயன்படுத்தும் தீக்குச்சிக்காகத் தந்திடும் பணத்தில் 62-சதம் வரியாகிறது!

ஏழை வாங்கியாக வேண்டிய ஒவ்வொரு பண்டத்துடனும் இந்த மறைமுகவரி சேர்ந்திருக்கிறது.

அப்படி ஏழை கொட்டிக் கொடுக்கும் தொகை 1247 கோடி! அதைக் கூசாமல் பெற்றுக்கொண்டுதான் காங்கிரசாட்சி கூவுகிறது, தனது திட்டம் ஜனநாயக சோஷியலிசம் என்று.

சில நூறுகோடி ரூபாய் அளவுக்கும் ஏறாமலிருந்த இந்த மறைமுகவரியை ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் ஏற்றிவிட்டு, காங்கிரசாட்சி ஏழையின் வாழ்க்கையை உயர்த்துவதாகவும் பேசுகிறது; மறுத்தால் உருட்டி மிரட்டிப் பார்க்கிறது.

ஆயிரம் கோடி ரூபாய்க்குமேல், மறைமுகவரி கொடுக்கத்தக்க விதமாக ஏழையின் வாழ்வு காங்கிரஸ் ஆட்சியினால், உயர்ந்துவிட்டதா, செம்மைப்பட்டு விட்டதா? என்று பார்த்திடின், தம்பி! முன்பு இருந்து வந்ததை விட ஏழையின் வாழ்வு செல்லரித்துக் கிடப்பதற்குத்தான் சான்றுகள் கிடைக்கின்றன.

ஜெயப்பிரகாசநாராயணன், தேபர் போன்றார் இதற்குச் சான்றளித்துள்ளனர்.



வினோபாபாவே, மனம் குமுறி இது குறித்துப் பேசியிருக்கிறார்.

பொருளாதாரத் துறையின் ஆய்வாளர்கள் இதனைப் படம்பிடித்துக் காட்டியுள்ளனர்.

மற்ற இடங்களுக்குச் செல்வானேன், சர்க்காரே புள்ளி விவரம் தந்திருக்கிறது, நாலாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய அறிக்கையுடன் இணைத்து.

| | | |
|---|---|---|
| 430-இலட்சம் மக்கள் | — | தினம் 30-பைசா |
| 430-இலட்சம் மக்கள் | — | 42-பைசா |
| 460-இலட்சம் மக்கள் | — | 51-பைசா |
| 430-இலட்சம் மக்கள் | — | 59-பைசா |

பெற்று வாழ்ந்து வருவதாக!

பெற்றுவரும் வரிப்பணத்தின் அளவு என்ன? அதைக் கொண்டு மக்களின் வாழ்க்கையை எந்த அளவு செம்மைப் படுத்த முடிந்தது? என்று கேட்டால், கடுங்கோபம் பீறிட்டுக் கொண்டு வருகிறது காங்கிரசாருக்கு. பணக்காரனை மட்டும் விட்டுவிட்டோமா? வரிபோடுகிறோமே! என்கிறார்கள். எவ்வளவு என்று கேட்டால் 294-கோடி என்று கணக்களிக்கிறார்கள். ஏழைக்கு ஆயிரம் கோடிக்கு மேல்! பணக்காரனுக்கு அதிலே கால்தானா என்றால், ஆமாம்! அப்படித்தான்!! என்று அடித்துப் பேசுகிறார்கள்.

பணக்காரர்களுக்குப் போடும் வரித் தொகையையாவது சரியான முறையிலே வசூலித்துக்கொண்டு வருகிறார்களா?—என்று கேட்டால், கொஞ்சம் 'நிலுவை' இருக்கிறது என்கிறார்கள். எவ்வளவு இருக்கும் அந்த நிலுவை என்று கேட்டால், ஒருவர் 300 கோடி இருக்கும் என்கிறார், இன்னொருவர், 500 கோடி இருக்கும் என்கிறார், வேறொருவர் ஆயிரம் கோடிக்குக்குறையாது என்கிறார்.

ஏழையால் ஒரு ரூபாய் வரியைக் கொடுக்காமல் தப்பித்துக்கொள்ள முடியாது. பணக்காரர்கள் பல நூறுகோடி ரூபாய் வரிப்பணத்தைச் செலுத்தாமலே காலத்தை ஓட்ட முடிகிறது. இதுதான் காங்கிரசின் ஜனநாயக சோஷியலிசம்.

இதனை மெத்தத் தெளிவாக விளக்குவதுபோல இந்த ஆட்சியினர், உத்திரப்பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு முதலாளி செலுத்த வேண்டிய வருமான வரித்தொகையை-30 இலட்ச ரூபாய் அளவு—தள்ளுபடி செய்துவிட்டனர்.

காங்கிரசின் ஜனநாயக சோஷியலிசத்தின் கனியைச் சுவைத்த இந்த முதலாளி ஒரு காங்கிரஸ்காரர், பிரமுகர்!!

ஒரு விளக்கம், ஒரு சமாதானம் கூறவேண்டுமே, இந்த அக்ரமத்துக்கு! கிடையாதே! ஆமாம்! அப்படித்தான்!! என்று அடித்துப் பேசுகின்றனர், ஆளவந்தார்கள்! யார் கேட்க முடியும் என்ற துணிவுடன்; என்ன செய்துவிட முடியும் என்ற ஆணவத்துடன்.

அவரால் வரித் தொகையைக் கட்ட இயல வில்லையாம்!!
ஏழையால் மட்டும் வரிச் சுமையைத் தாங்கிக்கொள்ள முடிகிறதா?

முடிகிறதே!

எப்படி?

கடன் படுகிறான்!

எவ்வளவு?

ஆய்வாளர்கள் தந்துள்ள கணக்கின்படி, விவசாயக் குடும்பத்தினர் பட்டுள்ள கடன் தொகை மட்டும் 2789 கோடி ரூபாய்!

ஆக, காங்கிரசாட்சியில் பணக்காரன் வரிகட்ட மாட்டான்; தள்ளுபடி செய்துவிடப்படும்! ஏழை கடன் பட்டாகிலும் வரி கட்டியாக வேண்டும். இதுதான் காங்கிரசின் ஜனநாயக சோஷியலிசம்.

எதிர்க்கட்சிகள் இப்படித்தான், எதையாவது கிளறும்! ஏதாவது குளறும், காங்கிரசாட்சி ஒன்றுமே செய்யவில்லை என்று பொய் பேசும். காங்கிரசாட்சி ஒன்றுமேவா செய்ய வில்லை? என்று கேட்டுவிட்டு,

விளக்குக் கம்பங்கள்

மின்சார பல்புகள்

பம்பு செட்டுகள்



பொலி காளைகள்

உரக் குழிகள்

அணைகள், தேக்கங்கள்

பள்ளிக்கூடங்கள்

மருத்துவ மனைகள்

தொழிற் பேட்டைகள்

ஆகியவற்றின் கணக்கை நீட்டுகின்றனர்.

இவைகளைக் கணக்குக் காட்டும்போது, வெள்ளையராட்சியில் வாங்கிய வரிப் பணம் எவ்வளவு, இப்போது இவர்கள் வாங்கிடும் வரிப்பணம் எவ்வளவு என்ற கணக்கை மட்டும் மறைத்துவிடுகிறார்கள்.

இவர்கள் மறைத்தாலும் மக்கள் மறந்தா போய் விடுவார்கள்!

அவர்களுக்கும் கணக்குத் தெரியும்.

தெரிந்துவிட்டதால்தான் கணக்குத் தீர்த்தாக வேண்டும் என்ற உறுதிகொண்டு விட்டிருக்கிறார்கள்.

கட்டிய பள்ளிக் கூடம், நட்டுவிட்ட மின்சார விளக்குக் கம்பங்கள் ஆகியவைகளைக் காட்டியேவா காங்கிரஸ் ஆட்சி காலந் தள்ளிக் கொண்டு போக முடியும்—இனியும்! பித்தனும் ஏற்றுக்கொள்ள மாட்டானே!

கொடுத்த வெண்ணெய் எவ்வளவு; கிடைத்த நெய் எவ்வளவு என்ற கணக்கா புரியாமலிருக்கும், மக்களுக்கு!

விளைந்ததில், நெல் எந்த அளவு, பதர் எந்த அளவு என்று பிரித்துப் பார்க்கவா தெரியாது, மக்களுக்கு.

இறைத்தது எவ்வளவு, பாய்ச்சல் கிடைத்தது எந்த வகையில் என்பது பற்றிப் பார்த்திடவா தெரியாது, மக்களுக்கு.

தெரிந்துவிட்டது, அதனால்தான் அவர்கள் உறுதி கொண்டுவிட்டார்கள், ஆட்சி மாற்றப்பட வேண்டும் என்று.

இன்று அந்த மக்களை மயக்க, ஜனநாயக சோஷியலிசம் பேசிப் பார்க்கிறது காங்கிரஸ் அரசு!

மக்கள், காங்கிரசின் நடுநாயகர்கள் எவரெவர் என்று பார்க்கின்றனர்.

ஜனநாயக சோஷியலிசம் திட்டமாவது உண்மையானால், இத்தனை சீமான்கள், இந்தக் காங்கிரசிலே இடம் பெற்றிருப்பார்களா? என்று கேட்கிறார்கள்.

எங்கள் சோஷியலிசத்தில் ஏழையும் இருப்பான், பணக்காரனும் இருப்பான்—நாங்கள் பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்று காங்கிரசின் பெரியவர்கள் கூறுகிறார்கள், ஓ, அப்படியா! உங்கள் சோஷியலிசம் அப்படிப்பட்டதா! எங்களுக்கு சோஷியலிசம் வேண்டும், உங்கள் ஜோடனையிசமல்ல என்று மக்கள் கூறுகின்றனர்.

டாட்டா பிர்லா கூட்டாளி

பாட்டாளிக்குப் பகையாளி

என்று நமது கழகத் தோழர்கள் கூறும்போது, எழுகிறதே தம்பி! மகிழ்ச்சி ஆரவாரம், அதற்குக் காரணம், மக்கள் பெற்றுவிட்டுள்ள தெளிவு.

இந்தத் தெளிவு பிறந்திட நமது கழகம் பெரும் அளவு பணியாற்றி இருக்கிறது என்பதிலே நாம் பெருமிதம் கொண்டிடலாம் என்றாலும், இத்தனை தெளிவு பிறந்துள்ளபோது, ஆட்சியை மாற்றிடும் செயலில் வெற்றி பெற்றால்தான், உண்மையான பெருமைக்கு நாம் உரியவர்களாவோம்.

அதற்காக நாம் மேற்கொள்ள வேண்டிய பணிகள் அடுக்கடுக்காக உள்ளன, வேலை அதிகம்! நேரம் அதிகம் இல்லை!!

சென்ற ஆண்டே நடந்து முடிந்திருக்க வேண்டிய மாநாடுகளை நாம் இப்போதுதான் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

திருச்சியில் துவக்கினோம், நாம் மகிழத்தக்க விதமாகவே மாநாடு நடந்தேறியது.



இப்போது வேலூர் கோட்டை வெளியில் அழகுற அமைகிறது மாநாட்டுப் பந்தல்.

திருச்சியில் திறந்தவெளி அரங்கு; இங்குப் பாங்கு நிறை பந்தல்.

நமது கழக மாநாடு, பல்லாயிரவர் கூடிடும் பாசறை மட்டுமல்ல, குடும்பம் குடும்பமாக நமது கழகத்தவர் கூடிடும் அறிவகம்.

பல்வேறு ஊர்களினின்றும் வந்திடுவோர், தத்தமது இடத்து நிலைமை பற்றி உரையாடி, மொத்தத்தில் அமைந்துள்ள சூழ்நிலையினை அறிந்து அகமகிழ்ந்திடுதல் அரியதோர் வாய்ப்பாகும்.

திருச்சியில் திறந்தவெளி மாநாடு—எனவே, காலையிலும் பிற்பகலிலும் காய்கதிரோன் குறுக்கிட்டதால' கழகப் பேச்சாளர் பலர், கருத்து விருந்து அளித்திடும் வாய்ப்பினைப் பெற்றோமில்லை.

வேலூரில் எழில் மிக்கதும். வசதி நிரம்பியதுமான முறையில் பாங்கான பந்தல் அமைத்துள்ளனர்.

இருநாட்களிலும், எழுச்சி யூட்டத்தக்க விளக்க உரையாற்றிடும் நமது கழகத் தலைவர்கள் வருகின்றனர்.

கழகக் கலைஞர்கள், கருத்து விருந்துடன் கலை விருந்தும் தந்திட இசைந்துள்ளனர்.

முத்தமிழ் முழங்கிடும் திரு இடமாகத் திகழப் போகிறது வேலூர் மாநாடு.

வீரர் அணிவகுப்பைக் கண்டிடவும், வெற்றிப் பாதை வகுத்திடவும், வாரீர் வாரீர் என்று அனைவரையும் அழைக்கின்றேன்.

நாட்டை வாட்டிடும் கேட்டினைப் போக்கிட, கோட்டை வெளியினில் கூடுவோம் வந்திடுவீர் என்றழைக்கின்றேன்.

திருச்சி போலவே வேலூர் எனக்கு ஒரு திருத்தலம்,

திருச்சியில் ஒருமுறை சிறை சென்றேன். விலைவாசிக் குறைப்புக்கான அறப் போராட்டத்தின்போது வேலூர் சிறையில் இடப் பெற்றேன்.

மாநாடு கூடிடும் கோட்டை வெளியைக் கடந்து, கோட்டைக்கு உட்புறம் உள்ள துரைத்தன அலுவலகத் திலேதான், இன்று மாநாட்டு அலுவல்களை உற்சாகத் துடன் கவனித்துக் கொள்ளும் மாவட்டச் செயலாளர் தருமலிங்கம், வேலூர் நகராட்சி மன்றத் தலைவர் சாரதி, உறுப்பினர் தேவராஜி, தொண்டர் படைத் தலைவராக உள்ள இளஞ்செழியன், அவர் துணைவியார், மற்றும் ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் சம்பங்கி, வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினர் முல்லை வடிவேலு ஆகிய பலர் கொண்ட அணிவகுப்பில் நான் நின்று மறியல் செய்தேன்; எங்களுடன் சிறையில் திருவண்ணாமலை சட்டமன்ற உறுப்பினர் ப. உ. சண்முகம், முருகையன், திண்டிவனம், வானூர் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கவேலு, பால கிருஷ்ணன் ஆகிய பல நண்பர்கள் இருந்தனர். என்னுடன் அன்று இருந்த வேலூர் நண்பர் பாலசுந்தரம் மறைந்து விட்டார்.

இப்போதும், அந்தோ! என் மனக் கண்முன் நிழலாடு கிறதே, போளூராரின் இனிய முகம்!

அந்தச் சிறையிலே அவரைக் கண்டதும், சிறை என்ற எண்ணமே பறந்தோடிவிட்டதே! அந்தச் சிரித்த முகத்தைக் காணமுடியாது. ஆனால், மாநாட்டிலே வந் திடும் எவருக்குத்தான் அந்த இனியவரின் நினைவு நெஞ்சிலே எழாதிருக்கும், கணகளிலே நீர் துளிர்த்திடாம லிருக்கும்?

அவர் பெயரால், பந்தல்—அங்குக் கூடுவது, மறைந்த அந்த மாவீரனுக்குச் செலுத்தும் அஞ்சலியில் ஒருவகை என்றே நான் கருதுவேன்.

திருத்தலம் என்றும் கூறுவேன், அந்த மாநாட்டினை! அங்கு, தம்பி! உன்னை உன் நண்பர்களுடன் கண்டு அள வளாவ விரும்புவது இயற்கைதானே!



நண்பர்கள் மட்டுந்தானா அண்ணா!—என்று கேட்டி டாதே, உன் குறும்புப் புன்னகையின் பொருள் விளங்காம லில்லை, உன் கோலமயிலுடன் வந்து சேர்; எழிலூட்டு; எழுச்சியூட்டு; எதிர்காலத்தை ஒளிமயமானதாக்கிடு. தம்பி! நீ உலவினால்தானே 'கோட்டை' என்ற பெயரின் முழுப் பொருளும் நான் உணர முடியும்.

அண்ணன்,

10—7—66



## காஞ்சிக் கடிதம் : 70

# கழுகும் கிளியும்

★ திருடனே உபதேசியான விந்தை!

★ உருட்டி விடப்பட்டவர் உபதேசியாகிறார், வெட்க மின்றி!

★ டி டி.கே. முகத்திலே லால்பகதூர் பூசிய கரி!

★ இருந்ததை இழந்துவிட்ட 'எரிச்சலிலா இழிபேச்சு?

★ கழுகு பிணம் தின்னும்; கிளி கோவைக்கனி தின்னும்!

★ வாய் நீளுகிறது! வார்த்தை நாராசமாகிறது!

தம்பி,

கேட்போர் மனம் உருகும் விதமாக இருந்தது அந்த உபதேசம். அருள் வாக்கு என்றும், ஆத்ம சக்தியின் விளைவு என்றும் பலர் வியந்து புகழ்ந்திடும் விதமான உபதேசம்!!

கல் மனமும் கரையும்! காதகனும் புனிதனாவான்! மனமாசு அகலும்! மதி கலங்கும்! வழி தவறி நடந்து வந்தவனும் தன் குற்றத்தை உணர்ந்து நெஞ்சு நெக்குருக நிற்பான்; புதுப் பிறவியாகிடுவான்! அப்படிப்பட்ட அருமையான உபதேசம் அது.

கர்த்தரின் கட்டளைகளை எத்தனை விளக்கமாக்கிக் காட்டுகிறார் இந்த வித்தகர்!



நாமும்தான் நித்த நித்தம் படிக்கின்றோம் 'வேதம்'- என்ன பயன்! இவர் கூறிடும் போதல்லவா அருமை புரிகிறது!

ஆதாரங்களை அள்ளி வீசுகிறார்; சான்றுகள் சரமாரியாக! மேற்கொள்ளும் விளக்கங்களும் எவ்வளவு சுவையுடன்! இதற்கு முன்பு இதுபோல உபதேசம் அருளியவர் எவரையும் கண்டதில்லை என்று அந்த உபதேசம் கேட்டவர்கள் கூறினர். நானாக எதனையும் கூறிடவில்லை! எல்லாம் நாதன் அருளியது!! என் சொல் ஏதும் இல்லை! எல்லாம் இறைவன் இட்ட பிச்சை! கற்றதனைக் கூறிடும் வித்தகன் அல்ல நான்! கர்த்தர் காட்டிடும் வழிநடப்பவன். அவர் பேசுகிறார், என் மூலம்!

ஆண்டு பலவாகக் கற்றுத் தெளிந்து பேசுகிறேன் என்றும் எண்ணற்க! நான் படித்தது ஒரே ஏடு! படிப்பது ஒரே ஏடு! அந்த ஒரு ஏடுபோதும் உள்ளத்திலே அருள் ஒளியைத் தந்திட. அது புலவர் தீட்டிய ஏடு அல்ல— புனிதன் அருளிய வேதம்-பைபிள்! அதில் உள்ளதனைத்தான் எடுத்து உரைக்கின்றேன்!—என்று அவன் உபதேசம் செய்கிறான், கேட்போர், கண்களில் நீர் துளிர்க்கிறது.

அதிலும் பத்துக் கட்டளைகளில் எட்டாவது கட்டளையான பிறர் பொருளைக் களவாடாதே!—என்ற கட்டளை பற்றிய உபதேசம் முதல்தரமாக அமைகிறது.

திருடாதே! திருஅருளை இழந்திடாதே!

திருடாதே! சமூகத்தைக் கெடுக்காதே!

திருடாதே! பாப மூட்டையைச் சேர்த்துக் கொள்ளாதே!

எட்டாவது கட்டளைபற்றி அவன் செய்த உபதேசம் கேட்டு, 'உபதேசியார்கள்' வியந்தனர்—அவ்வளவு அற்புதமாக இருந்தது அந்த உபதேசம்.

உபதேசமும் திடலில் அல்ல! திருக்கோயிலில்!!

இதே எட்டாவது கட்டளைபற்றி எவரெவரோ பேசினர், கேட்டோம்; இவர்போலவா அவர்கள் உபதேசம் செய்தனர்! என்று கூறினர் திருக்கோயிலில் கூடி அந்த உபதேசத்தைக் கேட்டவர்கள்.

ஆனால், அந்த அருமையான உபதேசம் செய்தவர்—அருள்பெற்றவனோ என்று பலரும் வியந்திடத்தக்க விதமான உபதேசம் செய்தவர்—எட்டாம் கட்டளை பற்றிய விளக்கத்தை ஏற்புடைய முறையிலே அளித்த அந்த உபதேசி, ஒரு திருடன்!!

மோடார் திருடியவன்! பிடிபட்டுச் சிறையில் அடைக்கப்பட்டவன்! அவன்தான் அத்தனை அருமையாக உபதேசம் செய்கின்றான், எட்டாவது கட்டளை பற்றி; களவாடுவது பாபம் என்று!!

இருந்தால் என்ன? பூர்வ ஜென்ம வினையால் களவாடினான்; சிறைப்பட்டான்; சிறைச்சாலையையே தவச்சாலையாக்கிக்கொண்டு, செய்த தவறுக்காக வருந்தி இறைவனிடம் முறையிட்டு, பாபம் கழுவப் பெற்று, புனிதனாகி இருப்பான்! அதனால்தான் 'உபதேசி'யாகி இருக்கிறான். முன்பு களவாடியவன் என்பதாலே, அவன் இப்போது 'உபதேசி'யாகக் கூடாது என்று கூறிவிடலாமா?—என்று கேட்டிடுவார் உளர்.

தம்பி! இவன், தான் குற்றம் செய்ததை ஒப்புக் கொண்டு, கழுவாய் தேடிக் கொண்டவன் அல்ல! செய்த பாபத்தைத் துடைத்து அருளும்படிப் பரமனை இறைஞ்சிப் புனிதன் ஆனவனல்ல.

களவாடினான்

சிறைப்பட்டான்

சிறைக்காவலரை ஏய்த்துத் தப்பி ஓடினான்.

ஊரை ஏய்க்க 'உபதேசி' வேடம் புனைந்தான்.

எட்டாவது கட்டளையை மீறிய இந்த எத்தன் அதே எட்டாவது கட்டளையைப் பற்றியே அருமையாக 'உபதேசம்' செய்வதன் மூலம், சட்டத்தின் கண்களையும் சமுதாயத்தின் கண்களையும் குருடாக்கிட முனைந்தான். உள்ளம் திருந்தியவன் அல்ல! உதட்டளவு உபதேசம்! ஊரை ஏய்க்க உபதேசம்!

பிறகு அவன் கண்டுபிடிக்கப்பட்டான்.

புரட்டு அம்பலமாயிற்று. இவனைப் புனிதன் என்று நம்பினோமே ஏமாளித்தனத்தால் என்று மக்கள் கூறினர்,



கதை அல்ல! நடந்த நிகழ்ச்சி!

சிட்னி என்ற நகரிலே, திருக் கோயில்களிலே எட்டாவது கட்டளைபற்றி உபதேசம் செய்து வந்தவன் எத்தன் என்பதும், அவன் திருட்டுக் குற்றத்துக்காகச் சிறைப்படுத்தப்பட்டு, அங்கிருந்து ரொட்டி வண்டியிலே ஒளிந்து கொண்டு தப்பி ஓடிவிட்டான் என்பதும் பிறகே தெரிய வந்தது; அவன் செய்த உபன்யாசங்களைக் கேட்டு உருகிய பிறகு.

இந்த நிகழ்ச்சி பற்றி இதழ்களிலே படித்தபோது தம்பி! எனக்கு ஒரே வியப்பு.

எவ்வளவோ 'அறிவுத் தெளிவும் ஆராய்ச்சித் திறனும் வளர்ந்துள்ள இந்த நாட்களிலும், மக்களிடம் கப்பிக் கொண்டுள்ள ஏமாளித்தனத்தைப் பயன்படுத்திக் கொள்ள எத்தர்களால் முடிகிறதே! உருவத்தைக் கண்டும், புனைந்திடும் கோலம் கண்டும், பேசிடும் மொழியின் பாங்கு கண்டும், புனிதத்தன்மை பற்றிய பேச்சைக் கேட்டும், மக்கள் மயங்கிப் போகிறார்களே!...என்று எண்ணிக் கவலை மிகக் கொண்டேன்.

மதப் போர்வை அத்தகைய மன மயக்கத்தைத் தருகிறது; புரிகிறது!

எதனை நாம் புனிதமானது என்று நம்பிப் போற்றுகிறோமோ, அந்தப் புனிதத்தையே, புரட்டுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் புல்லர்கள் உலவியபடிதான் இருக்கிறார்கள். விழிப்புடன் இருந்தாலொழிய எத்தர்கள், கிளம்பியபடிதான் இருப்பார்கள்; மக்களை ஏமாளிகளாக்கியபடிதான் இருப்பார்கள் என்று எண்ணிக் கொண்டேன்.

அந்த நேரமாக நண்பரொருவர் வந்தார்; அவரிடம் கூறினேன், என் மனத்திலே தோன்றிய இந்தக் கருத்தை. அவர் இடி இடியெனச் சிரித்தார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. என்ன! என்ன! இது நகைப்புக்குரிய விஷயமா! மக்கள் மதக்கோலம் புனைந்திடும் எத்தர்களிடம் ஏமாந்து போகும் செய்தி கேட்டு, நாம் வெட்கப்பட வேண்டும், வேதனைப்பட வேண்டும், ஆத்திரப்பட வேண்டும், பகுத்தறிவுப் பிரசாரத்தை மும்முரமாக்க வேண்டும், அவ்வித மிருக்க, நான் இந்த விஷயத்தைக் கூறிடக் கேட்டுச் சிரிக்கின்றீரே, ஏன் என்று கேட்டேன்.

அவர் சொன்னார், அண்ணாதுரை! மதவேடம் போட்டுக் கொள்பவன்தான் மக்களை மயக்க முடியும் என்று எண்ணிக்கொண்டு இத்தனை ஆத்திரப்படுகிறாய், உலகம் போகிற போக்கு புரியாமல்; அதை எண்ணித்தான் சிரித்தேன். மதவேடம் போடாமலேயேகூட, மக்களை மயக்கிடத்தக்க உபதேசம் செய்பவர்கள் உலவுகிறார்கள்; அவர்களைப் பார்க்கவில்லையா என்று கேட்டார்.

விளக்கம் கேட்டேன். அவர் கூறினார்: எட்டாவது கட்டளையை மீறியவன் எட்டாவது கட்டளையின் அருமை பற்றிய உபதேசம் செய்தான் என்பதுதானே உனக்கு வியப்பாக இருக்கிறது? எனக்கு அதிலே வியப்பு ஏற்படவில்லை. அவனாகிலும் 'பைபிள்' கருத்திலே புலமை காட்டி, தன்னைப் புனிதன் என்று நம்பும்படி மக்களை மயக்கினான். டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் அப்படிக்கூட எந்த 'அருட்பாவை'யும் கற்றுத் தெளிந்து வித்தகராகிடவில்லையே; கொச்சைத் தமிழில் தானே பேசுகிறார்? அவர் ஊருக்கு உபதேசம் செய்து கொண்டிருக்கிறாரே, அது உனக்கு ஆச்சரியமாக இல்லையா? என்றார்-

''இது போக்கிரித்தனமான பேச்சு! நான் கள்ளனாக இருந்தவன் கர்த்தர் அருள் பெற்றவன்போல நடித்து மக்களை மயக்கிய புரட்டு பற்றிக் கூறுகிறேன்; நீ காங்கிரஸ் தலைவருள் ஒருவரான டி.டி கிருஷ்ணமாச்சாரியார் ஊருக்கு உபதேசம் செய்கிறாரே, அது நியாயமா என்று கேட்கிறாயே, முறையா அது'' என்று சற்றுக் கோபத்துடன் கேட்டேன். என் நண்பர்,

நான் உபதேசம் செய்து ஊராரை மயக்கப் பார்த்திடும் போக்குப் பற்றி மட்டுமே கூறுகிறேன்; நீ எதற்காகக் களவாடியவனுடனா, 'கனம்' ஆக இருந்தவரை ஒப்பிடுகிறாய் என்று கேட்கிறாய். மக்கள், தான் சொல்லுவதை நம்புவார்கள் என்ற உறுதியுடன்தானே, டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் பேசுகிறார்? என்று கேட்டார்.

ஆமாம்! தனது பேச்சை நம்புவார்கள் என்ற நம்பிக்கையுடன்தான் அவர் பேசுகிறார் என்றேன்.

டி.டி. கிருஷ்ணமாச்சாரியாரின் பேச்சு நம்பத்தகுந்தது அல்ல என்று இன்றைய கல்வி அமைச்சராக உள்ள சக்ளா அவர்கள், பம்பாய் நீதிபதியாக இருந்தபோது முந்திரா



விவகார சம்பந்தமாக எழுதிவைத்திருக்கிறாரே, தெரியுமல்லவா? என்று கேட்டார். தெரியும் என்றேன்.

ஆக, யாருடைய பேச்சு நம்பத்தகுந்ததாக இல்லை என்று முந்திரா விவகார விசாரணையின்போது ஒரு நீதிபதியால் கூறப்பட்டிருக்கிறதோ, அந்த டி.டி. கிருஷ்ணமாச்சாரியார், எந்தத் துணிவிலே மக்களிடம் பேசுகிறார், எந்தத் துணிவிலே தன் பேச்சை மக்கள் நம்புவார்கள் என்று எதிர்பார்க்கிறார்? அதைச் சொல்லு! என்று கேட்டார்.

என்னால் பதில் கூறமுடியவில்லை. நானும் நண்பருடன் சேர்ந்துகொண்டு சிரித்தேன்.

ஆனால், தம்பி! டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் நடத்திக் கொண்டிருக்கும் உபதேசத்தில், நமது கழகத்தைப் பற்றி அவர் கூறிய கருத்துபற்றி எண்ணும்போது, சிரிப்பு அல்ல, உள்ளபடி வேதனைதான் பீரிட்டுக் கொண்டு கிளம்புகிறது.

ஒருமுறைக்கு இருமுறை 'உருட்டிவிடப்பட்ட' இந்த உத்தமர், தமக்கு நேரிட்ட 'கதி'யை எண்ணி, முக்காடிட்டு மூலையில் உட்கார்ந்திருக்கவேண்டும்; ஆனால், உலாவருகிறார், வெட்கமின்றி! உபதேசமும் செய்கிறார் துணிவுடன். கழகம்பற்றி மிகக்கேவலமாகப் பேசுகிறார், துடுக்குத்தனத்துடன்.

இவர்மீது ஒரு புகார் கிளம்பிற்று.

புகார் செய்தவர்கள் நடுத்தெரு நாராயணர்கள் அல்ல; பாராளுமன்ற உறுப்பினர்கள்.

புகாரும் திடலில் கூறப்படவில்லை; எழுத்து மூலமாகவே குடிஅரசுத் தலைவருக்குத் தரப்பட்டது; இந்தியப் பிரதமரிடம் அது குடிஅரசுத் தலைவரால் தரப்பட்டது.

மற்றவர்களைப்பற்றி மிக மட்டமாகப் பேசும் இந்த மகானுபாவரிடம் உள்ளபடி நம்பிக்கையும், மதிப்பும் இருந்திருந்தால், 'புகாரை'ப் பெற்றுக் கொண்ட லால்பகதூர் என்ன செய்திருப்பார்?

என்ன துணிவு இப்படிப்பட்ட புகாரை, எனது நிதி அமைச்சர்மீது சுமத்த! அவருடைய யோக்யதை எப்படிப்பட்டது, நாணயம் எப்படிப்பட்டது! நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் அவர் செய்துள்ள தியாகம் எப்படிப்பட்டது! கோடி கோடியாகப் பணத்தைக் கொட்டிக் காட்டினாலும்,

அவர் நேர்மைக் கோட்டை விட்டு, இம்மி அளவாவது விலகுவாரா! சுயநலத்துக்கும் அவருக்கும் ஆயிரமாயிரம் காத தூரமாயிற்றே! தன் சுகம், தன் குடும்ப சுகம் ஆகிய வற்றையா அந்த உத்தமர் பெரிதாக மதிப்பார்! நிஷ்காம கர்மி அல்லவோ அவர்! அப்படிப்பட்ட ஒப்பற்ற உத்தமர் மீது, பாவிகளே! பழி சுமத்துகிறீர்களே! ஆகுமா, அடுக்கு மா? அந்தப் புனிதர்மீது பழி சுமத்தினால் நான் உங்கள் புகார் மனுவைத் துளியாவது மதித்திடுவேனா? இதோ அதனைச் சுக்கு நூறாகக் கிழித்துக் குப்பைக் கூடையில் போடுகிறேன்!—என்றல்லவா கூறியிருந்திருக்கவேண்டும்.

**ஆனால் லால்பகதூர் செய்தது என்ன?**

மானரோஷத்திலே துளி அக்கறை உள்ளவர்களும், தம்மீது ஒரு புகார் மனு தொடுக்கப்பட்டு, அதனைத் தமது சகாவா கவும் தலைவராகவும் உள்ளவர், ஏறெடுத்தும் பார்க்க மறுத்தார் என்ற நிலை கிளம்புவதைத்தான் பெருமைக்கு உரியதாகக் கருதுவார்கள்.

டி.டி. கிருஷ்ணமாச்சாரியார், சாமான்யமான நிலை யில் இல்லை. இந்தியப் பேரரசின் நிதிமந்திரி! நிதித்துறை நிபுணர்! சிக்கல்களை அறுத்து எறிந்திடும் சமர்த்தர்! விளக் கம் அளிப்பதில் வல்லவர்! வாதாடுவதில் புலி!—என்றெல் லாம் விருது பெற்றவர்.

அவர்மீது புகார் மனு! அதனைத் தள்ளுபடி செய்யவில்லை லால்பகதூர், ஏன்?

இந்த ஒரு கேள்வியை எண்ணி எண்ணி மனம் குன்றிக் கிடப்பர், தன்மானம் பெரிது என்று எண்ணிடும் இயல் பினர்-

புகார்மனு ஒன்று வந்தது.
பரிசீலனை செய்து பார்த்தேன்.

அவ்வளவும் அபத்தம், வீண்பழி என்று கண்டறிந் தேன்.

ஆகவே புகார் மனுவைக் கிழித்தெறிந்து போட்டு விட்டேன்.

இவ்விதம் லால்பகதூர் கூறி இருந்திருந்தாலாவது, ஓரளவு தலைநிமிர்ந்து நடந்திடலாம்; நான் மாசற்றவன் என்பது கிடைத்த தீர்ப்பு என்று மார்தட்டிக் கூறிக்கொள்ளலாம்.



அந்த நிலையும் கிடைக்கவில்லை இந்த வித்தக ருக்கு.

புகார் மனு ஒன்று வந்திருக்கிறது, அதனை அலட்சியப் படுத்தி விடுவதற்கில்லை. ஆகவே புகார் மனுவிலே கூறப் பட்டுள்ளவைகள் விசாரிக்கத் தக்கவைதானா என்பதனைக் கண்டறிந்து கூறும்படி, இந்திய உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதிக்கு அந்த மனுவை பரிசீலனைக்காக அனுப்பிவைக்கலாம் என்று முடிவு செய்திருக்கிறேன் என்று லால்பகதூர் அறிவித்தார்.

இந்த அறிவிப்பைக் கேட்டதும், தன்மான உணர்ச்சி ததும்பிடும் மனத்தினர் ஒரு முழக்கயிறு கொடுத்துவிடுங்களேன், இப்படி என்னைக் கேவலப் படுத்துவதைவிட என்று கூறிக் குமுறி இருப்பார்கள்.

புகார்மனு குப்பைக் கூடைக்கு அனுப்பிவிடத் தக்கது அல்ல; தானே விசாரணை நடத்தித் தள்ளிவிடத் தக்கது அல்ல. முதல் கட்டமாகவே, இந்தியாவின் தலைமை பரிசீலித்துப் பார்க்கத்தக்க விதமானது என்று லால்பகதூர் தீர்மானித்தார் என்றால், அதைவிட இழிவு வேறு என்ன வேண்டும்.

நாடே நகைத்தது! இவரே துடிதுடித்தார்!

அப்படியானால் என்னிடம் தங்களுக்குப் பரி பூரணமான நம்பிக்கை இல்லை என்றல்லவா பொருள் படுகிறது என்று கேட்டார், டி. டி. கிருஷ்ணமாச் சாரியார்.

நியாயமான கேள்விதானே! லால்பகதூருக்கு, டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் நேர்மையிலும் நாணயத் திலும் முழுஅளவு நம்பிக்கை இருக்குமானால், புகார் மனு வைப் பிரதம நீதிபதியிடம் அனுப்பப்போகிறேன் என்று அறிவிப்பாரா? இவருக்கு தெரியாதா, டி. டி. கிருஷ்ணமாச் சாரியார் எப்படிப்பட்டவர் என்பது—என்று நாட்டிலேயும் பலர் கேட்டனர்.

நயமாகப் பேசிப் பார்த்தார் டி. டி. கிருஷ்ணமாச் சாரியார்! லால்பகதூர் அசைந்து கொடுக்கவில்லை.

பயம் காட்டிப் பார்த்தார்; அப்படியானால் நான் பதவியை ராஜிநாமாச் செய்கிறேன் என்றார்; லால்பகதூர் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

நீங்கள் விசாரணை நடத்துங்கள்! அல்லது மந்திரி சபையினரிலிருந்து ஒரு குழு அமைத்து, விசாரணை நடத்தச் சொல்லுங்கள்—என்று வாதாடிப் பார்த்தார் நிதி மந்திரி.

லால்பகதூர் அந்த வாதம், வேண்டுகோள், மிரட்டல் எதற்கும் அசையவில்லை. பிரதம நீதிபதி யிடம்தான் புகார் மனுவை அனுப்பிவைப்பேன் என்று உறுதியாகக் கூறிவிட்டார்.

பதவியை ராஜிநாமாச் செய்தார், டி. டி. கிருஷ்ண மாச்சாரியார்!

லால்பகதூர் அதனை ஏற்றுக்கொண்டு, உடனடி யாகவே வேறு ஒருவரை நிதிமந்திரியாக்கி விட்டார்!

இந்த இலட்சணத்திலே இருந்திருக்கிறது இவருக்கு லால்பகதூர் காட்டிய மதிப்பும் மரியாதையும். இவர் கிளம்புகிறார் ஊருக்கு உபதேசம் செய்ய.

குட்டுப்பட்டார்! குனிந்து கொடுத்தார்! இவர் கிளம்புகிறார் கழகத்தை இழித்தும் பழித்தும் பேச!

தன் நேர்மை, நாணயம், தகுதி திறமை, வயது அனுபவம் ஆகிய எதற்கும் லால்பகதூர் மதிப்பளிக்க மறுத்துவிட்டாரே என்பதை எண்ணி எண்ணி, வெட்கம் விலாவைக் குத்திடும் மற்றவர்களுக்கு; இவர் கிளம்புகிறார், கழகத்தைத் தாக்கிட!

காட்டுவதுதானே இந்த வீராவேசத்தை லால்பகதூரிடம்! கேட்பதுதானே அவரை, எனக்குப் பதவி பெரிது அல்ல! இதோ விலகிவிட்டேன். என்மீது எவனெவனோ செய்த புகார் பற்றி என் வார்த்தையை நம்ப மறுத்துவிட் டீர்கள். இருக்கட்டும். நான் மாசு மறுவற்றவன் என்பது நாட்டுக்கு விளக்கப்பட்டாக வேண்டும். ஆகவே விசாரணை நடத்துங்கள், உண்மை துலங்கட்டும், என் நேர்மையும் நாணயமும் உலகுக்கு மெய்ப்பிக்கப்பட வேண்டும் என்று கூறுவதுதானே! அதற்குக் கிளம்பக் காணோம் ரோஷத் துடன், இப்போது கழகத்தைத் தாக்கத் தோள் தட்டிக் கிளம்புகிறார்.



லால்பகதூர், இவர் முகத்தில் பூசிய கரியை நாடு அறியாதா! இவர் பதவி விலகியது இது இரண்டாவது முறை—இரு முறையும் புகார் கிளம்பிய பிறகே இவர் பதவியை விட்டு விலகினார் என்பதனை நாடு அறியாதா!

மூக்கறுபட்டோம், நாலு பேர் கண்களிலே படா மல் மூலையில் உட்காருவோம் என்று 'சராசரிகள்' எண்ணிக் கொள்ளட்டும், நாம் அப்படியா! பெரிய ஆசாமி அல்லவா என்ற நினைப்புடன் கிளம்பி விட்டார்!

காமராஜர் இவரிடம் சொன்னாராம், 'போய்ப் பார்த்து வாரும், நாடு எப்படி இருக்கிறது: ஓட்டு எப்படிக் கிடைக் கும்' என்பது பற்றி.

காமராஜர் போகாத இடமா, பார்க்காத நிலைமையா, போடாத கணக்கா! அவருக்குப் புரியாததா இவருக்குப் புரியப்போகிறது? காமராஜர்தான் என்னை அனுப்பி வைத்தார் என்று இவர்தான் சொல்லுகிறார்; காமராஜர் வாய்திறந்து இதுவரை சொல்லவில்லை, நான்தான், டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரை அனுப்பி வைத்திருக்கி றேன் என்று.

அவர் சொல்லுவாரா? இவர் முகத்தில் லால் பகதூர் கரியைப் பூசியபோது, வாய் திறந்து, 'ஐயோ! பாவம்!' என்று ஒரு வார்த்தை அன்பாக, ஆதரவாகப் பேசவே இல்லையே அந்தக் காமராஜர்.

அவர் இப்போதா வாய் திறந்து, ஊர் நிலவரம் அறிந்துவந்து கூறிடும் என்று இவரிடம் சொல்லி யிருப்பார். இவர் சொல்லிக் கொள்கிறார் அப்படி!

லால்பகதூருக்குப் பிறகாகிலும், 'புகார் மனு' அபத்த மானது, தள்ளுபடி செய்தாகிவிட்டது என்ற 'நல்ல செய்தி' தரப்பட்டதா? இல்லையே!

இந்திராகாந்தியார், என்ன கூறினார்? டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் நேர்மையும், நாணயமும் நாடு அறியும். அவர்மீது யாரோ அபத்தமான புகார் செய் தனர், அதனைத் தள்ளுபடி செய்துவிட்டேன் என்று கூறினாரா? இல்லை! டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டதால், புகார்

மனு பற்றி மேற்கொண்டு கவனிக்கத் தேவை இல்லை என்று முடிவு செய்துள்ளேன் என்று மட்டுமே கூறினார்!

இது பெருமைக்குரிய நிலையா?

மேதையும் கூறிடான்!

ஆனால், இந்த மேதை ஏதோ தமது கீர்த்தி கொடி கட்டிப் பறப்பதாகக் கருதிக்கொண்டு கிளம்புகிறார் கழகத்தைத் தாக்கிட!

கழகம் ஆட்சி நடத்தினால், பெண்கள் நகை போட்டுக் கொண்டு ஊரிலே உலவ முடியாதாம்!

கேட்டனையா இந்தப் பேச்சை! என்ன அறிவுத் தெளி வப்பா இந்த அனுபவசாலிக்கு!

கழகம் ஆட்சி செய்தால், பெண்களை வழி மறித்துப் பொருளைக் களவாடுவார்களாம்! நகை களைப் பறித்துக்கொள்வார்களாம்! அப்படிப்பட்ட காலித்தனம் நடக்குமாம்! அவ்வளவு அராஜகம் இருக்குமாம்!

இவ்வளவும் எந்த ஆராய்ச்சி மூலம் இவருக்கு கிடைத்திருக் கிறது? கூறக் காணோம்.

கழகத்தைப்பற்றி இத்தகைய இழிவான கருத் தைக் கொண்டிருப்பின், சென்ற தேர்தலின் போது 30-இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் ஆதரவு காட்டி; ஓட்டு அளித்திருப்பார்களா? என்று கேட்டால் என்ன பதில் அளிப்பாரோ இந்த அறிவுக்கரசர்!

சட்டத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள எதிர்க்கட்சியாக, தமிழகத்தில் கொலுவிருக்கும் ஒரு அரசியல் கட்சியைப் பற்றி இத்தனை பெரிய பதவி வகித்தவர் இப்படியா பொறுப்பற்ற முறையில் பேசுவது! இதுதானா காங்கிரஸ் காட்டும் ஜனநாயகம்?

கழகத்தின் கொள்கைத் திட்டம் குறை மிக்கது என்று வாதிடட்டும்...அறிவுத் தெளிவுடன்.

அறிவு அற்றவர்கள் பேசுவதுபோல, கழகத்திற்குக் கொள்கை இல்லை, திட்டம் இல்லை என்றாகிலும் குளறட்டும். கழகம் ஆட்சிக்கு வந்தால், வழிப்பறி



நடக்கும்—பெண்களின் நகை பறிபோகும் என்றா பேசுவது.

ஆணவத்துக்குக்கூட ஒரு வரம்பு வேண்டாமா?
ஆளுங்கட்சி, ஆகவே நாக்கு எந்த அளவும் நீள லாம் என்றா கருதுவது?

நாடாளும் கட்சியினர் நாங்கள், ஆகவே நாராச நடையில்தான் பேசுவோம் என்றா போக்கு இருப்பது?

சே! இத்தனை இழிநடையா!

பதவி பறிபோய்விடுமோ, பசையும் ருசியும் கெட்டு விடுமோ என்ற கவலை எவ்வளவு தரக் குறைவான பேச்சையும் கொட்டச் செய்கிறதே! எதைச் சொல்லியா வது கழகத்தை இழிவுபடுத்த வேண்டும், எரிச்சல் மூட்ட வேண்டும் என்ற நினைப்பு நெளிந்திடக் காரணம் என்ன? கிலி! அச்சம்! பதவி பறிபோய்விடுமோ என்ற பதைப்பு!

பெண்களின் நகை பறிபோய்விடும் என்று பேசினால் மக்கள் பீதி அடைவார்கள், கழகத்தை ஆதரிக்க மறுப் பார்கள் என்றா எண்ணுகிறார் இவ்வளவு படித்தவர்! ஏமாளியும் அவ்விதம் எண்ணிட மாட்டானே!

காந்தியார் காலத்திலேயே இந்திப் பிரசார விடுதியில், விபசாரம் நடைபெற்றதாகப் புகார் வந்ததே! நாடு அறியாதா அதனை.

திங்கள் சில தானே ஓடியுள்ளன, ஒரு காங்கிரஸ் அமைச்சர் மீது ஒரு மாதிடம் வம்பு செய்ததாகப் புகார் கிளம்பி. நாடு மறந்துவிட்டதா!

குடித்துப் புரளுவதும் மனைவியை அடித்துக் கொடுமை செய்வதுமாக இருந்தார் என்ற புகார் கிளம்பியது யார் மீது? ஒரு காங்கிரஸ் அமைச்சர் மீது அல்லவா?

குடித்துவிட்டுப் புரளும் காங்கிரஸ் தலைவர்கள் உள்ளனர் என்று மொரார்ஜிதேசாயே கூறினாரே சென்ற ஆண்டு! நாடு மறந்து விட்டதா? என்ன நினைப்பிலே பேசுகிறார்? இருந்ததை இழந்துவிட்ட எரிச்சலிலா? இடிபட்ட வருத்தத்திலா? ஒரு முறைக்கு இரு முறை புகார் தாக்கியதாலா? இப்படியா, மற்ற ஜனநாயக நாடுகளிலே பேசுகிறார்கள்,

கழகம் ஆட்சிக்கு வந்தால், வழிப்பறி நடத்திடும் என்ற இழி மொழி பேசிடுகின்றாரே இந்த மூதறிஞர், இவருடைய காங்கிரஸ் கட்சி ஆட்சி நடத்தும் நாட்களில்தானே, டில்லியில் முதியவர், நீதிபதி வேலை பார்த்தவர், அவருடைய வீட்டிலேயே கொலை செய்யப்பட்டார்! காங்கிரஸ் ஆட்சி நடந்து கொண்டிருக்கும் நாட்களில்தானே கெய்ரோன் சுட்டுக் கொல்லப்பட்டார்! காங்கிரஸ் ஆட்சி நடந்து கொண்டிருக்கிற போதுதானே கொள்ளைக்காரக் கூட்டம் மத்தியப் பிரதேசத்தில் கொட்டமடித்தபடி இருக்கிறது!

> கொள்ளைக்காரத் தலைவர்களிலே ஒருவன் காங்கிரஸ் தலைவர் ஒருவரை அழைத்து, காங்கிரசின் தேர்தல் நிதிக்குக் கணிசமான தொகை நன்கொடை தந்தான் என்று சில காலத்துக்கு முன்பு செய்தி வெளி வந்ததே; நாடு மறந்துவிடுமா?

மக்கள் ஏதுமறியாதவர்கள், அவர்களிடம் எதனையும் கூறிடலாம், நம்பிவிடுவார்கள் என்ற நினைப்புடன் நாப்பறை நடாத்திடுகின்றனர்; மக்கள் தெளிவு பெற்று விட்டுள்ளனர் என்ற உண்மை அறியாது.

கழகம் ஆட்சிக்கு வந்தால், வழிப்பறி நடக்கும் என்று இழிமொழி பேசுகிறார் இந்தப் பெரியவர்; ஆனால் தம்பி! காங்கிரஸ் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறதே இப்போது, பஞ்சமாபாதகம் எந்த வகையிலே இருக்கிறது என்பது பற்றி ஒரு சிறு கணக்குக் கொடுக்கவா! இதோ!!

தம்பி! மற்றக் கட்சிகள் ஆட்சிக்கு வந்தால் பஞ்சமா பாதகம் தலைவிரித்தாடும் என்று பேசுகிறாரே மகானுபாவர், இவருடைய காங்கிரஸ் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் இந்த நாட்களில், ஒரு ஆண்டில் நடைபெற்றதாகக் கணக்கு எடுக்கப்பட்டிருக்கும் குற்றங்களின் தொகை எவ்வளவு தெரியுமா? 6,74,466!

ஆறு இலட்சத்துக்கு மேற்பட்ட கொடிய குற்றங்கள் தலைவிரித்தாடியிருக்கும் நிலை இந்த ஆட்சியில். இதிலே இருந்தவர் கதைக்கிறார் கழகம் ஆட்சிக்கு வந்தால் குற்றம் தலைவிரித்தாடும் என்று. அவ்வளவு நாகரிகமாகக்கூடப் பேசத் தெரியாததால், குளறி இருக்கிறார், நகை போட்டுக் கொண்டு பெண்கள் ஊரிலே உலாவ முடியுமா என்று.

எவ்வளவு அக்கறை, நகைபற்றி!!



இவ்விதம் பேசியவர் சொந்தம் கொண்டாடும் கட்சி ஆட்சி நடத்திடுகிறது, குற்றங்களோ ஆறு இலட்சத்துக்கும் மேல்! விவரம் வேண்டுமா! தம்பி! தருகிறேன்.

| | | |
|---|---|---|
| கொலை | — | 11,586 |
| பெண்ணைக் கடத்திச் சென்றகுற்றம் | — | 7,119 |
| கொள்ளை | — | 4,890 |
| வழிப்பறி | — | 7,551 |
| கன்னம் வைத்துக் களவாடியது | — | 1,34,324 |
| ஆடு, மாடு களவு | — | 23,122 |
| களவு | — | 2,29,331 |
| கலகம் | — | 29,096 |
| நம்பிக்கைத் துரோகக் குற்றம் | — | 18,092 |
| மோசடி | — | 9,738 |
| கள்ளநாணயம் தயாரித்தல் | — | 423 |
| பலதரப்பட்ட குற்றங்கள் | — | 1,99,194 |

தம்பி! ஒரு ஆண்டுக் கணக்கு! இந்த இலட்சணத்திலே இவர்கள் தர்பார் நடத்தும் நாட்டில் இருக்கிறது. இவர் வாயோ நீளுகிறது; வார்த்தையோ நாராசமாகிறது.

தம்பி! நான் தந்துள்ள கணக்கு 1962ம் ஆண்டுக்கானது. அந்த ஆண்டிலே என்ன காரணத்தாலோ குற்றங்களும் கொடுமைகளும் அதிக அளவிலே இருந்தன போலும், காங்கிரசின் மாபெருந் தலைவர்கள் உபதேசம் செய்யச் செய்ய, அந்தக் குற்றங்கள் குறைந்துகொண்டு வந்துள்ளன போலும் என்று எண்ணிக் கொண்டுவிடாதே! வளர்ந்தபடி இருக்கிறது என்று சர்க்கார் அறிக்கையே தெரிவித்திருக்கிறது.

1965ம் ஆண்டில், மூன்றே மாதங்களில், குற்றங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்ற கணக்கைக் கூட சர்க்கார் தந்திருக்கிறது.

மூன்றே மாதங்களிலே, தம்பி! காங்கிரசின் புனிதமான ஆட்சியிலே ஒரு இலட்சத்து எண்பத்து மூன்றாயிரம் குற்றங்கள்! வகையும் வேண்டுமா? பார்த்துக் கொள்ளேன்.

| | | |
|---|---|---|
| கொலை | — | 3162 |
| பெண் கடத்தல் | — | 1873 |

| | | |
|---|---|---|
| கொள்ளை | — | 1133 |
| வழிப்பறி | — | 1910 |

இது 1965-ம் ஆண்டில், மூன்று மாதத்துக் கணக்கு. 1961-ம் ஆண்டு, மூன்று மாதத்துக் கணக்குடன் இதனை ஒப்பிட்டுப் பார்ப்போமா? இவர்கள் ஆட்சி காரணமாகப் புனிதத் தன்மையும் ஒழுக்கமும் எந்த அளவு வளர்ந்திருக்கிறது (!) என்பது விளங்கிவிடும்.

| | | 1961 | | 1965 |
|---|---|---|---|---|
| | | (3 மாதம்) | — | (3 மாதம்) |
| கொலை | — | 2792 | — | 3162 |
| பெண் கடத்தல் | — | 1674 | — | 1873 |
| கொள்ளை | — | 1053 | — | 1133 |
| வழிப்பறி | — | 1607 | — | 1910 |

இப்படி வளர்ந்திருக்கிறது கொலையும் கொள்ளையும், பெண்களைக் கடத்திச் செல்லும் கொடுமையும், காங்கிரஸ் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் நாட்களில். இதற்காக வெட்கப்படாமல், வாயில் வந்ததைப் பேசுகிறார், பெரிய இடத்தில் இருந்தவர்.

காங்கிரஸ் ஆட்சியிலே கொலையும் கொள்ளையும் வற்பழித்தலும் வழிப்பறியும் போன்ற கொடுமைகள் களர்ந்துகொண்டே போகின்றன; நாம் 'பண்பு' கரரணமாக இதனை எடுத்துக் காட்டிடவில்லை; இதற்காக இந்த ஆட்சியை இடித்துரைக்கவில்லை. ஆனால், பாரேன் அந்த இடத்துப் பேச்சு எவ்வளவு தரம் கெட்டதாக இருக்கிறது என்பதனை.

கொலையும் கொள்ளையும், வழிப்பறியும் களவும், பெண்ணைக் கடத்திச் செல்வதும் கன்னம் வைப்பதும், மோசடியும் பிற பாதகங்களும், இவ்வளவு நடந்துள்ளன. இவைகளையா காட்டுகிறோம், காங்கிரசாட்சியைக் குறை கூற! நமக்கு இல்லை அத்தகைய இழிதன்மையான போக்கு!

நாம் ஆட்சிக்கு வந்துவிடுவோம் என்ற கிலி பிடித்ததும் பார் தம்பி! எத்தனை இழிமொழியைப் பொழியத் தோன்றுகிறது, இருப்பது பறிக்கப்பட்டுவிடும் என்ற எரிச்சல் காரணமாக.



ஆனால், தம்பி! அவர்கள் எத்தனை இழிமொழி உமிழ்ந்திடினும், நாம் நமது தரம் குறையாமல் நமது சொல்லையும் செயலையும் அமைத்துக்கொள்ள வேண்டும்.

எருமைகள் சேற்றில் புரளும்-அதனைக் கண்டும் ஆறறிவினர் அருவியில்தான் நீராடுகின்றனர்.

கழுகு அழுகிய பிணத்தைக் கொத்தித் தின்கிறது! கிளி, கொவ்வைக் கனியைத்தான் விரும்புகிறது!

புளித்த காடியைப் பருகுவான் குடிகாரன்; செவ்விளநீர் தேடுகிறான் பண்பாளன்.

எவர் எத்தகைய இழிமொழி பேசிடினும் தம்பி! நீ கானம்பாடிடும் வானம்பாடியாகவே இருந்திடல் வேண்டும்.

பண்புமறந்து, கண்ணியமற்று, காழ்ப்புக் காரணமாக ஆளவந்தார்கள் என்னென்ன இழிமொழி பேசுகின்றனர் என்பதை எண்ணிடும்போது தம்பி! நாம் மேற்கொண்டுள்ள காரியத்திலே வெற்றி கிடைத்திட மேலும் உறுதியும் ஊக்கமும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

யாராரோ வீசிடும்இழிமொழிகளை பழிச்சொற்களை, எல்லாம் கேட்டுக் கொண்டுதான் ஆகவேண்டுமா அண்ணா! என்று கேட்பாயேல், தம்பி! தயக்கமின்றிக் கூறுவேன், கேட்டுக்கொள்ளத்தான் வேண்டும். நாட்டுக்கு நல்லாட்சி அமைத்திட நாம் இந்த 'விலை' கொடுத்தாக வேண்டும்.

தம்பி! பாம்பும் மயங்கிடும் என்கிறார்கள், புல்லாங்குழல் இசை கேட்டிடின்! அந்தக் குழல் எப்படித் தயாரிக்கிறார்களாம் தெரியுமா? சூட்டுக்கோலால் துளை போட்டு! தீயால் சுடுகிறார்கள்; பிறகு தீஞ்சுவை இசை தரும் குழலாகிறது! சுடு சொல் நம்மீது வீசுகிறார்கள், வீசட்டும்!

அண்ணன்,

17—7—'66



காஞ்சிக் கடிதம் : 71

# கருப்பு மல்லி

- ★ உள்ளத்தில் தோன்றுவதை ஒளிக்காமல் பேசுபவர் அன்பழகன்!
- ★ மலையைக் கெல்லி எலி பிடித்த கதை!
- ★ மயக்க மருந்தில் பழையது, சுயராஜ்யம்; புதியது, ஜனநாயக சோஷியலிம்!
- ★ சைவ ஓட்டலிலே கோழிப்பிரியாணி தயாராம்!
- ★ காங்கிரஸ் சோஷியலிசத்தில் முதலாளிகளும் உண்டாம்
- ★ அதிகார போதை தெளியக் காத்திருக்கிறார்கள் மக்கள்!

தம்பி,

நள்ளிரவு ஆகிவிட்டதே, இப்போதாகிலும் எழுதப் போகலாமா என்று எண்ணிக்கொண்டேன். ஆனால் பேச்சின் சுவை என்னை மேலும் பேசவைத்துவிட்டது; மணி இப்போது இரண்டு; இதுவரை என்னோடு பேசிக் கொண்டிருந்த அன்பழகன் இப்போதுதான் வீடு சென்றார், நான் எழுத உட்கார்ந்தேன். வேலூர் மாநாட்டுச் சிறப்பு குறித்து அடுத்து நடைபெற இருக்கும் சிவகெங்கை மாநாடு, கள்ளக் குறிச்சி மாநாடு, பொள்ளாசி மாநாடு ஆகியவைகள் குறித்தும் பேசத் தொடங்கிக் கழக வரலாறு, வளர்ச்சி, எதிர்காலம், அரசியலில் உருவாகிக்கொண்டு வரும் சூழ்



நிலைகள் ஆகிய பல பற்றிப் பேசினோம். உள்ளத்திலே தோன்றுவதை ஒளிவு மறைவில்லாமல் பேசுபவர் அன்பழகன். அவரிடம் கழகப் பிரச்சினைகள் பற்றிப் பேசுவதிலே எனக்குத் தனியான விருப்பம் உண்டு; ஆகவே நேரம் ஓடுவதே தெரியாமல் பேசிக்கொண்டிருந்துவிட்டேன்; பேசப் பொருள் நிரம்ப இருக்கிறது, நேரம்தான் இல்லை. அவரிடம் பேசுவது மட்டுமல்ல, தம்பி! நாட்டு மக்களிடம் நாம் பேசுவதற்கு உள்ள பிரச்சினைகள் நிரம்ப உள்ளன; போதுமான நேரம் இல்லை. காலம் கடுவேகத்துடன் ஓடிக்கொண்டிருக்கிறது; செய்து முடிக்க வேண்டிய காரியங்களோ அளவிலும் வகையிலும் அதிகமாகிக்கொண்டே உள்ளன. என்ன செய்வது! அமைச்சர்களைப் போலவோ காங்கிரசின் பெருந் தலைவர்களைப்போலவோ,

ஆமாம்! அப்படித்தான்!

அதனால் என்ன!

ஆகட்டும் பார்க்கலாம்!!

என்று பேசிவிட முடிகிறதா! ஒவ்வொரு பிரச்சினைக்கும் விளக்கம்—கேட்போர் ஒப்புக் கொள்ளத்தக்க விதமான விளக்கம்-தரவேண்டி இருக்கிறது. பிரச்சினைகளோ சிக்கல் மிக்கனவாகி விட்டுள்ளன; பொதுமக்களுக்கோ அவைகளை ஆராய்ந்து கொண்டிருக்கப் போதுமான நேரமோ மன அமைதியோ கிடைப்பதில்லை. வாழ்க்கையின் சுமை அவ்வளவு அழுத்துகிறது; அல்லல்கள் அவர்களுக்கு அடுக்கடுக்காக.

ஆளுங்கட்சியினரோ பல பிரச்சினைகள் சிக்கலாகி விட்டிருக்கின்றன என்று தெரிந்தும், துளிகூடத் திகைப்புக் கொள்ளாமல், எல்லாம் தன்னாலே சரியாகிவிடும் என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

பிரச்சினைகள் உள்ளன என்று ஒப்புக்கொள்வதற்கே கூட அவர்களுக்கு மனம் வருவதில்லை; மறைக்கப்பட முடியாதவிதமாகப் பிரச்சினைகள் அழுத்த ஆரம்பித்த பிறகு தான், பிரச்சினை இருப்பதாகவே ஒப்புக் கொள்கிறார்கள். ஒப்புக்கொண்ட பிறகாகிலும், தக்க பரிகாரம் தேட முற்படுகின்றனரா என்றால், இல்லை! அப்படித்தான் இருக்கும் என்று கூறிக்கொண்டே காலத்தை ஓட்டப் பார்க்கிறார்கள்; பிறகு என்ன பரிகாரம் தேடலாம் என்பதுபற்றி

ஆராய ஒரு கமிட்டி அமைக்கிறார்கள்; பிறகு கமிட்டியின் கருத்து பற்றி விவாதிக்கிறார்கள்; பிறகு பரிகாரத்துக்கான முறைபற்றி அறிவிப்பு அளிக்கிறார்கள்! செயல்படத் தொடங்குவதோ மிகுந்த காலதாமதத்துக்குப் பிறகு; செயல் மூலம் கிடைத்திடும் பலனோ மலையைக் கெல்லி எலி பிடித்த கதை கூறுவார்களே அதுபோல! ஏன் இந்த அலட்சியப் போக்கு ஏற்படுகிறது என்றால்,

அல்லலைத் தாங்கிப் பொறுத்துக் கொண்ட மக்கள், மேலும் சில காலம் அல்லலைத் தாங்கிக் கொள்வார்கள்.

தாங்க முடியாத அளவுக்கு அல்லல் வளர்ந்தாலும் மக்கள் சீறி எழமாட்டார்கள்.

சீறி எழுந்திடினும் அவர்களை அடக்கி ஒடுக்கிட நம்மிடம் அடக்குமுறை இருக்கிறது.

அடக்குமுறை ஆட்சியை மாற்றிடத்தக்க ஆற்றல் நாட்டிலே எழவில்லை.

என்ற இந்த எண்ணம் ஆட்சியினருக்குத் தடித்து விட்டிருக் கிறது. ஆகவே அவர்கள் மக்களைப் பற்றிய கவலையற்று இருக்கின்றனர்.

ஜனநாயகத்திலே இந்த நிலை வளர்ந்து விடுவது பேராபத்தை மூட்டிவிடும்.

வளைக்க முடியாதது பிறகோர் நாள் முறிக்கப் பட்டுப் போகும் என்பதுபோல, ஆட்சியைத் திருத்த இயலாமல் போய்விடுமானால், சட்டம், சமாதானம், ஒழுங்கு, அமைதி ஆகியவைகள் அழியினும் சரி, பரி காரம் தேடித் தீரவேண்டும் என்ற ஆத்திர உணர்ச்சி மேலோங்கும்.

அந்த நிலை சமூகத்தின் கட்டுக்கோப்பையேகூடக் கெடுத்துவிடும்.

மக்களை வாழவைப்பதிலே வெற்றிபெறத் தவறிவிடும் துரைத்தனத்தை மாற்றி அமைக்கும் அதிகாரம் பெற்றுள்ள பொதுமக்கள், அறிவாற்றலுடன் பணியாற்றி ஆட்சியை மாற்றிட முனையவேண்டுமேயன்றி, நம்மால் ஆகுமா என்று நெடுங்காலம் பெருமூச்செறிந்து கொண்டிருந்து



விட்டு, பிறகோர் நாள் எரிமலையாகி விடுகிற போக்கு கூடாது.

இவ்விதமான போக்கு எழும் என்று, அந்தப் போக்கு வெடித்துக் கிளம்புகிற வரையில், எந்தக் கொடுங்கோலரும் எதிர்பார்ப்பதில்லை; யாரேனும் துணிந்து எச்சரித்தாலும் ஏளனம் செய்வர்; நம்பிட மாட்டார்கள்.

ஊமைகளா இத்தனை முழக்கம் எழுப்புகிறார்கள்!

அடங்கிக் கிடந்தவர்களா இத்தனை ஆர்ப்பரிப்புச் செய்கின்றனர்!

சவுக்கடிக்கு நடுங்கிக் கொண்டிருந்தவர்களா இன்று துப்பாக்கிக்கு மார் காட்டுகின்றனர்!

அடிபணிந்து கிடந்தவர்களா இன்று முடிபறிப் பேன் என்று கூவுகின்றனர்!

என்று வியந்துதான் கொடுங்கோலர் கேட்டனர், ஒவ்வொரு புரட்சி வெடித்தபோதும்; இப்படித்தான் நடக்கும் என்று முன்பே தெரியும் என்று எந்தக் கொடுங்கோலனும் கூறின தில்லை.

முடியாட்சிக் காலத்திலே முரட்டுப் போக்கு காரண மாக இருந்து வந்தது குருட்டுப் போக்கு.

குடியாட்சிக் காலத்திலே முரட்டுப் போக்கு காட்ட இயலுவதில்லை; முறை மாறியிருக்கிறது. நெறித்த புருவம் அல்ல! புன்னகை! பாகுமொழி! இவைகளைக் கருவியாக்கிக் கொண்டு மக்களை மயக்கிக் கட்டுப்படுத்துவதிலே முனை கின்றனர்.

முரட்டுப் போக்குடன் முடிதரித்தோன் நடந்து கொண்டால், பல கொடுமைகளைத் தாங்கித் தவித்த மக்களிடமிருந்து ஓர் நாள், எதற்கும் அஞ்சாத ஒரு வீரன் எழுவான்! கொடுங்கோலன் வீழ்வான், இடையே இரத்தம்! தீ! பலி! நிறைய!

மக்களைத் தமது புன்னகையாலும் பாகுமொழியாலும் மயக்கிடும் போக்கிலே குடியாட்சிக் கோமான்கள் நடந் திடும்போது, எதிர்ப்பு உணர்ச்சி மங்கிடுவது இயல்பு. இந்த இயல்பு காரணமாகவே, அல்லல் பல தொடர்ந்து கிளம் பித் தாக்கியும், மக்கள், இந்தக் கொடுமைகளை மூட்டி

விட்ட ஆட்சியினருக்கு எதிராகப் பொங்கி எழ முடியாதவர்களாகின்றனர்.

இதனைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு, ஆள வந்தார்கள் தமது பதவிகளைக் காப்பாற்றிக்கொண்டு வருகின்றனர்.

ஆனால் தம்பி! மெள்ள மெள்ள அந்த மயக்கம் நீங்கிக் கொண்டு வருகிறது; தேளிவும் துணிவும் மிகுதியாகிக் கொண்டு வருகிறது- இனி நீண்ட நாட்களுக்கு மக்களை மயக்கிக் கொண்டிருக்க முடியாது பழைய பேச்சினால் என்று கண்டுகொண்ட காங்கிரஸ் கட்சியினர் இப்போது புதிய மயக்கம் தரும் பானத்தைத் தயாரித்துத் தருகின்றனர்; இந்த மயக்க மருந்து இன்னும் சிலகாலம் வேலை செய்யும் என்று நம்பிக்கொண்டும் இருக்கின்றனர். அந்த மயக்க மருந்துதான், தம்பி, இப்போது இவர்கள் வெகு வேகமாகப் பேசிக் கொண்டிருக்கும். ஜனநாயக சோஷியலிசம் என்பது.

பழைய மயக்க மருந்து வேலை செய்வதில்லை முன்பு போல!

‘சுயராஜ்யம்’ என்ற சொல் காதில் பாய்ந்ததும் காதில் தேன் வந்து பாய்ந்திடும் நிலை; முன்பு!

சுயராஜ்யம் வருகிறது! என்று அறிவித்ததும் பொது மக்கள் கண்முன்பு, அவர்கள் மனத்திலே இருந்து வந்த ஆசைகள் அவ்வளவும் வடிவம் கொண்டு நின்றன!

சுயராஜ்யம் வருகிறது, இனி வறுமை இல்லை. வாட்டம் இல்லை, வரிக்கொடுமை இல்லை; உண்ண உணவு, உடுக்க உடை, குடி இருக்க வீடு, செய்யத் தொழில், தொழிலில் நீதி நிம்மதி எல்லாம் கிடைக்கும் என்று மக்கள் நம்பினர்.

அத்தகைய ஒரு இன்ப வாழ்க்கையைப் பெற்றுத் தந்திடுவோர் காட்டிடும் பாதை நடந்திடுவோம், கேட்டிடுவதைத் தட்டாமல் தயங்காமல் கொடுத்திடுவோம் என்று சூளுரைத்தனர்; செயல்பட்டனர்.

சுயராஜ்யம் வந்தது! கொட்டு முழக்குடன் கோலாகல விழாவுடன்! கொடி பறந்தது, பட்டொளி வீசி! கூனன் நிமிருவான்! குருடன் பார்வை பெறுவான்! என்றனர் குதூ



கலத்துடன். ஆடுவமே! பள்ளுப் பாடுவமே! ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்பதாகக் கவிதைகள் இசைக்கப்பட்டன! ஒளிமயமான எதிர்காலம் தெரிந்தது, மனக்கண் முன்பு. ஆனால் நாட்கள் உருண்டோடின, ஆண்டுகள் புரண்டோடின, ஆசைக் கனவுகள் நிறைவேறவில்லை. அல்லல் அகலவில்லை, தொல்லை தொடர்ந்தது; சுயராஜ்யம் என்றால் சுகராஜ்யம் என்று எண்ணிக் கொண்டிருந்தோமே, ஒரு சுகத்தையும் காணவில்லையே, கண்ணீர் விட்டா வளர்த்தோம்; செந்நீர் விட்டல்லவா வளர்த்தோம் சுதந்திரத்தை, நமக்கு ஒரு பயனும் கிடைக்கக் காணோமே என்று ஏக்கப்பட்டனர் மக்கள்.

ஆனால் இதுதானா ஐயா! சுயராஜ்யம்! என்று கேட்கக் கூச்சம்!! அச்சம்!!

ஒரு நூற்றாண்டாக உம்மைக் கப்பிக் கொண்டிருந்த அவதிகள், சுயராஜ்யம் கிடைத்த மறுநாளேவா ஓடிவிடும்! காலம் வேண்டும் நண்பர்களே! காலம் வேண்டும்! வேலையைத் தொடங்கிவிட்டோம், விரைவிலே பலனைக் காணப் போகிறீர்கள். அதற்குள் அவசரப்படாதீர்கள் என்று அன்று தலைவர்கள் சொல்லக் கேட்ட மக்கள், “ஆமாம்! அவசரப்படக் கூடாது!!” என்று கூறினர்; பொறுத்துக் கொண்டனர்; எதிர்பார்த்தது கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன்.

ஆனால் ஆண்டுகள் பதினெட்டுக்கு மேலாகிவிட்ட பிறகும் எதிர்பார்த்த இன்ப வாழ்வு கிடைக்காமல் போனதையும், அதேபோது ஒரு சில செல்வந்தர்களுக்கும், ஆளுங் கட்சியின் ஆலவட்டங்களுக்கும் இன்ப வாழ்வு கிடைத்திருப்பதையும் கண்ட மக்கள், வெகுண்டு எழுந்து, இதற்குப் பெயர்தான் சுயராஜ்யமா! என்று முழக்கமிடலாயினர்! சுயராஜ்யம் என்ற சொல்லால் மயக்கினீர்கள்—கண்டு கொண்டோம்; மயக்கத்தின் பிடியிலிருந்து இதோ விடுபட்டோம்; காட்டு கணக்கினை! என்று மக்கள் கேட்டிடலாயினர். ஓ! ஓ! பழைய மயக்க மருந்து போதுமானதாக இல்லை; புதிதாக ஒன்று தந்தாக வேண்டும் என்பதனை அறிந்த தந்திரத் தலைவர்கள், ஜனநாயக சோஷியலிசம் என்ற சுவையினையே மயக்க மருந்து ஆக்கித் தர முயன்று கொண்டிருக்கின்றனர்.

நாளைக்கு ஒரு சூரணம் தருகிறேன், அதனைத் தேனிலே குழைத்து மூன்றே வேளை சாப்பிடு, நோய்

கட்டாயம் பறந்துபோகும்—என்று மருத்துவர் சொல்லும்
போது, இவ்வளவு நாள் இவர் கொடுத்த மருந்து துளியும்
பயன் தரவில்லையே; ஒவ்வொரு வகையான மருந்து
தருகிறபோதும் இதுபோலத்தானே இவர் கூறினார் என்ற
எண்ணம் எளிதிலே ஏற்பட்டு விடுவதில்லை. இந்த
மருந்தாவது 'வேலை செய்கிறதா பார்க்கலாம்! மருத்துவர்
தான் இவ்வளவு நம்பிக்கையுடன் சொல்லுகிறாரே, இதைச்
சாப்பிட்டுப் பார்ப்போம் என்றுதான் எண்ணம் கொள்ளச்
செய்கிறது. மனித இயல்பு! அதிலும் நம்முடைய நாட்டு
மக்களின் இயல்பு பற்றிக் கூறிடவா வேண்டும்!!

இதிலாவது பலன் கிடைக்கிறதா பார்க்கலாம், இவரா
லாவது நலன் கிடைக்கிறதா பார்க்கலாம் என்று எண்ணிக்
கிடந்திடும் போக்கு; மிகுதியாக. அந்த இயல்பைப் புரிந்து
கொண்டு அதற்குத் தகுந்தபடி தமது சொல்லை மாற்றிக்
கொண்டு வருவதிலே வல்லவர்கள், நம்மை ஆண்டு
கொண்டுள்ளவர்கள்.

நாம் தம்பி! மக்களின் அந்த இயல்பையும் மாற்ற
வேண்டி இருக்கிறது; ஆளவந்தார்களின் போக்கையும்
திருத்தவேண்டி இருக்கிறது.

துவக்கத்திலே இதுகுறித்து அக்கறை காட்டாமலிருந்து
வந்த மக்கள் இப்போது நாம் எடுத்துச் சொல்வதைக்
கேட்டுத் தெளிவு தேடிக் கொள்வதிலும், அதன் காரண
மாகத் தமது இயல்பை மாற்றிக் கொள்வதிலும் முனைந்து
நிற்கின்றனர். இதனை நாம் பொதுக் கூட்டங்களில் காணு
கின்றோம். மாநாடுகளிலே இதனை மிக விளக்கமாகக்
காணுகின்றோம்.

வேலூர் மாநாட்டிலே, மக்கள் காட்டிய இந்த அக்கறை
குறித்து நான் அன்பழகனுடன் பேசிக் கொண்டிருந்தபோது,
அங்கு அவர் தந்த விளக்க உரைக்காகப் பாராட்டினேன்.
அன்று அவருடைய பேச்சு எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

ஜனநாயக சோஷியலிசம் பேசுகிறது இந்தக் காங்கிரஸ்
ஆட்சி; ஆனால் அதனுடைய செயலிலே ஜனநாயகமும்
இல்லை, சோஷியலிசமும் காணோம் என்பதற்கான விளக்
கத்தை அவர் மிகத் தெளிவாகத் தந்திருந்தார்.

எதிர்க்கட்சிகள் வளருவது கண்டாலே எறிந்து விழும்
போக்கும், ஆங்கு உள்ளவர்களை வலைவீசிப் பிடிக்கும்
போக்கும், ஜனநாயகமாகுமா!



நாட்டை ஆளும் தகுதியும் திறமையும் தமக்கன்றி
பிறர் எவருக்கும் இல்லை என்று பேசிடும் அகம்பாவம் ஜன
நாயகமாகுமா!

மன்னன் மகேசன் பிரதிநிதி! அரசன் ஆண்டவனுக்குத்
தான் பதில் கூறவேண்டியவன்; மக்களுக்கு அல்ல! மன்னன்
செய்திடும் காரியம் கொடுமை உள்ளதாயினும் எதிர்த்திட
லாகாது; முறையிட்டுக் கொள்ளலாம்; கடவுளை வேண்டிக்
கொள்ளலாம்—என்ற தத்துவத்தின்மீது பலப்பல நூற்
றாண்டுகளாகக் கட்டப்பட்டு, கெட்டிப்படுத்தப்பட்டிருந்த
முடியாட்சி முறையை உடைத்தெறியுமுன்பு பல ஆயிர
வரின் மண்டைகள் பிளந்தெறியப்பட்டன! எவ்வளவோ
இரத்தத்தைக் குடித்துக் கொக்கரித்து, பிறகே குடியாட்சி
முறை மலர்ந்தது.

முடியாட்சியிலே நெளிந்து கொண்டிருந்த கருத்து
மெள்ள மெள்ளக் குடியாட்சியிலும் தலைகாட்டுகிறது
என்றுதானே கூறவேண்டும், இன்றைய ஆட்சியாளர்கள்,
தாங்கள் மட்டுமே ஆளப்பிறந்தவர்கள் என்று ஆணவம்
கக்கும்போது! அந்தப் போக்கு, ஜனநாயகமாகுமா!

அத்தகைய போக்கினை மேற்கொண்டு விட்டவர்கள்,
ஜனநாயகப் பாதுகாவலர்கள் என்று வேறு தங்களைக்
கூறிக் கொள்கின்றனர்.

மக்களின் ஆதரவினைப் பெற்றிடும் வாய்ப்புப் பெற்ற
எவரும் நாடாளும் தகுதி பெறுகின்றனர்; மக்களின் நல்
வாழ்வுக்கான முறையிலே ஆட்சி நடத்திடும் எவரும்,
மீண்டும் மக்களின் ஆதரவைப் பெற்றிடும் தகுதியைத்
தேடிக் கொள்கின்றனர்.

காங்கிரஸ் ஆட்சியாளர்களோ, நாட்டிலே வேறு
யாருக்குமே நாடாளும் தகுதி இல்லை என்ற அகம்
பாவம் பேசி, நாட்டை ஆண்டு கொண்டு வருகின்ற
னர், தொடர்ந்து.

உள்ளபடி, எவர் ஆட்சி நடத்தினாலும் அவர்களின்
திறமையால் கிடைத்திடும் பலனைக் காட்டிலும் மிகுதியான
பலன் கிடைத்திடத்தக்க முறையிலே ஆட்சி நடத்திட
மற்றொரு கட்சியினர் வாய்ப்புப் பெற்று, பழைய ஆட்சி
யுடன் புதிய ஆட்சியை ஒப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்பு

மக்களுக்குக் கிடைத்தால் மட்டுமே, நாடாளும் தகுதி உள்ளவர்கள் எவர் என்பது பற்றிய உண்மையான மதிப்பீடு கிடைத்திட முடியும்.

ஓட்டப்பந்தயத்தில் ஒன்பது பேர் கலந்து கொண்டால்தான், யார் அதிக வேகமாக ஓடுகிறார்கள் என்று கண்டறிந்து பரிசளிக்க முடியும். பந்தய மைதானத்திலே நுழையும் தகுதி எனக்கு மட்டுமே உண்டு என்று கூறிக்கொண்டு ஒரே ஆசாமி திடலில் ஓடுகிறான் என்றால், கேலிக்கூத்தாக அல்லவா கருதிடுவர்.

ஆனால் அத்தகைய முறையைத்தான் காங்கிரஸ் ஆட்சியினர், ஜனநாயகம் என்று கொண்டுள்ளனர். அது ஜனநாயகம் ஆகாது. மக்கள் இதனை அறிந்துகொண்டதால் தான், எதிர்க்கட்சிகளின் பக்கம் வந்துகொண்டிருக்கிறார்கள். ஆட்சி மாறவேண்டும் என்று விரும்புகிறார்கள்.

ஆகவே மக்களை மறுபடியும் ஒரு மயக்கத்தில் ஆழ்த்தித் தமது பக்கம் இழுத்துக் கொள்ளவேண்டும் என்ற எண்ணத்துடனும், நம்பிக்கையுடனும், கேட்பதற்கு இனிப்பாக இருக்கும் 'சோஷியலிசம்' பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

அதிலே அவர்கள் எவ்வளவு நாணயத்தோடு உள்ளனர் என்பதும், அதனைச் செயல்படுத்த எந்த முறைகளைக் கடைப்பிடிக்கிறார்கள் என்பதும் ஒருபுறம் இருக்கட்டும்.

அந்த சோஷியலிசத்தை நிறைவேற்றிக் கொடுக்கும் தகுதி, தமக்கன்றி மற்ற எந்தக் கட்சிக்கும் இல்லை என்று கூறும் உரிமை இவர்களுக்கு யார் அளித்தது? என்ன காரணம் காட்டி இவர்கள் அந்த உரிமை தமக்கே இருப்பதாகக் கூறுகிறார்கள்.

நம்முடைய பொதுக்கூட்டங்களிலும் மாநாடுகளிலும் கலந்துகொள்கின்ற மக்கள் யார்? மேடையிலே அமர்ந்திருக்கிற கழக முன்னணியினர் எவரெவர்? மாவட்டச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள் யார்? சட்ட மன்றம், பாராளுமன்றம் ஆகிய இடங்களில் உறுப்பினராகியுள்ள கழகத் தோழர்கள் எப்படிப்பட்டவர்? மிட்டா மிராசுகளா! எட்டயாபுரம், போடி ஜெமீன் வழிவந்தவர்களா! பெரும் பண்ணைக்குச் சொந்தக்காரர்களா! நம்மிடம் தீராதபகை கொண்டவனும் அவ்விதம் கூறிடமாட்டானே! காம



ராஜரே ஒருமுறை கழகத்தில் உள்ளவர்களைப் பிச்சைக்காரர்கள்!—என்றே கேலி பேசியிருக்கிறாரே.

இவர்களைக் கொண்டதும் இப்படிப்பட்டவர்களால் நடத்தப்பட்டு லருவதுமான திராவிட முன்னேற்றக் கழகம் சோஷியலிசத்தைச் செயல்படுத்தாதா?

சோஷியலிசம் வேண்டும்! ஒப்புக்கொள்கிறோம், வரவேற்கிறோம்! ஆனால் அதனைச் செயல்படுத்தும் திறமையும், உரிமையும், கழகம் போன்ற மற்றக் கட்சிகளுக்கு இல்லை, எமக்குத்தான் உண்டு என்று கூறிக் கொள்ளக் காங்கிரசுக்கு என்ன யோக்யதை இருக்கிறது?

சோஷியலிசத்தைச் செயல்படுத்திக் கொடுத்திடத் தக்கவர்களாலா காங்கிரஸ் நடத்தப்பட்டு வருகிறது? ஊருக்கும் அந்தக் கட்சியிலே உள்ள மூலவர்கள் எப்படிப்பட்ட பெரிய புள்ளிகள் என்பது மக்களுக்குத் தெரியாதா! அப்படிப்பட்ட பெரிய புள்ளிகளின் ஆதிக்கம் காரணமாகத் தான், ஏழைகளின் தொகை பெருகியிருக்கிறது, அவர்களின் அல்லல்—வளர்ந்து விட்டிருக்கிறது என்பதனை மக்கள் அறியமாட்டார்களா? அதே பேர்வழிகளின் பிடியிலே உள்ள காங்கிரசுக் கட்சியினால் எப்படி சோஷியலிசத்தைச் செயலாக்கிட முடியும்!—என்பதுபற்றியெல்லாம் மக்கள் எண்ணி பார்க்காமலா இருக்கிறார்கள்?

சோஷியலிசம் பேசும் காமராஜர் பவனி வருகிறபோதும் கொலுவீற்றிருக்கிறபோதும் சீமான்கள் பக்கம் நின்று பராக்குக்கூறுவதையும் மக்கள் பார்க்கத்தானே செய்கிறார்கள்!

கழகத்தை நடத்துகின்றவர்கள் வருகின்ற விழாக்களிலே, எந்தப் பெரிய புள்ளியும் கலந்து கொள்வதில்லை என்பதையும் மக்கள் தெரிந்து வைத்துக் கொண்டுதானே இருக்கிறார்கள்.

அப்படி இருக்கும்போது, சோஷியலிசத்தை எம்மால்தான் செயல்படுத்த முடியும் என்று காங்கிரஸ் கட்சி பேசுவதை எப்படி மக்களாலே நம்ப முடியும்!

பணக்காரர்கள் புடைசூழப் பவனி வந்து கொண்டே பணக்கார ஆதிக்கத்தை ஒழிக்கப் போகிறோம் பாரீர்! ஆதரவு தாரீர்?—என்று முழக்கம் எழுப்புகின்றனர் ஆளவந்தார்கள், எதைச் சொன்னாலும் மக்கள் நம்பிக்கொள்கிறார்கள்

என்ற நினைப்பில். ஆனால் மக்கள் அத்தனை தெளிவற்ற வர்களாக இல்லை.

> அவர்கள், காகிதப் பூவில் மணம் இருக்காது என்பதை அறியாதவர்கள் அல்லர்.

அதனை நன்கு அறிந்து கொண்டிருப்பதனால் தம்பி! நம்மிடம் அத்தனை பற்றும் பாசமும் காட்டுகின்றனர்.

புதிய மயக்க மருந்து பலனளிக்கவில்லை என்பதைக் காங்கிரசாரே இப்போது மெள்ள மெள்ள உணர்ந்து கொண்டு வருகின்றனர். 'சுயராஜ்யம்'—என்று சொன்ன போது மக்களிடம் கிளம்பிய எழுச்சி இப்போது காணோமே என்று ஏக்கமடைந்து கொண்டு வருகின்றனர். திங்கள் தவறாமல் விழா நடத்துகிறார்கள்; ஜனநாயக சோஷியலிச விழாவாம்!

அவ்விதமான ஒரு விழாவுக்கான அறிவிப்பு, கொட்டை எழுத்துக்களிலே மாயவரம் சுவரிலே — எழுதிவைக்கப் பட்டிருந்ததைக் காண நேரிட்டது; என்னால் சிரிப்பை அடக்கிக்கொள்ள முடியவில்லை. இவ்வளவு துணிந்து போலி நாடகமாடிடும் சாமர்த்தியம் கொண்டவர்களாகக் காங்கிரசார் இருக்கிறார்களே என்பதை எண்ணி வியப் படையாமலும் இருக்க முடியவில்லை.

ஜனநாயக சோஷியலிச விழா; தம்பி! மாயவரத்தில். யார் தலைமை?

> தலைமை வகித்தவர், சக்தி விலாஸ் பஸ் கம்பெனி முதலாளி பார்த்தசாரதி என்பவர்.

நான் முதலில், யாரோ வேண்டுமென்றே சக்தி விலாஸ் காரரைக் கேலி செய்ய, இதுபோல எழுதி இருக்கிறார்களோ என்று எண்ணிக் கொண்டேன்; நண்பர்கள் சொன்னார்கள், அவர்தான் தலைவர், அறிவிப்பு அதிகாரபூர்வமானதுதான் என்று.

இந்தப் போலி நாடகம் நடத்த, தம்பி! மெத்த நெஞ்சுரம் வேண்டும்.

கேட்டுப்பாரேன், இது எப்படி ஐயா பொருந்துகிறது; விழா சோஷியலிசத்துக்காக! தலைமை வகிப்பவரோ, பெரிய பஸ் முதலாளி! சோஷியலிசம் வெற்றி பெற.



அவரா வழி அறிந்து கூறுவார்!—என்று. ஒரு விளக்கம் வெடித்துக்கொண்டு கிளம்பும், எமது சோஷியலிசத்தில் முதலாளியும் உண்டு!—என்பதாக.

காங்கிரசார் கூறிடும் சோஷியலிசம் அப்படிப்பட்டது.

சைவ ஓட்டல்-கோழி பிரியாணி தயார்!-என்பது போன்றது!

சைவ ஓட்டல் என்கிறீர்களே, கோழி பிரியாணி அங்கு இருக்கலாமா என்றால், பதில் என்ன கூற முடியும்? கேட்டுப்பாருங்கள், காங்கிரஸ் பேச்சாளர்களை!

பைத்தியக்காரா! நாங்கள் நடத்தும் ஓட்டல் சைவ ஓட்டல். சந்தேகம் வேண்டாம்; உள்ளே வந்து பார், அவரைப் பொறியலும் கத்தரிக் கூட்டும் வெண்டைக் குழம்பும் இருப்பதை—என்பார்.

ஆனால் கோழி பிரியாணி தயார் என்று 'போர்டு' இருக்கிறதே என்று கேட்டால், திகைத்துப் போய்விடுவாரா என்கிறீர்களா? திகைக்க மாட்டார்கள்; துணிச்சல் மிக்கவர்கள்!

ஆமாம்! கோழி பிரியாணியும் உண்டு! அதனால் என்ன? சைவ ஓட்டல் இது, ஆகவே சைவ பதார்த்தங்கள் உள்ளன. சைவ ஓட்டல் என்றால், வெண்டையும், கத்தரியும், அவரையும் பிற காய்களும் உண்டு என்றுதானே பொருள்; இருக்கின்றன! சைவ ஓட்டல் என்று அறிவித்திருப்பதாலேயே, இங்கு இறைச்சி இல்லை என்றா பொருள்! அப்படியா அறிவிப்புப் பலகை சொல்லுகிறது.

> இங்கு ஆட்டு இறைச்சி, கோழிக்கறி போன்றவை கிடைக்காது.

என்றா எழுதியிருக்கிறோம். எமது ஓட்டல், சைவ ஓட்டல், —ஆனால் எமது சைவ ஓட்டலில் கோழிக்கறியும் இருக்கும் என்று கூறிவிட்டு, அடுத்த கூட்டத்திற்காக அவசரமாகக் கிளம்புவார். இடையிலே வேறோர் காரணம் மனத்திலே ததும்பும்; உடனே, திகைத்துப் போயுள்ள உன்னை இழுத்து நிறுத்தி, இன்னொரு காரணம் கூறுகிறேன்- இது சைவ ஓட்டல் என்பதை உறுதிப்படுத்த. முதலாளி இருக்கிறாரே, அவர் சுத்தச் சைவர், முட்டைகூடச் சாப்பிட மாட்டார், தெரியுமா? அவர் நடத்தும் கடையைச் சைவ

ஓட்டல் என்று கூறுவது தவறா? - என்று கேட்டுவிட்டு - இன்று ஒரு போடு போட்டுவிட்டோம் என்ற திருப்தியுடன் நடையைக் கட்டுவார்!

தம்பி! கோழி பிரியாணி தயார்! என்ற அறிவிப்புடன், சைவ ஓட்டல் என்ற பலகையைத் தொங்கவிட்டு யாரும் கடை நடத்த இன்னும் துணியவில்லை.

காங்கிரஸ் கட்சியினரோ தனிப்பட்ட முதலாளிகளும் உண்டு எமது சோஷியலிசத்தில் என்று துணிச்சலுடன் கூறுகின்றனர்.

கோழி பிரியாணியும் வைத்துக்கொண்டு இந்த ஓட்டலுக்குச் சைவ ஓட்டல் என்று பெயரிடலாமா என்று கேட்டதும், கடை நடத்தும் முதலாளி சுத்தச் சைவர் - முட்டை கூடச் சாப்பிடமாட்டார் என்று கூறும் துணிச்சல்காரரைப் போல, முதலாளிகளையும் வளர்த்துக் கொண்டு சோஷியலிசம் தழைக்கும் என்றும் பேசுவது பொருளற்றதாக இருக்கிறதே என்று கேட்பவர்களுக்கு, காமராஜரைக் காட்டுகிறார்கள்; பாருங்கள்! இவர் முதலாளி அல்ல! ஏழைபங்காளர்!—என்று.

ஆளுங் கட்சியில் இருக்கிறோம் என்பதாலே தன்னாலே ஒரு துணிச்சல் வந்துவிடுகிறது. அந்தத் துணிச்சலுடன் பேசுகிறார்கள்; இடம் பேசுகிறது என்பதைப் புரிந்து கொண்ட மக்கள், இவர்களிடம் வாதாடுவானேன் என்று இருந்து விடுகிறார்கள்; ஒப்புக் கொண்டு அல்ல, நமக்கு ஏன் வீண் வம்பு என்ற எண்ணத்தில்.

ஆனால் தம்பி! அந்தத் துணிச்சல் மிக்க பேச்சுப் பேசிடும் திறனும், பாராட்டத்தக்கதுதானே! எல்லோருக்கும் வருமா பொய்யையும் பொருளற்றதையும் மளமளவென்று பேசிட?

ஒரு எத்தன், தம்பி! அவன் அலுவலகத்திலே சில காலம் 'லீவ்' பெற எண்ணினான்; தனக்குக் கண் பார்வை சரியாக இல்லை என்று கூறினான்.

மருத்துவரிடம் அனுப்பினார்கள் பரிசோதனைக்கு.

டாக்டர், சுவரிலே அச்சடித்த எழுத்துக்கள் கொண்ட படத்தை மாட்டி, எழுத்துக்களைப் படி, ஐயா! என்றார்,



எந்த எழுத்துக்களைப் படிக்கச் சொல்லுகிறீர் டாக்டர் என்று கேட்டான் எத்தன்.

எதிர்ப்புறம் உள்ள சுவரிலே தொங்கவிடப்பட்டிருக்கும் படத்தில் உள்ள எழுத்துக்களை என்று விளக்கமளித்தார் டாக்டர்.

அவன்தான் ஏமாற்றித் தீருவது என்று துணிந்து வந்திருக்கிறானே, சிக்கிக் கொள்வானா!

சுவரா? எதிரே இருப்பது சுவரா!—என்று கேட்டான்; டாக்டர் ஏமாந்து போனார்- ஆசாமிக்கு எதிரே வெள்ளைச் சுவர் இருப்பதும், அதிலே படம் தொங்கவிடப் பட்டிருப்பதும் கூடத் தெரியவில்லை; பாவம் கண் அந்த அளவுக்குப் பழுதாகிவிட்டிருக்கிறது என்று பரிதாபப்பட்டு, கண் மிகவும் கெட்டுவிட்டிருக்கிறது என்று எழுதிக் கொடுத்தார்.

ஒரு மணி நேரம் ஓடிற்று. தன் நடிப்பால் டாக்டரை ஏய்த்து விட்டவன், புதிய படம் ஒன்று கண்டு களித்திட சினிமாக் கொட்டகை சென்று அமர்ந்தான்; படம் துவக்கப்பட வில்லை; இசைவிருந்து மட்டும் நடைபெற்றுக் கொண்டிருந்தது; அந்த நேரத்தில் அவனைத் தூக்கி வாரிப் போடத்தக்க நிகழ்ச்சி நேரிட்டது. எந்த டாக்டரை தனக்கு அடியோடு பார்வை கெட்டுவிட்டது என்று நம்ப வைத்தானோ, நடிப்பால், அதே டாக்டர், படம்பார்க்க, அதே கொட்டகைக்கு வந்து, பக்கத்திலேயே வந்து அமர்ந்தார்!

ஒருகணம் அவன் திடுக்கிட்டுப் போனான், தன் குட்டு உடைபட்டுவிடுமே என்று எண்ணி; மறுகணம் சமாளித்துக் கொண்டு, தன்னைக் கோபத்துடன் முறைத்துப் பார்த்த டாக்டரின் பக்கம் திரும்பி, ''அம்மா, இந்த பஸ் புறப்பட இன்னும் எவ்வளவு நேரம் பிடிக்கும்'' என்று ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டான்.

கண் அடியோடு பழுதாகிப் போய்விட்டதால், சினிமாக் கொட்டகையை மோட்டார் பஸ் என்று தவறாக எண்ணிக்கொண்டு விட்டான் பாவம், என்று டாக்டர் எண்ணிக் கொள்ளுவார் என்று தந்திரம் செய்தான்.

டாக்டர் ஏமாந்து போனார்; பரிதாபம் கலந்த குரலிலே அவர் பேசினார், ''யாரப்பா, உன்னை ஏமாற்றி

இங்கே கொண்டுவந்து உட்கார வைத்துவிட்டார்கள், இது மோடார் பஸ் அல்ல! இது ஒரு சினிமா கொட்டகை!—வா! உன்னை நான் மோடார் பஸ் இருக்குமிடம் அழைத்துச் செல்கிறேன்; நான்தான் உன் கண்களைப் பரிசோதித்த டாக்டர்!' என்று.

''டாக்டர்! டாக்டர்! பார்த்தீர்களா டாக்டர், உலகம் எவ்வளவு பொல்லாதது என்பதை, அப்பா! எனக்குக் கண் சரியாக இல்லை; மெள்ள என்னை மோடார் பஸ் இருக்குமிடம் அழைத்துக்கொண்டு 'போய்விடு'' என்று கேட்டேன் ஒருவனை. அவன் ''வா! ஐயா! உன்னை மோடார் பஸ்ஸிலேயே உட்காரவைத்துவிட்டு வருகிறேன்!' என்று அன்பாகப் பேசி, இங்கு அழைத்துவந்து உட்கார வைத்துவிட்டுப் போய் விட்டான். நான் என்னடா இன்னும் பஸ் புறப்படவில்லையே, நேரம் ஆகிறதே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன்; நல்ல வேளை, நீங்கள் வந்தீர்கள்; மிக்க நன்றி!'' என்றான்; டாக்டர் உருகிப் போனார்.

இந்தக் கதையிலே வருகிறானே குருடனாக நடித்தவன், அவன் ஒரு மண்டலம் பாடம் கேட்கவேண்டும் தம்பி! காங்கிரஸ் பேச்சாளர்களிடம். அவ்வளவு துணிவுடன் போலி நாடகத்தைத் திறமையாக நடத்துகின்றனர்; முதலாளிகளையும் கொண்டுள்ளது எமது சோஷியலிசம் என்று பேசுகின்றனர்.

தம்பி! ஆட்சி நடத்தும் கட்சியிலே இருக்கிறோம் என்ற உடன் துணிச்சலும் அதற்குத் தேவைப்படும் திறமையும் தன்னாலே பொங்கி வழிகிறது; அதனால்தான் அவர்கள் முதலாளிகளும் கொலுவிருக்கும் சோஷியலிசம் எம்முடையது என்று பேசுகிறார்கள், அவர்களுக்கு வளர்ந்து விட்டிருக்கிற துணிச்சலில். இனி அவர்கள்,

இனிக்கும் எட்டி
பாடும் ஊமை
ஓடும் நொண்டி
கருப்பு மல்லிகை

என்று பலப் பல பேசுவார்கள்! அவர்கள் அந்தத் துணிச்சல் கொண்டிருப்பதிலே நான் வியப்படையவில்லை; ஆனால் மக்கள் அந்தப் பேச்சையெல்லாம் நம்பிக் கொள்கிறார்கள் என்று எண்ணிக் கொள்கிறார்களே அது கண்டுதான் வியப்



படைகிறேன்? மக்கள் விவரமறியாதவர்கள் அல்ல; அவர்கள் நன்றாக அறிவார்கள், பேசுபவர் அறிவுத் தெளிவுடன் பேசவில்லை; அதிகார போதையிலே பேசுகிறார் என்பதனை. அந்தப் போதை தெளியட்டும் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள்; போதையைத் தெளியவைக்கும் நாளையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

அண்ணன்,

24—7—'66



காஞ்சிக் கடிதம் : 72

# ஓட்டாண்டியாக்கிவிட்டு!

★ கழகம் அஞ்சும் மூணும் அடுக்காக உள்ள இடம் அன்று!

★ மக்கள்தம் மனக்குமுறலின் வடிவமே திமுக!

★ ஐந்தாண்டுத் திட்டங்களால் கிடைத்த பலன் என்ன?

★ சுயராஜ்யம் கிடைத்தும் சுபிட்சம் இல்லையே!

★ ஓட்டாண்டியாக்கிவிட்டு ஓட்டுக் கேட்கிறார்களே!

★ இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?

★ ஏழையைக் கண்டறியாதவர்கள் தீட்டிய திட்டமே ஐந்தாண்டுத் திட்டம்!

தம்பி.

பார்த்துக் கொண்டிருக்கும்போதே நாட்கள் உருண்டோடிக் கொண்டிருக்கின்றன. தேர்தல் வேக வேகமாக நெருங்கி வந்து கொண்டிருக்கிறது.

நாலைந்து மாதங்களில் பொதுத் தேர்தல் நடைபெற இருக்கிறது என்று நேற்றுத்தான் பேசிக் கொண்டிருந்தது போல இருக்கிறது; இப்போது பார்த்தாலோ ஐந்து அல்ல, நாலும் அல்ல, மூன்று மாதங்களே இடையிலே உள்ளன என்று கூறவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டிருக்கக் காண்கின்றோம்,



நமக்கு மட்டுமா! காங்கிரசுக்கும் அதே நிலைமை தானே என்று கேட்பார்கள். ஆனால், தம்பி! இது ஏழைக் குடித்தனம்; ஐந்தும் மூணும் அடுக்காக உள்ள இடம் அல்ல; எல்லாவற்றையும் நாமேதான் கவனித்துக் கொண்டாக வேண்டும். காங்கிரசுக்கு நிலை அப்படியா? ஏராளமான எடுபிடிகள்! பெட்டி வழிய வழியப் பணம்!! இதை முடித்து விட்டேன்—அதனை முடித்துத் தருகிறேன்—இது முடிந்து விடும் என்று கூறிக் கட்டளையை எதிர்பார்த்துக் கிடக்கும் ஆள் அம்பு உள்ள கட்சி.

பதவியில் உள்ளவர்களிடம், அதிலும் தொடர்ந்து இருபது ஆண்டு அளவு பதவியில் உள்ளவர்களுக்கு, அதன் காரணமாகவே—ஒரு தனிச் செல்வாக்கு ஏற்பட்டு விடத் தானே செய்யும்.

பலன் பெற்றவர்கள், பலன்கிட்டும் என்று எதிர் பார்த்துக் கிடப்பவர்கள் அங்கு நிறையப் பேர் இருக்கத் தான் செய்வர்.

அதிலும் தகுதி திறமை ஆகியவைகளைக் காட்டிலும், பெரிய இடத்துச் சிபாரிசு, எந்த இடத்திற்கும் நுழைவுச் சீட்டாகப் பெரிதும் பயன்படும் நாட்டிலே, பதவியில் உள்ளவர்களைப் பலரும் மொய்த்துக் கொண்டிருப்பது எளிதாகப் புரியக்கூடியதுதானே. அதிலும், 'வரம்' கொடுப்பதிலே காங்கிரசார், வேறு எவரும் போட்டியிட முடியாத அளவு வல்லமை காட்டிப் பழக்கப்பட்டவர்கள்.

புதிய பாதைகள் போடுகிறார்கள்!

பள்ளிக்கூடமா? புதிது புதிதாக!

மருந்தகம்! படிப்பகம்! மனமகிழ் மன்றம்! மாதர் சங்கம்! இவைகளுக்கான திறப்புவிழாக்கள், ஆண்டு விழாக்கள்! அமைச்சர்களின் பேருரைகள்! ஒவ்வோர் நாளும்!!

காளை வாங்க, கிணறு வெட்ட, உரம் வாங்க, வரப்பு அமைக்க கடன் கேட்டிருந்தவர்கள், கேட்டு இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது, இனி எங்கே கிடைக்கப் போகிறது என்று எண்ணி ஏக்க மடைந்து, சோர்ந்து கிடக்கிறார்களல்லவா, பலர்—அவர்களைத் தட்டி எழுப்புகிறார்கள், தர்பார் நடத்து

பவர்கள், கடனா கேட்டிருந்தீர்கள்? அடுத்த வெள்ளிக் கிழமை கிடைக்கும் என்று வாக்களிக்கிறார்கள்.

உமது மகனா உத்தண்டன்? தெரியாமலே போய் விட்டதே! போன வருடமே இடம் வாங்கி இருக்க லாமே! இந்த வருடம் இடம் நிச்சயம்—என்று கூறு கிறார் மண்டலம்.

முகங்களிலே புதிய மலர்ச்சி! வார்த்தைகளிலே தனியானதோர் குளிர்ச்சி! நடவடிக்கைகளிலே ஒரு நட்புணர்ச்சி! எல்லாம் பளிச்சிடுகின்றன!

இவை 'போலி' என்பதனைக் காட்ட மட்டுமல்ல இவை குறித்து நான் கூறுவது; வாக்காளர்களை மயக்க, ஆட்சி நடாத்திடும் கட்சியினரால் முடிகின்ற அளவு, எதிர்க் கட்சி களால் முடியாது என்பதையும் உணர்த்துவதற்குத்தான்.

உடனடியாக உள்ளம் மகிழ்ந்திடும் செயலைச் செய் வதன் மூலமோ இனிப்புப் பேச்சுப் பேசுவதன் மூலமோ, நீண்ட காலமாக நடத்திக் கொண்டுவந்த கொடுமைகளை மறைத்துவிடலாம் என்று காங்கிரஸ் கட்சியினர் எண்ணு கின்றனர்.

ஆனால், உள்ளத்துக்கு மகிழ்ச்சி ஊட்டும் பொருள் தருவதன் மூலமாகவே, மக்களை மயக்கிவிட முடியும் என்ற நிலை இருக்குமானால், ஆளுங் கட்சி யான காங்கிரசு, சென்ற தேர்தலிலே 100-க்கு 42 என்ற அளவு ஓட்டுகள்தானா பெற்றிருக்கும்!

ஏழ்மை, அறியாமை, மனக் குழப்பம், மருட்சி என்பவைகளின் பிடியிலே சிக்கிக் கிடப்பினும், தமிழ கத்துப் பொதுமக்கள் ஜனநாயக உணர்வை, நீதி நியாயத்தில் கொண்டுள்ள பற்றினை விட்டுவிட வில்லை.

அந்த நம்பிக்கை எனக்கு நிரம்ப இருப்பதனால் மட்டுமே, எத்தனையோ இடர்ப்பாடுகளுக்கு மத்தி யிலும், இந்தப் பொதுத் தேர்தலில் கழகம் ஈடுபட்டு வெற்றி வாகை சூடும் என்று அறிவித்திருக்கிறேன்.

கொடுமைகளுக்கு ஆளான மக்கள் மனம் குமுறிக் கொண் டிருக்கிறார்கள் என்பதையும், மீண்டும் கொடுமையின் பிடி யிலே சிக்கிவிடக்கூடாது என்பதிலே உறுதியாக உள்ளனர்



என்பதையும், அதற்கான பணியாற்றுவதிலே ஆர்வம் கொண்டுள்ளனர் என்பதையும் ஒவ்வொரு கூட்டத்திலும் நான் காண்பது போலவே, பொதுமக்களிடம் தோழமைத் தொடர்பு கொண்டுள்ள கழகத் தோழர்கள் அனைவரும் காண்கின்றனர். அதனால்தான் அவர்களின் பேச்சிலே ஒரு தெம்பும், உறுதியும் காணப்படுகிறது.

தொகுதிகளின் நிலைமைகளை ஆராய்ந்து பார்த்த தில் தமக்கு ஏற்பட்ட கருத்து பற்றி நாவலர் என்னிடம் பேசிக் கொண்டிருந்தார்; அவரிடமே கூட, அந்தத் தெம்பு ததும்பிக் கொண்டிருக்கக் கண்டேன்.

சென்ற தேர்தலின்போது கழகத்திற்கு இருந்த செல்வாக்கு இம்முறை இன்னின்ன காரணங்களால் இந்த அளவு வளர்ந் திருக்கிறது என்பது குறித்து என்னிடம் எடுத்துக் கூறும் போதே கழகத் தோழரின் முகத்திலே ஒரு பொலிவு புதி தாகத் தவழ்ந்திடக் காண்கின்றேன்.

அவர் மாளிகைவாசி அல்ல!

அம்பாரம் அம்பாரமாகச் செந்நெல்லைக் குவித்து வைத்துள்ள பெருநிலக்கிழார் அல்ல.

ஏழை அல்லது நடுந்தரக் குடும்பத்தினர்!

அவர்களிடம், தெளிவும் செயலார்வமும் இருந்திடக் காண் கின்றேன். செய்வதைத் திட்டமிட்டு, வகைப்படுத்தி, முறைப்படுத்திச் செய்திட வேண்டும் என்ற ஆர்வம் நல்ல அளவு இருந்திடக் காண்கிறேன்.

கூட்டு முயற்சியிலே எத்தனை சாதிக்க முடியும் என்பதனை நாட்டுக்கு எடுத்துக் காட்டியதுடன், நாமே உணர்ந்து கொள்ளும்படி செய்திருப்பது நமது கழகம்.

ஆத்திரத்தினாலோ, அருவருப்பினாலோ, வெறும் பிர சாரம் என்ற போக்கினாலோ நம்மைப் பற்றி, காங்கிரசி லுள்ளவர்கள் எவ்வளவு வேகமாக மேடைகளிலே பேசி னாலும், இவனைப்பார்! அவனைப்பார்! என்று இழித் துரைத்தாலும், ஒரு நேரமாகிலும் அவர்கள் உண்மையை உணரும்போது

எப்படியோ இப்படி ஒரு வலிவினைத் திரட்டி விட்டார்களே!

என்று தம்மையும் அறியாமல், பேசாமலிருக்க முடியாது.

இதனாலா? அதனாலா? இப்படியா? அப்படியா?

என்றெல்லாம் ஆராய்ச்சி நடத்தி நடத்தி, தமது முறைகளைக்கூட அவர்கள் நம்முடைய முறைகளுக்கு ஏற்ப மாற்றிக் கொண்டும் பார்க்கிறார்கள். ஆனால் ஒரே ஒரு உண்மையைத்தான் அவர்கள் ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள்.

மக்களின் மனக்குமுறலின் வடிவமாக, மக்களின் பெருமூச்சின் வடிவமாக

திராவிட முன்னேற்றக் கழகம் இருந்து வருகிறது என்ற உண்மையை.

மற்றொரு நம்பிக்கை ஆளவந்தார்களுக்கு இருக்கிறது; பணம் பத்தும் செய்யும் என்பதிலே உள்ள நம்பிக்கை.

ஆனால் பணத்திற்கு உள்ள மதிப்பே இன்று வேகமாகக் கெட்டுக்கொண்டு வருகிறது.

டில்லியில் மூண்டிடும் கலவரங்களைப் பற்றிய செய்தி கேட்டு, இந்தியாவுக்குக் கடன் தொகை எந்த அளவு கொடுக்கலாம் என்பதற்காகக் கலந்து பேசிய குழுவினர், இத்தனை குழப்பம் மூண்டுகிடக்கும் நாட்டுக்குப் பெரிய அளவு தொகை கடன் கொடுப்பது நல்லதுதானா? என்று யோசிக்கின்றனர்; கவலையைத் தெரிவித்துள்ளனர் என்பதும்,

வெளிநாடுகளிலே வாங்கியுள்ள கடனைத் திருப்பித் தருவதற்கான தவணையில் மாறுதல் தேவை; அதாவது பிறகு திருப்பித் தருகிறோம் என்று கூறித் தவணை வாங்கவேண்டும் என்ற யோசனை டில்லி வட்டாரத்தில் உலவுகிறது என்பதும்,

இந்தியாவிலே தொழில் நடத்த 'முதல்' போடுவதற்குப் பணத்திலே குறியாக உள்ள ஜப்பான் தயக்கம் காட்டுகிறது என்பதும்,

இன்றுள்ள பொருளாதார நெருக்கடியை எடுத்துக் காட்டுவதனை எத்தனை வேகமான காங்கிரஸ் பிரசாரகரும் மறுத்துவிட மாட்டார்.



நிலைமை, பல முனைகளில் நல்லபடியாக இல்லை.

சமூகத்தில், ஒழுங்கும் சாந்தியும் பெரிய அளவில் குலைக்கப்பட்டிருக்கிறது.

பசியும் பட்டினியும் கொட்டும் கொடுமை வளர்ந்தபடி இருக்கிறது.

இவைகளிலே ஒன்றைக் கூடச் சீர்ப்படுத்தக் காங்கிரஸ் அரசினால் முடியவில்லை.

இருப்பினும் தேர்தலிலே நாங்கள் வெற்றி பெறுவோம் என்று அவர்கள் மார்தட்டுகிறார்கள் என்றால், எதை நம்பிக்கொண்டு அவ்விதம் பேசுகிறார்கள் என்று யோசிக்க வேண்டாமா?

படி அரிசி நாலு ரூபாயாம்! இந்த அக்கிரமம் வேறு எங்காவது நடந்திடுமா? அனுமதிப்பார்களா? என்று பதறுகிற மக்களிடம் எப்படியும் நாங்கள் ஓட்டுக்களைப் பறித்திடுவோம் என்று காங்கிரஸ் கட்சி கூறுகிறது என்றால், பணத்தால் எதையும் சாதித்துக் கொள்ளலாம் என்பது தவிர வேறு எதுவாக இருக்க முடியும்?

காலை மலர்ந்ததும், மக்கள் கண்களிலே படுவது, பட்டினிச் சாவு, துப்பாக்கிச் சூடு, சிறை பிடித்தல், வெளி நடப்புகள், புகார்கள், உட்பூசல்கள் என்பன பற்றியே. ஒரு நாடு மிகச் சீர்கேடான நிலையிலே இழுத்துச் செல்லப்படுகிறது என்பதற்கு வேறென்ன சான்றுகள் வேண்டும்?

நம்ம சர்க்கார்

நல்லவர் சர்க்கார்

என்று சொந்தம் கொண்டாடுகிறார்கள்; இதற்கா எதிர்ப்புக் காட்டுவது என்று கேட்கிறார்கள்; மக்களோ

இருண்ட கண்களையும்

வறண்ட தலையையும்

காய்ந்த வயிற்றையும்

காட்டுகிறார்கள்; நம்ம சர்க்கார் தந்தவை! ஆனந்தத் தாண்டவமாடச் சொல்லுகிறீர்களா ஐயா! என்று கேட்கிறார்கள். இந்த நிலையிலும் 'ஓட்டு' எமக்குத்தான் என்று எந்தத் தைரியத்தில் பேசுகிறார்கள் ஆளுங்கட்சியினர்?

பணம் இருக்கிறது பார்த்துக்கொள்ளலாம் என்ற ஒரே தைரியத்தில்.

போக போக்கியத்திலே மூழ்கி, வலிவிழந்து கிடந்த ஐந்நூறு சிற்றரசர்களையும், செல்வச் செருக்கு மிக்கோரையும் பதவிக்காகவும் பட்டத்துக்காகவும் பல்லிளித்துக் கிடப்போரையும், ஆலவட்டங்களையும் ஆமாம்சாமிகளையும் பக்கத் துணையாக வைத்துக் கொண்டு இருநூறு ஆண்டுகள் வெள்ளை ஏகாதிபத்தியம் ஆட்சி நடத்த முடிந்ததல்லவா? இவர்கள் அதே 'பாணி'யில் தமது ஆட்சியை நடத்திச் செல்லமுடியும் என்று நம்புகிறார்கள்.

அவர்களால் முடிகிறதா இல்லையா என்பதல்ல பிரச்சினை; நாடு இன்னமும் அவர்களின் ஆட்சியைத் தாங்கிக்கொள்ள முடியுமா என்பது தான் பிரச்சினை.

தம்பி, காங்கிரசாட்சி துவக்கப்பட்டபோது, மக்களின் வாழ்விலே வளம் உண்டாக்க என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டபோது, ஒரு வசீகரமான புன்னகையுடன் காங்கிரஸ் தலைவர்கள் கூறினார்கள்.

ஐந்தாண்டுத் திட்டங்கள் போடப் போகிறோம் என்று.

மூன்று முடிந்து, நாலாவது நடமாட விடப்பட்டிருக்கக் காண்கிறோம். திட்டங்களால் கிடைத்த பலன் என்ன? எங்கு சென்றுள்ளது? என்று கேட்கிறார்கள்.

நானும் அதைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன், ஐந்தாண்டுத் திட்டங்களால் விளைந்த பலன், எங்குப் போயிற்று என்றுதான் தெரியவில்லை; ஏழைக்கு அந்தப் பலன் வந்து சேரவில்லை என்று காமராஜர் கூறுகிறார்.

திட்டத்தை நிறைவேற்றினோம்; ஆகவே எமக்கு ஓட்டுப் போடுங்கள் என்று கேட்பதற்கான நியாயம் எங்கே இருக்கிறது. பலன், போன இடம் தெரியவில்லை என்று பெருந் தலைவரே பேசுகிறாரே!

திட்டங்களுக்குத் தேவைப்படும் பொருள் குவிய, வரி கொடுத்துக் கொடுத்து ஏழை எளியோர்கள், மேலும் இளைத்துப்போய், களைத்துப்போய் இருப்பது



பது தெரிகிறது; திட்டத்தால் பெற்ற பலன் வேறு என்ன, எங்கே இருக்கிறது என்று காட்டக் கூடக் கூச்சப்படுகிறார்கள் காங்கிரசின் பெரிய தலைவர்கள்.

ஆராய்ச்சி நடத்துகிறார்கள், திட்டம் ஏன் எதிர்பார்த்த பலனைச் சமூகத்துக்குத் தரவில்லை என்று.

திட்டம் சரியாகத் தீட்டப்படவில்லை.

திட்டம் நடைமுறைக்கு ஏற்றதாகத் தீட்டப்பட வில்லை.

திட்டம் சரியாகவே தீட்டப்பட்டது, செயல் படுத்துவதிலேதான் தவறுகள் நேரிட்டு விட்டன.

செயல்முறை சரியாக வகுக்கப்படவில்லை.

செயல்படுவதற்குத் தக்கவர்களை அமர்த்த வில்லை.

செயல்படுத்தியவர்களுக்குப் போதிய அக்கறை இல்லை.

திட்டத்தின் உட்பொருளைச் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை,

திட்டத்திற்கு மக்களின் ஒத்துழைப்பு முழு அளவில் கிடைக்கவில்லை.

இப்படி ஆளாளுக்கு ஒரு குட்டுக்குட்டியபடி உள்ளனர். குட்டுபவர்கள் எல்லோருமே காங்கிரஸ் எதிர்ப்பாளர் என்று கூறிவிட முடியாது. காங்கிரஸ்காரர்களிலேயே பலர், குறை காணுகின்றனர்.

எல்லோரும் ஒருசேர இன்று ஒப்புக்கொண்டிருப்பது, திட்டங்கள் எதிர்பார்த்த பலனை சமூகத்துக்கு தரவில்லை என்பது.

ஆகவே, எந்தத் திட்டங்களைத் தமது சாதனையிலே சிகரம் போன்றது என்று இவர்கள் கூறிக்கொண்டு வந்தார்களோ, அந்தத் திட்டங்களே தோல்வி அடைந்து விட்டன என்பது மறுக்கப்பட முடியாத ஆனால் பயங்கரமான உண்மையாகி விட்டது. இந்தத் திட்டங்களுக்காகச் செல

வாகி இருக்கும் பணத்தின் அளவு, எவருடைய தலையை யும் சுற்றச் செய்துவிடும்; அத்தனை பெரிய தொகை.

''விடமாட்டோம் இந்தியாவை'' என்று வெள்ளையர் வீம்பு பேசிக்கொண்டிருந்த நாட்களில் டில்லிப் பாராளு மன்றத்தில் வீற்றிருந்த கோவிந்த வல்லப பந்த் கோபா வேசமாக ஒருமுறை சுயராஜ்ய திட்டம் பற்றிப் பேசிய போது, வெள்ளையர் ஒருவர் குறும்புத்தனமாகக் குறுக் கிட்டு,

சுயராஜ்யம் கிடைத்ததும் என்ன செய்யப் போகி றீர்கள்?

என்று கேட்டபோது, பந்த் அவர்கள் பதிலளித்தார், சுடச் சுட. அவரால் அன்று, எந்த அளவுக்குச் செல்ல முடிந்தது?

சுயராஜ்யம் கிடைத்ததும் நாட்டை வளப்படுத்த திட்டம் தீட்டுவோம். நூறு கோடி ரூபாய் அளவு செல விட்டுத் திட்டம் நிறைவேற்றுவோம்!

என்று கூறினார். கவனித்தனையா தம்பி! 100 கோடி! அது அன்று பிரம்மாண்டமான தொகை!

ஆனால் காங்கிரஸ் அரசு இந்த ஐந்தாண்டுத் திட்டங் களுக்காகச் செலவிட்டிருக்கும் தொகை, 20000 கோடி ரூபாய்! பண்டித பந்தினால் நினைத்துப் பார்த்திருக்கக் கூட முடியாத தொகை!! இவ்வளவு செலவான பிறகும், இன்று நாட்டிலே இல்லாமை, போதாமை! அமெரிக்கா பறக்கிறார் அமைச்சர் சுப்பிரமணியம், உணவுக்காக! சௌத்ரி, ஐரோப்பா பயணமாவார், கடன் கேட்க! மேத்தா, ரஷியா செல்லக்கூடும்! இந்திரா அம்மையார், உலக சமாதானம் உண்டாக்க யூகோ செல்லக்கூடும்.

பாவம், அவர்களால் இங்கு இருக்க முடியவில்லை.

காது குடையும் கூச்சல்! கண்ணைக் கெடுக்கும் காட்சி! மனதை மருட்டும் செய்திகள்! நிம்மதி இல்லை! நிலைகொள்ளவில்லை.

பாரிசோ, மாஸ்கோவோ, நியூயார்க்கோ, இலண்டனோ எங்காவது சென்று சிறிதளவு நிம்மதி யாவது பெறலாம் என்று எண்ணுகிறார்கள். துல்லிய மான மேக மண்டலங்களுக்கு மேலே விமானம் செல்



லும்போது, ஆர்ப்பரிப்பும். பேரணியும் கடை அடைப் பும் கலவரமும் இல்லாதநிலை காண்கின்றனர்! ஒரு நிம்மதி!

இலஞ்சக் குற்றச்சாட்டுகள் கூறிடுவோர், குறுக்குக் கேள்விகள் பூட்டிடுவோர், ஊழல்களை அம்பலப் படுத்துவோர், அமீர்சந்த் பியாரிலால் போன்றவர்கள் பற்றிக் கிளறிவிடுவோர் இல்லாத இடம்; ஒரு மகிழ்ச்சி!

இந்த விதத்தில் அவர்களும் பாவம், தங்கள் மனத்திலே குமுறிக் கொண்டிருக்கும் கவலையை மறந்துவிட முயற்சிக் கிறார்கள்.

20 ஆயிரம் கோடி ரூபாய் செலவிட்டு, தோல்வி கண்ட கட்சி, கூனிக் குறுகிப் போக வேண்டியது முறை யாக இருக்க, இந்தத் திட்டங்களின் கர்த்தாக்களாகிய எமக்கே ஓட்டுகள்!—என்று பாத்யதை வேறு கொண் டாடுகிறார்கள்!!

தெளிவும் ஜனநாயக உணர்வும் இருக்க வேண்டிய அளவிலும் வேகத்திலும் இந்த நாட்டில் இருந்திடு மானால், 20 ஆயிரம் கோடி ரூபாயைப் பாழாக்கின தற்காகக் காங்கிரஸ் கட்சியைக் கூண்டிலே நிற்க வைத்து விசாரணை நடத்தி இருப்பார்கள்!

இன்றோ. இந்த ஆட்சியின் போக்கை எதிர்க்கத் துணிபவர்களை, காரணம் கூடக் காட்டாமல் சிறை யில் தள்ளிவைக்க, தடுப்புக் காவல் சட்டத்தை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீடிப்பது என்று பாராளுமன்றத் தில் பலமான எதிர்ப்பைத் துச்சமென்றுத் தள்ளிவிட்டு நிறைவேற்றி வைத்துக் கொண்டு விட்டார்கள்.

உரிமைகள் குலைக்கப்படுகின்றன. இது நாம் ஏற்றுக் கொண்டுள்ள இந்திய அரசியல் சட்டத்திற்கே ஒவ்வாதது என்று கண்டிக்காத மேதைகள் இல்லை; சட்ட நிபுணர்கள் இல்லை. இன்னமும் நெருக்கடி நிலைமையை நீடித்துக் கொண்டிருப்பது அறமாகாது; அதன் பெயரால் பாது காப்புச் சட்டத்தை ஏதாவது ஒரு வடிவத்தில் நீட்டிக் கொண்டு போவது அடாத செயலாகும் என்று, நீதி மன் றங்களில் கீர்த்திமிக்க நிலை பெற்றிருந்தவர்களெல்லாம் எடுத்துக் கூறிவிட்டனர். சர்வாதிகார நாடுகளில் தவிர வேறு எங்கும் இப்படிப்பட்ட ஆள்தூக்கிச் சட்டங்கள்.

நாக்கறுப்புச் சட்டங்கள் இல்லையே என்றுகூறிக் கண்டிக்கின்றனர் சான்றோர் பலர்.

இந்தியாவின் முன்னாள் சட்ட அமைச்சர் ஏ. கே. சென் அவர்களே இந்தப் போக்கைக் கண்டித்துப் பேசுகிறார்.

ஆனால், தம்மைவிட அறிவிலும் ஆற்றலிலும் மிக்கார் எவர் உளர் என்ற நினைப்புத் தடித்துப் போன நிலையில் தடுப்புக் காவல் சட்டம் கூடத் தேவைதான் என்று காங்கிரசார் வாதாடுகின்றனர்; எண்ணிக்கை வலிவினைக் காட்டி அக்கிரமத்தை நியாயமாக்கிக் காட்டுகின்றனர்!

தடுப்புக்காவல் சட்டம், ஒப்புக் கொள்ளப்பட்ட சாதாரண சட்ட முறையாகிவிட்டது என்றே பேசுகிறார், உள்துறை அமைச்சர்—புதியவர்—சவாண்! மனித உரிமைகள் அவ்வளவு கேவலப்படுத்தபட்டு விடப்பட்டுள்ளன.

உணவு போதுமான அளவு இல்லை.

உரிமைகள் பறிக்கப்படுகின்றன.

சாந்தி இல்லை, சமாதானம் இல்லை.

என்றாலும், ஓட்டு இருக்கிறதல்லவா, அதை எமக்குக் கொடுத்திடுக! என்று கேட்கிறார்கள்.

ஓட்டாண்டியாக்கிவிட்டு ஓட்டும் கேட்கிறார்கள். புதுடில்லியில், 'ஜனநாயக நிலை' பற்றிய கருத்தரங்கு ஒன்றில் பேசிய மேனாட்டு அரசியல்துறைப் பேராசிரியர் ஒருவர்,

'மக்கள் காங்கிரசாட்சியிலும் வெறுப்படைந்துள்ளனர்; ஆனாலும் காங்கிரசுக்கு ஓட்டுப் போடுகின்றனர். இந்த விந்தை இந்திய ஜனநாயகத்திலே காணப்படுகிறது. இது ஆராயப்படவேண்டிய பிரச்சினையாகும்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

உள்ளபடியே தம்பி! காங்கிரசாட்சியிடம் மக்கள் கொண்டுள்ள கோபமும் கொதிப்பும், வெளிநாடுகளிலே உள்ள ஆய்வாளர்களும் அறிந்துள்ளனர். மக்களிடையே இவ்வளவு ஏமாற்றத்தையும் எரிச்சலையும் மூட்டிவிட்ட காங்கிரஸ் கட்சியை மக்கள் மீண்டும் ஆதரித்து ஆட்சியில் அமர்த்த மாட்டார்கள் என்று கருதுகிறார்கள். ஏனெனில், இங்குக் காங்கிரசாட்சி செய்திருப்பது பொன்ற தவறுகளிலே



நூற்றிலே ஒரு பங்கு தவறு செய்திடினும் போதும், அங்கு அத்தகைய ஆட்சியை மக்கள் தாங்கிக்கொள்ள மாட்டார்கள். ஜனநாயக உணர்வு அங்கெல்லாம் அந்த அளவு இருக்கிறது.

இங்கோ ஆட்சியினிடம் மக்களுக்கு அச்சம் மூண்டுவிடுகிறது.

அக்கிரமம் செய்திடினும், ஆட்சி தன்னிடம் சிக்கிக் கொண்டுள்ள வலிவினைக் கொண்டே, எதிர்ப்புச் சக்திகளை முறியடித்துவிடும் என்ற பீதி பிடித்தாட்டுகிறது.

இந்த அச்சத்தை, தம்பி உன் இடைவிடாத முயற்கியின் துணைகொண்டு, திராவிட முன்னேற்றக் கழகம் பெரும் அளவுக்கு ஓட்டிவிட்டிருக்கிறது.

இந்த நிலைமையை நன்கு புரிந்துகொண்ட காங்கிரசார் இம்முறை 'கடைசி ஊசி' போடுவது என்பார்களே அதுபோல உள்ள பணம் அவ்வளவையும் வீசிப் பார்த்துவிடுவது என்று துணிந்துவிட்டுள்ளனர். பார்க்கட்டும்! பாசி பிடித்துப் போன பணமெல்லாம் வெளியே வரட்டும்! பாட்டாளியின் வயிற்றில் அடித்துச் சேர்த்து வைத்துள்ள பணமெல்லாம் வெளியே வரட்டும்! ஒன்றை ஒன்பதிற்கு விற்றுச் சேர்த்துள்ள பணமெல்லாம் வெளியே வரட்டும்! கள்ளப்பணம், கருப்புச் சந்தைப் பணம், வரிகொடுக்காமல் ஏய்த்துச் சேர்த்த பணம் எல்லாம் வெளியே வரட்டும்!! ஏன் வருகிறது என்பதா மக்களுக்குத் தெரியாது; புரியாது!! மிக நன்றாகப் புரிந்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் பேரூர்களில் மட்டுமல்ல, சிற்றூர்களிலே எல்லாம் பார்க்கிறேன்.

என் ஆவல் தீருமளவுக்கும் தோழர்களின் அன்பழைப்பை நிறைவேற்றும் அளவுக்கும் என்னால் எல்லா இடங்களுக்கும் சென்று வர முடியவில்லையே, அதற்குப் போதுமான வலிவு இல்லையே என்றுதான் வருத்தப்படுகிறேன்.

நண்பர்கள் அடுக்கடுக்காக நிகழ்ச்சிகளைக் கூறும்போது சுரீல் என்று கோபம்கூட வந்துவிடுகிறது. இப்படி 'வேலை வாங்குகிறார்களே' என்று. ஆனால், சென்று, அங்கு ஆர்வம் ததும்பும் நிலையில் ஆடவரும் பெண்டிரும்,

முதியோரும் இளைஞரும் திரண்டு இருந்திடக் காணும் போது எல்லாக் கஷ்டங்களும் இருக்கும் இடம் தெரியாமல் பறந்தே போய்விடுகின்றன.

இவ்வளவு பேரும் எதேச்சாதிகாரத்தை எதிர்ப்பவர்கள்.

காங்கிரசினால் மூட்டிவிடப் பட்டுவிட்ட கொடுமைகளை எதிர்ப்பவர்கள்.

காங்கிரசுக்கும் கனதனவான்களுக்கும் ஏற்பட்டு விட்டுள்ள கூட்டுச் சதித் திட்டத்தைத் தகர்த்திடத் துடிப்பவர்கள்.

ஏழை வாழ்ந்திடவேண்டும்; இல்லாமை ஒழிய வேண்டும்; நிம்மதி ஓங்கவேண்டும் என்ற உன்னதமான இலட்சியத்துக்காகப் போராடுபவர்கள்.

மொழி காத்திட, உரிமை காத்திட, எதனையும் இழந்திடும் துணிவு பெற்ற தூய உள்ளத்தினர்.

இவர்களை ஆசை அலைக்கழிக்கவில்லை; அச்சம் மருட்டவில்லை; ஆளவந்தார்களின் அட்டகாசம் அடக்கிட முடியவில்லை.

ஏடு பல காட்டி இவர்களை மயக்கிட முடியவில்லை.

ஏதேதோ செய்கிறோம் என்று தித்திப்புத் தடவி இவர்களை இழுத்திட முடியவில்லை.

இவர்கள் அஞ்சா நெஞ்சினர்; அறப்போர் இயல்பினர்,

இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்!

இவர்கள் பலர்! மிகப் பலர்! இவர்களை வீழ்த்திட முனைபவரோ சிலர்!

இவ்விதமான எண்ணமெல்லாம் கொள்ளுகின்றேன்; இதயத்திலே ஓர் இசையே சுரக்கிறது. அவர்களைக் காண்கிறேன்; கனிவு என்றால் என்ன என்பது விளக்கமாகிறது, அவர்களிடம் பேசுகிறேன்; பாசம் என்றால் என்ன என்பதைப் புரிந்துகொள்கிறேன்; புதியதோர் ஆர்வம் பெறுகிறேன்.



என் உள்ளத்தில் எழுந்திடும் ஆர்வத்தின் அளவு எவ்வளவோ, அந்த அளவு என் உடலில் வலிவு இருக்கக் கூடாதா, இல்லையே என்று எண்ணி ஏக்கம்கொள்கிறேன்.

ஒவ்வொரு கூட்டமும் என்னை அந்த மக்களுடன் பிணைத்துவிடுவதை உணருகிறேன்—பாசப் பிணைப்பு அஃது என்பதால் பெருமிதம் கொள்கிறேன்.

நான் பெற்றிடும் இந்தப் பெருமிதத்தைத்தான் மற்ற பேச்சாளர்களும் பெறுவர் என்பதை எண்ணிப் பார்க்கிறேன்; மிகப் பெரியதோர் குடும்பம் நமது கழகம் என்ற இலக்கணம் மெய்ப்பிக்கப்பட்டு வருகிறது என்பதை உணர்ந்து மகிழ்கிறேன்.

புதுப்பாளையம்
சிறுவாளூர்
தூக்கநாய்க்கன்பாளையம்
தாசப்பகவுண்டன்புதூர்
கூடக்கரை
நம்பியூர்
பவானிசாகர்
புஞ்சைபுளியம்பட்டி
காவலிபாளையம்
உக்கரம்
சத்தியமங்கலம்
கோபிசெட்டிபாளையம்
தாளக்கொம்புதூர்
பெருந்தலையூர்
பொத்தபாளையம்
உடையாம்பாளையம்
கெம்பநாயக்கன்பாளையம்
கோவை நகர உட்கிளைகள்
கோவை நகரம்
தாயனூர்
தோலம்பாளையம்
கெண்டேபாளையம்
காரமடை
பகத்தூர்
வடுகபாவையம்
மேட்டுப்பாளையம்
காளிங்கராயன்பாளையம்
தொட்டிபாளையம்
அத்தாணி
சவுண்டப்பூர்
பவானி
கவுந்தப்பாடி
அந்தியூர்
ஒலகடம்
ஆண்டிபாளையம்
குருவரெட்டியூர்
கந்தாம்பாளையம்
கீரனூர்
ஆலாம்பாடி
பச்சாம்பாளையம்
நாச்சிபாளையம்
புதுப்பை
எரசனம்பாளையம்
கன்னிவாடி
மூலனூர்
புளியம்பட்டி
லக்கமநாயக்கன்பட்டி
வெள்ளகோயில்
முத்தூர்
காங்கயம்

எல்லப்பாளையம்
வரதய்யன்பாளையம்
அன்னூர்
நீலிபாளையம்
கருவலூர்
பெரிய ஆயிபாளையம்
ராக்கியாபாளையம்
அம்மாபாளையம்
அவினாசி
சேவூர்
சாவக்கட்டுபாளையம்
திருமுருகன் பூண்டி
சிறுமுகைபுதூர்
ராசி பாளையம்
அருகம் பாளையம்
திருப்பூர்
சோமனூர்
கோம்பக்காடு
பல்லடம்
பள்ளபாளையம்
வதம்பச்சேரி
சேகம்பாளையம்
காமநாயக்ககன்பாளையம்
பூலவாடி
துங்காவி
தாமரைப் பாடி
கணியூர்
சோழமாதேவி
மடத்துக் குளம்
கொழுமம்
கொமரலிங்கம்
சாமராயபட்டி
மலையாண்டி கவுண்டனூர்
கண்ணம நாயக்கனூர்
உடுமலைப்பேட்டை
தேவனூர் புதூர்
காரத்தொழுவு
வால்பாறை

வரப்பாளையம்
தாராபுரம்
எலகாம்வலசு
கெல்லிபாளையம்
சிவன்மலை
வெள்ளவாவிபுதூர்
காமாட்சிபுரம்
கண்ணம்பாளையம்
பட்டணம்
பாப்பம்பட்டி
அப்பநாயக்கன்பட்டி
சூலூர்
வாகராயம்பாளையம்
ஆனைமலை
காளியாபுரம்
பழனிக் கவுண்டனூர்
பொள்ளாச்சி - பல வட்டங்கள்.

கோடம்பட்டி
புளியம்பட்டி
ராசக்கா பாளையம்
கொப்பம் புதூர்
வடசித்தூர்
வெள்ளே கவுண்டன் புதூர்

அரசன் பாளையம்
கிணத்துக் கடவு
சேரி பாளையம்
மொடக் குறிச்சி
அரச்சலூர்
மேலப்பாளையம்
புதுப்பாளையம்
குமாரபுரி
ஈங்கூர்
வீரப்பன் சத்திரம்
பெரிய அக்ரகாரம்
ஈரோடு
குன்னத்தூர்



வாட்டர் பால்ஸ்
கல்லூர்
பச்சைமலை
பழனியூர்
பெத்த நாயக்கன் பாளையம்

ஊத்துக்குளி
பெருமாநல்லூர்
பெங்கால்மட்டம்
மஞ்சூர்
குன்னூர்
உதகமண்டலம்

தம்பி! புஞ்சை புளியம்பட்டி தோழர் சாமிநாதன் அனுப்பிய கடிதத்தின் மூலம், நான் கோவை மாவட்டச் சுற்றுப் பயணத்தின்போது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளச் சென்றிருந்த ஊர்களின் பட்டியலைத் தொகுத்துத் தந்திருக்கிறேன்.

இத்தனை ஊர்களிலும்-இவைகளில் பல, பாளையங்கள்-நமது கழகத்திடம் பற்று நிரம்பக் கொண்டவர் பல்லாயிரவர் இருந்திடக்கண்டு பெருமகிழ்ச்சி கொண்டேன். அவர்கள் ஆர்வத்துடன் கூறுகின்றனர். ''அண்ணா! இந்த முறை வெற்றி நமக்குத்தான்!! கவலைப்படாதீர்கள்'' என்று.

அவர்களுக்குப் புள்ளிவிவரம் போதுமான அளவு தெரியாது. மேற்கோள்கள் அவர்கட்கு மனப்பாடமாகவில்லை. வரலாற்றுச் சான்றுகளை இவர்கள் தேடி அலைந்து கொண்டில்லை.

கண் இருக்கிறது, காண்கின்றனர்; காங்கிரசாட்சியால் நாடு கொண்டுவிட்ட அலங்கோலத்தை.

காது இருக்கிறது; விம்மல், குமுறல், பெருமூச்சு, கதறல் விழுகிறது.

அறிவு இருக்கிறது; தூய்மை கெடாத அறிவு; சிந்திக்கிறார்கள்! தெளிவு பிறக்கிறது.

வயலைப் பார்க்கிறார்கள் வயிற்றையும் பார்த்துக் கொள்கிறார்கள்!

வரட்டும்! வரட்டும் இந்த முறை ஓட்டுக்கு-என்று மெல்லிய குரலில் ஆனால் உறுதி நிரம்பிய தன்மையில் கூறுகிறார்கள்.

இவர்களிடம் காங்கிரஸ் தலைவர்கள் சென்று, நாங்கள் இப்போது நாலாவது ஐந்தாண்டுத் திட்டம் போட்டிருக்கிறோம் என்று சொன்ன உடனே, பூரித்துப்போய் விடுவார்களோ! ஏமாளித்தனமான எண்ணம்!

திட்டம்தானே ஐயா! ஐந்தாண்டுத் திட்டம்!! தெரியுமே! பார்த்தோமே!! அனுபவித்துக்கொண்டு தானே இருக்கிறோம் திட்டங்களை!!

—என்றுதான் சலிப்புடன் பேசுவார்கள். அவர்கள் திட்டங்களுக்கு விரோதிகள் அல்ல! ஆனால் திட்டங்கள், ஏழைக்கு பயன்படவில்லையே என்ற வேதனையால் தவிக்கின்றார்கள்.

அவர்களின் சார்பிலே பணியாற்றிடும் ஆச்சார்ய வினேபா பாவே, அவ்வப்போது காங்கிரசாட்சியினால் விளைந்துள்ள கேடுபாடுகளை விளக்கிக்கொண்டு வருகிறார்.

அவருக்குப் பூசை நடத்தக்கூடக் காங்கிரஸ் தலைவர்கள் முன்வருகிறார்கள். ஆனால் அவருடைய அறிவுரையின்படி நடந்திட மட்டும் மறுக்கிறார்கள். முடியவில்லை!!

தம்பி, இந்த ஐந்தாண்டுத் திட்டம்பற்றி வினேபா மிகக் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார். இதனைக் 'குருட்டுத் திட்டம்' என்றே கூறுகிறார். நிலைமையைத் தெரிந்துகொள்ளாதவர்கள் தீட்டிடும் திட்டம். அவர்கள் மெத்தப் படித்தவர்களாக இருக்கலாம், ஆனால் ஏழைகளை அவர்கள் கண்டதில்லை!—என்று சாடுகிறார்.

நிலைமை மிகவும் சீர்கேடடைந்துவருகிறது. இதைத் தில்லியிலுள்ள நமது தலைவர்கள் பார்க்காமல் இல்லை. அவர்கள் அவற்றை நன்கு அறிவார்கள். ஆனால் அவற்றிற்கு மாற்று என்ன என்பதைக் கண்டறியத் திறனில்லாதவர்கள் என்றே நான் வருத்தத்துடன் கூறவேண்டியிருக்கிறது.

திட்டத்தை இயற்றியவர்கள் மிகப் பெரியவர்கள், அவர்களில் சிந்தனையாளர்கள், பொருளாதார சமூக சாஸ்திர நிபுணர்கள் அனைவரும் இருக்கிறார்கள், ஆனால் அனைவருமே இந்தத் தேசத்தின் ஏழையைக் கண்டறியாதவர்கள்.

எல்லோரும் பட்டணத்தையும் பட்டணத்தின் பகட்டான வாழ்க்கையையும் பார்த்துப் பழக்கப்பட்டவர்கள். முதுகோடு முதுகாக ஒட்டிக்கிடக்கும் விவசாயியின் வயிற்றையோ மற்ற ஏழைக் கிராம மக்களின் நிலைமையையோ அவர்கள் கண்டறிந்ததில்லை என்



றே கூறவேண்டும். அதைத்தான் திட்டமும் பிரதிபலிக்கிறது.

பதவிபெறும் நோக்குடன் காங்கிரசைக் குறைகூறித் திரிகிறார் என்று வினோபாவேயைக் கூறிடும் துணிவு வராது என்று நம்புகிறேன். இதுவரையில் அத்தகைய துணிவு வரவில்லை.

அவருடைய கண்டனம், மனம் வெதும்பி வெளிவந்திருக்கிறது, இந்த இலட்சணத்தில் திட்டத்தைத் தீட்டியும் நடத்தியும் வந்திருக்கும் காங்கிரசு, மீண்டும் ஆதரவு கேட்கிறதே, என்ன நியாயம்?

நியாயமற்றதுதான், ஆனால் நிதி இருக்கிறதே நிரம்ப! பணம் இருக்கிறதே, கோடிகோடியாக!! பணம் பாதாளம் வரை பாயுமே!—என்கிறார்கள்.

தம்பி! நாடு என்ன பதில் அளிக்கவேண்டும்? என்ன பதில் கிடைக்கப்போகிறது என்பது, உன் உழைப்பைப் பொறுத்து இருக்கிறது.

இடையே உள்ள நாட்கள் அதிகமில்லை; அவை வேகமாகவும் உருண்டோடிக்கொண்டுள்ளன. எனவே உன் நேரம் முழுவதும், நினைப்பு முழுவதும், அறிவாற்றல் அவ்வளவும், இந்த ஒரே காரியத்துக்கு என்ற உறுதியுடன் இன்றே பணியாற்றக் கிளம்பிடுவாயேல், தம்பி! வெற்றி நிச்சயம். நாடு வாழ்ந்திடும்; வாழ்த்திடும்! உன்னால் மட்டுமே இந்த வெற்றியைப் பெற்றுத்தந்திட முடியும்; ஆனால் ஒரே ஒரு நிபந்தனை; மற்ற எதற்கும் இரண்டாவது இடமே—முதல் இடம், ஜனநாயகப் பாதுகாப்புக்கே—கழக வெற்றிக்காகப் பணியாற்றுவதற்கே—என்ற உறுதியுடன் தொண்டாற்றவேண்டும். முடியுமா? செய்வாயா?

கேள்வி கேட்கிறேன் பார், கேள்வி-செய்வாயா? என்று இப்போதே அதைத்தானே செய்துகொண்டிருக்கிறாய்!! அந்த மகிழ்ச்சி தந்திடும் வலிவுதானே என்னையும் வேலை செய்திடச் செய்கிறது.

அண்ணன்,

31—7—66



காஞ்சிக் கடிதம் : 73

# இட்லர் கூடச் சோஷியலிசம் பேசினான்!

★ ஒரே படம், இரு வேறு பதில்கள்!

★ தேன் துளி தெளித்தால் தீர்ந்திடுமா கவலை?

★ ஜெர்மன் தேசிய சமதர்மத்தில் தைசன்கள்! இந்திய ஜனநாயக சமதர்மத்தில் பிர்லாக்கள்!

★ இட்லர் பாணியில் பேசுகிறார்கள் இவர்கள்!

★ கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவனா கோபுரம் ஏறி வைகுந்தத்துக்கு வழிகாட்டப் போகிறான்?

தம்பி,

ஒரு பணக்காரச் சிறுவன், ஒரு ஏழைச் சிறுவன் இருவரையும் ஒரு மனோதத்துவக்காரர் சோதனை செய்தார் ஒரு படத்தைக் காட்டி.

சாப்பிட்டுக் கொண்டிருக்கும் ஒரு சிறுவன் தன் தாயாரைப் பார்த்துச் சிணுங்கும் காட்சி படத்தில் வரையப்பட்டிருந்தது.

படத்திலுள்ள சிறுவன் என்ன காரணத்துக்காகச் சிணுங்குகிறான் என்று கேட்டார் மனோதத்துவக் காரர்,



ஒரே படம்! இரண்டு சிறுவர்கள் பார்க்கிறார்கள்!! பதில்? இன்னும் கொஞ்சம் சோறு கேட்கிறான் சிறுவன், அதற்காகத்தான் சிணுங்கிக் கொண்டிருக் கிறான் என்று பதில் அளித்தான் ஏழைச் சிறுவன்.

எனக்குப் பசி இல்லை அம்மா? போதும் சாப்பாடு! இனிச் சாப்பிட முடியாது!!—என்று தாயிடம் சொல் கிறான் படத்திலுள்ள சிறுவன்—அதனால்தான் சிணுங்குவதுபோலப் படம் வரையப்பட்டிருக்கிறது என்று பதில் தந்தான், பணக்காரச் சிறுவன்!

ஒரே படம்! இருவேறு பதில்கள்!!

ஏழை, பணக்காரன் என்ற இருவேறு நிலைகள், இருவேறு இயல்புகளைத் தந்திருக்கிறது என்பதைக் காட்டுவது இந்தக் குட்டிக் கதை.

ஏழை, பணக்காரன் என்ற மாறுபட்ட நிலையை மாற்றாமல், அந்த நிலைமை காரணமாக ஏற்பட்டுவிடும் இயல்பினை மாற்ற முயற்சிப்பது, குதிரையின் காதுப் பக்கத்தில் மாட்டுக் கொம்பினைக் கட்டிவிடுவது போன்ற தாகும்! விந்தைக் காட்சியாக இருக்கும் இயல்பு மாறாது.

ஏழை, பணக்காரன் என்ற நிலைமைகள், மனித இயல்பை வேறுவேறு தரமுள்ளதாக்குவது மட்டுமல்ல, சமூகத்திலே கசப்பும் கொதிப்பும், பேதமும் பிளவும், பகை யும் சமரும் மூண்டுவிடுவதற்கும் அந்த நிலைமைகளும், அவற்றின் தொடர்பாக அமைந்துவிடும் இயல்பும் காரண மாகிவிடுகிறது.

நிலைமையை மாற்றுவதன் மூலம் இயல்பை மாற்றி, இந்த விரும்பத்தகாத சூழ்நிலையை அப்புறப்படுத்த முடியுமே தவிர, நிலைமையை அப்படியே வைத்துக் கொண்டு, கசப்பும் கொதிப்பும் போகவேண்டும், பேதமும் பிளவும் தொலையவேண்டும், பகையும் சமரும் கூடாது என்று 'உபதேசம்' செய்து பார்ப்பது, படகிலே உள்ள ஓட்டையைச் செப்பனிடாமல், உள்ளே புகும் தண்ணீரை வெளியே எடுத்துக் கொட்டிக்கொண்டே இருக்கும் முயற்சி போன்றதாகும்.

காங்கிரசாட்சிக்கு, நிலைமையை மாற்ற வேண்டும் என்ற துணிவும் இல்லை; எண்ணமும் இல்லை. சொல்லப்

போனால், இந்த நிலைமை தீதானது ஆபத்தை மூட்ட வல்லது என்ற கருத்தே இல்லை; இந்த நிலைமை மாற்றப் படத்தக்கதுதான் என்ற நம்பிக்கையும் இல்லை.

நிலைமையை மாற்றாமல், இயல்பை மாற்ற முடியும் என்ற தவறான போக்கைக் காங்கிரசாட்சி மேற்கொண்டிருக்கிறது.

அந்தத் தவறான போக்கு காரணமாகத்தான், காங்கிரசாட்சி எங்கள் சோஷியலிசத்தில், ஏழைக்கும் இதம் கிடைக்கும், பணக்காரனுக்கும் இடம் கிடைக்கும் என்று பேசுகிறது.

சோஷியலிசம் என்பது திட்டவட்டமான ஒரு ஏற்பாடு; எல்லோருக்கும் இரண்டொரு சொட்டு தேன் தெளித்துவிடுகிற தந்திரம் அல்ல.

காங்கிரஸ் பேசும் சோஷியலிசம், இந்நாட்டுச் சீமான்களை மட்டுமல்ல அமெரிக்க நாட்டுப் பெரிய முதலாளிகளையே அச்சம் கொள்ளச் செய்யாததற்குக் காரணம் இதுதான்; காங்கிரசின் சோஷியலிசப் பேச்சு விவரமறியாத ஏழைக்கென்றே தயாரிக்கப்படும் இனிப்புப் பானம் என்பதை அவர்கள் நன்றாகப் புரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

> இந்தியாவிலே 'முதல்' போட்டு தொழில் நடத்தச் சொல்லுகிறீர்களே; இந்தியா சோஷியலிசம் பேசுகிறதே; அங்கு பெரிய முதல் போட்டு தொழில் நடத்துவது ஆபத்து அல்லவா என்று அமெரிக்க நாட்டு முதலாளிகள் கேட்டபோது, அமெரிக்க அரசியல் தலைவரொருவர் புன்னகையுடன் கூறினார்.
>
> இந்தியாவில் பேசப்பட்டுவரும் சோஷியலிசம் பற்றிப் பயம் கொள்ளாதீர்கள் என்று.

மேடையிலே 'சோஷியலிசம்' பேசிவிட்டு, சீமான்களின் மாளிகைகளில் விருந்து சாப்பிடும்போது, காங்கிரஸ் தலைவர்கள், விளக்கம் தருகிறார்கள்; விவரமறிந்த சீமான்கள்,

> 'எல்லாம் எங்களுக்குத் தெரியும்'

என்று குதூகலத்துடன் கூறிவிட்டு



> பாவம், ஏழைகளும் வாழத்தானே வேண்டும்.

என்று உருகுகிறார்கள்.

ஐயோ! பாவம்! ஏழை! அவனும் மனிதன்!—என்ற இரக்கப் பேச்சு இன்று நேற்று தோன்றியது அல்ல; பஞ்சையும் பராரியும் தோன்றிய போதே தோன்றியது. அது பேச்சாக, பாட்டாக, நாடகமாக, காவியமாக, பேருரையாக, உபதேசமாக, வெளிவந்த வண்ணம் இருக்கத்தான் செய்கிறது. ஏழை பணக்காரன் என்ற பேதத்தை அந்தப் பேச்சு நீக்கிவிடவில்லை.

> உழைப்பே, செல்வத்தை உற்பத்தி செய்கிறது.
>
> உழைப்போரின் தொகை அதிகம்.

உழைப்பின் மூலம் உற்பத்தி செய்யப்படும் செல்வம், உழைப்போர் அனைவருக்கும் ஒரு சீராகக் கிடைக்குமானால், சமூகம் முழுவதும், பலன் பெறும்; ஒருபுறம் சோலை, சுற்றிலும் பாலை என்ற நிலை ஏற்படாது.

ஒரு சீராகக் கிடைக்குமானால்!—என்று கூறிவிட்டோமே தம்பி! எளிதாக! இது தன்னாலே நடைபெற்றுவிடுமா, பாவ புண்ணியம் பற்றிய உணர்ச்சி மூலமாக ஏற்பட்டுவிடுமா? ஏற்பட்டு விடுவதில்லை!

வருவாய் அல்லது செல்வ உற்பத்தி சமூகத்தில் ஒரு சீராகப் போய்ச் சேராததால்தான், இத்தனைக் கேடுபாடுகள் ஏற்பட்டுவிட்டன.

இந்தக் கேடுபாடுகளை நீக்க வேண்டுமானால், உற்பத்தி ஆகிற செல்வம் ஒரு சீராக, சமூகம் முழுவதற்கும் பரவிடும் முறையைச் செரல்படுத்த வேண்டும். அதனை ஒரு அரசுதான் துணிந்து மேற்கொள்ள முடியும். அந்தத் துணிவு ஒரு அரசுக்கு ஏற்பட வேண்டுமானால் அது, செல்வத்தைத் தமதாக்கிக் கொள்ள முனைந்திடும் செல்வவான்களின் செல்லப் பிள்ளையாகிவிடக் கூடாது.

> சில திங்களுக்கு முன்பு இந்தியப் பூபாகத்திலே மிகப் பெரிய கோடீஸ்வரராக உள்ள பிர்லா முதலாளிகளைக் கூட்டிவைத்து, நாம் அனைவரும் மீண்டும் காங்கிரஸ் ஆட்சியே அமைவதற்காகப் பாடுபட வேண்டும்; ஏனெனில் நம்மைப் பாதுகாக்கக்கூடியது காங்கிரஸ் கட்சி ஒன்றுதான் என்று பேசினார்.

கட்டுப்பாடுகள் சில விதிக்கும்போது கடுங்கோபம் கொள்கிறார்கள்; வரி கூடுதலாக்கும்போது வெகுண்டெழுகிறார்கள்; ஆனாலும் அதே முதலாளிகள் ஆர அமர யோசித்துப் பார்க்கும்போது, உண்மையான 'சோஷியலிசத்தை' வர விடாமல் தடுத்து நிறுத்தவும், அதேபோது சோஷியலிசம் பேசி ஏழைகளை மயக்கத்திலாழ்த்தி வைக்கவும் காங்கிரசை விடத் திறமையான கட்சி எதுவுமில்லை என்பதை உணருகிறார்கள்; காங்கிரசுக்கு ஆதரவு திரட்டித் தருகிறார்கள்.

வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்ட கணக்கின்படி, சென்ற பொதுத் தேர்தலிலே காங்கிரசுக்கு முதலாளிகள் கொடுத்த நன்கொடைத் தொகை கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாயல்லவா?

இந்த ஒரு கோடி, எதற்கு? எவ்வளவு வேண்டுமானாலும் சோஷியலிசம் பேசுங்கள்; ஆனால் நடைமுறைக்குக் கொண்டு வராதீர்கள் என்று கேட்டுக்கொள்வதற்குத்தானே!

தம்பி! சோஷியலிசம் பேசிவிடுபவர்களெல்லாம் ஏழையை வாழவைத்து விடுவார்கள் என்று கூறிவிடுவதற்கில்லை. இட்லர் பேசாத சோஷியலிசமா!

நாஜிசம் என்று கூறப்படுகிறதே, இட்லர் புகுத்திய முறை நினைவிலிருக்கிறதல்லவா, அதுகூட சோஷியலிசம் என்ற பெயருடன் இணைந்ததுதான்.

இதோ இவர்கள் தமது சோஷியலிசத்துக்கு ஒரு அடைமொழி சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா, ஜனநாயக சோஷியலிசம், என்று; அதுபோல, இட்லர் தம்முடைய சோஷியலிசத்துக்கும் ஒரு அடைமொழு சேர்த்துக் கொண்டார், தேசீய சமதர்மம்-என்பதாக.

அந்த 'National Socialism' என்பதுதான் சுருங்கி மருவி, நாஜிசம் என்ற பெயராயிற்று.

என்ன கண்டனர் ஜெர்மன் மக்கள்? பயங்கரமான போர்!

என்ன தந்தது இந்த நாஜிசம், உலகுக்கு? அமளி அழிவு!

இவர்கள் ஜனநாயக சோஷியலிசம் பேசுகிறார்கள்



எங்கள் சோஷியலிசத்தில் முதலாளியும் இருப்பான்; ஆனால் அவன் வெறும் சுரண்டல்காரனாக இருக்கமாட்டான்; இலாபவேட்டைக்காரனாக இருக்கமாட்டான்; ஏழையை வாழவைக்கும் கருணாமூர்த்தியாக இருப்பான்; அவனை அப்படி மாற்றுவோம் என்று. அதுபோலவே, இட்லர் சொன்னான் என்னுடைய நேஷனல் சோஷியலிசத்தில் (தேசீய சமதர்மத்தில்), முதலாளி இருப்பான், ஆனால் அவன் தேசீய முதலாளியாக, நாட்டு நலனைக் காத்திடும் முதலாளியாக, அரசின் ஆணைக்குக் கட்டுப்பட்டு, நாட்டு வளத்தைப் பெருக்கிடும் முதலாளியாக இருப்பான் என்று பேசினான்! உரத்த குரலில்! கேட்போர் மயங்கும் வண்ணம்! இதோ ஓர் புது தத்துவம் என்று பலரும் பாராட்டத்தக்கவிதமாக.

தம்பி! பல்கலைக் கழகப் பேராசிரியர்கள்,—இதழாசிரியர்கள் போட்டி போட்டுக்கொண்டு விளக்கம் தயாரித்து அளித்தனர், வெறும் சோஷியலிசத்தைவிட, இட்லர் தந்திடும் நேஷனல் சோஷியலிசம் சிலாக்கியமானது, நாட்டுக்கு ஏற்றது, என்றெல்லாம்.

இட்லருடைய நாஜிசத்தில், அதாவது நேஷனல் சோஷியலிசத்தில், 'க்ருப் தைசன்' போன்ற பெரும் முதலாளிகள் கோட்டை கட்டி வாழ்ந்தனர்; தம்மை தேசீய முதலாளிகள் என்று காட்டிக் கொள்வதற்காக, தமது கோட்டைகளிலே சுவஸ்திக் கொடியை (இட்லரின் கொடியை)ப் பறக்க விட்டனர்.

அந்த நாஜிசம் ஜெர்மன் நாட்டு ஏழைகளைக் காப்பாற்றிற்றா? பயங்கரமான அழிவைத் தந்தது; நாடே அடிமைக் காடு ஆக்கப்பட்டது

இவர்கள் கூடத் தம்பி! வெறும் சோஷியலிசம் என்பதைவிட, நேஷனல் சோஷியலிசம் என்று கூறுவது வசீகரமாக இருக்கும் என்ற கருத்துடையவர்கள்தாம். ஆனால், நேஷனல் சோஷியலிசம் எனும் நாஜிசம் உலகிலே—ஒரு கெட்ட பெயர் எடுத்துவிட்டதால், மக்கள் வெறுப்பதால், நேஷனல் சோஷியலிசம் என்று கூறக் கூடாது என்று தீர்மானித்து ஜனநாயக சோஷியலிசம் என்று பேசிவருகிறார்கள்.

இட்லர் முதலாளிகளை கொழுவிருக்கச்செய்தான், அவர்கள் தனக்குக் கொடிபிடிப்போர்களாக இருந்து வரவேண்டும் என்ற நிபந்தனையுடன். இவர்களும் எத்தனை பிர்லாக்களும் இருக்கலாம், தொழில் நடத்தலாம், செல்வபுரி அமைக்கலாம், ஆனால் ஒரு நிபந்தனை, எமது 'போஷகர்களாக' இருக்கவேண்டும் என்று கூறி விட்டனர்.

இங்கும் தைசன்கள் வளருகிறார்கள்.

அன்று தைசனை வளரவிட்டபடி நேஷனல் சோஷியலிசம் பேசினான் இட்லர்.

இன்று பிர்லாக்களைக் கொழுக்க வைத்துக் கொண்டே காங்கிரஸ் ஜனநாயக சோஷியலிசம் பேசி வருகிறது.

முதலாளி, போகபோக்கியத்தில் புரளுவதற்காகத் தன் செல்வத்தைப் பயன்படுத்தினால், அது கெடுதல், ஆனால் அவன் தன்செல்வத்தைநாட்டு வளத்தை அதிகமாக்க.எழில் கூட்ட, ஏற்றம் உண்டாக்க, பிற நாட்டார் கண்டு அஞ்சத்தக்கவலிவு நமது நாட்டுக்கு ஏற்படப்பயன்படுத்தினால், நல்லது தானே என்று கேட்டான் இட்லர். அவனிடம் சொக்கிப்போன மக்கள் ஆம்! ஆம்! என்றனர்.

அதுதான், என் அருமை மக்களே! நாஜிசம்!!—என்றான் இட்லர்; வாழ்க நாஜிசம் என்று ஜெர்மன் மக்கள் முழக்கமிட்டனர்!

இங்கே அதேபாணியில் பேச்சு!!

தொழில் பெருக வேண்டுமல்லவா?—ஆமாம்!

தொழில் பெருகவேண்டுமானால் புதியபுதிய தொழில் நடத்தும் முதலாளிகள் வேண்டுமல்லவா, அதனால் நமது சோஷியலிசத்தில் முதலாளிகள் இருக்கிறார்கள்; தவறா? —என்று கேட்கின்றனர், ஆளவந்தார்கள்.

''ஆம்'' என்பவன் அணைத்துக்கொள்ளப்படுகிறான், அது சரியில்லையே! என்பவன் அடித்துநொறுக்கப்படுகிறான்.



இட்லரின் நேஷனல் சோஷியலிசத்தில் சுவஸ்திக் திரைக்குப் பின்னாலே இருந்துகொண்டு முதலாளிகள் கொட்டமடித்தார்கள். காங்கிரசாட்சியில், மூவர்ணக் கொடி மறைவிலே இருந்துகொண்டு, முதலாளிகள் பெருத்துக்கொண்டு வருகிறார்கள்; காங்கிரஸ் கட்சியையே குத்தகைக்கு எடுத்து நடத்திக்கொண்டும் வருகிறார்கள்.

அரண்மனை போன்ற மாளிகைகள், அன்னங்கள் ஊர்ந்து செல்லும் அழகிய செயற்கைக் குளங்கள், அவைகளிலே துள்ளிடும் பல வண்ணமீன்கள், அவற்றினைக்கண்டு கலகலவெனச் சிரிப்பொலி எழுப்பும் சிங்காரிகள், அந்தச் சிங்காரிகளின் இதழ்கண்டு ஏங்கிடும் சீமான்கள், இந்தக் காட்சியை ஓவியமாக்கியவர்கள், கவிதை இயற்றியவர்கள், இவை எல்லாமே இருந்தன, பிரான்சு நாட்டில். இவற்றை அந்த நாட்டு ஆட்சியாளர்கள், சீமான்கள் போகபோக்கியத்தில் புரளும் நிலை என்று கருதவில்லை; மாறாக அவர்கள் இந்த நிலையினை,

பிரன்ச்சு நாட்டு எழில், ஏற்றம்!

பிரன்ச்சு நாட்டுச் சிற்பக் கலையின் சிறப்பு!

பிரன்ச்சுநாட்டு ஓவியத்திறமை!

பிரன்ச்சு நாட்டுக் காவியப்புலமை!

பிரன்ச்சு நாட்டில் காதல், ஒரு கலையாகி இருக்கும் நேர்த்தி என்றுதான் பெருமிதம் கொண்டனர்.

பிரன்ச்சு நாட்டு மக்கள்கூட, நெடுங்காலம் நம்பினர்! உண்மை பிறகுதான் வெடித்துக் கிளம்பிற்று!!

அதுபோன்றே, இங்கு முதலாளிகள் அமைத்துள்ள பணக்கோட்டையை பாரதநாட்டுச் சிறப்பு என்று காங்கிரசார் பேசுகின்றனர்; நம்பச் சொல்லுகின்றனர்.

ஒரு அமைச்சர் தம்பி! துணிந்து, வெகுதூரம் சென்றுவிட்டிருக்கிறார். முதலாளிகள் பணத்தைக் குவித்துக் கொள்கிறார்கள் என்று கொதிப்படைகின்றீர்களே, எங்கே போய்விடும் அவர்களிடம் குவிந்துள்ள பணம்? இந்த நாட்டில்தானே இருக்கிறது! வெளிநாடுகளுக்கா போய்ச் சேர்ந்துவிட்டது அந்தப் பணம்? இங்கேயே, நம் நாட்டிலேயே

தான் இருக்கிறது! இந்தநாடு, அவர்களுக்குமட்டுமா சொந்தம்? இல்லையே! இது உனக்கும் சொந்தமான நாடுதானே? அப்படியானால், அந்தப்பணம், உன்னுடைய நாட்டில் தானே இருக்கிறது!! இதை அறியாமல் முதலாளிகளிடம் போய்க் குவிகிறதே பணம் என்று கொதித்துப் பேசுகிறாயே தவறல்லவா! விவரம் தெரியாததால் வேதனைப்படுகிறாய்! தெரிந்துகொள், அவ்வளவு பணமும் இங்கேயே தான் இருக்கிறது நம்நாட்டிலேதான் இருக்கிறது. கவலை படாதே, நாம் விரும்பும்போது அந்தப் பணத்தை வரி போட்டு எடுத்துக்கொள்ளலாம். பணம் எங்கும் போய்விடவில்லை, இங்கேதான் இருக்கிறது—என்று பேசினார்—துணிந்து!!

தம்பி! கொள்ளைக்காரன், கன்னக்கோலன், காது அறுப்பவன், அகப்பட்டதைச் சுருட்டுபவன் போன்றார் திருடுகிறார்களே, அந்தச் செல்வமெல்லாம் கூட இங்கேதான் இருக்கிறது, நம்முடைய நாட்டிலேயேதான்! அவர்கள், களவாடியதை கனடா நாட்டுக்கோ, காங்கோ நாட்டுக்கோ, ஆஸ்திரேலியாவுக்கோ, அர்ஜெண்டினாவுக்கோ, கொண்டோடிவிடவில்லை; இங்கேயேதான் இருக்கிறது; இந்த நாட்டிலேயேதான் புண்ய பூமியாம் பாரத நாட்டிலேயே இருக்கிறது. ஆகவே பொருள் களவு போய் விட்டதே என்று கூச்சல் எழுப்பாதே; உன் பொருள் வேறு எந்த நாட்டுக்கும் போய்விடவில்லை; இந்த நாட்டிலேயே, உன் சொந்த நாட்டிலேயே இருக்கிறது என்று எவனும் கதைக்காகக் கூடத் துணிய மாட்டான். ஆனால், நாடாள வந்துள்ள நல்லவர்கள், துணிந்து பேசுகிறார்கள், ஏழையின் வயிற்றில் அடித்து முதலாளிகள் குவிக்கும் பணம் வேறு எங்கும் போய்விடவில்லை; இந்த நாட்டிலேயே இருக்கிறது என்று!

கேட்டுக் கொள்கிறார்கள், கேட்டுக் கொள்ள வேண்டி இருக்கிறது.

முதலாளித்தனத்தை நீக்க மனமற்றவர்கள், துணிவற்றவர்கள் ஏன் 'சோஷியலிசம்' என்று பேசுகிறார்கள்? காரணமற்று அல்ல!

சோஷியலிசம் என்பதனை நாட்டின் பெரும்பான்மை மக்கள் விரும்புகிறார்கள் என்பது புரிகிறது.



உண்மையிலேயே சோஷியலிசத்தைச் செயல்படுத்தக் கூடியவர்கள் மக்களை அணுகினால் பேராதரவு பெற்றுவிடுவார்களே என்ற அச்சம் காரணமாக, மற்றவர்களை சோஷியலிசம் பேசவிடுவதா. அதையும் நாமே பேசி, உண்மை சோஷியலிஸ்டுகள் மக்களிடம் தொடர்பு கொள்ளாதபடி செய்துவிடலாம் என்ற நைப்பாசை காரணமாகவே காங்கிரசாட்சியினர் சோஷியலிசம் பேசுகின்றனர்.

அவர்களின் பேச்சு போலி என்பதையும், அவர்களின் போக்கு வெறும் பசப்பு என்பதையும் உணர்ந்தும், கட்டுக்கோப்புள்ள காங்கிரஸ் கட்சியை எதிர்த்து நிற்கும் துணிவற்று, காங்கிரஸ் கட்சிக்குள் நுழைந்து இடம்பெற்று, மெள்ளமெள்ள, காங்கிரஸ் கட்சியையே கருவியாக்கிக் கொண்டு சோஷியலிசம் கொண்டு வந்துவிடலாம் என்ற எண்ணத்துடன் சிலர் இருக்கிறார்கள். அதுபோலவே காங்கிரசின் செல்வாக்கைப் பழுதுபடாதபடி பார்த்துக் கொள்ளப் பெரும்பொருள் செலவிட்டு, அதனைத் தம்மிடம் வைத்துக்கொண்டு, கருவியாக்கி தங்கள் ஆதிக்கத்தைக் கெட்டிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற துணிவுடன் செல்வவான்கள் இன்று காங்கிரசில் இடம் பெற்றுள்ளனர்.

இந்த இருதரப்பினருக்கும் பலப்பரிட்சை நடத்தப்படுவதில், இன்றுவரையில் செல்வவான்களின் கரமே ஓங்கிக் காணப்பட்டு வருகிறது.

அப்பழுக்கற்ற, உண்மையான சோஷியலிசத்தை மேற்கொண்டால், காங்கிரஸ் கட்சியில் மாஜி மகாராஜாக்களையும், ஆலை அரசர்களையும், வணிகக் கோமான்களையும் காணமுடியாது. அவர்கள் தனித்திட்டிலே சிக்கிக் கொள்வார்கள்; அவர்களின் ஆதிக்கத்தை நீக்கிடும் திட்டம் எது கொண்டுவரப்பட்டாலும் எதிர்த்திடும் வலிவு அவர்களுக்குக் கிடைக்காது.

போன மாதத்திலேதான் தம்பி! ராம்கார் ராஜா காங்கிரசில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்; இதழ்களில் பார்த்திருப்பாயே!

ராம்கார் ராஜா காங்கிரசில் நுழைகிறார். பழம்பெரும் காங்கிரஸ் தலைவர் அஜாய்குமார் முகர்ஜி காங்கிரசை விட்டு வெளியேறுகிறார், நிலைமை புரிகிறதல்லவா!

உனக்குப் புரிகிறது, ஆனால் காங்கிரஸ் தொண்டர்கள் எங்கே இதனைப் புரிந்து கொள்ளுகிறார்கள்.

இந்த ராம்கார் ராஜா சுதந்திரக் கட்சியில் இருந்த போது எதிர்த்தனர்; இன்று அணைத்துக் கொள்கின்றனர்; அகமகிழ்கின்றனர். எதனால்? அவர் தியாகி என்பதனாலா? ஏழை பங்காளர் என்பதனாலா? தொண்டு பல செய்த தூயவர் என்பதனாலா? இல்லையே! அவரிடம் உள்ள இலட்சங்கள், ஓட்டு வேட்டைக்குப் பயன்படும் என்பதனால்! அவர் நோட்டுகளை நீட்டி ஓட்டுகளை வாங்குவார், பிறகு காங்கிரஸ் வெற்றி! என்று முழக்கமிட்டு மகிழ்ச்சி அடையலாம் என்ற ஆசை காரணமாக!

இத்தகையவர்கள் இருக்கும்போது காங்கிரசால் எப்படி சோஷியலிசம் புகுத்துவதில் வெற்றி காணமுடியும்!

தங்களை ஆதிக்கம் செலுத்தவும், தொழில் அமைப்புகளில் தர்பார் நடத்தவும் உரிமை கொடுத்து, வசதி ஏற்படுத்திக் கொடுத்து, பாதுகாப்பும் செய்து கொடுத்துவிட்டு, ஏழைகளின் மனம் குளிர்ச்சி கொள்வதற்காக சோஷியலிசம் பேசுகிறோம், அதற்காக வருத்தப்பட்டுக் கொள்ளாதீர்கள் என்று சொல்லும்போது, அந்த முதலாளிகளுக்கு, காங்கிரசிலே இருப்பதாலே என்ன நட்டம்; கசக்குமா, குமட்டுமா!

> பெரிய அளவிலே வளர்ந்து, நாடாளும் வாய்ப்பும் பெற்றுள்ள காங்கிரஸ் கட்சியிலே இடம் பெற்றுக் கொள்வதன் மூலம், முதலாளிகள் தங்கள் ஆதிக்கத்தைப் பாதுகாத்துக் கொள்வதுடன், ஏழை எளியோரின் பகையும் தங்கள்மீது பாயாமல் ஒரு கேடயத்தையும் பெற்றுக் கொள்கிறார்கள்.

படிப்படியாகவாகிலும் சோஷியலிசம் வருகிறதா என்று பார்த்தாலும், வராதது மட்டுமல்ல, நாளாகவாக, முதலாளிகளின் ஆதிக்கம் வளர்ந்துகொண்டு வருகிறது.

> உள்நாட்டு முதலாளிகளுக்கு இப்போது வெளிநாட்டு முதலாளிகளின் துணை, குறிப்பாக அமெரிக்க முதலாளிகளின் துணை அதிக அளவிலே கிடைத்துக் கொண்டு வருகிறது. உள்நாட்டு முதலாளிகளிடம் காட்டும் பரிவு மரியாதையைக் காட்டிலும் அதிக அளவுக்கு அமெரிக்க முதலாளிகளுக்கு இந்தியப் பேரரசை நடத்திச் செல்லும் காங்கிரஸ் தலைவர்கள் காட்டிக்கொண்டு வருகிறார்கள்.



காங்கிரசின் மூலமாக, எப்படியாகிலும் சோஷியலிசத்தைப் புகுத்திவிடலாம் என்று எண்ணமிட்டுக் கொண்டு, காங்கிரசிலே இருந்து வருபவர்களும், இந்தப் போக்கைக் கண்டு மனம் வெதும்பி சிற்சில நேரங்களில், கண்டனம் உமிழ்கிறார்கள். பிறகோ. கட்சிக் கட்டுப்பாடு அவர்களை ஒடுக்கி விடுகிறது. காங்கிரசுக்கு ஓட்டு தேட அவர்களே கிளம்பிவிட வேண்டி நேரிட்டு விடுகிறது.

காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே, ஒரு சமதர்ம முன்னணி இருக்கிறது! காங்கிரஸ் கட்சி போலியாகத்தான் சோஷியலிசம் பேசுகிறது என்பதற்கு இதனைவிடச் சான்று தேவையில்லை, அல்லவா?

மெய்வழிச் சபைக்குள் ஒரு உண்மை நாடுவோர் சங்கமும், சைவ மெய்யன்பர் கூட்டத்திற்குள், இறைச்சி விரும்பாதார் மன்றமும் இருந்திடின், விந்தை என்பீர்கள் அல்லவா! ஆனால் ஜனநாயக சோஷியலிசம் பேசும் காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே சோஷியலிச முன்னணி என்ற ஒரு பிரிவும் இருக்கிறது!!

அந்த முன்னணியினர் சின்னாட்களுக்கு முன்பு அறிவித்துள்ளனர்;

> காங்கிரஸ், இவ்வளவு ஆண்டுகளாகியும் சோஷியலிசத்தை ஏற்படுத்துவதில் வெற்றி பெறவில்லை,
>
> சோஷியலிசத்தைக் கொண்டுவரும் முயற்சியில் இதுவரையில் காங்கிரஸ் கட்சி ஈடுபடவேயில்லை.
>
> சோஷியலிசப் பேச்சு நடைபெற்றுக் கொண்டிருக்கிற இதே நேரத்தில் முதலாளிகளின் ஆதிக்கம் வளர்ந்து கொண்டு இருக்கிறது என்பதாக.

இந்த 'கண்டுபிடிப்புக்கு'ப் பிறகும் அவர்கள் ஏன் காங்கிரசிலே இருக்கவேண்டும் என்று கேட்கிறாய். நியாயமான கேள்வி! அதைவிடத் தேவையான கேள்வி, உள்ளே இருப்பவர்களே மனம் குமுறிக் கிடக்கும் போது, ஊராரைப் பார்த்து ஜனநாயக சோஷியலிசம் வேண்டுமானால்,

காங்கிரசில் வந்து கூடுங்கள் என்று அழைக்கிறார்களே, பொருள் இருக்கிறதா!

ஆனால் அழைக்கிறார்கள்]! ஏன்? சோஷியலிசம் என்பதன் கவர்ச்சி மக்களை ஈர்த்துக்கொண்டு வரும் என்பதால்.

வைகுந்தம் போக விரும்புவோரெல்லாம் என்னோடு வருக!—என்று அழைத்தான் ஒருவன்.

நெற்றியிலே திருநாமமும் கழுத்திலே துளசி மணிமாலையும் இருந்தது. கண்டவர்கள், அவனை நம்பி, ''வைகுந்தம் போக வழி எது, சொல்லுங்கள் வருகிறோம்'' என்றார்கள்.

''பள்ளி கொண்டான் கோயில் கோபுரம் தெரியுமா அதன் மீது ஏறவேண்டும்! அங்கே சென்றதும், வைகுந்தம் போகும் வழியை நான் காட்டுகிறேன்'' என்றான் திருநாமதாரி. மக்கள் யோசித்தனர், சிறிதளவு தயக்கம் அவர்களுக்கு.

கட கடவெனச் சிரித்தான் ஒருவன்; மக்கள் அவனைத் திரும்பிப் பார்த்தனர்.

வைகுந்தத்துக்கு வழி காட்டுவதாகக் கூறுகிறாரா இவர்! கோபுரம் ஏறிக் காட்டப் போகிறாரா? ஏமாளிகளே! இவன் யார் தெரியுமா? இவன் கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாத பேர்வழி. அவன் வீட்டுக் கோழி, கூரையிலே ஏறிக்கொண்டது; கூரை ஏறிக் கோழியைப் பிடிக்க முடியாமல், கல்லை எடுத்து அதன்மீது வீச, குறி தவறி, வழியே வந்து கொண்டிருந்த மணியக்காரர் பிள்ளை தலை மீது விழ, மணியக்காரரின் ஆட்கள் இவனை நையப்புடைத்தார்கள். மண்டையில் பலத்த அடி; மூளை குழம்பிவிட்டது; அது முதற்கொண்டு இவன் இப்படித்தான் எங்கெங்கோ அலைந்து, வைகுந்தத்துக்கு வழி காட்டுகிறேன் என்று குளறிக் கொண்டிருக்கிறான். ''கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாத இவனா கோபுரம் ஏறி வைகுந்தத்துக்கு வழி காட்டப்போகிறான்!'' என்று விளக்கமளித்தானாம்.

அதுபோல, ஓரளவு கூட சோஷியலிசத்தைப் புகுத்த முடியாதவர்கள் என்று காங்கிரசைக் கண்டித்துக்கொண்டு, ஆனாலும் காங்கிரஸ் ஜனநாயக சோஷியலிசம் தந்திடும்



என்றும் அந்த முன்னணியினர் பேசுகின்றனர், விந்தை அல்லவா?

விந்தை மட்டுமல்ல; இது விபரீதமான யோசனை என்பதை உணர்ந்து கொண்டு வருகிறது நாடு.

நாடு பெற்றுள்ள அந்த உணர்வினைத் தந்திட, தம்பி! நீ மிகுந்த பாடுபட்டிருக்கிறாய்.

நீ, பட்ட பாடுகளுக்கு ஏற்ற பலனைப் பெறுவதற்கான நாளும் நெருங்கிக் கொண்டு வருகிறது. உன் நடையிலேயும் புது வேகம் காண்கிறேன்; மகிழ்கிறேன்.

அண்ணன்,

7—8—'66



காஞ்சிக் கடிதம்: 74

# சிறகு விரித்து ஆடுவதெல்லாம் மயிலாகுமா?

- ★ ஏழைக்கும் வருவாய் உழைக்கும் ஓரிடத்தில்மட்டும்!
- ★ ஏழ்மை ஒரு நோய்; ஒட்டுவார் ஒட்டி!
- ★ புலித்தோலில் அமர்ந்தவன் யோகி ஆகிவிட முடியுமா?
- ★ காங்கிரஸ் ஆட்சி கனதனவான்களின் ஆட்சியே!
- ★ ஏழை—பணக்காரன் 'ஒட்டில்' இல்லையாம்!
- ★ பூ எனக் கூவி முருங்கைப்பூவை விற்பரோ?

தம்பி!

இல்லாமையும் போதாமையும் கொட்டிக்கொண்டுள்ள இடத்திலேயே உழன்று கொண்டிருக்கிறாயே, வாயேன் சிறிது நேரமாகிலும் 'உல்லாசபுரி' சென்று பார்ப்போம். அண்ணன் என்றால் இப்படி அல்லவா இருக்கவேண்டும், இன்னலைத் துடைத்து இதம் அளித்திடவேண்டும் என் றெல்லாம் எண்ணி அகமகிழ்ச்சியை அளவு கடந்துகொண்டு விடாதே! நான் உன்னை அழைப்பது 'உல்லாசபுரி'யில் இருந்திட அல்ல! பார்த்திட! கற்பனைக் கண்களால்!

மாளிகைக்கூடம், தம்பி! அதோ அமர்ந்திருக்கிறாரே, அவர்தான் பெருநிலக்கிழார் பேயாண்டி! பெயர்



என்னவோபோல இருக்கிறதே என்று எண்ணிக் கொள்ளாதே; 'சாமி' பெயர்!!

எதிரே அடக்க ஒடுக்கமாக நின்று கணக்கேட்டைப் புரட்டிப் படிக்கிறாரே 'காரியஸ்தர்', கவனி.

காளூர் வரவு ஆறு ஆயிரத்து நானூற்று எழுபது

சீனூர் வரவு எட்டாயிரத்து ஐம்பது.

சோரனூர் வரவு பத்தாயிரத்து எழுநூறு.

கல்லூர் வரவு ஆயிரத்து அறுநூறு.

மாந்தோப்புக் குத்தகை வரவு ஐயாயிரத்து ஐந்நூறு;

சவுக்குத் தோப்பு ஏல வரவு ஏழாயிரத்து நானூறு;

முந்திரித்தோப்புக் குத்தகை வரவு மூன்றாயிரத்து இருநூற்று அறுபது.

ஆக மொத்தம்.........

தம்பி! பேயாண்டி பேசுவதைக் கேள். 'ஆக மொத்தம்' இருக்கட்டும் ஓய்! காளூர் என்ன இப்படிக் குறைந்து விட்டது? முந்திரி போனவருடம் நாலு இந்த வருடம் மூணு ஆகிவிட்ட காரணம் என்ன? சூளை போட இடத்தைக் குத்தகைக்கு விட்ட கணக்கையே காணோம். என்னபெரிய புரட்டு நடக்குது என்றே தெரியவில்லை.

தம்பி! காரியஸ்தர் ஏட்டைப் புரட்டுகிறார்; ஏதாவது காரணம்கிடைக்கும்; கூறுவார்; ஐயா சமாதான மாகமாட்டார்; ஏசுவார்; அதைக்கேட்டுக்கொண்டிருப் பானேன், வா, வா! போய்விடலாம்! 'உடையவர்' வருவாய் எத்தனை வழிகளிலே பெறுகிறார் என்பதைக் காணவேண்டும் என்பதற்குத்தான் இங்கு அழைத்துவந் தேன். கவனித்தாய்அல்லவா, காளூர், சீனூர், சோரனூர், கல்லூர், இப்படிப் பல சிற்றூர்களிலே உள்ள நிலபுலத்தி லிருந்துவருவாய். மாந்தோப்பு, முந்திரித்தோப்பு, சவுக்குத் தோப்பு இவைகளிலிருந்து வருவாய், வாடகைப் பணம், வட்டிப் பணம், வியாபார இலாபம் இப்படி வேறு வகையி லும் வருவாய்; கோயில் கும்பாபிஷேகம் நடத்தியது, தருமகருத்தா வேலை பார்த்தது, சத்திர நிர்வாகம்

போன்ற 'புண்ணிய' காரியத்தின் மூலம்கூட 'வருவாய்' உண்டு. தம்பி! நாம் தெரிந்து கொள்ள வேண்டியது விவரம் அல்ல; அவைகளுடன் பிணைந்துள்ள ஒரு பொது உண்மை;

சீமான் பல வழிகளில் வருவாய் பெறுகிறார் என் பதுதான்.

ஏழைப் பாட்டாளி அதுபோல, சிம்சன் கம்பெனி மூலம் ஆறு ரூபாய், சிவராமன் கடைமூலம் மூன்று ரூபாய், ராம் சேட் மண்டிமூலம் நாலு ரூபாய், சுந்தரம் ஸ்டோர் மூலம் எட்டு ரூபாய், ஆகமொத்தம் கிடைத்த வருமானம்...என்று கணக்குக்கூற முடியாதல்லவா? அவன் பெறக்கூடிய வரு வாய், இவைகளிலே ஏதாவது ஒரு இடத்தில் மட்டுந்தான்; அதுவும் வேலை நிலைத்திருந்தால்.

ஏழைக்கு வருவாய் உழைக்கும் இடம் ஒன்றில் இருந்து மட்டுமே கிடைக்கும்.

சீமானுக்கு வருவாய் பல இடங்களிலிருந்து கிடைக் கும்.

ஏழைக்கும் சீமானுக்கும் ஒரே வயிறுதான்; அதிலே வித்தியாசம் இல்லை.

ஆனால் வருவாய்த்துறை ஏழைக்கு பல இருப்ப தில்லை; சீமானுக்குப் பலப் பல.

ஆகவே ஏழை உழைக்கிறான் பிழைத்திருக்க!

சீமான், மேலும் சீமானாகிறான், பணம் குவி கிறது; குவிந்த பணம் சீமானுக்குப் புதுப்புது வரு வாய்த்துறைகளைப் பெற்றுத் தருகிறது.

கானூர் நிலத்திலே கிடைத்த வருவாய் குவியக் குவிய, சீனூ ரில் புதிதாக நிலம் வாங்க முடிந்தது—சீமானால். கானூரில் இவருடைய நிலத்தை உழுதுகொண்டிருக்கிறானே, அவ னுக்கு இவர் மூலம் கிடைத்த வருவாயைக் கொண்டு அவன் பெற முடிந்தது என்ன? கேட்டுப் பார்த்தால், கண் கலங்கு வாய்! 'அவளுக்கு ஆஸ்த்துமா! எனக்குக் குடல்நோய்! என் தாயாருக்கு முடக்கு வியாதி! பிள்ளையா? அதைப் பற்றிக் கேட்க வேண்டாமய்யா, அது எனக்குப் பிள்ளை அல்ல,



என்னைச் சாகடிக்க வந்துள்ள எமன்!!'—என்று சொல்லிப் புலம்புவான்.

கானூர் நிலத்தை வாங்கிய வேளை நல்ல வேளைங்க ......அதற்குப் பிறகுதான், பகவானோட கடாட்சத்தாலே, முந்திரித் தோப்பும், மாந்தோப்பும் கிடைச்சுது என்று 'அம்மா' பேசுவார்கள், 'ஐயா' சந்தோஷமாக இருக்கும் போது.

அங்கே பணம், பணத்தைப் பெற்றுத் தருகிறது.

இங்கே (ஏழையிடம்) உழைப்பு உடலை வாட்டி, உள்ளத்தைக் கசக்கிப் போடுகிறது.

அங்கே, செலவு போக இருந்திடும் மிச்சம் முந்திரித் தோப்பாக, மூன்றடுக்கு மாடியாக மாறுகிறது.

இங்கே உழைத்து உழைத்து உருக்குலைந்ததன் பலன், காசம், குன்மம், கடன், இப்படி.

இந்த நிலை, சமூகத்திலே பெரும் அளவு பரவி இருக் கும் கொடுமையை நீக்கினாலொழிய மனித குலம் நிம்மதி யாக வாழ்ந்திட முடியாது என்பதனை உணர்ந்ததன் விளைவு தந்த திட்டந்தான் சோஷியலிசம்.

ஏழை—பணக்காரன் பேதத்தைப் போக்கியாக வேண்டு மானால் ஏழை—பணக்காரன் பேதம் எப்படி ஏற்படுகிறது என்பதைக் கண்டறிந்தாக வேண்டும்.

ஏழ்மை ஒரு நோய்; அது யாரைப் பிடித்துக் கொள் கிறதோ அவனை மட்டுமல்ல, அவனைச் சூழ உள்ளவர் களை, அவன் உலவும் சமூகத்தையே பிடித்துக் கொள்வது; ஒட்டுவார் ஒட்டி! ஆகவே அந்த நோயைப் போக்குவது, அவனிடம் பரிவும் பச்சாதாபமும் காட்ட வேண்டும் என்ப தற்காக மட்டும் அல்ல; அவனைப் பிடித்துக்கொண்டுள்ள நோய் மூலம் கிளம்பிப் பரவிடும் கிருமிகள், சமூகத்தின் நல்லவைகள் யாவற்றையும் அரித்து அழித்துவிடும்; அந்த நோயைத் தடுத்தாக வேண்டும் என்பதற்காக; சமூகத்தை காப்பாற்ற; எதிர்காலத்தைப் பாதுகாத்திட

கானூருக்கும் சீனூருக்கும் சொந்தம் கொண்டாடும் சீமானுக்கும் அவரிடம் கைகட்டி வாய் பொத்தி வேலை செய்யும் பாட்டாளிக்கும், பஞ்சம், பிணி, குழப்பம், கலகம்

போர் போன்ற விபத்துக்கள் ஒரே விதமான இன்னலையும் இழப்பையும் தான் தரும், ஐயமில்லை.

> ஆனால், 'உடையவர்' அந்த விபத்துக்களைத் தாங்கிக்கொள்ள முடிகின்ற அளவுக்கு உழைப்பாளி யால் முடிவதில்லை.

அதனால்தான் பணம் படைத்தவர்கள் பல்வேறு விதமான அரசியல் மாறுதல்களையும், அதிர்ச்சி தரத்தக்க மாறுதல் களையும் தாங்கிக் கொண்ட பிறகும், 'சகஜ' நிலைமை ஏற்பட்டதும், மெள்ள மெள்ள, தங்களின் பழைய நிலை யைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. இந்தப் பொதுவிதிக்கு, சில குறிப்பிடத்தக்க விலக்குகள் இருக்கலாம்; இருக்கின்றன ஆனால் பொதுவான உண்மை என்னவென்றால்,

> பணம், பயங்கரமான விபத்துக்களையும் தாங்கிக் கொள்ளச் செய்திடும் கேடயமாக, பணக்காரர்களுக்கு பயன்படுகிறது.

அதிலும், அரசியல் சூழ்நிலையில் ஏற்படும் மாறுதல்கள் கேடு பயப்பனவாக இருந்திடின், அந்தக் கேடுகளின் முழுத் தாக்குதல், ஏழையின்மீதுதான் விழும்; பணக்காரனைத் தாக்கிடக் கிளம்பிடும், அவன் பணம் எனும் கேடயம் கொண்டு தடுத்துக்கொள்கிறான்.

இந்தியாவின் வரலாற்றிலே இதற்கான சான்றுகளை நிரம்பக் காணலாம்.

வெள்ளையர் வந்தனர்; சிற்றரசர்களும், சீமான்களும் போர்ச் சூழ்நிலை காரணமாக அல்லற்பட்டனர்; ஆனால் விரைவிலேயே நிலைமை அவர்களுக்குச் சாதகமாக அமைந்துவிட்டது. எதிர்த்து நிற்கமுடியாது—என்பதைக் கண்டுகொண்ட—சீமான்கள், வெள்ளையரை 'எஜமானர் கள்' என்று ஒப்புக்கொண்டனர்; அந்தச் சரணாகதியை ஏற்றுக்கொண்ட வெள்ளை அரசு, சீமான்களைத் தமது கொலுப் பொம்மைகள் ஆக்கிக் கொண்டது? அந்தக் கொலுப் பொம்மைகள், எப்போதும்போல கோலாகல வாழ்வு நடாத்தவும், கானூர் வரவு என்ன? வானூர் வரவு என்னஎன்ற கணக்குப் பார்க்கவும், ஏழைகளின் உழைப்பை மிரட்டிப் பெற்றுக் கொள்ளவும் முடிந்தது. வெள்ளை அரசு அதனை அனுமதித்தது!!



> பணம் படைத்தவர்கள் எந்த அரசு அமைந் திடினும் அதனைத் தமக்குச் சொந்தமுள்ள அரசு ஆக்கிக்கொள்வர்; தமது பண பலத்தைக் காப்பாற்றிக் கொள்ள.

இந்த நிலைமை, வெள்ளை அரசு அமைத்ததோடு முடிந்து விடவில்லை.

> காங்கிரஸ் அரசு அமைந்ததும், அதே சீமான்கள் அந்த அரசைத் தமக்குச் சொந்தமுள்ள அரசு ஆக ஆக்கிக் கொண்டு விட்டுள்ளனர்.

> சான்று வேண்டிடுவோர் தத்தமது வட்டாரத்தில் உள்ள 'பெரிய புள்ளிகள்' இன்று எந்தக் கட்சியில் இடம் பெற்றுள்ளனர் என்பதனைக்கணக்கெடுத்தாலே போதும்.

முதலமைச்சர் இருக்கிறாரே பக்தவத்சலனார், அவருடைய குடும்பத்தினரே, நவாப் காலத்திலே 'மானியம்' வாங்கிய குடும்பமாம். விவரம் கேட்கிறாயா, தம்பி! விசாரித்துச் சொல்கிறேன்,

ராமநாதபுரம் ராஜா குடும்பம் இருக்கிறதே, 'சேதுபதி கள்' வெள்ளையர் காலத்திலும் இதே செல்வாக்குத்தான்; ராஜாக்களையும் ஜெமீன்தாரர்களையும் அழித்துவிட்ட தாகக் கூறிக்கொள்ளும் காங்கிரஸ் அரசின்போதும் அதே செல்வாக்குத்தான்!

வெள்ளைக்காரன்கூட, சேதுபதிகளை, ராமநாத புரம் ராஜாவாக மட்டுமே இருக்கச் செய்தான்.

காங்கிரசாட்சியிலேதான் ராமநாதபுரம் ராஜா, தமிழ் நாடு முழுவதற்கும் 'மந்திரி' யாகி ஆட்சி நடத்தினார்.

சிவகங்கை ராஜா குடும்பம் அதே நிலைமை!
செட்டி நாட்டு ராஜா குடும்பம்? அதே நிலைமை!!

வெள்ளையர் ஆண்டபோது, எப்படி அவர்கள் இந்தப் பெரிய புள்ளிகளைத் தமது கொலுமண்டபத்தில் இடம் கொடுத்து, துணைக்கு, துதி பாடவும் வைத்துக் கொண் டிருந்தனரோ, அது போலவேதான், காங்கிரஸ் ஆட்சியும் பெரிய புள்ளிகளைத் தமது நண்பர்கள் ஆக்கிக்கொண்டு விட்டிருக்கிறது.

பணம் படைத்தவர்களை எந்த அரசும், தனது பரிவாரத்தினர் ஆக்கிக் கொள்ளும் என்பதையும், இந்த எழுதாத ஒப்பந்தம் இன்று நேற்றல்ல, நெடுங் கால மாக இருந்து வருகிறது என்பதையும் உணர்ந்திடின் இன்றைய அரசியல் நிலைமை நன்கு விளங்கும்.

காங்கிரஸ் கட்சி ஆட்சி நடத்துவது என்பது, ஆராய்ந்து பார்க்கும்போது, இதற்கு முன்பு அமைந்திருந்த ஆட்சி களின்போது, எந்தச் சீமான்கள்—பெரியபுள்ளிகள்—செல் வாக்குப் பெற்று வந்திருந்தனரோ, அதே திருக்கூட்டத் தார், தமது நிலைமையை உறுதிப்படுத்திக்கொள்ளவும், வாழ்வை வளமாக்கிக் கொள்ளவும் நடத்தப்பட்டுவரும் ஆட்சி என்பது புரிகிறது. அதனால்தான், நாம் அந்த ஆட்சியை மாற்றியாகவேண்டும் என்கிறோம்.

புலித்தோல்மீது அமர்ந்து கண்களை மூடிக்கொள் வதாலேயே, முன்னாள் வழிப் பறிக்காரன், யோகி ஆகிவிடமுடியாது.

சிலகாலம், விவரம் தெரியாதவர்கள் மயங்கிக் கிடக்கலாம்.

எல்லோரும் ஏமாளிகளாகிவிட மாட்டார்கள்.

ஏமாளிகளாகிவிடுபவர்களும் கடைசி வரையில் விழித்துக்கொள்ளமாட்டார்கள் என்று எண்ணுவதும் பேதைமை.

அந்த விழிப்புணர்ச்சியை, தமிழகத்தைப் பொறுத்த வரை யில், ஏற்படுத்துவதிலே நமது கழகத்துக்குச் சிறப்பான, பெரும் பங்கு உண்டு-அந்தப் பெருமைக்கு முழு உரிமை பெற்ற உன்னைத் தம்பியாய்க் கொண்டதனால் நான் மகிழ்ச்சி கொள்கிறேன்.

காங்கிரஸ் ஆட்சி என்பது கனதனவான்களின் ஆட்சிதான் என்பதை மக்கள் உணரத் தலைப்பட்டு விட்டார்கள் என்றவுடன்தான், காங்கிரஸ் கட்சி, எங்களைச் சாமான்யமாக எண்ணி விடாதீர்கள், நாங்கள் ஏழை பணக்காரன் வித்தியாசத்தை ஒழிக்கப் போகிறோம்; சோஷியலிசம் கொண்டு வரப் போகி றோம் என்று அறிவிக்கிறார்கள்.



தம்பி! நான் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண் டிருந்தபோது, ஒரு வேடிக்கை நடைபெற்றது.

அன்னியச் சாமான்களை விலக்குவது என்ற திட்டம் மும்முரமாகப் பரவிய நேரம்.

குறிப்பாக அன்னிய ஆலைத் துணிகளைப் போட்டுக் கொளுத்தும் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம்.

என் நண்பன் ஒருவன், 'சிகரட்' பிடிப்பவன்; முன்பு மறைவாகப் பிடித்து வந்தவன், தைரியமாக நாலு பேருக்கு முன்பாகவே சிகரட் பற்றவைக்கத் தொடங்கினான்.

திடுக்கிட்டுப் போனவர்கள் அந்த நண்பனைக் கேட் டார்கள், இப்படிச் செய்யலாமா? என்று.

ஒரு குறும்புப் புன்னகையுடன் அந்த நண்பன் சொன்னான், "நான் என்ன செய்கிறேன் என்று எண்ணிக் கொண்டீர்கள்? நான் அன்னியச் சாமானைக் கொளுத்து கிறேன்; இது இங்கிலாந்து நாட்டுச் சிகரெட்டு; இதைக் கொளுத்தித் தள்ளுகிறேன்" என்றான்.

இது வேடிக்கை நிகழ்ச்சி! காங்கிரஸ் கட்சியோ, ஏழை பணக்காரன் பேதத்தை ஒழித்துக் கட்டுகிறோம்! எப்படி என்றால், ஏழை பணக்காரன் இருவரையும் 'ஓட்டர்கள்' ஆக்கி, அந்த ஓட்டுகளிலே, இது ஏழையின் ஓட்டு, இது பணக்காரன் ஓட்டு என்று பாகுபாடு பார்க்காமல், இரண்டு பேர்களுடைய ஓட்டுகளையும் கேட்டு வாங்கிக் கொள் கிறோம்; பேதத்தை ஒழிக்கிறோம் என்று வாதாடும்போல இருக்கிறது.

யார் தங்கள் செல்வத்தையும் செல்வாக்கையும் கெட்டிப்படுத்திக் கொள்ளக் காங்கிரஸ் கட்சியிலே புகுந்து கொண்டுள்ளனரோ, அந்தப் பெரிய புள்ளி களைக் கொலுமண்டபத்திலே வைத்துக்கொண்டே ஏழை...பணக்காரன் வித்தியாசத்தை ஒழிக்கப் போகி றோம் என்று பேசுவது, காளையைக் காட்டி கலம்பால் கறந்து தருகிறேன் என்று கூறுவதற்கு ஒப்பானதாகும்.

தம்பி! குள்ளர்களை ஒழிக்கப் போகிறேன் என்று நான் பேசினால் எப்படி இருக்கும். உறுதி! உறுதி! உறுதி! காங்கிரஸ் கொள்கையிலே நாங்கள் உறுதியாக நிற்போம்

என்று 'புகுந்தவர்கள்' முழக்கமிட்டால் எப்படி இருக்கும்; கேட்க! தாடி ஒழிப்புச் சங்கத்தைப் பெரியாரும், மீசை ஒழிப்புச் சங்கத்தை நண்பர் ம. பொ. சிவஞானமும் துவக்கினால் எப்படி இருக்கும்; தாடியும் மீசையும் இப்போது உள்ளபடியே வைத்துக்கொண்டு. காங்கிரஸ் கட்சி ஊரில் உள்ள எல்லாப் பெரிய புள்ளிகளையும் உடன் வைத்துக் கொண்டு, நாங்கள் சோஷியலிசம் கொண்டு வரப் போகிறோம் என்று பேசுவதை நினைக்கும்போது, எனக்கு இவ்விதமெல்லாம் தோன்றுகிறது.

ஆனால் பேசுகிறார்களே! தம்பி, துணிந்து! நாடு கேட்டுக் கொள்ளும், ஏற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்க்கிறார்களே!! எதனால்? எதைச் சொன்னாலும் கேட்டுக் கொள்ளும் இயல்பினர் நாட்டிலே ஏராளமானவர்கள் உள்ளனர் என்ற எண்ணம். ஆனால் நாடு இன்று அவ்விதமாகவா இருக்கிறது? நாட்டு நிலையை நன்கு பார்க்கிறாயே, தம்பி! எதைச் சொன்னாலும் ஏற்றுக்கொள்ளும் நிலையிலா நாட்டவர் உள்ளனர்? இல்லையே! மக்களின் கண்களே கேள்விக் குறிகளாக அல்லவா உள்ளன!!

முதலாளிகளை ஒழிப்பதுதான் சோஷியலிசம் என்று கருதாதீர்கள், அவர்களையும் வாழவிட்டு, ஏழையையும் வாழ வைப்பதுதான் எங்கள் சோஷியலிசம் என்று விசித்திரமாக வாதாடுகிறார்கள்.

வாதிக்கும் வெற்றி கிடைக்க வேண்டும் பிரதிவாதிக்கும் தோல்வி ஏற்படக்கூடாது என்கிறார்கள்!

முட்டையும் உடையக்கூடாது அடையும் சுட்டாக வேண்டும் என்கிறார்கள்!

புயலும் அடிக்கவேண்டும் மரமும் விழக்கூடாது என்கிறார்கள்!

பணம் படைத்தவர்களும், பணம் திரட்டிக் குவிப்பவர்களும் இருப்பார்கள்; ஏழையும் நிம்மதியான வாழ்வு பெறுவான் என்கிறார்கள்!

பணக்காரர்கள் என்று சமூகத்தில் ஒரு பகுதியினரும், ஏழைகள் என்று மற்றோர் பகுதியினரும் இருக்கும் நிலைமை சோஷியலிசம் ஆகாது.



ஆனால் இதைத்தான் சோஷியலிசம் என்று காங்கிரஸ் கட்சி பேசுகிறது.

திருப்பதி செல்லும் பஜனைக் கோஷ்டியும், கோவிந்தா! கோவிந்தா! என்று முழக்கம் எழுப்புகிறது.

பிணத்தைச் சுமந்து செல்லும்போதும், கோவிந்தா! கோவிந்தா! என்று கூச்சல் எழுப்புகிறார்கள்.

இரண்டு நிலைமைகளின் போதும், ''கோவிந்தா!' கேட்கிறது. ஆனால் அந்த இரண்டு 'கோவிந்தா'வும் ஒன்றா?

அதுபோலத்தான், சமூகத்திலே ஒரு பகுதி பணம் படைத்தோர்களாகவும், பெரும் பகுதியினர் வாழ முடியாமல் தத்தளிக்கும் ஏழைகளாகவும் இருக்கக் கூடாது, இந்த நிலைமையை மாற்றியாக வேண்டும் என்ற புரட்சித் திட்டம் மேற்கொள்பவர்களும், சோஷியலிசம் பேசுகிறார்கள்.

பணக்காரர்கள் இருக்கத்தான் செய்வார்கள், சிலர் பணம் திரட்டுவது நடந்து கொண்டுதான் இருக்கும். அதனை அனுமதித்துக்கொண்டுதான் இருப்போம். ஆனால் ஏழைக்கும் நல்லது செய்வோம், வாழ்வு கொடுப்போம் என்று பேசும், பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் என்ற போக்கினராக உள்ள காங்கிரஸ் கட்சியினரும் சோஷியலிசம் பேசுகிறார்கள்!

இந்த இருவகை சோஷியலிசப் பேச்சில், எது பொருள் உள்ளது, பயன் தருவது, நேர்மையானது என்பதுதான் நாட்டின் முன் உள்ள கேள்வி.

காடும் மேடும் கழனியாக வேண்டுமானால், கள்ளியும் முள்ளும் களைந்தெறியப்பட்டாக வேண்டும்; மேடு பள்ளம் சமமாக்கப்பட வேண்டும்.

ஒழுங்குபடுத்தப்பட்ட 'பள்ளம்' பயன்படும்; குளமாக, குட்டையாக.

சமப்படுத்தப்பட்ட இடம் வயலாகும்; விளைச்சல் இடமாகும்.

எமது வயலில் ஆங்காங்கு சிறு சிறு பள்ளங்களும் இருக்கும், கேடுகளும் இருக்கும், ஒருபுறம் கள்ளி கிடக்கும், மற்றோர் புறம் புற்றும் இருக்கும் அதிலே பாம்பும் இருக்கும், வேறோர் புறம் புதர் இருக்கும், அதிலே நரியாவது இருக்கும், சேறு இருக்கும், அதிலே எருமை புரளும், இந்தச் சூழ்நிலையிலும், விளைச்சல் மட்டும் அமோகமாகக் கிடைக்கும். அப்படிப்பட்ட அற்புதமான வயல் எம்முடையது என்கிறார்கள் காங்கிரஸ் கட்சியினர்.

இன்று உள்ள முறைப்படி சமூகத்தில் பணக்காரர்களும் இருப்பார்கள், அவர்கள் பணம் தேடிட, குவித்திட, சேமித்திட, உரிமையும் இருக்கும்; அதே போது ஏழைக்கு வாழ்வும் உயரும் என்பது, சோஷியலிசம் அல்ல என்பது மட்டுமல்ல, தம்பி! அது நடைமுறைக்கு வர இயலாததுமாகும்.

ஏழைகளின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட வேண்டுமானால், அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்காகத் தேவைப்படும் பணம், நாட்டின் பொது வருவாயில் இருந்துதான் எடுத்தாக வேண்டும். நாட்டின் பொது வருவாயைத் தமக்காக என்று பணக்காரர்கள் மடக்கிக் கொள்ளுகிற வரையில் ஏழையின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி வாழ்வைச் செம்மைப்படுத்துவதற்குத் தேவைப்படும் பணம் கிடைக்காது.

காங்கிரஸ் ஆட்சியோ பணக்காரர்கள் செல்வம் தேடிடும் உரிமையை இழக்கமாட்டார்கள் என்று திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டிருக்கிறது.

அப்படியானால், ஏழையின் வாழ்வை வளப்படுத்தத் தேவைப்படும் பணம் எங்கிருந்து கிடைக்கும்?

விளக்கம் காணோம். கேட்டால் கோபம்தான் பொத்துக்கொண்டு வருகிறது.

ஏழையை வாழவைக்கப் போகிறோம், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் போகிறோம், நாட்டிலே பல்வேறு துறைகளிலே உற்பத்தியாகும் செல்வம், அதற்கே பயன்படும் என்று பேசுவது, நடைமுறைக்கு வரவேண்டுமானால், அந்தச் செல்வத்தைச் சிலர் தமதாக்கிக் கொள்ளும் முறை மாற்றப்பட்டாக வேண்டும்.



அந்த முறையை மாற்றாமல், ஏழையை வாழவைக்கப் போகிறோம் என்று பேசுகின்றனர் காங்கிரசார்.

இந்தப் பேச்சு புதுமையானது, புரட்சிகரமானது என்றும் புகழ்ந்து பேசிடச் சிலர் உளர்; சீமான் கொட்டாவி விட்டு எழுப்பும் சத்தத்திலேயே 'சங்கீதம்' கேட்பதாகத் துதி பாடிக் காசு தேடும் 'தின்று தீர்த்தான்கள்' போன்றார்!

எல்லோரும் வாழவேண்டும் என்ற பேச்சுக்கா பஞ்சம்! அதை எப்படி நடைமுறையாக்குவது என்பது பற்றிய செயலுக்குத்தானே தொடர்ந்து பஞ்சம் இருந்து வருகிறது.

Our task is to use rightly and to best advantage her great economic assets not to increase the wealth of the few but to raise the many from poverty to a decent standard of comfort.

We must lift the poor man of India from poverty to security, from ill-health to Vigour, from ignorance to under-standing

And our rate of progress must no longer be at the bullock-cart standard but atleast at the pace cf the handy and servicable jeep.

இந்தியாவின் பொருளாதார வளத்தை, தக்க முறையில், பலன் தரத்தக்க வகையிலே பயன்படுத்துவதுதான் நமது பணியாகும்—ஒரு சிலருடைய செல்வத்தை அதிகப்படுத்துவதற்காக அல்ல; ஆனால் பெரும்பாலோர்களை வறுமையிலிருந்து எழச்செய்து, வசதியுள்ள, நாகரிகமான வாழ்க்கைத் தரம் பெறும்படிச் செய்வதற்காக.

இந்தியாவிலுள்ள ஏழையை வறுமையிலிருந்து நிலையான வாழ்க்கைக்கு உயர்த்திட வேண்டும்; நலிவை நீக்கி ஆற்றலுள்ளவனாக்கிட வேண்டும்; அறியாமையிலிருந்து தெளிவுள்ள நிலைக்கு உயர்த்த வேண்டும்.

நமது முன்னேற்ற வேகம் இனி, கட்டை வண்டி அளவினதாக இருந்திடக் கூடாது, குறைந்த பட்சம் கைக்கு அடக்கமான, பயன்படுகிற ஜீப் (மோடார்) வேகத்தின் அளவாவது இருக்கவேண்டும்.

இலக்கிய நயமே கூட இருக்கிறதல்லவா, தம்பி! இந்தப் பேச்சில்.

இந்தியாவிலே இயற்கையான பொருளாதார வளம் இருக்கிறது.

அந்த வளத்தைத் தக்க முறையில் பயன்படுத்த வேண்டும்.

அப்படிப் பயன் படுத்துவது ஒரு சிலர் செல்வம் சேர்ப்பதற்காக இருக்கக் கூடாது.

மிகப் பெரும்பாலான மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, அந்தப் பொருளாதார வளர்ச்சி பயன்படவேண்டும்.

ஏழை, வறுமையின் பிடியிலிருந்து விடுவிக்கப் பட்டாக வேண்டும்.

ஏழையின் வாழ்விலே ஒரு நிம்மதியும், நிலையான தன்மையும் ஏற்படவேண்டும்.

ஏழையின் நலிவு நீங்க வேண்டும்; வலிவு மிக வேண்டும். அறியாமை போகவேண்டும்: தெளிவு பிறந்திட வேண்டும்.

அதற்கான முன்னேற்றம் கட்டை வண்டி வேகத்தில் இருக்கக் கூடாது.

முன்னேற்ற வேகம், குறைந்தது ஜீப் மோடாரின் வேகத்தின் அளவுக்காவது இருக்கவேண்டும்.

இப்படியெல்லாம் மெருகு கூட்டிப் பேசமாட்டார் எங்க காமராஜர், மனத்திலே பட்டதை அப்படியே மெருகு கலவாமல், சுத்தமாகச் சொல்லுவார், வேறு சிலர் போல அவர் தமது பேச்சுக்கு அழகு கூட்டிக் கொண்டிருக்க மாட்டார், ஆனால், இப்போது உங்கள் அண்ணாதுரை எடுத்துக் காட்டினானே, இதையேதான் 'எங்க தலைவர்' ஒவ்வொருநாளும் சொல்லுகிறார், ஓயாமல் சொல்லுகிறார், ஒருவருக்கும் அஞ்சாமல் சொல்லுகிறார், உள்ளன்போடு சொல்லுகிறார், உணர்ந்து சொல்லுகிறார்—என்றெல்லாம், தம்பி! காங்கிரஸ்காரர்கள் கூறக்கூடும்,



அதிலேயே சிலர், இதுபோல இலக்கிய அழகு சொட்டச் சொட்டப் பேசினாரே, எமது பண்டிதர், அறிவாயா!!—என்று கேள்வியைக் கிளப்புவார்கள்.

தம்பி! நான் இந்தப் பேச்சை எடுத்துக் காட்டுவது, காமராஜர் 'கொச்சை'யாகக் கூறுவதை, ஏன் இதுபோல இலக்கிய அழகுடன் கூறக்கூடாது என்று கேட்கவுமல்ல; இலக்கிய நடைப் பேச்சில் பண்டிதர் வல்லவர் என்பதை மறுப்பதற்கும் அல்ல. என் நோக்கம் வேறு. மறுமுறையும், அந்தப் பேச்சைப் படித்துப் பார், தம்பி! அதிலே ஒரு இடத்திலாவது சோஷியலிசம் என்ற வார்த்தை இருக்கிறதா என்று பார்! இல்லையல்லவா!!

இப்போது காங்கிரஸ் கூறுவது அவ்வளவும் அந்தப் பேச்சிலே இருக்கிறது.

பொருளாதார முன்னேற்றம்.

அது பத்துப் பணக்காரர்களுக்கு மட்டும் பயன் படுவதாக இருந்துவிடக் கூடாது, ஏழையை வாழ வைப்பதாக இருக்க வேண்டும்.

முன்னேற்றம் வேகமாக இருக்க வேண்டும்.

இவை யாவும் காங்கிரஸ் பேச்சிலே உள்ளவையே!

ஆனால் இந்தப் பேச்சிலே சோஷியலிசம் என்ற சொல்லே இல்லை.

இதே பேச்சைப் பேசிக்கொண்டு, இதுதான் 'சோஷயலிசம் என்று காங்கிரஸ்காரர்கள் பேசுகின்றனர்.

பேசுவது மட்டுமல்ல, இதைக் காமராஜர் பேசும் போது கேட்டாலும் கேட்டேன், உன் பேச்சைப் போலக் கேட்கல்லே;—என்றும் பாடுகிறார்கள்!

இதனைப் புதிய கண்டுபிடிப்பு என்கிறார்கள்!

இதற்குக் காமராஜர் தந்தையாம்! சிற்பியாம்!!

ஜனநாயகம்—சோஷியலிசம் என்ற வார்த்தைகளைச் சொல்லத் துணிவின்றி ஜவஹர்லால் நேருகூட இருந்துவிட்டுப் போய்விட்டார், இப்போது 'தேசப்

பிதா' வந்துதான் இதனைப் பேசுகிறார் என்கிறார்கள்.

அர்ச்சனை செய்வது என்று கிளம்பிவிட்ட பிறகு, 'சஹஸ்ர நாமம்' வரையில் போக வேண்டியதுதான்! போகிறார்கள்.

அதற்காக அல்ல, தம்பி! நான் இதனைச்சொல்வது. நான் காட்டிய பேச்சுதான்; இப்போதும் காங்கிரஸ் கட்சி பேசி வருகிறது.

அந்தப் பேச்சிலும் சரி, இப்போது பேசப்படுவதிலும் சரி, பணக்காரரர்கள் என்ற ஒரு வர்க்கம் இருக்க அனுமதிக்க மாட்டோம் என்ற திட்டவட்டமான அறிவிப்பு இல்லை.

நாட்டு வளம், ஒரு சிலர் செல்வத்தைக் குவித்திடப் பயன்பட விடக்கூடாது; ஏழையின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பயன்படுத்தவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.

அது சோஷியலிசம் அல்ல என்பதால்தான், நான் எடுத்துக் காட்டிய பேச்சில், சோஷியலிசம் என்ற வார்த்தை இணைக்கப்படவில்லை.

சிறகை விரித்தாடும் பறவை என்பதற்கும் மயில் என்பதற்கும், வித்தியாசம் இல்லையா, தம்பி!

மயில் மட்டுமா சிறகை விரித்தாடுகிறது; வான் கோழி கூடத்தானே!

மயில் என்று கூறினால், மயிலாக இருக்கவேண்டுமேயன்றி, சிறகை விரித்தாடுவது மயில், இதோ இதுவும் சிறகை விரித்தாடுகிறது; ஆகவே இதற்கு மயில் என்றே நான் பெயரிடுகிறேன் என்று கூறி ஒரு துணிந்த பேர்வழி, வான்கோழியைக் கொண்டு வந்து காட்டினால், தம்பி! என்ன எண்ணிக் கொள்வது? அந்த நெஞ்சழுத்தத்தை வியந்திடத்தானே வேண்டும்! சிறகு விரித்து ஆடுவதெல்லாம் மயிலாகுமா?

நான் எடுத்துக் காட்டிய பேச்சிலே, ஏழையை வாழவைத்தாக வேண்டும் என்ற விருப்பம் தெரிவிக்கப்பட்டிருப்பினும், அதிலே சோஷியலிசம் என்ற வார்த்தை காணப்படாததற்குக் காரணம், இதனைச் சோஷியலிசம் என்று கூறினால், நம்மை விவரமறியாதவன் என்று அறிவாளர்



எண்ணி எண்ணி நகையாடுவார்களே என்ற அச்சம், கூச்சம்.

அச்சமில்லை! அச்சமில்லை! அச்சமென்பதில்லையே; அறிந்தோர் தொகை நூற்றில் ஒரு முப்பதே என்பதனாலே! என்று காங்கிரசின் பெருந் தலைவர்கள் துணிந்துவிட்டார்கள்; அதனால்தான் அந்தப் பழைய பேச்சுக்கே 'சோஷியலிசம்' என்று பெயரிட்டுவிட்டார்கள்.

பெயர் முக்கியமல்ல, நோக்கம்தான் முக்கியம் என்று வாதாடுவார் உளர். உண்மை! ஒப்புக் கொள்வோம், தம்பி! ஆனால் ஒரு பொருந்தாத பெயரைத் தேடி எடுத்து ஏன் சூட்டவேண்டும்! அந்தப் பெயர் மக்களைச் சொக்கவைக்கும் என்பதால்தானே! அந்த நோக்கம், நேர்மையானதுதானா?

பூவோ பூ!—என்று முருங்கைப் பூவை விற்பாரைப் பார்த்ததுண்டா? பார்த்திருக்க முடியாது! இதோ! விற்கிறார்களே ஜனநாயக சேஷியலிசம் என்று —ஐயோ! பாவம்! ஏழையும் வாழட்டும் என்ற பழைய பேச்சை, புதிய 'லேபிள்' ஒட்டி. பாரேன்!

ஏழையை வாழ வைப்பதே எமது நோக்கம்

என்ற இந்தப் பேச்சு, புரட்சிப் பேச்சாக, புதுமைப் பேச்சாக, சோஷியலிச கீதமாக விளம்பரப்படுத்தப் படுகிறதே, தம்பி! இதே கருத்தைக் கொண்ட பேச்சு நான் எடுத்துக் காட்டினேனே, அது யாருடையது தெரியுமா?

ஜவஹர்லால் நேருவுடையதா?
லால்பகதூர் சாஸ்திரியுடையதா?
லாலா லஜபதிராயுடையதா?
மோதிலால் நேருவுடையதா?

என்றெல்லாம் யோசித்துக் கொண்டிருக்க வேண்டாம் தம்பி! இது எந்தக் காங்கிரஸ் தலைவருடைய பேச்சும் அல்ல; சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட எவருடைய பேச்சுமல்ல, சொல்லப்போனால் 'பாரத புத்திரர்' எவரும் பேசியது அல்ல; ஏகாதிபத்திய ஏஜண்டு பேச்சு.

ஆமாம்! தம்பி! பதறுவர் காங்கிரஸ்காரர். ஏழை வாழ வேண்டும். பணக்காரனுக்காக நாட்டுச் செல்வம் இல்லை, ஏழைக்காக, அவனுக்கு நல்வாழ்வு அளிக்க!—என்று பேசும் திறமையும் நேர்மையும், உரிமையும் உணர்ச்சியும் எமக்

கன்றோ உண்டு! நாட்டு விடுதலை வீரர்களாம் நாங்கள் மட்டுமே பேசக்கூடிய இந்த உருக்கமான பேச்சை, எழுச்சியூட்டக்கூடிய பேச்சை, ஒரு ஏகாதிபத்திய ஏஜண்டா பேசினான்? யார் அவன்? —என்றெல்லாம் கேட்பர். பதறிப் பயன் இல்லையே! தம்பி! உள்ளபடி, இன்று இவர்கள் பேசும் இதே பேச்சை, இவர்களைப் போல லேபிள் ஒட்டாமல் பேசியவர், இந்தியாவின் வைசிராயாக இருந்தவர்; வெள்ளையர்! 1944ம் ஆண்டு வைசிராய் பேசிய பேச்சு இது.

1944ல்—இருபத்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு வெள்ளைக்கார வைசிராய் பேசியதை, அதே கருத்தை 1964ல் போலி லேபிள் ஒன்று ஒட்டி, இவர்கள் பேசுகிறார்கள்.

இருபத்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நாடு கேட்ட அதே பேச்சு, இன்று சோஷியலிசம் என்ற பெயர் ஒட்டப்பட்டு மக்களுக்கு அளிக்கப்படுகிறது.

ஒரு வெள்ளைக்கார ஏஜண்டு, எதைச் சொன்னானோ அதை இருபத்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இவர்கள் சொல்லுகிறார்கள்; இதிலே புதுமை இருக்கிறதாம், புரட்சி இருக்கிறதாம்; நம்பச் சொல்லுகிறார்கள்!

அவன் சொன்னான்! நாங்கள் செய்கிறோம்! புரிகிறதா வித்தியாசம் என்று பொறி கிளப்புவோர் பேசுவர்; பேசட்டும், தம்பி! அடுத்த கிழமை இவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது பற்றியும் கூறுகிறேன். இந்தக் கிழமை, இவர்கள் இன்று பேசுவதிலே புதுமையும் இல்லை புரட்சியும் இல்லை, இதைப் பேச அபாரமான ஆற்றலோ ஏழைகளிடம் ததும்பி வழியும் அன்போ கூட இருந்திடத் தேவையில்லை, இதுபோல ஒரு வெள்ளைக்கார ஏகாதிபத்திய ஏஜண்டினாலேயே பேச முடிந்தது—இருபத்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே—என்பது வரையில் கூறினால் போதும் என்று கருதுகிறேன்.

அண்ணன்,

14—8—'66



காஞ்சிக் கடிதம்: 75

# அனுபவி ராஜா!

- ★ பொதுத்துறைத் தொழில்களில் சில போதுமா?
- ★ பல்வேறு பெயர்களில் பற்பல அமைப்புகள்!
- ★ பொருளாதார ஏகாதிபத்தியத்துக்கு அடையாளம் பொள்ளாச்சி மகாலிங்கம்!
- ★ பணத்தோட்டம் எங்கே? அமீர் சந்த்களிடம்!
- ★ தண்டனை பல பெற்றும் தளரவில்லையே—ஏன்?
- ★ வளர்ச்சியால் வசதி பெற்றவர் யாவர்?
- ★ அனுபவி ராஜான்னு ஆள்பவர் கொடுக்கிறார் வாய்ப்பு!
- ★ மான் எங்கே? வேங்கையின் வயிற்றிலே! பணம் எங்கே? முதலாளியினிடத்திலே!

தம்பி,

முந்திரா என்ற முதலாளி நடத்திய திருவிளையாடல் இந்தியப் பேரரசையே ஒருமுறை திக்குமுக்காடச் செய்துவிட்டது பற்றி மறந்திருக்க மாட்டாய்.

அப்படி யாராகிலும் மறந்துவிட்டிருப்பினும், இப்போது வெகு வேகமாகப் பேச்சாளராகி வருகிறாரே திருச்செந்தூர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், அவரைப்

பார்த்ததும் அல்லது அவரைப்பற்றிய நினைவு வந்ததும், முந்திரா பற்றிய முழுக் கவனமும் வந்துவிடும்.

முந்திரா, மிகப்பெரிய மோசடிகளைச் செய்து கோடி கோடியாகப் பணத்தைக் குவித்துக் கொண்டிருந்தபோது-குட்டு உடைபடாதிருந்தபோது—அவனுக்குப் புகழ்கூட இருந்தது! வியாபாரத்தில் சூரன், புள்ளி போடுவதில் புலி, தொழில் அமைப்பதில் நிபுணன் என்றெல்லாம் பாராட்டக் கூடச் செய்தனர்.

வணிக உலகிலே ஒரு புதிய ஒளி நட்சத்திரம் என்று சிந்து பாடிடக்கூட ஆட்கள் கிளம்பினர்.

அவன் மண்ணைத் தொட்டால் அது பொன்னாகும்! அவன் ஜாதகப்பலன் அப்படிப்பட்டது! யோகம் அப்படிப் பட்டது! என்று பேசினர் பலர். எப்போதோ கேட்ட பாட்டு நினைவிற்கு வருகிறது.

ஆண்டவன் படைச்சான் எங்கிட்ட கொடுத்தான்

அனுபவி! ராஜான்னு அனுப்பி வைச்சான்!

அதுபோல 'ராஜா'வாகத்தான் முந்திரா அனுபவித்துக் கொண்டிருந்தான்—மோசடி வெளியே வெடித்துக்கொண்டு கிளம்பும் வரையில்.

சிக்கிக்கொண்டான் சிறை சென்றான்; ஆனால், அவன் குவித்திருந்த செல்வம்? இருக்கிறது!

அந்தச் செல்வத்தைப்பற்றி இப்போது ஒரு புதுத் தகவல் கிடைத்து புதிய பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது.

முந்திரா, சேர்த்த பணத்தில் பெரும் பகுதியை, பல இலட்சக்கணக்கான பவுன்களை, தன் மனைவி பெயரால் இலண்டனில் பாங்கியில் போட்டு வைத்திருப்பதாக ஒரு தகவல் கிளம்பி, அதுபற்றிய துப்பு விசாரித்துக் கொண் டிருக்கிறார்கள்.

இலண்டன் பாங்கியில் ஒரு வெள்ளைக்காரன் பெய ரால் இலட்சக்கணக்கான பவுன் போடப்பட்டிருக்கிறது; ஆனால், உண்மையில் அந்தப் பணம் அவனுடையது அல்ல; அவன் திருமதி முந்திராவுக்காக, அவர்களின் ஏஜண்டாக அந்தப் பணத்தைப் பரிபாலித்து வருகிறான்



என்ற விவரம் கிடைத்திருக்கிறது. வழக்கப்படி புலன் விசா ரித்துக்கொண்டு வருகிறார்கள்.

நான் தம்பி! இதைச் சொல்லுவதற்குக் காரணம், முந்திரா பற்றிய புதுத் தகவலின் முழு விவரம் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அல்ல.

தனிப்பட்டவர்கள் தொழில் நடத்த சர்க்கார் அனு மதிக்கும்போது, பணம் குவித்திட என்னென்ன விதமான புரட்டுகள் நடைபெறக்கூடும் என்பதைக் காட்டிடவே இதனைக் கூறினேன்.

சர்க்கார் பணத்தையும், நம்பிக் கொடுத்தவர்களின் பணத்தையும், ஒன்றைப்போட்டு ஒன்றை இழுத்தும், இதைக் காட்டி அதை வாங்கியும், இப்படிப் பல செப்படி வித்தைகளைச் செய்ய முடிந்தது முந்திராவால்; அதன் காரணமாகப் பலவழிகளிலே பணம்கிடைத்தபடி இருந்தது; பணம், பணத்தை இழுத்துக்கொண்டு வந்து சேர்த்தது.

இப்படி ஒரே ஆசாமியிடம் பல தொழில்கள் சிக்கிக்கொண்டால், பல தொழில்கள் மூலம் கிடைக் கும் வருவாய் அவ்வளவும் ஒரே ஆசாமியிடம் போய்ச் சேர்ந்தால், அவன் கோடீஸ்வரன் ஆவதுமட்டுமல்லா மல், மற்றவர்களின் வாழ்க்கை வறண்டு போகத் தானேசெய்யும்!

இந்த நிலையை அனுமதித்துவிட்டுப் பிறகு, சோஷியலிசம் பேசுவதினால் என்ன பயன்?

முந்திராபோல மோசடி செய்யாமலேயேகூட, சட்டப் படி கிடைத்திடும் சலுகைகளைக் கொண்டேகூட, முதலாளிகள் பணத்தை மேலும் மேலும் குவித்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பு இன்றைய காங்கிரஸ் அரசினால் அளிக்கப்பட்டிருக்கிறது.

தனிப்பட்டவர்கள் இதுபோலப் பல தொழில்களைச் செய்து பணம் குவித்துக்கொள்ளும் முறையை அமெரிக் காவில், முதாளித்துவ முறை என்கிறார்கள். அதனையே இங்கு காங்கிரஸ் அரசு, ஜனநாயக சோஷியலிசம் என்று பெயரிட்டிருக்கிறது.

சர்க்கார், பொதுத் துறையிலே சில தொழில்களை நடத்துவதைக்கொண்டே இங்கு சோஷியலிசம்

இருப்பதாகக் கூறிக் கொள்வது தவறான வாதம்; சொத்தையான தத்துவம்.

பணம், ஒரு சிலரிடம் போய்க் குவிந்து கொள்வதற்கான வழியை அமைத்துக் கொடுத்துவிட்டு சோஷியலிசம் பேசுவது, கன்றுக்குட்டி இறந்த பிறகு, வைக்கோலால் செய்த உருவத்தின்மீது அதன் தோலைப் போர்த்திவைத்து, அதைக் காட்டிப் பசுவை ஏய்த்துப் பால் கறந்திடும் தந்திரம் போன்றதாகும்.

எத்தர்கள், புரட்டர்கள் கிடக்கட்டும்; என்றேனும் ஓர் நாள் அவர்கள் பிடிபட்டுக் கொள்வார்கள். ஆனால் தம்பி! சட்டத்திற்கு உட்பட்ட முறையிலேயே நடந்து பெரும் பொருளைத் திரட்டிக்கொள்ள இடம் இருக்கிறது. அப்படி ஒரு சிலரிடம் தொழில் சிக்கிக் கொள்வதால், உற்பத்தியாகும் செல்வம் அந்த ஒரு சிலரிடம் போய்ச் சேர்ந்துவிடுகிறது. பல இலட்சக் கணக்கானவர்கள் 'கூலி' மட்டும் பெற்று, குமுறிக்கிடக்கும் நிலையினராகின்றனர்! ஏழை பணக்காரன் வித்தியாசம் லிரிவாகிக் கொண்டு வருகிறது.

காங்கிரசாட்சி ஏற்பட்ட பிறகு புதிய பணக்காரர்கள், புதிய புதிய தொழிலதிபர்கள் எவ்வளவு வேகமாக வளர்ந்துகொண்டு வருகிறார்கள் என்பதை மக்கள் அறியமாட்டார்களா!

முன்பெல்லாம் தம்பி! ஒரு குடும்பம் பணக்காரக் குடும்பமாக வேண்டுமானால், ஒரு தலைமுறை உழைத்துப் பணம் சேர்த்து, அடுத்த தலைமுறையில்தான், அந்தக் குடும்பம் பணக்காரக் குடும்பம் ஆகமுடியும். இருபது வருடமாக மண்டி வியாபாரம்; முப்பது வருடமாக நகை வியாபாரம்; பதினைந்து வருடமாக ஜவுளி வியாபாரம்; பாட்டனார் கால முதற்கொண்டு 'காண்ட்ராக்டு' த் தொழில்—இப்படித்தான் பணக்காரக் குடும்பங்கள் பற்றிய 'வரலாறு' இருக்கும்.

காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்ட பிறகுதான், பார்த்துக் கொண்டிருக்கும்போதே, பணக்காரர்கள் உண்டாகிவிடுகிறார்கள். ஆறு வருடத்திற்கு முன்பு மோடார் துடைத்தவன், ஆண்டவன் தயவாலே, இப்போது அறுபது புஸ்ஸுக்குச் சொந்தக்காரன் என்கிறார்கள்!



ஏழு வருடத்திற்கு முன்னாலே எடுபிடி! ஏழுமலையான் தயவாலே, இப்போது பத்து பங்களாவுக்குச்சொந்தக்காரன் என்கிறார்கள்.

இந்த வேகமான வளர்ச்சிக்குக் காரணம் என்ன? பணம், ஒரே ஒரு தொழிலிலே கிடைத்தது அல்ல; ஒரு தொழிலிலே கிடைத்த பணத்தைக் கொண்டு மற்றொரு புதிய தொழில், அதிலே கிடைத்ததைக் கொண்டு மற்றோர் தொழில், இப்படிக் குட்டிபோடுகிறது! இதைக் காங்கிரஸ் அரசு அனுமதிக்கிறது.

ஒரு தொழிலில்,—பல சரக்கு மண்டி—ஜவுளிக் கடை—காண்ட்ராக்ட்—எதுவாகவேனும் இருக்கட்டும், அது சிறிய அளவிலே துவங்கி, பிறகு அது மெள்ள மெள்ளப் பெரிய அளவாகி, ஒரு இடத்தில் இருப்பது; பிறகு பல இடத்திலே கிளைகள் விட்டு எல்லாவற்றிலும் இருந்து வருவாய் கிடைத்து, மொத்தமாகப் பல இலட்சங்கள் சேருவது ஒரு முறை.

உதாரணமாக, கடைவீதிக் கோடியில் இருபது ரூபாய் வாடகைக் கட்டிடத்தில் ஜவுளிக் கடை ஆரம்பித்து, பிறகு அது வளர்ந்து, இருநூறு ரூபாய் வாடகையுள்ள புதிய பெரிய கட்டிடத்தில் கடை நடந்து, பிறகு கடைவீதியில் மையமான இடத்தில் புதிய கட்டிடமே சொந்தத்தில் அமைந்து, அதிலே பெரிய அளவிலே கடை நடத்தி, இலாபம் கூடுதலாகக் கிடைக்கக் கிடைக்க வேறு சில ஊர்களிலேயும் ஜவுளிக் கடைகளைத் துவக்கி, இலாபம் சேர்ப்பது ஒருமுறை.

அந்தவிதமாக மட்டும் இருந்தால்கூட, ஒரு சிலரிடம் இவ்வளவு வேகமாகப் பணம் சேராது.

முதலில் சிறிய அளவில் ஜவுளிக் கடை

பிறகு பெரிய அளவில் ஜவுளிக் கடை

பிறகு ஜவுளி தயாரிக்கும் ஆலை.

பிறகு ஆலைக்குத் தேவையான பருத்திக்காடு!

பிறகு ஆலைக்குத் தேவையான இயந்திர உற்பத்தி.

பிறகு இயந்திரத்துக்குத் தேவையான இரும்புத் தொழில்.

பிறகு இவ்வளவுக்கும் தேவைப்படும் பணத்துக் காக பாங்க்!

இப்படி, பல கால்களை உண்டாக்கிக் கொள்வதுஒருமுறை.

நமது நாட்டில் இன்று வளர்ந்து, வலிவு ஏறியுள்ள முதலாளித்துவம், இந்த முறையானது. ஜவுளியிலிருந்து துவங்கி பாங்க் வரையில், பல்வேறு தொழில்களுக்கு ஒரே அதிபதி!

இதனைத்தான் பொருளாதார ஏகாதிபத்தியம் என்பர்.

இந்தியா, பர்மா, சிலோன், இப்படிப் பல நாடுகளுக்கு அதிபதியாக இருந்து பிரிட்டன் ஏகாதிபத்தியத்தை பல நூற்றாண்டுகள் நடத்தியதால், உலக வல்லரசு ஆகவும், செல்வம் கொழிக்கும் இடமாகவும் இருந்து வந்தது.

பொருளாதாரத் துறையிலே இன்று வளர்ந்து விட்டி ருக்கும் ஏகாதிபத்தியம் அரசியல்துறை ஏகாதிபத்தியத்தை விட ஆபத்தானது; நாட்டு வளத்தை ஒருசிலர் உறிஞ்சிக் கொள்ளுவதால்.

யார்மீதும் பகை கொண்டோ, பொறாமை காரண மாகவோ, அருவருப்புக்கொண்டோ, கூறவில்லை; விளக் கத்துக்காகக் கூறுகிறேன்; நான் குறிப்பிடும் பொருளாதார ஏகாதிபத்தியத்தை உணர்ந்துகொள்ள வேண்டுமானால், உதாரணத்துக்காக இந்த இருபது ஆண்டுகளில் டி. வி. எஸ் கம்பெனி வளர்ந்துள்ள வகையையும், பொள்ளாட்சி மகாலிங்கம் தமது தொழிலை விரிவாக்கியுள்ள வகையை யும், பார்! நிலைமை புரியும்! பார்க்கச் சொல்லிக் கேட்டுக் கொள், கோபப்படும் காங்கிரஸ் நண்பரை; அவருக்கும் உண்மை உள்ளத்தைத் தைக்கும்.

பொள்ளாச்சி மகாலிங்கம், காங்கிரஸ்காரர்; சட்ட மன்ற உறுப்பினர்! படித்தவர்; நல்லவர், எனக்கு நண்பர் கூட.

அவர், காங்கிரஸ்கட்சி கூறும், சோஷியலிசத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார். ஏன்? அந்த சோஷியலிசம்,



பஸ் தொழில்

சர்க்கரை ஆலைத்தொழில்

செயற்கை வைரத்தொழில்

என்ற முறையில் நண்பர் மகாலிங்கம் தமது தொழில் சாம் ராஜ்யத்தைப் பெரிதாக்கிக்கொண்டு, இப்போது சென்னை யை அடுத்த கும்மிடிப்பூண்டியில், இரும்புக் குழாய் தயாரிக் கும் பெரிய தொழிற்சாலை அமைக்கும் அளவு, அனுமதித் திருக்கிறது. இந்த நிலையிலே, காங்கிரஸ் பேசும் சோஷிய லிசத்தை ஏற்றுக்கொள்ள அவருக்குக் கசக்குமா?

சோஷியலிசம் என்றால், இலாபம்தரும் தொழில் பலவும் ஒரு சிலரிடம் போய்ச் சிக்கக்கூடாது, சிக்கிடின் ஏழை பணக்காரன் பேதம் அதிகமாகிவிடும். ஆகவே மகாலிங்கம் அவர்களே! பஸ்தொழிலோடு திருப்திப் படுங்கள்! புதிய புதிய தொழில்களைத் துவக்கி, புதிய புதிய வருவாயைப் பெருக்கிக்கொண்டே போனால், செல்வம் பரவாது! என்று காங்கிரசின் சோஷியலிசம் கூறினால், மகாலிங்கம், இது அக்கிரமம்! இது கொடுமை! என்று கோபித்துக்கொள்ளக்கூடும்.

எந்தத் தொழிலையும் நடத்தலாம், எவ்வளவு பெரிய தொழிலையும் நடத்தலாம், எந்த இடத்திலும் நடத்தலாம், எல்லாத் தொழிலிலும் கிடைக்கும் இலாபத்தை அடையலாம், ஆனால் ஜனநாயக சோஷி யலிசத்தை மட்டும் பேசவேண்டும் என்றுதானே காங் கிரஸ் கட்சி கூறுகிறது. முதலாளிகள் ஏன் தலை அசைக்கமாட்டார்கள்! தாளமே போடுகிறார்கள், இது அல்லவா கீதம் என்று!!

ஒரு முதலாளி, பல்வேறு தொழில்களை நடத்துவது மட்டுமல்ல; பல்வேறு பெயர்களில், பல அமைப்புகளை நடத்திக்கொள்ளவும் முடிகிறது.

ஒரு பத்து நாட்களாக, பத்திரிகைகளிலே பலமாக அடி படுகிறதே தம்பி! அமீர்சந்த் பியாரிலால் கம்பெனி—அதன் கதை அப்படித்தான்.

பல (கம்பெனிகள்) அமைப்புகள்—தனித்தனிப் பெய ருடன்; எல்லாவற்றிலும் இலாபம்; எல்லாம் ஒரே இடத் திற்குச் செல்ல வழி!

ஆண்டவனுக்கு ஆயிரம் நாமம்—அர்ச்சிக்க.

புதிய முதலாளிகளுக்கு பல கம்பெனிகள், தனித் தனிப் பெயருடன்—எல்லாம் இலாபம் பெற!

அமீர்சந்த் பியாரிலால் கம்பெனி என்ற ஒரே பெயரில் தொழிலை விரிவாக நடத்துவதைவிட, தனித்தனிப் பெயருடன் பல கம்பெனிகளை நடத்துவதிலே பல வசதிகள்; பல இலாபங்கள்; வரிச்சலுகைகள் கிடைக்கின்றன.

அமைச்சர் சுப்பிரமணியம் முதலிலே போட்ட ஒரு உத்தரவைப் பிறகு மாற்றினாரே, அது ஏன்? அது முறையா? என்ற கேள்வி கிளப்பிவிடும் சத்தத்தில், பொது மக்கள் —அதிலும் குறிப்பாக காங்கிரஸ் பேசி வரும் ஜனநாயக சோஷியலிசம் போலியானது என்பதை உணராதிருக்கும் பொதுமக்கள்— ஒரு பேருண்மையை அறிந்துகொள்ள முடியாமலிருக்கிறார்கள்.

எத்தனை பெரிய அளவிலும், எத்தனை வடிவங்களுடனும் ஒரு முதலாளித்துவ அமைப்பு இருக்கிறது என்பதனை எடுத்துக் காட்டுகிறது, இந்த அமீர்சந்த் பியாரிலால் கம்பெனி.

தம்பி! இந்தக் கம்பெனி 1910-ம் ஆண்டு துவக்கப்பட்டது. இன்று எஃகு வியாபாரத்தில் மட்டும் ஈடுபட்டுள்ள இதன் அமைப்புகளின் எண்ணிக்கை 20.

இந்த இருபதும், முதலாளிகளைக் கொழுக்க வைக்கவே ஏற்பட்டதாகச் சொல்லுகிறார்களே வெள்ளைக்கார அரசை—அப்போது ஏற்பட்டவை அல்ல. அப்போது, அமீர் சந்த் பியாரிலால் கம்பெனி மட்டுந்தான். மற்ற இருபது கம்பெனிகளும் காங்கிரஸ் ஆட்சியின்போது—1948-லிருந்து ஏற்பட்டவை. பொதுக் கணக்குக் குழுவினர் கண்டறிந்து வெளியிட்ட தகவலைத்தருகிறேன்—எந்த விதமான முதலாளித்துவ அமைப்பு, சோஷியலிசம் பேசும் காங்கிரஸ் ஆட்சியின்போது வளர்ந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளச் சொல்லு தம்பி! பொங்கி எழுகின்ற காங்கிரஸ் நண்பர்களை.



| | | வருடம் |
|---|---|---|
| 1. | அமீர்சந்த் பியாரிலால் | 1910 |
| 2. | சுரேந்திரா ஓவர்சீஸ் லிமிடெட் | 1948 |
| 3. | சுரேந்திரா ஓவர்சீஸ் பிரைவேட் லிமிடெட் | 1948 |
| 4. | அசோசியேடட் ஒயர்ஸ் கண்டக்டர்ஸ் கம்பெனி— | |
| 5. | அபிஜே பிரைவேட் லிமிடெட் | 1959 |
| 6. | அபிஜே கம்பெனி, கல்கத்தா | 1962 |
| 7. | அபிஜே ஸ்டீல் காஸ்டிங், ஜலந்தர்—தகவல் இல்லை | |
| 8. | ஸ்டீல் கிரீட் பிரைவேட் லிமிடெட்— | |
| 9. | ஸ்டீல் ரோலிங் மில்ஸ், கல்கத்தா | 1963 |
| 10. | காஷ்மீர் சிராமிக்ஸ் | 1961 |
| 11. | ஓரியண்டல் ஸ்பூன்பைப் கம்பெனி | 1961 |
| 12. | ஏரான் ஸ்டில் ரோலிங் மில்ஸ், ஜலந்தர் | 1957 |
| 13. | ஏரான் ஸ்டீல் ரோலிங் மில்ஸ், பம்பாய், தகவல் இல்லை | |
| 14. | இன்டர் நேஷனல் சானிடரி என்ஜினியர்ஸ், டில்லி | ,, |
| 15. | இந்தியா என்ஜினிரிங் ஒர்க்ஸ், கல்கத்தா | ,, |
| 16. | மெட்டல் இம்போர்ட் கல்கத்தா | ,, |
| 17. | அமீர் சந்த் பியாரிலால் லிமிடெட் | 1963 |
| 18. | சுரேந்திரா என்ஜினியரிங் ஒர்க்ஸ் | 1960 |
| 19. | அபிஜே பிரைவேட் லிமிடெட், கல்கத்தா | |
| 20. | அமீன்சந்த் பியாரிலால் டின் கன்ட்டெயினர்லிமிடெட் | |
| 21. | அபிஜே ஸ்டீல் ஒர்க்ஸ், ஜம்மு. | |

டில்லி, பம்பாய், கல்கத்தா, ஜம்மு, ஜலந்தர் இப்படிப் பல ஊர்களில்!

எஃகு ஆலை, குழாய் தயாரிப்புத் தொழில், வேலைப் பாடுள்ள மண்பாண்டத் தொழில், இப்படிப் பல வகை.

முதலாளியின் பெயரில், பொது மக்களிடம் பங்குகள் வாங்கி நடத்தப்படும் கம்பெனி, குறிப்பிட்ட சிலரிடம் மட்டும் பங்குத் தொகை வாங்கி நடத்தப்படும் கம்பெனி இப்படிப் பலமுறை.

எல்லாவற்றிலும் கிடைக்கும் இலாபம், ஒரே இடத்திற்குப் போய்ச் சேருவதற்கான வாய்ப்பு.

இதை அனுமதித்துக் கொண்டு, சோஷியலிசம் பேசுவதிலே, பொருள் இருக்கிறதா? நேர்மை இருக்கிறதா? கேட்டால், கோபம் வருகிறதே!

இத்தனை தொழில் அமைப்புகள் என்றால், இத்தனை வருவாய்த் துறைகள் என்று பொருள். இத்தனை வருவாய்த் துறையும் ஒரே இடத்திற்கு என்றால், பணம் அங்கு குவிவதும், பிற இடங்கள் வறண்டு போவதும் இயல்பு தானே? எப்படி இந்த நிலைமையை வைத்துக் கொண்டு ஏழை பணக்காரன் வித்தியாசத்தை ஒழிப்பது?

இத்தனைத் தனித் தனி அமைப்புகள், ஒரே முதலாளியிடம் இருப்பதிலே வேறோர் வசதி கிடைக்கிறது.

சர்க்காரிடம், பர்மிட் லைசென்சு, வியாபார ஒப்பந்தம், தரகு இவைகளைப் பெறும்போது, ஒவ்வொன்றின் பேராலும் பெற்றுக் கொள்ளலாம்.

ஒரு அமைப்பு ஏதாவது தவறு நடத்தி அது கண்டு பிடிக்கப்பட்டு, சர்க்காரின் கோபம் பாய்ந்தால், மற்ற அமைப்புகளின் பேரால், சர்க்காரிடம் சலுகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

விளக்கிட விளக்கிட வித விதமான ஆதாயம், இதன் பலனாகக் கிடைப்பது புரியும்.

சர்க்கார், இந்த நிலைமையைக் கட்டுப்படுத்தவே இல்லையா என்று கேட்கிறாய். கட்டுப்பாடு, கட்டுப்பாடு என்று பேசுகிறார்களே, இதன் பொருள் என்ன என்று அறிந்துகொள்ள ஆசைப்படுகிறாய்.

காங்கிரஸ் அரசு தொழில் நடத்தும் அனுமதியில், ஏற்றுமதி இறக்குமதி நடத்துவதற்கான அனுமதியில் கட்டுப்பாடு வைத்திருக்கிறது.

அதாவது, எம்மிடம் அனுமதி பெற்றவர்கள் மட்டுமே இன்ன உற்பத்தித் தொழிலில் ஈடுபடலாம், இன்ன சரக்கை ஏற்றுமதி செய்யலாம், இன்ன சரக்கை இறக்குமதி செய்யலாம் என்ற கட்டுப்பாட்டை சர்க்கார் வைத்துக் கொண்டிருக்கிறது.

ஆனால் இன்ன அளவுக்கு மேல், இன்ன வகைகளுக்கு மேல், ஒருவர் தொழில் நடத்தி விரிவாக்கி முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தை அமைத்துக் கொள்ளக்கூடாது என்ற தடையோ, நிபந்தனையோ, கட்டுப்பாடோ இல்லை!



எம்மிடம் அனுமதி பெறுக!—என்கிறார்கள்! முதலாளிகள் 'அனுமதி'யைப் பெற்றுக் கொள்கிறார்கள்!

அதுவேகூட அவர்களுக்கு இலாபமாக முடிகிறது. அதே தொழிலில் பலர் ஈடுபட்டால், அந்தத் தொழில் மூலம் கிடைக்கும் இலாபம் பல பேர்களுக்குப் பங்கு போடப்பட்டு விடும்; ஒருவருக்கும் கொழுத்த இலாபம் கிடைக்காது.

சர்க்காரின் அனுமதியைப் பெற்றவர்கள் மட்டுமே உற்பத்தி செய்யலாம், ஏற்றுமதி இறக்குமதி நடத்தலாம் என்று இருப்பதால், அதற்கான சர்க்கார் அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடிந்த 'பாக்கியவான்கள்,' மற்றவர்களுடைய போட்டித் தொல்லை இல்லாமல், இலாபம் முழுவதையும் அவர்களே பெற்றுக் கொள்கிறார்கள்.

அதாவது, தம்பி! பாட்டு ஒன்று குறிப்பிட்டேனே, அதுபோல, சர்க்கார் அனுபவி ராஜா என்று சிலரை அனுப்பி வைக்கிறார்கள்!!

சர்க்காரிடம் சட்டம் இருக்கிறது—சுமை சுமையாக!
போலீசும் பட்டாளமும் இருக்கிறது—பலம் பொருந்தியதாக!

ஆனால், அமீர் சந்த்களிடம் பணத் தோட்டம் இருக்கிறது. அதனுடைய பொலிவு இருக்கிறதே, மயக்கும்; வலிவு இருக்கிறதே, மிரட்டும்; சட்டமே வளையும்; சர்க்காரே மலைக்கும்!

முதலாளித்துவ அமைப்பு இவ்வளவு விரிவாகவும் விழுதுவிட்ட தன்மையிலும் வளரவளர, அதனை அடக்கிடும் ஆற்றலை சர்க்கார் மெள்ள மெள்ள, ஆனால் நிச்சயமாக இழந்துகொண்டேதான் வரும்.

தவறுகள் செய்தால், விடமாட்டோம், தண்டிப்போம் என்கிறார்கள்.

தவறுகள் நடந்தன; கண்டனமும், தண்டனையும் தரப்பட்டது; ஆனால் அமீர்சந்த் பியாரிலால் அமைப்பு

அவ்வளவையும் தாங்கிக்கொள்ள முடிந்தது; தகர்ந்து போய்விடவில்லை: மூல பலம் அப்படி அமைந்திருக்கிறது.

ஏற்றுமதி இறக்குமதித் துறையிலே ஈடுபட்ட கம்பெனிகள் தவறு செய்தால், சர்க்கார் அவைகளை 'கருப்புக் கோடிட்டு'த் தண்டிக்க முறை இருக்கிறது; அதாவது அந்தக் கம்பெனிகளுடன் சர்க்கார் எந்த வியாபார ஒப்பந்தமும் செய்து கொள்ளாது—ஒருவன் பலமுறை போக்கிரித்தனம் செய்தால், போலீஸ் அவன் பெயரைக் குறித்து வைத்துக் கொள்வதுபோல.

அதுபோலச் செய்தது சர்க்கார்—அமீர்சந்த் பியாரிலால்—அதன் கிளைகள்மீது. செய்து? சளைக்கவில்லை! அமீர்சந்த் பியாரிலாலின் சாம்ராஜ்யம் நடந்துகொண்டுதான் இருக்கிறது. எத்தனை முறை சர்க்காரின் 'தண்டனை' கிடைத்தது என்ற விவரம் வேண்டுமா, தம்பி!

1. அமீர்சந்த் பியாரிலால் அமைப்பின்மீது 4-8-54 முதல் 29—1—57 வரையில், வீட்டு அமைப்பு அமைச்சர் அவை நடவடிக்கை எடுத்திருந்தது. மறுபடியும், 31—7—63 முதல் 31—7—65 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த நடவடிக்கை இரும்பு எஃகு அமைச்சர் அவையினால் எடுக்கப்பட்டது.

2. சுரேந்திரா ஓவர்சீஸ் அமைப்பின்மீது 26-10-56 முதல் 29-1-57 வரை அந்த இரண்டு அமைச்சரகங்களுமே நடவடிக்கை எடுத்திருந்தன.

   மறுபடியும் அதே அமைப்பின்மீது 31-7-63 முதல் 31-7-65 வரையில் நடவடிக்கை.

3. சுரேந்திரா ஓவர்சீஸ் லிமிடெட் என்ற அமைப்பின் மீது இரும்பு எஃகு அமைச்சரகம், 31-7-63 முதல் 31-7-65 வரையில் நடவடிக்கை எடுத்திருந்தது.

4. இன்டர்நேஷனல் சானிடரி என்ஜினியர்ஸ் என்ற அமைப்பின் மீது வீட்டமைப்பு அமைச்சரகம் 15—9—54 முதல் 29—1—57 வரை, நடவடிக்கை எடுத்திருந்தது,



5. இந்தியா என்ஜினியரிங் ஒர்க்ஸ் என்ற அமைப்பின் மீது 4-8-54 முதல் 29-1-57 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டது.

6. மெட்டல் இம்ப்போர்ட் கல்கத்தா என்ற அமைப்பின் மீது 31-7-63 முதல் 31-7-65 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டது.

7, அது போன்றே அபீஜே பிரைவேட் லிமிடெட் மீது.

8. அதுபோலவே அமீன்சந்த் பியாரிலால் டின்கன்ட்டெயினர் எனும் அமைப்பின்மீது.

இத்தனை வகையான நடவடிக்கைகள்—முறைதவறாக நடந்ததற்காக — எடுக்கப்பட்டும், இந்தத் தொழில் அமைப்பு, இப்போதும், எப்போதும் போலவே வலிவுடன் நிற்கிறது. அமைச்சர் சுப்பிரமணியத்துக்குத் தலைவலியைத் தருகிற பிரச்சினை இந்தக் கம்பெனியுடன்தான் பிணைந்திருக்கிறது.

தம்பி! தனிப்பட்டவர்கள் தொழில் நடத்த அனுமதிப்போமே தவிர, ஏராளமாக இலாபம் குவித்துக் கொழுக்க விடமாட்டோம் என்கிறார்கள், தனிப்பட்டவர்கள் நடத்தும் தொழிலில் தவறு நடந்தால், விடமாட்டோம் என்று வீரம் பேசுகிறார்கள் காங்கிரஸ்காரர்கள். மறுபடியும் ஒரு தடவை, அமீர்சந்த் பியாரிலால் அமைப்பு பற்றி நான் தந்துள்ள தகவல்களைப் படித்துப் பார்த்துவிட்டு பண்பு கெடாத காங்கிரஸ்காரரிடம் படித்துக்காட்டி அவரையே நியாயம் கூறச் சொல்லு; இதுவா சோஷியலிசம் கொண்டு வரும் இலட்சணம் என்பது பற்றி.

அடக்கிவிடுவோம், ஒடுக்கி விடுவோம் என்று வீரம் பேசுகிறார்கள் தம்பி! அதைக்கேட்டு உண்மையான காங்கிரஸ் பற்றுக் கொண்டவர்கள் ஓரளவு மயங்கிப் போகிறார்கள். ஆனால் இவ்வளவு முறை கேடுகளில் ஈடுபட்டதாகக் கண்டு பிடிக்கப்பட்டு, சர்க்கார் சூடிட்டும், அமீர்சந்த் பியாரிலால் எனும் அமைப்பு எத்தகைய வளர்ச்சி அடைந்திருக்கிறது தெரியுமா? சர்க்காரின் அனுமதியில்லாமல், ஏற்றுமதி இறக்குமதித் துறையிலே ஈடுபட முடியாது என்பதை அறிவாய். அந்தத் துறையில் இந்த அமீர்சந்த் பியாரிலால் அமைப்பு,

1959ல் இறக்குமதியில் 100க்கு 9 என்ற அளவு பங்கும், ஏற்றுமதியில் 100க்கு 12 என்ற அளவு பங்கும் பெற்றிருந்தது.

ஆனால் 1960ல், இதே கம்பெனி. இறக்குமதியில் 100க்கு 59 என்ற அளவிலும், ஏற்றுமதியில் 100க்கு 60 என்ற அளவிலும் பெற்றிருக்கிறது. பார்த்தாயா வளர்ச்சியை! எந்த அமைப்பு? பல அமைச்சரகங் களால், பலமுறை முறைகேடாக நடந்து கொண்ட த;கக் கண்டுபிடிக்கப்பட்டு, முகத்தில் கரி பூசப்பட்ட அமைப்பு!

முகத்திலே கரி பூசுவதுபோல இந்த அமைப்பு, முறை கேடாக நடந்து கொண்டதற்காக, இந்த அமைப்புடன் தொடர்பு கொள்ளக் கூடாது என்று சூடிட்டிருந்தும், எப்படி இந்த அமைப்பு இந்த வேகமான வளர்ச்சியைப் பெற முடிந்தது என்று கேட்கத் தோன்றும். தம்பி! அந்த வேடிக்கையையும் சொல்லுகிறேன் கேளேன்.

1954 ஆகஸ்ட்—செப்டம்பரில், அமீர்சந்த் பியாரிலால் என்ற அமைப்பு. முறைகேடாக நடந்ததற்காக, வீட் டமைப்பு அமைச்சரகம்! சூடிட்டது, இந்த அமைப்புடன் எந்தவிதமான ஒப்பந்தமும் கொள்ளக்கூடாது என்று.

முதலாளி திணறிப் போயிருப்பார் என்றுதானே எண்ணிக் கொள்கிறாய்! பணம், தம்பி! பணம்; கோடி கோடியாக! தந்திரம் தன்னாலே வருமே!

அமீர்சந்த் பியாரிலால் என்ற பெயருடைய அமைப் பின் மீதுதானே நடவடிக்கை! இருக்கட்டுமே என்று கூறி விட்டு, முதலாளி ஒரு புன்னகை காட்டுகிறார்; திட்டம் தயாராகிறது

சுரேந்திரா ஓவர்சீஸ் பிரைவேட் லிமிடெட் என்ற புதிய அமைப்பு துவக்கப்படுகிறது.

சர்க்காரின் கோபப் பார்வை அமீர்சந்த் பியாரிலால் என்ற அமைப்பின்மீதுதானே! இது புத்தம் புதிது! சுரேந்திரா ஓவர்சீஸ் லிமிடெட்!!

52 காண்ட்ராக்டுகள் ஒப்பந்தங்கள் கிடைக்கின்றன சுரேந்திராவுக்கு!! எஃகு இறக்குமதி செய்வதற்கான அனுமதி! தொகை? 23 கோடி ரூபாய்.



சுரேந்திரா ஓவர்சீஸ் பிரைவேட் கம்பெனி எவ ருடையது? பொதுக்கணக்குக் குழு தெரிவிக்கிறது, அதுவும் அமீர்சந்த் பியாரிலால் அமைப்புக்கு உட்பட்டதுதான் என்று.

உரையாடல் எப்படி இருந்திருக்கும் என்று கற்பனை செய்து பாரேன், தம்பி! சுவையாக இருக்கும்.

எஃகு இறக்குமதி செய்ய அனுமதி வேண்டும்.

யாருக்கு? உனக்கா? முறைகேடாக நடந்ததற் காகக் கரி பூசப்பட்ட கம்பெனிக்கா? என்ன துணிவு!

ஐயையே! அனுமதி யார் கேட்பதாக எண்ணிக் கொண்டு பேசுகிறீர்கள்? கரி பூசப்பட்டது யார்மீது? அமீர்சந்த் பியாரிலால் கம்பெனி மீது!

ஆமாம்! அந்த அமைப்பின்மீதுதான்.

இது, அமீர்சந்த் பியாரிலால் என்ற அமைப்பு அல்ல. இது சுரேந்திரா ஓவர்சீஸ் லிமிடெட்! இந்த அமைப்பின்மீது மாசு மறுவு கிடையாது.

புதிய கம்பெனியா? ஆனால் இரண்டும் ஒன்று அல்லவா? சட்டப்படி, இது ஒரு தனிக் கம்பெனி! இந்த அமைப்பிற்கு, இறக்குமதி அனுமதி தரமுடியாது என்று மறுக்க காரணம் ஒன்றும் கிடையாது...ஆகவே...

இப்படித்தான் தம்பி! சர்க்கார் சூடிட்டாலும். இந்த அமைப்பு வளர்ங்சி அடைந்திட முடிந்தது.

இவ்விதமாக, பணபலத்தாலும் சட்டத்தின் சந்து பொந்துகளிலே நுழைந்து தப்பித்துக் கொள்ளும் சாமர்த் தியத்தாலும் பல அமைப்புகள் இன்று, அரசையே ஆட்டிப் படைக்கத்தக்க அளவு வலிவு பெற்று விளங்குகின்றன. பாட்டாளிகளின் உழைப்பினாலும் பொதுமக்கள் விலை கொடுத்துப் பண்டம் பலவற்றை வாங்குவதாலும் குவியும் செல்வத்தை, இத்தகைய அமைப்புகளின் அதிபர்கள் தம தாக்கிக் கொள்கின்றனர்.

நாட்டிலே வளர்ச்சியேவா இல்லை; செல்வம் பெருகவே இல்லையா? என்று சிறிதளவு கோபத்துடன் கேட்கின்றனர், காங்கிரசிலே உள்ள நல்லவர்கள்.

நகர், விருத்தாசலம் - 606 00

வளர்ச்சியும் செல்வப் பெருக்கமும் நிச்சயம் ஏற்பட்டுள்ளன; மறுப்பார் இல்லை. ஆனால் வளர்ச்சியால் வசதி பெற்றவர்கள் யாரார்? செல்வப்பெருக்கம் எவரிடம்போய்ச் சேர்ந்தது என்பதுதான் தம்பி! நாம் கேட்கும் கேள்வி.

மான் எங்கேயும் போய்விடவில்லை, வேங்கையின் வயிற்றிலேதான் இருக்கிறது என்று கூறுவதுபோல, செல்வப் பெருக்கம் எங்கேயும் போய்விடவில்லை, முதலாளிகளிடம்தான் இருக்கிறது என்று கூறிடும் துணிச்சலே பிறந்திருக்கிறது சில அமைச்சர்களுக்கு.

தம்பி! 1949-50ல் சுரங்கத் தொழில் மூலம் உற்பத்தியான செல்வம் 110 கோடி ரூபாய் மதிப்புள்ளது. இதே துறையில் 1960-61 ல் 183 கோடி ரூபாய் அளவு கிடைத்திருக்கிறது. வளர்ச்சி! சந்தேகமில்லை! புலியின் வயிறு பெருத்திருக்கிறது! உள்ளே புள்ளி மான் குட்டி!!

தேயிலைத் தொழிலின் மூலம், 1949—50ல் 133 கோடி, 1960 - 61ல் 242 கோடி ரூபாய்.

தொழிற்சாலைகள் மூலம் 1949-50ல் 1333 கோடி 1960-61ல் 4003 கோடி!

கப்பல் துறை மூலம் 1949—50ல் 18 கோடி 1960-61ல் 135 கோடி!

பாங்கித் தொழில், இன்ஷூரன்ஸ் தொழில் மூலம் 1949—50ல் கிடைத்தது 68 கோடி, 1960-61ல் கிடைத்தது 138.

தம்பி! மொத்தத்தில் பல்வேறு துறைகளின் மூலம் உற்பத்தியான செல்வம், 1949—50ல் 1662 கோடி. 1960—61ல் 4741 கோடி!!

இந்தச் செல்வம், சமூகத்தில் சீராகப் பரவி இருந்தால் மக்களின் வாழ்க்கை இத்தனைச் சீர் கேடாகவா இருக்கும்!

இந்தச் செல்வத்தில் மிகப் பெரும் பகுதி, நிபுணர்கள் கூறுகிறார்கள்—காங்கிரஸ் தலைவர்களும் மறுக்கவில்லை- ஏழைக்கு வந்து சேரவில்லை—பணக்காரனை மேலும் பணக்காரனாக்கி இருக்கிறது,

இந்தச் செல்வத்திலே பெரும் பகுதி, இந்தியாவிலே ஒரு நூறு பேர்களிடம்—கோடீஸ்வரர்களிடம் - போய்க் குவிந்திருக்கிறது என்ற உண்மையை மறுப்பவர் எவரும் இல்லை,



அவர்கள் வைத்திருக்கும் கணக்கோ — துப்பறியும் இலாகாவையே திணற வைக்கிற முறையிலே இருக்கிறது.

மறுபடியும் அந்தப் பாட்டுத்தான் நினைவிற்கு வருகிறது.

அனுபவி ராஜான்னு
அனுப்பி வைச்சான்!

ஆண்டவன் கொடுத்ததாகச் சொல்லிக் கொள்வது, பழைய முறை; இப்போது ஆள்பவர் கொடுக்கிறார்கள் - வாய்ப்பு.

கொடுமை!—என்கிறாய் தம்பி! எனக்கு அதைவிடக் கொடுமையாகத் தென்படுவது என்ன தெரியுமா, இதைச் செய்து கொண்டே, கூச்சப்படாமல், சோஷியலிசமும் பேசுகிறார்களே, அதுதான், தம்பி!?

அண்ணன்,

21—8—'66



காஞ்சிக் கடிதம் : 76

# குன்று, குடை பிடித்துக் கொள்ளுமா?

★ காமராசரின் நினைவு கழகத்தின் மீதே!

★ ஏசுவோர் ஏசட்டும்! இருக்கிறோம் நாங்கள்!

★ ஏத்தி ஏத்தித் தொழுவதன் இலட்சணம் என்ன?

★ எரிச்சலைக் குறைக்கவே ஏச்சு!

தம்பி!

உலகின் பாதியைச் சுற்றிவிட்டு வந்துள்ள காமராஜர் தமது முதல் முழக்கத்திலேயே நம்மைத் தாக்கிப் பேசி இருப்பது கண்டு மெத்த வருத்தப்படுவதாக எழுதி இருக்கிறாய்; நம் தோழர்களிலே சிலர் கோபம் கொண்டிருப்பதாகவும் அறிகிறேன். ஆனால், உண்மைக் காங்கிரஸ்காரர் சிலர் வருத்தமல்ல—கோபமல்ல—வெட்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. இருக்குமல்லவா? பாவம்! அவர்கள் ஓடிஓடிப் பேசி வருகிறார்கள் எமது தலைவர் உலகுக்கே உன்னதமான தத்துவங்களைத் தந்துவிட்டு வரச்சென்றிருக்கிறார் என்று. வந்தவர் அப்படிப்பட்ட தத்துவ விளக்கம் பற்றியும், தத்துவ விளக்கத்தைத் தாம் தந்தபோது அந்தந்த நாட்டினர் ஆச்சரியத்தால் வாய்பிளந்து நின்றது பற்றியும் எடுத்துரைப்பார், கேட்டு இன்புறலாம், என்ற ஆசையுடன்தானே போயிருந்திருப்பார்கள் முழக்கம்கேட்க? ஆனால், அவ்வளவு தொலைவு போய்விட்டு வந்தவர், என்ன பேசினார்; வழக்கமான 'விட்டேனா பார்!' என்பதைத்தானே! எனக்குத் தெரியாதா அவனோட யோக்யதை! இவனோட நிலை! என்ற திருவாய் மொழிதானே!!



இதைத்தான் எல்லாச் சில்லறைகளும் நித்தநித்தம் பொழிந்து தள்ளிக்கொண்டிருக்கின்றனவே; இவர் பெரியவர்—உயர்ந்த இடம் இருப்பவர்—உலகு சுற்றியவர்—இவருமா அதே பேச்சைப் பேசுவது; அதிலும் வந்த உடனே!

என்றெண்ணி வெட்கப்படுகிறார்கள்.

மாஸ்கோ சென்றேன், ரஷிய நாட்டின் மகோன்னதமான வளர்ச்சியைக் கண்டேன். எப்படி ஒழிக்க முடியும் இங்குள்ள ஏழ்மையை என்று இதுநாள் வரையில் ஏங்கிக் கிடந்தேன்—சோவியத் நாட்டினைக் கண்டேன்—உறுதி கொண்டேன்—புது நம்பிக்கை கொண்டேன்—ஏழ்மையைப் போக்க முடியும்! அதற்கான திட்டத்துடன் வந்துள்ளேன்! கேண்மின்! என்ற முறையில் எழுச்சியூட்டத்தக்க முறையில் எவரையும் தம் வசம் ஈர்க்கத்தக்க வகையில் பேசுவார், தாம் மிகப்பெரிய தலைவர் என்பதனை மெய்ப்பித்துக் காட்டுவார் என்றெல்லாம் எண்ணிக்கொண்டு போயிருக்கிறார்கள், அவரோ பாவம் அந்தப் பழைய பாணிப் பேச்சையேதான் பேசிக்காட்டி இருக்கிறார். நாடு பல சென்று வந்தவர் ஏதேது பேசுகிறார் கேட்போம் என்று பற்பல நாட்டுத் தூதரகத்தினர்கூட ஆவலாக இருந்திருப்பார்களே; பெரியவர் அந்தப் பழைய பாட்டையே பாடி விட்டாரே, விட்டேனா பார்! என்ற பாட்டை; அதனைக் கேட்ட பிறநாட்டுத் தூதரகத்தினர் இவ்வளவுதானா இவர் சரக்கு என்றல்லவா எண்ணிக்கொள்வார்கள் என்பதனை நினைத்து உண்மைக் காங்கிரஸ்காரர்கள் உள்ளபடி வெட்கப்பட்டுத்தான் இருப்பார்கள்.

மண்டலம் பல சென்று திரும்பிய மாமன்னன் உரை கேட்டிடச் சிற்றரசரும், புலவர் பெருமக்களும், வணிகரும் மற்றும் வகையான வாழ்வினரும் கூடி இருந்த அவைதனில் அமர்ந்து மாமன்னன், அவையினரே! நாட்டிலே உள்ள ஏரி குளம் குட்டைகளிலே உள்ள மீன்களைக் குவியல் குவியலாகப் பிடித்திடத் தக்க வலை உண்டு நம்மிடம் அறிவீரன்றோ!—என்று பேசிடின், அவையினர் என்ன எண்ணுவர்; தனியே சென்று தலைதலையென்று அடித்துக் கொள்வர்.

காசி சென்று திரும்பியவரைக் கண்டு பேசச் சென்ற வரிடம் காசித் தலத்தின் மகிமை பற்றியும் கங்கையின் எழில் பற்றியும், அங்குச் சென்றதால் தமக்கு ஏற்பட்ட மன அமைதி பற்றியும் கூறாமல், ''கருவாடு மிக மலிவு'' என்று பேசிகுன் என்ன எண்ணிக்கொள்வர்; கைபிசைந்து கொள்வர், காசிக்குப்போய்க் கற்றுக் கொண்டு வந்தது இதைத்தானா என்று.

எதிர்க் கட்சிகளை—குறிப்பாக நமது கழகத்தை வழக்கம்போல் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசிடத் தான் அவ்வளவு பெரியவரால் முடிந்ததே யன்றி, பொது வுடைமை நாடுகளிலே உலவியதால் பெற்ற புதுக்கருத்து கள் பற்றிப்பேசினாரேரா? நினைப்பே வரவில்லை! அவருடைய நினைவு முழுவதும், கழகத்தின் மீதுதான் இருந்திருக்கிறது.

சிலருக்குக் கோபம், சிலருக்கு வருத்தம், உண்மைக் காங்கிரசாருக்கு வெட்கம் ஏற்பட்டது அந்தப் பேச்சைக் கேட்டு—எனக்கோ நம்பி! ஒரு திருப்தி! ஒரு மகிழ்ச்சி! அவர் உலகத் தலைவர்களின் வரிசையிலே சேர்ந்து விட்டார் என்றும், உலகத் தலைவராக உயர்ந்து விட்டார் என்றும் கூறி உடுக்கை அடிக்கிறார்களே, உண்மையிலேயே அவர் உயர்ந்துபோய், எங்கே நம்மைப் பற்றிய நினைப் பற்றுப் போய்விடுகிறதோ—ஒரே அடியாக அலட்சியப் படுத்தி விடுவாரோ—கழகமா! அதை எதிர்ப்பதா!—இதுவா நாம் மேற்கொள்ள வேண்டிய வேலை. வேலையா அது! நாம் எதிர்த் தொழிக்க வேண்டியது இல்லாமை, போதாமை, அறியாமை எனும் தீமைகளை என்று பேச விடுகிறாரோ - ஆரம்பித்து அவர் அவ்விதம் பேசக் கேட்டு பொதுமக்கள், கழகத்தைப்பற்றிய நினைப்பே அவருக்கு வரவில்லை! அதை ஒரு பொருட்டாக அவர் மதிக்க வில்லை! என்று பேசிக் கொள்கின்றனரோ என்றெண்ணி அஞ்சிக் கொண்டிருந்தேன்.

பெரியவர் பேச்சு அந்த அச்சத்தைப் போக்கி விட்டது.

அவ்வளவு தொலைவு போய்விட்டுவந்தும் அவருக்குக் கழகம்தான் பிரச்சினையாக இருக்கிறது.

உயர்ந்தநிலை சென்றாராமே, அங்கிருந்து நோக்கும்போதும் அவருடைய கண்களுக்கு நாம்தான் தெரிகிறோம்.



இதனை எண்ணிடும்போது எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. நமது கழகம் சாமான்யமானது அல்ல; எங்கெங்குச் சென்று திரும்பிடினும் அவருடைய கவனத்தை ஈர்த்திடும்வல்லமை பெற்றிருக்கிறது.

உலகத் தலைவராகிவிட்டார் என்கிறார்கள் காமராஜரை! மகிழ்ச்சி! அந்த உலகத்தலைவராகி விட்டவர், நமது கழகத்தைத்தான் தாக்கிப் பேசு கிறார், பேசிட ஆயிரம் பிரச்சினைகள் இருந்தும்.

ஆகவே கழகம், உலகத் தலைவர் நிலையைப் பெற்றுள்ளவரின் 'கவனிப்பை'ப் பெற்றிருக்கிறது!

பொருள் என்ன? கழகம் உலகத் தலைவர் ஆகி விட்ட பிறகும் கவனித்தாகவேண்டிய பிரச்சினையாக இருக்கிறது.

கழகத்தின் வளர்ச்சியும் வல்லமையும் அந்த வகையிலே இருக்கிறது.

அவ்வளவு பெரியவர் ஆகிவிட்டவராலும் அலட்சி யப்படுத்த முடியாத அளவு வளர்ந்து விட்டிருக்கிறது.

ஆகவே தம்பி! நம்மை நாம் அறிந்துகொள்ளச் செய்தது அவருடைய முழக்கம்.

என் மகிழ்ச்சி அதன் காரணமாகத்தான்! ஆயிரம் பிரச்சினைகள் உள்ளன அவர் பேசிட—

நாணய மதிப்புக் குறைப்பு—அதன் விளைவு.

எல்லைத் தகராறுகள்—அவற்றுக்கான பரிகாரம்.

பாகிஸ்தான்—சீனா கூட்டுச் சதி—அதனை முறியடிக்க நாடு மேற்கொள்ள வேண்டிய முறைகள்.

உணவுப் பிரச்சினை—அதற்குப் பரிகாரம்.

நாலாவது ஐந்தாண்டுத் திட்டம்-அதன் வடிவம், பொருள்—பலன்.

இப்படிப் பிரச்சினைகள் பலப் பல உள்ளன. இவை பற்றி இவ்வளவு வளர்ந்துள்ளவர் என்ன கூறுகிறார் என்று அறிந்துகொள்ள மக்கள் ஆவல் கொண்டு தானே இருப்பார் கள். இந்தப் பிரச்சினைகள் பற்றி மூண்டுவிட்டுள்ள

குழப்பத்தைப் போக்குவார், தெளிவளிப்பார் என்று எண்ணாமலிருக்க முடியுமா; அகில இந்தியக் காங்கிரசின் தலைவராயிற்றே! ஆனால், பாரேன் தம்பி பொருளாதாரப் பிரச்சினை பற்றி டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் பேசட்டும்—உணவுப் பிரச்சினை பற்றிச் சுப்பிரமணியம் பேசட்டும்—உலகப் பிரச்சினை பற்றி இந்திர காந்தி பேசட்டும்—நான் அந்தப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசப் போவதில்லை, என் முன் உள்ள பிரச்சினை ஒன்றே ஒன்று! இந்தத் தேர்தலில் கழகம் காங்கிரசை வீழ்த்தாமல் இருக்கும் வழியைக் கண்டு பிடிப்பது—அந்தப் பிரச்சினை பற்றித்தான் நான் பேசுவேன் என்று கூறுபவர்போல. வந்ததும் நம்மைப் பற்றிய தெந்தினமே பாடி இருக்கிறார்!

தம்பி! களம் செல்லும் வீரன் வாளின் கூர்மை சரியாக உளதா என்று பார்த்துக் கொள்வான்.

வீர அர்ஜுனன் வேடமணிந்து நாடகமேடை செல்வோன், வாளின் கூர்மை சரியாக உளதா என்றா பார்த்திடுவான், மீசை சரியாக ஒட்டப் பட்டிருக்கிறதா என்று தானே பார்த்துக் கொள்வான்.

காமராஜர் உலகப் பிரச்சினைகளைப் பற்றி ஆய்ந்தறிந்திடவே நாடு பல சென்றுள்ளார் என்று அவர் நாமாவளி பாடிடுவோர் கூறிடினும், அவர் கொண்டுள்ள அக்கறை உலகப் பிரச்சினைகள்மீது அல்ல; காங்கிரஸ் நடாத்தும் எதேச்சாதிகாரத்தை உருக்குலைக்க எழுந்துள்ள கழகத்தை எப்படி மடக்குவது என்பதிலேதான்.

அவர் ஏதோ நாலு வார்த்தை பேசிவிட்டார் என்று வருத்தப்பட்டுக் கொள்கிறார்களே, நமது தோழர்கள், அவர்கள் ஒரு விஷயத்தை உணருகிறார்களா?

காமராஜர் கொண்டுள்ள வருத்தத்தை உணருகிறார்களா?

வருத்தம் கொஞ்சமாகவா இருக்கும் அவருக்கு?

சிற்றரசர்கள்

சீமான்கள்

வணிகக் கோமான்கள்

நிலப் பிரபுக்கள்



ஆலை அரசர்கள்

பெரிய புள்ளிகள்

அணிவகுத்து நிற்கிறார்கள், வெட்டி வா என்றால் கட்டி வருகிறோம் என்று கூறியபடி.

தேர்தல் நிதியினை இலட்ச இலட்சமாகத் திரட்டிக் கொடுத்திடக் கனதனவான்கள் போட்டி போட்டுக் கொண்டு முனைகின்றனர்.

இதழ்கள், புகழ் பாடிடத் தயாராக உள்ளன!

சேர்த்துக் கொள்ளுங்கள் சேவை செய்கிறோம் என்று செப்பிடப் பலர் துடித்துக் கிளம்பி வருகின்றனர்.

இருந்தும்! மனத்திலே மகிழ்ச்சி துள்ளத்தக்க சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்திடப் பலர் இருந்தும்?

அடுத்த தேர்தலைப்பற்றிய பயமற்று, கவலையற்று இருக்க முடிகிறதா அவரால்!

இருக்க விடுகிறதா கழகம்?

இதனை எண்ணிடும்போது அவருக்கு வருத்தமாகத்தானே இருக்கும். துளியாவது வெளியே காட்டிக் கொள்கிறாரா? இல்லையே! வருத்தத்தைக் குறைத்துக் கொள்ளத்தான் அவர் நம்மைப்பற்றி நாலு வார்த்தைகள் பேசுகிறார்.

மிக மட்டமாகப் பேசுகிறார்,

கேவலமான விதத்தில் பேசுகிறார்,

அவன்-இவன்-என்று கூடப் பேசுகிறார்,

என்று வருத்தப்பட்டுக் கொள்கிறாயே தம்பி! அவர் வேண்டுமென்றேவா அப்படிப் பேசுகிறார்?

அவருடைய பேச்சே அப்படித்தான்!

அவருக்குத் தெரிந்த பாணியில் அவர் பேசுகிறார்!

இத்தனை வயதான பிறகு அவரைப் புதுப்பாணியில் பேசப் பழகிக் கொள்ளச் சொல்லமுடியுமா!

ஏசுகிறாரே! ஏசுகிறாரே! என்று நீ வருத்தப்படுகிறாய்; தம்பி! அவர் ஆச்சரியப்படுகிறார், நான் எங்கே ஏசினேன்! பேசினேன்! என்கிறார்.

அவர் பேசுவது ஏசுவதுபோலத் தெரிகிறது உனக்கு. காரணம்? வேறுவிதமாகவும் அவருக்குப் பேசத்தெரியும் என்று நீ எண்ணிக் கொள்வதுதான்.

இதனைப் புரிந்துகொள் தம்பி! புகையிலைக்கு யாரும் நெடியை ஊட்டத் தேவையில்லை; இயற்கையாகவே இருக்கிறது.

புகையிலையிலே பூமணம் எதிர்பார்ப்பது, யாருடைய தவறு, தம்பி!

காமராஜரிடம் வேறுவிதமான பேச்சை எதிர்பார்ப்பது உன் தவறு!

அவருக்குத் தெரிந்த முறையில் அவர் பேசுகிறார்—அவ்வளவுதான்.

இது எனக்குப் புரிந்திருப்பதால்தான் தம்பி! அவருடைய பேச்சு எனக்குக் கோபத்தையோ, வருத்தத்தையோ தரவில்லை.

மேலும் தம்பி! நாம் என்ன அவ்வளவு 'மேலான' நிலையினரா?

மெருகு கலையாத மோடாரிலா சவாரி செய்கிறோம்? மாளிகைகளிலா நமக்கு விருந்து நடக்கிறது?

அதிகாரிகளா நம்மைப் புடைசூழ்ந்து நிற்கிறார்கள்? 'செக்கு' களையா நம்மிடம் தருகிறார்கள்—

நன்கொடையாக. இல்லையே! நாம் எளிய நிலையினர்; எளியோருக்காகப் பணியாற்றுகிறோம். நம்மைக் கண்டதும், மதிப்பளிக்கவேண்டும், மரியாதை காட்ட வேண்டும் என்று பெரியவருக்குத் தோன்றுமா!

மகாராஜாக்கள் மண்டியிடுகிறார்கள்; ராஜாக்கள் உபசாரம் நடத்துகிறார்கள்; இந்தப் பயல்கள் எதிர்க்கிறார்களே என்று எண்ணுகிறார்; எரிச்சல் கொள்கிறார்.

இவ்வளவு செல்வம் செல்வாக்கு, அதிகாரம் அந்தஸ்து நம்மிடம் இருக்கிறது. பஞ்சைகள் நம்மை எதிர்க்கிறார்களே என்பதை எண்ணும்போது அவருக்கு ஏகப்பட்ட எரிச்சல் மூள்கிறது.



சிரங்கு பிடித்தவன் அரிப்பை அடக்கிக்கொள்ள வேக வேகமாகச் 'சொறிந்து' கொள்ளும்போது, பூசிக்கொள்ளச் சந்தனம் கொடுத்துப் பாரேன், சள்ளென்று எரிந்துவிழுவான். மனித சுபாவம் அது. அதனை உணராமல், ஏசுகிறாரே என்று வருத்தப்படுகிறாய்.

அதுமட்டுமா தம்பி! ஏசுகிறார் என்கிறாயே! இது என்ன முதல் முறையாகவா உன் காதிலே விழுகிறது! அல்லது ஏசக் கிளம்பிய முதல் மனிதரா இந்தக் காமராஜர்?

கழகம் தொட்டிலில் இருந்த நாள்தொட்டு ஏசினர் பலர்; இவரைவிடக் கடுமையாக.

பழகிக்கொள்ளச் சொல்லுகிறாயா அண்ணா! என்று கேட்கிறாய். அதற்காகச் சொல்லவில்லை.

இவ்வளவு ஏசி வருகிறார்களே இவர்கள், அது நம் வளர்ச்சியைத் துளியாவது கெடுத்ததா?

இவர்களின் ஏசலை மக்கள் மதித்திருந்தால் கழக வளர்ச்சிக்கு இந்த அளவு துணை நின்றிருப்பார்களா? கழகம் பெற்றுள்ள வளர்ச்சி என்ன இலேசானதா? எத்தனை இடிகளை, தாக்குதல்களைத் தாங்கிக் கொண்டிருக்கிறது! எத்தனை சாகசத்தைக் கண்டும் நிலை குலையாமல் இருந்து வருகிறது. எத்தனை எத்தனை சதிச் செயல்களைக் கண்டிருக்கிறது; சாய்த்திட முடியாத நிலையைப் பெற்றிருக்கிறது. இதிலிருந்து தெரியவில்லையா, இவர்கள் ஏசுவது, வீண்வேலை என்பது!

மழை பெய்கிறதே என்று கவலை கொண்டு குன்று, குடை பிடித்துக் கொள்ளுமா!!

தம்பி! அவர்கள் ஏசுவது நம்மை எந்த விதத்திலும் பாதித்ததில்லை; பாதிக்கவில்லை; பாதிக்காது.

மேலும் தம்பி! கழகம் விடுத்திடும் அழைப்பு என்ன? எல்லோரும் பாராட்டுவார்; எங்கிருந்தும் புகழ்மொழி கிடைத்திடும்; பெற்றிட வருக! பெருமகிழ்வு கொண்டிட வருக!!—என்றா அழைக்கிறது. இல்லையே!

ஏசுவர்—பொருட்படுத்தாதீர்.

தாக்குவர்—தாங்கிக் கொள்வீர்!

சிறையில் தள்ளுவர்—அதனை அறச்சாலை எனக் கொள்வீர்.

இஃதன்றோ கழகம் விடுத்திடும் வேண்டுகோள்!

இந்த வேண்டுகோளைக் கேட்டன்றோ கிளம்பினர் பணி புரிய ஆயிரமாயிரம் தோழர்கள்.

குத்தும் வெட்டும் கிடைத்தது—சிலருக்கு.

தடியடி கிடைத்தது—பற்பலருக்கு!

கஞ்சிக் கலையம் கிடைத்தது— பலருக்கு—சிறையினிலே!

இன்னுயிரே பறிக்கப்பட்டது — சிலருக்கு — நமது வணக்கத்துக் குரிய வீரர்க்கு.

இவ்வளவு இன்னலையும் இன்முகத்துடன் ஏற்றனர் தோழர்கள்.

கண்ணிழந்தோர் உளர், அறிவாயே! காலிழந்தோர், கரமிழந்தோர் உளர், தெரியுமே உனக்கு! சொத்திழந்தோர், சுகமிழந்தோர் உளர்—பலர்—நமக்காக—நாட்டுக்காக. மக்கள், தம்பி! இதனைத்தான் கணக்கெடுத்து வைத்துள்ளனர்; எவரெவர் என்னென்ன ஏசினர் என்பது பற்றி அல்ல!

ஏசுவோர் ஏசட்டும். எமதருமைத் தோழர்களே! இருக்கின்றோம் நாங்கள் தொகைதொகையாய், ஆதரவு தந்திடவே என்கிறார் மக்கள். இஃதன்றோ உன் உளத்தில் இருந்திடவேண்டும், ஊசல் சரக்காகிப்போன ஏசல் மொழியா!!

ஏசுகின்றனர், அதனால் நமது கழக வளர்ச்சி குன்றிடுவதில்லை, உணருகிறோம்; ஆயினும்அண்ணா! எரிச்சலாக இருக்கிறதே; வருத்தமாக இருக்கிறதே என்கின்றாய்.

இத்தனை பெரிய உயரிடம் கிடைத்திருக்கிறதே காமராஜப் பெரியவருக்கு, அவர் மனம் மகிழ்ச்சியால் துள்ளுகிறது என்றா எண்ணிக் கொள்கிறாய்? ஏமாற்றமும் எரிச்சலும், வேதனையும் துளைக்கிறது அவர் மனத்தை; அறிவாயா?



காங்கிரசைக் கட்டுப்பாடுள்ளதாக நடத்திச் செல்வதில் வல்லவர்—இது புகழ்மாலை. பிளவுகளைத் தடுத்திடுவார், பேதம் ஒழித்திடுவார்—இப்படிப் பாராட்டுதல்! எந்தப் பிரச்சினையையும் எளிதாகத் தீர்த்திடுவார், கூர்த்தமதி படைத்தார்—இப்படித் திருப்புகழ்.

சரி! தம்பி! திருப்புகழ் தித்திப்பாகத்தான் இருக்கிறது; ஆனால், உண்மை நிலைமை என்ன? கேரளத்திலே காங்கிரஸ் இரண்டு துண்டு. வங்கத்திலே காங்கிரசில் பிளவு. ஒரிசா காங்கிரசில் ஒருவெடிப்பு. பீகார் காங்கிரசுக்கு முட்டுக் கொடுக்க ஏற்பாடு. ராஜஸ்தானத்துக் காங்கிரசில் ரகளை. ஆந்திரக் காங்கிரசில் இரு படைவரிசைகள். உத்தரப்பிரதேசப் பிரச்சினையின் இலட்சணமோ உலகறியும்!

இவை எதனைக் காட்டுகின்றன தம்பி! காங்கிரசைத் திறமையாக நடத்திச் செல்லும் ஆற்றல் மிக்கவர் காமராஜர் என்பதனையா! இவர் பார்வை பட்டால் போதும், பிளவுகள் மூடிக்கொள்ளும் என்றார்களே, பிளவு எத்தனைப் பெரிய அளவு விரிவாகிக்கொண்டு போகிறது, பார்த்தனையா?

இவர் கூப்பிட்டுப் பேச வேண்டியதுதான், உடனே 'குடுமிப்பிடி'ச் சண்டையிட்டுக்கொண்டோரும், கட்டித் தழுவிக்கொள்வர்; ஒன்றுபடுவர் என்றனர்.

கேரளத்துக்குப் போயே பார்த்தார்—பலித்ததா!

இவர் கேரளம் சென்று சங்கர் என்பாரைப் பட்டத்தரசர் போலாக்கினார்! பலன்? காங்கிரசே இரு துண்டுகளாகி விட்டது. தடுத்திட முடிந்ததா? ஒற்றுமை உண்டாக்க முடிந்ததா?

இந்தப் பிளவுகளெல்லாம் எம்மை ஒன்றும் செய்துவிடாது என்று பேசலாம்; பேசுகின்றனர்; அது வீறாப்பு! ஆனால் இவருடைய திறமை காரணமாக, காங்கிரசில் பேதம் நீங்கி, பிளவு நீங்கி, ஒற்றுமை ஏற்படும் என்று கூறினார்களே, நடந்ததா என்பதுதான். இல்லை! அப்படியாயின், இவருடைய திறமைபற்றிய திருப்பல்லாண்டு பாடுவதன் பொருள்?

போகட்டும் தம்பி! கட்சியிலே ஏற்பட்டுவிடும் பிளவுகளைத் தடுத்திட முடியாமலிருக்கட்டும்; காங்கிரஸ் கட்சி

யின் ஒப்பற்ற தலைவர் என்கிறார்களே, ஒரு பிரச்சினை யிலாவது திட்டவட்டமான கருத்து, காங்கிரசில் உள்ள மற்றவர்களை வழி நடத்திச் செல்லத்தக்க விதமான கருத் தளிக்கும் போக்கு காண்கின்றாயா?

இதுநாள் வரையில்—ஊரே கொதிக்கிறது ரூபாய் மதிப்புக் குறைப்பு பற்றி. இவர் அதுபற்றி ஒரு விளக்கம் கொடுத்தாரா?

இவருடைய ஒப்புதலின் பேரில் நடந்தேறியதா, இவரை ஒதுக்கித்தள்ளிவிட்டுப் பிரதம மந்திரி, இதை அமுலாக்கினார்களா? அதற்கான விளக்கமாவது கிடைத் ததா!

நாணயத்தின் மதிப்பைக் குறைத்திடும் பிரச்சினை இவர் கவனிக்கத் தேவையற்ற அற்பப் பிரச்சினையா! அறிவற்றவன் கூட அவ்விதம் கூறிடானே! கருத்தளித் தாரா? இதுவரையில் காணோம்! ஏன்?

மானத்தோடு வாழ்வோம், அன்னிய நாட்டிடம் உண வுக்காகக் கை ஏந்தமாட்டோம் என்று முழக்கம் எழுப்பி னார். எழுப்பிய முழக்கம் 'பிளேட்' ஆக்கப்பட்டுவிட்டது.

கப்பல் கப்பலாக உணவுப் பொருள் அமெரிக்கா வில் இருந்து வந்த வண்ணம் இருக்கிறதே — என்ன மதிப்பு அளிக்கப்பட்டது, இவருடைய மானத்தோடு வாழ்வோம் என்ற முழக்கத்துக்கு? இது பற்றிய கருத்து விளக்கம் தருகிறாரா? இல்லை! ஏன்? தந்திடின் இந்திராகாந்தி சர்க்காருடன் மோதிக் கொள்ள வேண்டி நேரிடும்! அதற்கு இவர் தயாராக இல்லை! காரணம்? என்ன ஆகுமோ என்ற அச்சந்தானே!

உரத்தொழில் சம்பந்தமாக அன்னிய நாட்டுக் கம்பெனிகளுக்குக் கொடுக்கப்பட்ட சலுகைகள்,அக்கிர மமாக இருப்பதாகக் கருத்தறிவித்தார். இவரை நம்பிக்கொண்டு சில தலைவர்களும் அந்த ஒப்பந்தங் களைக் கண்டித்தனர். ஆனால், காங்கிரஸ் சர்க்கார், இவர் பேச்சை மதித்து நடந்ததா? இல்லை! அன்னியக் கம்பெனிகளுக்குச் சலுகைகள் தந்து ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டன, என்ன செய்கிறார்?



பிரச்சினைகள் பற்றிக் கருத்தறிவிப்பதே அத்திபூத்தது போல! அப்படி அவர் அறிவித்திடும் கருத்துக்களும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை; மதிப்பளிக்கப்படுவதில்லை; அவர் கூறிடும் கருத்துக்கு முற்றிலும் முரணாகக் காரியங்களைச் செய்துகொண்டு போகிறார்கள்.

ஏகப்பட்ட பணத்தைக் கொட்டி ஐந்தாண்டுத் திட் டத்தை நடத்துவது தவறு என்று கூறி, நாலாவது ஐந் தாண்டுத் திட்டத்தின் தொகை குறைக்கப்பட்டாக வேண்டும் என்று காங்கிரஸ் மாநாட்டில் தலைமை வகித்த போதே பேசினார்.

நடந்தது என்ன? இவர் பேச்சை ஏற்றுக் கொண்டார் களா? பாரேன், நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்காக எவ்வளவு பெரிய தொகை செலவிடப் போவதாக அறிவித் திருக்கிறார்கள் என்பதை!

எந்தக் கருத்தை ஏற்றார்கள்? ஏத்தி ஏத்தித் தொழு கிறார்களே, எமது காமராஜர்தான் இப்போது இந்தி யாவையே நடத்திச் செல்கிறார் என்று: இதுதானா அதற் கான இலட்சணம்?

பாராட்டுதலைப் பெறுவதோடு திருப்திப்படச் சொல்லுகிறார்கள்! பவனி வருவதிலே மகிழ்ச்சி பெறச் சொல்லுகிறார்கள்! கொள்கை - திட்டம் - நிர்வாகம் இவைகளை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என் கிறார்கள்!

இந்த நிலைமை காமராஜரின் மனத்திலே எவ்வளவு வேதனையை உண்டாக்கும் என்பதனை உணர்ந்திடின், தம்பி! அவருக்கு ஏன் எரிச்சல் ஏற்படுகிறது என்பது புரிந்து விடும்; அது புரிந்து விட்டால், அவர் ஏசுவது அவர் தமது எரிச்சலை அடக்கிக் கொள்வதற்கே என்பதும் புரிந்திடும்.

மாஸ்கோ போனால் என்ன, மன்னார்குடி சென்றால் என்ன, அவருக்கு உள்ள எரிச்சல் தீருவதாகக் காணோம்.

நாடு பல சுற்றிவிட்டுத் திரும்புகிறார்; காலடி கீழே வைத்ததும் அவர் காதில் என்ன விழுகிறது? அமீன்சந்த்! அமீன்சந்த் என்று மக்கள் பேசிக் கொள்வது. என்ன இழவு இதுஇந்த அமீன்சந்த் விவகாரம் என்று கேட்கிறார்! விவரம் கூறுகிறார்கள், வேதனை குடைகிறது. வேதனை வெளியே

தெரியாதிருக்க என்ன செய்ய வேண்டும்? யார் மீதாவது பாயவேண்டும். யார் மீது பாய்வார்?

ஏனய்யா இப்படியெல்லாம் வம்புகளை விலைக்கு வாங்கிக் கொள்கிறீர்கள்? மக்களின் மனம் ஏற்கெனவே குமுறிக் கொண்டிருக்கிறது. நாள் தவறாமல் ஒரு பிரச்சினை கிளம்புகிறதே! ஏன்?—என்று கேட்க வேண்டும் அமைச்சர்களை! கேட்டால் சும்மா இருப்பார்களா? சிக்ப லான கேள்வி!!

எனவே என்ன செய்வது? எரிச்சலைக் குறைத்துச் கொள்ளக் கழகத்தை ஏசுவது!! எளிதான காரியம்! சுவை யான காரியம்! பழக்கப்பட்ட காரியம்! ஆகவே அதனை ச செய்கிறார்!

ஏசுவது பொருளற்றது, பயனற்றது, நெடுநாட்களாக நடந்துவருவது என்பதனை நாம் உணர்ந்திருக்கிறோம் ஆகவே, கவலைகொண்டிட வேண்டிய நிலை ந இல்லை.

யாழோ குழலோ வாசித்திடின், இராக இலட்ச பற்றிக் கவனிக்கலாம். கலகலத்துப்போன போக்கு கிளப்பிடும் ஓசை, என்ன இராகத்தில் அமைந்திரு என்று ஆராய்ந்திடப்போமா!

அண்ணன்

28—8—'66



தமிழ் நூல் காப்பகம்
09219
தமிழ் நகர், விருத்தாசலம் 606 001.